# மன்மதப் பாண்டியன்



ஸ்ரீ வேணுகோபாலன்

# முன்னுரை

**பா**ண்டியர்கள் மதுரையை ஆண்ட பிறகு அவர்களது ஸ்தானத்திற்கு வந்தவர்கள் நாயக்கர்கள். விஜய நகர அரசருக்கு உட்பட்டு மதுரை ராஜ்யம் முழுவதும் அவரது வசமாயிற்று.

வடக்கே விஜயநகரம் தொடங்கி, தெற்கே கன்னியாகுமரி வரையும் அவர்களது ஆட்சி நீண்டது. அப்பொழுது மதுரையை ஆண்டவர்கள் மிகப் பலவீனமானவர்கள். எனவே அந்தத் தென்னாட்டில் குழப்பமும், கலகமுமாக இருந்தது.

பாண்டிய மன்னன் தன் விருப்பப்படி வாழ ஆரம்பித்தான். சில கூட்டுச் சேர்க்கை சேர்ந்து கொண்டு விஜய மன்னருக்குப் பெரும் கவலை கொடுக்க ஆரம்பித்தான். இந்த நிலையில் ஒருநாள் விஜயநகர மன்னர் மிகவும் நொந்து போய்விட்டு, தமது அரச சபையில் கூறினார்:

"இந்தப் பாண்டிய அரசுகளை அழித்து விட்டு, அங்கே நம் ஆட்சியை நிலை நிறுத்துவதற்கு ஒரு தகுதியான ஆள் நம்மிடம் இல்லையா? இது வருத்தமாக இருக்கிறதே?" என்று கூறினார்.

அதற்குப் பதில் கூறுவது போல் எழுந்தார் ஒரு வீரர். அவர் பெயர் நாகம நாயக்கர். "மதுரையை அடக்குகிறேன்" என்று சென்றார். அடக்கினார். அங்கே ஆட்சியை நிலைநிறுத்தினார். அப்படி அவர் நல்ல அரசை அமைத்து வாழும்போது அவரே விஜய நகர பேரரசை எதிர்க்க ஆரம்பித்தார். இது அந்த அரசருக்குப் பெரும் துரோகமாகத் தோன்றியது. அரசர் வெகுண்டு எழுந்தார். "இந்த நாகம நாயக்கரை எதிர்ப்பதற்கு யாரும் இல்லையா?" என்று சபையில் அறை கூவினார்.

அப்பொழுது எழுந்தார் ஒரு வீரன். அவனைப் பார்த்து சபையினர் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள் எனில், அந்த வீரன் யாருமல்ல, மதுரையில் அப்பொழுது ஆண்டு வந்த விஜய நகருக்குத் தலைவலி கொடுத்து வந்த நாகம நாயக்கரின் மகன்தான் அவன். "என்ன இது மகன் தந்தையை எதிர்ப்பதா?" என்று கேட்டார்கள் எல்லோரும். இது சரித்திரத்தில் நடந்த உண்மை நிகழ்ச்சி. இதை வைத்துத்தான் இந்தக் கதை புனை சூட்டப்பட்டு இருக்கிறது.

இந்தக் கதை ஒரு பிரபல வெளிநாட்டுக் கதைப் போன்று இருக்கிறது. ரஸ்தம், ஷொராப் என்ற தந்தையும், மகனும் எதிர் எதிராக நின்று சண்டையிட்டார்கள். அந்தக் கதை பிரசித்திப் பெற்றது. கிட்டத்தட்ட அதே போன்று தான் இந்தக் கதையும். அந்த வீர இளைஞன் மதுரை சென்று தந்தையை எதிர்த்தானா? அவரை ஜெயித்தானா? பிறகு தந்தையை என்ன செய்தான்? என்பனவெல்லாம் இந்தத் தொடர் நாவலைப் படிப்பவர்கள் அறிந்து கொள் வார்கள். அற்புதமான வரலாற்றுக் கதை இது. அந்நாளைய பழக்க வழக்கங்களைப் பற்றி நிறைய எழுதப்பட்டு இருக்கிறது.

சமூக வாழ்வு எப்படி இருந்தது என்பதை இந்தக் கதை நன்கு எடுத்துக்காட்டுகிறது. தென்னாட்டில் எப்படி ஒரு நாயக்க வம்சம் தொடங்கி பல நூற்றாண்டுகளாக வாழ்ந்தது என்பதையும் விளக்குகிறது இந்த நாவல். இது ராணியில் தொடர் கதையாக வந்தது. அப்பொழுது நிறைய பேர் கவனத்தைக் கவர்ந்தது. இதன் நடையை ரசித்தவர்கள் பலர். புனையப்பட்டிருந்த கதையை ரசித்தவர்கள் பலர். இப்படி பல தரத்தாரும் ரசிக்கும் வண்ணம் எழுதப்பட்ட இந்தக் கதைதான் இங்கே புத்தக வடிவில் வந்திருக்கிறது.

– ஸ்ரீ வேணுகோபாலன்

## பதிப்புரை

தமிழ் இலக்கிய உலகில் நாவல் இலக்கியத்திற்கென்று ஒரு தனி இடம் என்றுமே உண்டு. நாவல்கள் படிப்பது மிக எளிது. ஆனால் நாவல்கள் படைப்பது எளிதான ஒன்றல்ல. கதையின் நடையில் தொய்வு ஏற்படாமல், தெளிவோடு இருக்க வேண்டும். கதாபாத்திரங்களின் குணங்கள் முன்னுக்குப் பின் முரண்படாமலும், கதையின் கருத்தில் முரண்பாடும், குழப்பமும் இல்லாமல் இருக்க வேண்டும். இதையெல்லாம் கருத்திற்கொண்டு எழுதினால்தான் ஒரு நல்ல நாவலைப் படைக்க முடியும்.

நாவல்களின் சமீப காலங்களில் வாசகர்கள் விரும்பி படிப்பது இரண்டு வகையான நாவல்கள். ஒன்று சமூக நாவல் மற்றொன்று சரித்திர நாவல்கள். சமூக நாவல்களில், நாம் வாழுகின்ற சமுதாயத்தின் அன்றாடம் எழுகின்ற பிரச்சினைகள், சம்பவங்கள் ஆசிரியரின் கற்பனைத்தேன் கலந்து தரப்படுகிறது. தினம் தினம் கண்முன்னே பார்ப்பவைகளையும், காதால் கேட்பவைகளையும் கதைகளில் படித்துப் படித்து அலுத்துப்போன வாசகர்கள் வேறு விதமான நாவல்களைத் தேடுகின்றனர்.

அதுதான் சரித்திர நாவல்கள். இவை பழைய சரித்திர சான்றுகளைப் பின்னணியாகக் கொண்டு சித்தரிக்கப் படுகின்றன. நமக்குத் தெரியாத பல சரித்திர நிகழ்ச்சிகளை, ஆசிரியர்கள் தங்களின் கற்பனை திறத்தால் நம் கண்முன்னே திரைப்படம் போல் தெளிவாகக் காட்சி யளிக்கும்படி தீட்டுகிறார்கள். சரித்திர நாவல்களுக்கு வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு ஏற்படக் காரணமாக இருந்தவர் அமரர் கல்கி அவர்களே. அமரர்

கல்கியின் சரித்திர நாவல்கள் இன்றும் திரும்பத் திரும்ப படிக்கும் தன்மையுடையதாய் இருக்கின்றது. இப்படிச் சிறந்த சரித்திர நாவல்கள் படைப்பவர்கள் தமிழில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே உள்ளனர்.

வரலாற்று கதைகளில் ஸ்ரீவேணுகோபாலன் முன்னனியில் இருக்கிறார். அவர் இந்த **'மன்மதப் பாண்டியன்'** நாவலை ராணியில் வாரத் தொடராக எழுதி உள்ளார். அந்நாளில் இந்தத் தொடர் வந்தபோது பரபரப்புடன் வாசகர்கள் இந்த நாவலை வாசித்தார்கள்.

விஜயநகர சாம்ராஜ்யம் அழிந்து பலவீனப்பட்ட ஒரு நேரத்தில் இந்தக் கதை நடக்கிறது. அவர்கள் விஜயநகரத்தை விட்டு தெற்கே குடி புகுந்து விட்டார்கள். அவர்களுக்கு உதவி செய்யும் சிற்றரசர்கள் மிகவும் நலிந்து விட்டார்கள். இந்த நிலையில் அந்த நாளில் வெள்ளைக்காரர்கள் வியாபாரத்திற்கு வந்து இறங்கினார்கள். எங்கும் பஞ்சம் ஏற்பட்டதால் மக்கள் மிகவும் தத்தளித்து கொந்தளிக்க ஆரம்பித்த மிகச் சோகமான சூழ்நிலை அது.

இத்தகைய சூழ்நிலையில் தமக்கே உண்டான அரிய தமிழ் நடையால் ஒரு நல்ல சரித்திர நாவலை படைத்திருக்கிறார் ஸ்ரீவேணுகோபாலன். இதில் மோகவல்லி தூதுவை நாம் மறக்கவே முடியாது. சாவி வாசகர்களது பெரும் மதிப்பு பெற்றது இந்தத் தொடர் நாவல்.

'புஷ்பா தங்கதுரை' என்ற புனை பெயரில் அவரது நூல்கள் பலவற்றை நாங்கள் வெளியிட்டு இருக்கிறோம். வாசகர்கள் பூம்புகாரின் எல்லா வெளியீடுகளுக்கும் கொடுக்கும் நல்லாதரவை இந்த **'மன்மதப் பாண்டியன்'** என்னும் சரித்திர நவீனத்துக்கும் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் படைக்கின்றோம்.

**– பூம்புகார் பதிப்பகத்தார்**

சென்னை மாவட்ட நூலகம் 26645 A2A1889

## 1

மணிகள் எங்கும் சப்தித்தன.

''ஓம்......ஓம்....'' என்ற லயம் எங்கும் கேட்டது.

பூ வாசம் எங்கும் நிரம்பியது.

தூபத்தின் மணம் மெல்லியதாக இருந்தது.

சங்கரநயனார் சன்னதியில் ஆடித் தவசுக் கூட்டம்.

கோவில் பூராவும் முக வெள்ளம்!

மேளங்கள் முழங்கின.

முரசங்கள் அதிர்ந்தன. எக்காளங்கள் எக்கலித்தன.

ஊர் முழுவதும் ஒரு பக்தி சமுத்திரம் பொங்கி எழுந்தது.

ஊருக்கு வெளிப்புறத்தில் அந்த இளைஞன் அப்போது தான் வந்து இறங்கினான். அவன் குதிரை களைத்திருந்தது. தலைக் கயிற்றைப் பற்றி மெல்ல அந்தக் கரும் புரவியை அழைத்துக்கொண்டு ஆழ்வாரம்மாள் சத்திரத்தை நோக்கி நடந்தான், அவன்.

சத்திரம் தனித் திடல் மீது இருந்தது. சுற்றிலும் தென்னையும், கமுகும், மாவும் கொழித்திருந்தன. பார்ப்பதற்கு ஒரு நிழற்கூட்டம் எப்போதும் அங்கே தங்கி இருந்தது.

மழை பெய்திருக்க வேண்டிய நாட்கள் அவை! கடும் வெயில்தான் அடித்தது. அந்த இளைஞன் கண்ணுக்கு அந்தச் சத்திரம் சொர்க்கம் போல் தெரிந்தது.

மேடு மீது ஏறி நிழல் பரப்பில் நுழைந்ததும் ''அப்பா'' என்றான்.

அப்படி ஒரு குளிர்ச்சி அவனை அணைத்தது.

சத்திரம் பெரிய காரைக் கட்டிடம். நிரம்ப விஸ்தாரமாக இருந்தது. பெரிய பெரிய தூண்கள் முகப்பில் தெரிந்தன.

இடது பக்கம் பெரிய கிணறு ஒன்று தெரிந்தது. வலது புறத்தில் தாழ்ந்த கூரையுடன் நீளக்கொட்டில் ஒன்று தெரிந்தது.

இளைஞன், சத்திரத்து வாசலை அடைந்ததுதான் தாமதம்.

"வரணும் முல்லை ராமரே! வரணும்!" என்று குரல் ஒன்று கேட்டது.

கைகூப்பிய முறையில் சத்திரத்துக் கணக்கர் எழுந்து ஓடிவந்தார்.

"எப்போது வந்தீர்கள்! பயணமெல்லாம் வசதியாக இருந்ததோ! களைப்பாக இருக்கிறீர்களே! உள்ளே வந்து அமரவேண்டும்!" என்று விநயம் ததும்பும் மொழியில் கூறி, இரு கைகளாலும் உள்ளே போகும் தடத்தைக் காட்டினார்.

"அப்பா காலன்கரையான்! காலன்கரையான்!" என்று அழைக்க—

பதினெட்டு பிராவமுள்ள ஒரு சிறுவன் முண்டாசுக் கட்டோடு ஓடி வந்தான்.

கணக்கருக்கும், முல்லைராமனுக்கும் ஒரு கும்பிடு போட்டுவிட்டு, குதிரைக் கயிற்றை அவன் வாங்கிக் கொண்டான்.

"அய்யா, கணக்கரே! எனக்கு நேரம் அதிகமில்லை! இப்போதே தாமதமாகிவிட்டேன். குளித்துவிட்டுதான் கோவிலுக்குப் போகவேண்டும். உணவு இப்போது வேண்டாம்!" என்று கூறி பரபரப்பாக உள்ளே போனான், முல்லைராமன்.

உள்ளே தாழ்வாரம் தாண்டி, நடையைத் தாண்டியதும், பெரும் முற்றம்.



அதில் வெயில் பளீர் என்று காய்ந்துகொண்டிருந்தது.

முற்றத்தைச் சுற்றிலும் அறை அறையாக இருப்புகள். அவற்றில் ஒன்றின் கதவைத் திறந்து இளைஞனை உள்ளே போகவிடுத்தார் கணக்கர்.

உள்ளே போன சில கணங்களில் வெளியே வந்தான். சத்திரத்துத் தோட்டத்து வழியே ஒரு ஒற்றையடித் தடத்தில் நடக்க ஆரம்பித்தான்.

தோட்டம் கிட்டத்தட்ட ஒரு அரணியம் போல் இருந்தது. புன்னை, வேம்பு, கோங்கு, பிள்ளை மருது என்று பலவகை மரங்கள் ஒன்றை ஒன்று நெருங்கி வளர்ந்திருக்க,

அங்குப் பாய்ந்திருந்த நிழலிலேயே ஒரு குளிர் இருந்தது.

மேடும் பள்ளமுமான அந்தத் தடத்தில் போவதில் என்ன மகிழ்ச்சி! இந்தச் சத்திரத்துக்கு வந்தால், அந்தத் தடம் அவனை இழுத்துவிடும்.

ரம்மியமான மனத்துடன் நடையிட்டுச் செல்ல, சீக்கிரம் அந்தச்சுனை வந்துவிட்டது.

ஆழ்வார் சுனை என்றார்கள் அதை!

அது ஒரு இயற்கைக் காட்சி அல்ல! ஒரு சித்திரம் போலத் தெரியும்.

மேல்பக்கம் பாறை ஒன்றில் புகுந்து, தண்ணீர் நுரையோடு வழுவி விழ—

விழுந்த இடத்தில் கோணல் வட்டமாக ஒரு பெரிய சுனை.

சுனையைச் சுற்றி வர, விருட்சகங்களின் செழிப்பு! கீழே சுலபமாகக் கிடைக்கும் நீரைக் குடித்து வானத்தை எட்ட முயல்வது போல ஓங்கி நின்றன.

படிகள் போல் செதுக்கப்பட்ட பாதைகள் கீழே இறங்கி, நீர் விளிம்புக்கு வந்தான்.

நீருள் காலை வைக்கு முன், எதிர்க் கரையில் ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

மீண்டும் ஒருமுறை திகைப்பு ஏற்பட்டது. அங்கே அதி ரூபமான பெண் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள்.

தண்ணீரில் அவள் கால் அமிழ்ந்து சிறு அலைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

நகையைக் கழற்றி அவள் கொடுத்தவண்ணம் இருக்க, கரையில் அவளது தாதி அதைப் பெற்றுக் கொண்டிருந்தாள்.

நீண்டமூச்சு ஒன்று அவனிடம் வந்தது. இது போன்ற பொன் நிறத்தில் யாரையும் கண்டதில்லை. தேகம் நல்ல காந்தமுடன் ஒளிர்ந்தது. முகத்தில் ஒரு அபூர்வ லாவண்யம்! இடை சிறுத்து வளைய உடல், ஒரு கவிதைபோல இருந்தது.

ஆமாம்! இவளைப் பார்த்தாலே ஒரு கவிதையின் பரவசம் வருகிறதே என்று நினைத்தான், அவன்.

இவளாகத்தான் இருக்குமா? இருக்கலாம்! இருந்தால் நல்லது. இங்கே குளிக்க வந்திருக்கிறாளே! பரிவாரம் இல்லாமல்.

ஒரு பெண்ணைக் குளிக்கும் போது பார்ப்பது தவறு என்று கரை ஏறினான். சற்றே மேலே போய் ஒரு மர நிழலில் ஒளிந்திருந்தான்.

கவிதைப் பெண் பிறகு சுனையில் இறங்கினாள். ஆனந்தமாக மூழ்கினாள். பெரிய பெரிய அலைகள் அவளைச் சுற்றி எழுந்தன.

கரைகளில் வந்து மோதி கிலுக் கிலுக் என்று சிரித்தன.



அரை நாழிகை சென்ற பிறகு திரும்பிப் பார்க்க, அவள் போய்விட்டாள் என்று தெரிந்தது.

மனதில் ஒரு பரவசம் தோன்றியிருந்தது. எதிர்க்கரையை அன்போடு பார்த்தான். சித்திரம் அவள்! பெண்களிலே ஒரு சித்திரம்!

உடனே அவனது அலுவல்கள் நினைவுக்கு வந்தன. தண்ணீரில் அவசரமாக இறங்கி அவசரமாகக் குளித்தான். பிறகு சொட்டும் ஆடைகளோடு வெளியேறி துவட்டிக் கொண்டு செல்ல ஆரம்பித்தான்.

சத்திரத்துக்கு வந்து உலர்ந்த ஆடை உடுத்திப் புறப்படுவதற்கு, நாழிகை ஆகிவிட்டது. அவசர அவசரத்தில் புறப்பட்டான்.

இப்போது அவன் முகம் பொன் தட்டம் போல் மின்னியது.

கண்ணில் ஒரு இடி மின்னல் அடிக்கடி சொடுக்கியது.

நெற்றியில் அவன் அழகின் விலாசம் பூராவும் எழுதப் பட்டிருந்தது.

தோளில் தொங்கும் பை ஒன்றில் கத்தை கத்தையான எட்டுக் கட்டுகளுடன் கோவிலை நோக்கிப் புறப்பட்டான்.

கோவிலை அடைந்த போது, குறு வியர்வை அவன் நெற்றியில் துளிர்த்தது.

அதுவும் முத்துக்கள் போல அழகாக துளிர்த்திருந்தது.

கோவில் முழுவதும் கூட்டம் நிரம்பி இருக்க அதனூடே நழுவிச் செல்லும் வசம் அவனுக்கு நன்கு தெரிந்திருந்தது.

அவன் ஊடுருவுவதைப் பார்த்தால், மேகக் கூட்டத்தில் சந்திரன் புகுந்து ஓடுவது போல இருந்தது.

சன்னதியை அடைந்ததும் மெய்மறந்து நின்றான் – உள்ளே வழிபாடுகள் நடந்துகொண்டிருந்தன.

முல்லைராமனின் கண்களில் பக்தி பூத்தது. அவனது பரவசம் அவன் முகத்தை தாமரையாக விரித்தது. மெய் மறந்து கைகூப்பினான்.

அடுத்த கணம், அவன் பாடத் தொடங்கினான்.

கணீர் என்று அவன் குரல் எடுபட்டதும் ஒருகணம் மற்ற சத்தங்கள் அனைத்தும் சற்றே அமிழ்ந்தன.

எல்லோரது கவனமும் முல்லைராமன் மீது சென்றன.

குழந்தைகள்கூட வாய் மூடிவிட்டன.

பொன் சிலை ஒன்று புதிய வார்ப்பாக நிற்பது போல அவன் நின்றான்.

குரலில் தேன் கசிந்தது. அவன் இசைத்த கீதம் பட்டு நூல் போல சிலு சிலு என்று எங்கும் பரந்தது.

சன்னதியில் பிரதான குருக்கள் மெய்மறந்தார். அவர் கண்கள் சற்றே சந்தேகத்துடன் முல்லைராமனைப் பார்த்தன. அவருக்கு முறுவல் பீறிட்டு வர, பிரசாதத் தட்டுடன் ஓடி வந்தார்.

அவன் பாடி முடிக்கிறவரை, காத்திருந்தார்.

முடிந்தது. அவன் கண்ணைத் திறந்தபோது, அவர் தெய்வத்தின் மாலையை அவன் மீது பூட்டினார்.

"எங்கள் பாக்கியம் தாங்கள் வந்தது! இறைவனது கடைக்கண் தங்கள் மீது எப்போதும் இருக்கும்" என்று மலர்களை அள்ளி அவன் கையில் கொடுத்தார்.



முல்லைராமனுக்குப் புன்னகை வந்தது.

அதேநேரம் அங்கே பெண்கள் குழாமில் வந்திருந்த ஒரு பெண்–

"குருக்களே! வெகு நேரம் நின்றுகொண்டிருக்கிறோமே! எங்களை சீக்கிரம் கவனிக்கலாகாதா? எவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கிறோம்!" என்றாள்.

குருக்கள் திரும்பினார்.

இளைஞனும் திரும்பிப் பார்த்தான்.

அந்த வார்த்தைகளைக் கூறியவள் ஒரு தாதியாகத் தோன்றினாள்.

அவள் அருகே அவளது இளம் எஜமானி நின்றுகொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்ததும் பக்கென்று அவன் நெஞ்சம் அடைத்தது.

கண்கள் தாமாகக் கொட்டிக்கொண்டன. புரிந்து விட்டது! அவள் அந்தக் கவிதைதான்! சுனையில் குளித்தவள்.

என்ன அழகி இவள்! என்று மனம் மெல்லிதாக அவனிடம் கூறியது.

அந்த இருட்டு மண்டபத்தில் அவள் முகம் வெள்ளியாக ஒளிர்ந்தது.

சன்னதியைப் பார்த்து அவள் விழி ஓடியிருந்தது.

மெல்லிய உதடுகள் ஏதோ தோத்திரத்தை முணுமுணுத்தன.

குருக்கள் "இதோ அம்மா" என்று அந்தத் தாதியிடமிருந்து பூஜைத் திரவியங்களை வாங்கிக்கொள்ள–

முல்லைராமன் சர்ப்பம் போல் ஒரு நீண்ட மூச்சு விட்டான்.

பிறகு தன் நிலை உணர்ந்து, அந்த இடத்தை விட்டு உடனே அகன்றான்.

முன்புபோல இப்போதும் அவனால் வெகு எளிதாக கூட்டத்தை ஊடுருவ முடிந்தது.

வெளியே வந்திருப்பான். அவன் காதில் அந்தப் பேரோசை சந்தேகத்தைக் கொடுத்தது.

பல குதிரைகள் சேர்ந்தாற்போல வரும் குளம்பு ஒலிகள் அவை.

அது மட்டுமல்ல!

''ஓ...'' என்று வெறிக்க சத்தமிடும் மனித ஒலிகளும் அவை.

சற்றே திகைத்து நின்றான், முல்லைராமன். பிறகு அவசரமாக கோவில் வெளிப்புறத்திலுள்ள மேட்டில் ஏற ஆரம்பித்தான்.

மேலே ஏறியதும் அவன் சந்தேகித்தது ''சரி'' என்று தோன்றியது.

குதிரைகளும் வீரர்களுமாக ஒரு கூட்டம் வந்து கொண்டிருந்தது.

அவர்கள் பின்னால் புழுதிப் படலம் ஏராளமாக எழுந்தது.

அவனுக்குப் புரிந்துவிட்டது.

''ஆகா! எந்த நேரம் பார்த்து இவர்கள் வருகிறார்கள்!''

ஒரு நல்ல திருவிழாவுக்கு இழுக்குச் சேர்க்க வந்திருக்கிறார்களே!



ஒரு பக்திமயமான கூட்டம் இப்போது சின்னா பின்னமாகப் போகிறதே!

கடவுளே! இதைக் காணவா இவ்வளவு தூரம் வந்தேன் நான்?

இவர்களுக்கு நெஞ்சம் இருக்கிறதா இல்லையா?

இத்தனை மக்களும் என்ன செய்யப்போகிறார்கள்? அவர்களைப் பாதுகாக்க படை ஏதும் இல்லையே...

என்ன செய்ய என்று கையைப் பிசைந்து கொண்டு இருக்கும்போது-

அந்தக் குதிரை வீரர்கள், கோவில் இருக்கும் தெருவில் நுழைந்துவிட்டார்கள்.

கோபாவேசமாக வீறிக்கொண்டு, திருவிழாக் கூட்டத்தை நோக்கிச் சாடினார்கள்.

இளைஞன் மேட்டில் இருந்து சரசர என்று இறங்க ஆரம்பித்தான்.

ஏதாவது செய்ய வேண்டும்?

அங்கே கூடியிருக்கும் மக்களைக் காக்கவேண்டும்? இந்தக் கூட்டத்தினர் யாரைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்? அதை பிறகு கண்டுபிடிக்க வேண்டும்?

ஆ...! அந்த இளம் பெண்? அவளுக்கு ஏதாவது தீங்கு நேரக்கூடாதே!

என்ன அழகாக இருந்தாள், அவள்.

கண்கள் எவ்வளவு விநயமாகத் தெரிந்தன.

கோவிலை நோக்கி ஓடினான், அவன்.

கோவில் எல்லை அதற்குள் கூக்குரல் களமாக இருந்தது.

"ஐயோ! ஐயோ!" என்று தீனக்குரல்கள் பல மூலைகளிலிருந்தும் கிளம்ப,

"விடாதே, பிடி! விடாதே!" என்று குதிரைக்காரர்கள் மிரட்டிக் கொண்டு இருந்தனர்.

மக்கள் நாலா பக்கமும் சிதறினார்கள்.

குதிரை வீரர்கள் பலரை விடாமல் விரட்டிக் கொண்டிருந்தார்கள்.

பெண்கள்தான் அபலையாக ஓலமிட்டார்கள்.

முல்லைராமன் கூட்டத்துக்குள் புகுந்தான்.

## 2

அந்தக் குதிரைக்கூட்டத்தினர் ஒரு தீய எண்ணத்துடன் கோவிலை நோக்கிச் செல்கின்றனர் என்பதை அறிந்த முல்லை ராமன், "ஆகா! அந்தப் பெண்ணைப் பற்றுவதற்காக இருக்குமோ!" என்று யோசித்தான்.

எதுவாயினும் கொள்ளைக்காரர்களைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் பூண்டது.

மேட்டிலிருந்து குறுக்கு வசமாகக் குதித்து, ஒரு மின்னல் சொடுக்கில் ஆலயத்து முகமண்டபம் முன்னால் நின்றான்.

குதிரை வீரர்களோ மக்கள் சமுத்திரத்தின் சிக்கலில் அகப்பட்டுக்கொண்டு, "போங்கள்! போங்கள்! சூறையாட வந்திருக்கிறோம்" என்று " கூவே கூவு" என்று கூவிக் கொண்டிருந்தார்கள்.

தங்களை உண்மைக் காரியவாதிகள் என்று காண்பிக்க, ஒன்றிரண்டு பெண்களின் கழுத்திலிருந்த ஆபரணங்களைப் பிடுங்கினார்கள்.



அவர்களும், "ஆ.... பறிபோச்சே!" என்று கதறினார்கள்.

இதைக் கேட்ட– அறிந்த மக்கள் திரள், நாலாபுறமும் சிதறி ஓட ஆரம்பித்தது.

முல்லைராமன் இதற்குள் கோவிலுள் புகுந்து ஓடினான். சன்னதி இன்னும் கூட்டப்பெருக்காக இருக்க, திரளில் நீந்தி கர்ப்பகிருகம் வரை சென்று அந்தப் பெண்ணைத் தேடினான்.

நாலாபுறம் பார்த்தும் அவளைக் காணவில்லை. சரி, பிரகாரம் போயிருப்பாள், பிடிப்போம் என்று நினைத்து, மீண்டும் எதிர் நீச்சல் போட்டு, பிரகாரத்துவக்கத்திற்கு வந்தான்.

பிரகாரத்தில் அவ்வளவு நெரிசல் இல்லை. எனவே இடைவெளிகளில் விரைந்துசென்று, பிரகாரப் பின்புறத்தை அடைந்தான்.

அவன் அந்தப் பகுதியை நெருங்கவும், அழகான கீதம் ஒன்று காதில் விழவும் சரியாக இருந்தது.

சற்றே விறுவிறுப்பு அடங்கி அங்கே பார்க்க, அந்த இளம் பெண் அந்த இடத்தில் நின்று, கர்ப்பகிருகத்தின் மேல் தோன்றும் விமானத்தை நோக்கிப் பாடிக்கொண்டிருந்தாள்.

அவள் இட்டுக்கட்டிய பாடலாக இருக்குமோ! கையில் ஏட்டைப் பிடித்த வண்ணம் பாடுகிறாளே! குரலா அது! வெள்ளி இழைகள் போல இதோ காற்றில் தெரிகிறதே! ஒரு மென்மையான மது அருந்தியது போல் அங்கு இருந்த கூட்டம் ஒரு மயக்கமாய் லயித்து நிற்கிறதே!

அவனுக்கு நேரமில்லை. வருகிற ஆபத்து அவனுக்குத் தெரியும். எனவே, விருட்டென்று பாய்ந்து, அவள் முன்

நின்று, "அம்மணி! பாட்டை நிறுத்துங்கள். கொள்ளைக் கூட்டம் வந்திருக்கிறது. உங்களைப் பிடித்து போகவே வந்திருக்கிறது!" என்று படபடப்புடன் கூறினான்.

அவள், அவனை ஒருமுறை வெறித்துப் பார்த்தாள். ஆனால் அவன் சொன்னது உண்மை என்பதற்கு சாட்சியாக, கோவில் முன்புறத்தில் "குய்யோ முறையோ" சத்தம் எழுந்தது.

திடுக்கிட்டு, அங்குமிங்கும் ஒருமுறை பார்த்தாள்.

வாசலின் கூச்சல் அதற்குள் தெளிவாகவே கேட்டது.

அவளைச் சுற்றியிருந்த மக்கள் சட்டென்று புறப்பட்டு வீறிட்டுக்கொண்டு ஓட, அவளும் தாதியும் முல்லை ராமனுமே தனியானார்கள்.

"ஐயா! யார் அவர்கள்? என்னை பிடித்துப் போகவா வந்தார்கள்?" என்று அவள் கேட்க—

"அம்மணி நேரமில்லை.. நீங்கள் ஒளிவது அவசியம்" என்று சொல்லி, சுற்றிவரப் பார்வையை ஓட்டினான்.

சற்றுதள்ளி வாகனங்களின் இடைவெளியில் இரண்டு பெரிய நகராக்கள் இருந்தன.

"இதோ இங்கே வாருங்கள்!" என்று அவன் கூற—

அவர்கள் மறுமொழி இல்லாமல் சென்றார்கள்.

முல்லைராமன் தன் இடுப்பிலிருந்த எழுத்தாணியை எடுத்தான்.

நகராவின் தோலில் சுற்றி பல இடங்களில் ஓங்கிக் குத்தினான். பிறகு தோலைக் கிழித்து எடுத்தான்.

"இங்கே ஒருவர் அமருங்கள்! இந்த நகராவை கவிழ்த்து மூடுகிறேன். பின்புறம் ஓட்டைகள் உள்ளன.



காற்றுக்குக் கவலை இல்லை. ஆபத்து நீங்கினபிறகு, வந்து திறக்கிறேன்" என்றான், அவன்.

இளம்பெண் அமர்ந்து கொண்டாள், முல்லைராமன் நகராவினை தூக்கி அவளை மூடினான்.

அடுத்து அவசரமாக இதே வேலையைத் தாதிக்கும் செய்தான்.

வேலை முடிந்ததும் "இதோ வருகிறேன்" என்று கூறி விட்டு பிரகாரம் வழியாக கோவில் முகப்பை நோக்கி ஓடினான்.

இதற்கு வாயிலில் இருந்த கூட்டம் எல்லாம் வடிந்து விட்டது.

வெளிப்புறம் வெறிச்சோடிக் கிடந்தன. வந்தவர்களின் குதிரைகள்தான் நின்றன.

பந்தல் கால்களில் அவற்றைக் கட்டிவிட்டு வீரர்கள் கும்பலாக கோவில் முகப்புக்கு வந்தார்கள். பாகை அணிந்து மிகையாக மீசை வைத்த நடுத்தர வயது வீரர் ஒருவர், மிடுக்குப் பார்வையை இங்குமங்கும் வீசி—

"பெருமாள்!" என்றார், உரத்த தொனியில்,

"ஐயா!" என்று கீழே குதித்து வந்தான், ஒரு இளம் வீரன்.

"எல்லோரையும் பார்த்தாயா?" என்று கேட்டார். மீசைக்காரர்.

"பார்த்துவிட்டேன், ஐயா. அவளைக் காணவில்லை என்றான், அவன்,

"என்ன மடத்தனம்! தவறவிட்டீர்களா?" என்றார், மீசைக்காரர்.

"இல்லை ஐயா! இங்கேதான் இருக்கவேண்டும். உள்ளே இருப்பாள்?" என்றான், அந்த இளம் வீரன்! அவன் ஒரு குறுந்தாடி வைத்திருந்தான்

"முதலில் கோவில் வாசலைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! உள்ளே சிலர் போய்த் தேடுங்கள்!" என்றான்.

அதேநேரம், சற்று இளிக்கும் முகத்துடன் கையில் ஏடுகள் கட்டுடன், முல்லைராமன் வெளியே வந்து அத்தனை பேரையும் பார்த்துப் பிரமித்து, கையைத் தூக்கி வலது காது மேல சொறியும் பாணியில் வைத்துக் கொண்டு, "ஹுக்கும்! ஹுக்கும்!" என்று ஒரு பித்தனைப் போல் முனங்கிக் கொண்டு வாயிலைத் தாண்டித் தெருவில் நழுவிச் சென்றான்.

உள்ளே போய் பார்த்து வந்த வீரர்கள், "உள்ளே யாருமில்லை?" என்றார்கள்.

"தப்பித்தாளா?" என்று வெகுண்டு கேட்டான், மீசைக்காரன்.

"ஐயா! ஒருவேளை அவள் இங்கே வராமல் இருந்திருக் கலாம்! ஊரில் ஒருமுறை பார்ப்போம்" என்றான்.

"சீக்கிரம்! சத்திரம் சாவடி எல்லாம் உடனே பாருங்கள்!" என்றார், மீசையர்!

இரவு ஒரு சொப்பன சாம்ராஜ்ஜியம் போல் வந்தது. முழுநிலா கிழக்கே எழுந்து, வானில் சுறுசுறு என்று ஏறியது. சிற்சிலப் பிசுறு மேகங்களுடன் வானம் சலனமில்லாத பிரமிப்பில் இருந்தது.

கீழே பூமியில் அனைத்தும் நிசப்தமாகி இருந்தன.

எங்கும் நிலாவின் பால் வழிந்திருந்தது. இலைத் தகடுகள் வெள்ளிகளாக மின்னின.



மெல்லியதாகக் காற்று ஒன்று இங்குமங்கும் அலைந்தது. ஒவ்வொரு மரத்தையும் தொட்டு, அது கண்ணா மூச்சு ஆடுவதுபோல இருந்தது.

சத்தம் எதுவும் இல்லாமல் வடக்கு செல்லும் தனிப் பாதையில் ஒரு பல்லக்கு ஊர்ந்து சென்றது வெட்ட வெளியில் சிதறிக் கிடக்கும் பாறைகள் வழியே நெளிந்து, அது போகும்போது, ஏதோ ஒரு ராட்சச மிருகம் நடந்து போவது போல இருந்தது.

பின்னால், ஒரு குதிரை குனிந்தவாறு நடந்தது. சுற் களையும் பாறைகளையும் விலக்கி கால்களை கவனமாக வைத்து வந்தது. அதன் மீது ஒரு பெண் சோர்வுடன் பவனி வந்தாள்.

பல்லக்கில் இருந்து அவ்வப்போது கீதம் மிதந்து வந்தது. அதில் அருமையாக பொதிகைத் தமிழ் சிந்திக்கொண்டிருந்தது.

பல்லக்குத் தூக்கிகளுக்கு அது பெரும் உற்சாகம் கொடுத்தது. பாட்டின் இனிப்பில் அவர்களது களைப்பு தேய்ந்து கொண்டிருந்தது.

பல்லக்கு சிலநேரங்களில் தடுமாற, அந்தக் கவிதைப் பெண்மணி, "என்ன இது? என்ன இது?" என்று அடிக்கடி கடிந்துகொண்டிருந்தாள்.

ஆரம்பத்தில் இருந்தே இந்தத் தடுமாற்றம் இருந்து வந்தது.

ஒரு பாறாயைத் தாண்டிச்செல்லும் நேரம், பல்லக்கு ஒரு கவிழும் நிலைக்குச் சாய்ந்துவிட்டு, பிறகு நிமிர்ந்தது.

அந்தப் பெண்மணி, "நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்று உத்தரவிட்டாள்.

பல்லக்கு நின்றது.

"யார் இது? குடிபோதையில் யாராவது இருக்கிறார்களா? பல்லக்கு ஏன் இப்படிச் சாய்ந்தது?" என்று கடுமையாகக் கேட்டாள்.

சிறிதுநேரம் மறுமொழி இல்லை.

"இந்தா! வீரமுத்து! யார் இந்தத் தவறு செய்தது?" என்று கேட்க–

நிலா ஒளியில் அவளது பார்வைக்கு நேராகத் தயங்கித் தயங்கி ஒரு உருவம் வந்து நின்றது.

கண்களை நம்பமுடியாமல் கொட்டிக்கொண்டு பார்த்தாள், அவள்.

"யார்! கோவிலில் பாடின பாட்டுக்காரரா? நீங்களா பல்லக்குத் தூக்கினீர்கள்?" என்றாள், பாதி ஆச்சரியமுடன்.

"நான் பல்லாக்கா தூக்கினேன் அம்மணி?" என்று தாழ் வளைந்து கூறினான், அவன். "கவிதையை அல்லவா தூக்கினேன். செந்தமிழ்க் கவிதையை அல்லவா தூக்கினேன்" என்று பரவசமாய் அவன் கூறினான்.

அவன் நெற்றியிலும் தோளிலும் வியர்வைக் குவைகள் பூத்து நதிகளாக வழிந்து கீழே சென்றன.

## 3

முல்லைராமன் குழைந்து நிற்க, கவிதைப் பெண் விழியை ஒரு சொடுக்குச் சொடுக்கினாள்.

ஒரு மின்னல் அவன் முன்னே துடித்தது.

"அம்மணி! பொறுக்க வேண்டும்! தங்கள் பாடல் என்னைத் தடுமாற வைத்தது. அதில் லயத்ததில் கால் பிசகிவிட்டேன்" என்றான், விநயமாக.



அவன் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும் போதே அவள் கண் இளகி ஆச்சரியமாகிவிட்டது.

"யாருங்க! புலவரையாவா! நீங்க இங்ஙனே எப்படி வந்தீக?" என்று கேட்டாள்.

முல்லைராமன் திடுக்கிட்டான். அந்தக் கொச்சைப் பாமர மொழியை அவளிடமிருந்து எதிர் பார்க்கவில்லை.

யார் இவள்?

திருவடி ராஜ்ஜியத்து இன்பமலை இளவரசி சந்திர ரேகா இல்லையா?

எதாவது தாசி இனமாக இருக்குமோ?

ஏமாந்துவிட்டோமா!

அவளைச் சற்றே ஆழ்ந்து பார்த்தான்.

முதலில் கண்ணில் உறுத்தியது அவளது வெற்றிலை வாய்தான்! இந்தப் பாதி இரவில் இப்படி வெற்றிலையை அடக்கி வைத்திருக்கிறாளே!

காற்று தேவைப்பட்டது போலும்! மேலே போர்வையைக் கழற்றி இருந்தாள். உடம்பு பளிச்சென்று பேசியது. அப்படி ஒரு தந்த வெளுமை! கழுத்தும், இடுப்பும் தோளும் சுந்தர வளைவுகள்! அந்த மார்புகள்! ஓ! ஜல்லிக் கட்டுக் காளைகளா அவை! திமிரோடு பார்க்கின்றன!

இடை குழிந்து, அதன் கீழே அகலும் பிரதேசம் அகண்ட காவிரி போல விரிந்துகொண்டு போயிற்று.

அண்ணன் வீரதுங்கராமன் இருந்தால், இவளை இன்ன வகைப் பெண் என்று அளவு போட்டுச் சொல்லி இருப்பான்.

இளம் வயிதிலிருந்தே அவனுக்கு இப்படி ஒரு பழக்கம்! ஒரு பெண்ணைப் பார்த்தால் போதும் இவள் இப்படி இருப்பாள், இன்ன சுகத்தைத் தருவாள் என்று சொல்லி விடுவான்!

அந்தப் பெண் அப்போது, ''சங்கரன் தம்பீ'' என்று அழைக்க, பல்லக்குத் தூக்கிகளில் மூத்தவன், சும்மாட்டை எடுத்து இடுப்பில் கட்டி, அவள் முன்னால் நின்றான்.

''இப்படி ஒரு காரியம் பண்ணிட்டீங்களே! இவர் புலவரையா ஆச்சே! இவரைப் போய் பல்லக்குத் தூக்க வச்சுட்டீங்களே!'' என்றாள் அவள்.

''அப்படிங்களா? விஷயம் தெரியாதுங்களே! சங்கர நயினார் கோவிலில் நம்ப ஆளு ஒருத்தருக்குக் காய்ச்சல் எடுத்துவிட்டது. வேறு ஆளைத் தேடினபோது இவர் கிடைச்சாருங்க!'' என்றான், சங்கரன் தம்பி!

''அம்மணி! அவர் சொல்வது உண்மை! நானாகத் தான் விரும்பி வந்தேன். உங்களைப் பிடித்துப் போக பகைவர்கள் வந்திருக்கிறார்கள் என்று தெரிந்ததும், தாங்கள் அந்த ஊரைவிட்டு இரவுக்குள்ளே போய்விடுவது மேல் என்று நினைத்தேன். பல்லக்குத் தூக்க ஆள் இல்லாதபோது, தோள் கொடுக்கத் தீர்மானித்தேன்.''

''நல்லா நினைச்சீங்க!'' என்று மறுபடியும் நோக்கி வெற்றிலையை உமிழ்ந்தாள் அவள். ஒரு சிரிப்பு ஒன்று குலுக்கி வந்தது. இரண்டு மேற்புரங்களும் சிருங்காரமாகத் துடித்தன. ''ஐயே! என்னைத் தேடி வந்தாங்களாம் இல்லே! புலவரய்யா! மனசிலே நிறைய விஷயங்களை இட்டுக் கட்டுகிறீர்களே! என்னை யாரும் பிடிக்க வரவில்லை? என்னை யாருன்னு நினைச்சீங்க?'' என்று ஒரு கேள்வியைத் தொடுத்தாள், அவள்



முல்லைராமன் சற்று பின்னடைந்தான். உண்மையில் ஒரு தடுமாற்றம் தோன்றி இருந்தது.

''பெரிய குடியைச் சேர்ந்தவர்கள் என்று நினைத்தேன்!'' என்றான், அவன்.

ஓசையில்லாமல் கையைக் கொட்டினாள், அவள்.

அதில் குழந்தைத் தனம் ஓடியது.

''ஐயா! என் பெயர் திருமங்கையம்மா! நான் கோவில் நர்த்தகி ஆக்கும்! வேறு யாருமல்ல, நினைச்சுக்குங்க!'' என்றாள், அவள்.

மீண்டும் உமிழ்நீரை பல்லக்குக்கு மறுபக்கம் உமிழ, முல்லைராமனுக்கு ஏமாற்றம் அதிகமாகியது.

துகில் தலைப்பால் வாய் ஓரங்களைத் துடைத்துக் கொண்டு, ''நீங்க யாரு?'' என்று கேட்டாள், அவள்.

''புலவன்!'' என்றான், மெதுவாக,

''என்ன பேரு?'' என்றாள், அவள்,

''முல்லைராமன்'' என்றான் அவன்.

மீண்டும் சிரித்தாள், அவள். ''இந்தாங்க இந்தப் பாண்டியநாடு வந்தால் போதும்! எல்லாம் ராமன்கள்தான்! முல்லைராமன், செண்பகராமன், மல்லிகைராமன், இருவாட்சி ராமன்...''

சிரிப்புச் சின்ன மணிச் சிலுங்கலாக விழுந்தது.

அப்போது ஏதோ சத்தம் ஒன்று கேட்க, முல்லை ராமன் தெற்கு நோக்கித் திரும்பினான்.

நிலவின் ஒளியில் வெகு தூரத்தில் சின்ன நிழல்கள் அசைவது தெரிந்தன. ஒரு கொத்து மனிதர்கள் வேகமாக வருகிறார்கள் என்று தோன்றியது.

"என்ன சத்தம்?" என்று கேட்டவாறு திருமங்கை கீழே இறங்கினாள்.

சில கணங்களில் அவர்கள் குதிரை வீரர்கள் என்று தெரிந்தது.

"அம்மணி! ஆபத்து மீண்டும் வருகிறது!" என்றான், முல்லைராமன்.

"ஆபத்தா? எனக்கா? தூ..." என்று துப்பினான், அவள். "யாரு அவங்க? என்ன செய்வாங்க?" என்றாள்.

பக்கத்து மரத்தின் அடியில் அவள் அமர்ந்து அடி மரத்தோடு சாய்ந்து கொண்டாள். கால்களை அகற்றி வைத்த விதமும், கையை உயரே நோக்கி நீட்டி, மார்புகளை எடுப்பாகத் தெரியவிட்ட விதமும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

எங்கேயோ தவறு நேர்ந்திருக்கிறது!

யாரோ அவனுக்குத் தவறான செய்தி கொடுத்திருக்க வேண்டும்.

ஆரம்பத்தில் தொடங்கிய சந்தேகம் இப்போது உறுதியாகியது.

இவ்வளவு குறைவான பாதுகாப்போடு நிச்சயம் ஓர் அரச குடும்பத்துப் பெண் பிரயாணம் செய்யமாட்டாள்.

பல்லக்கு கூட அழகாக இல்லை.

விதானத் துணியில் ஒட்டை தெரிகிறது. பூண்கள் எல்லாம் களிப்பு ஏறிக் கிடந்தன.

எல்லாவற்றையும் விட திருமங்கையின் நடவடிக்கைகளைப் பார்த்தால், நல்ல குலத்தில் அவளைச் சேர்த்துக் கொள்ள முடியாது.



இவளுக்கா பல்லக்கை இவ்வளவு தூரம் தூக்கி வந்தோம்! கோவிலில் பாடிய தோத்திரப் பாடலைக் கேட்டு புலமை பெற்றவள் என்று நினைத்துவிட்டோம். சரி! இனி இவளைத் தொடர்வது உசிதம் இல்லை! திரும்ப வேண்டியதுதான்!

அவன் யோசனை முடியவில்லை. அதற்குள் மூன்று வீரர்கள் அங்கே வந்து இறங்கினார்கள்.

"அதோ அவன்தான்" என்று ஒருவன் கூற, மூவரும் தொப் தொப் என்று கீழே குதித்தார்கள்.

தலைப்பாகையும் மீசையுமாகக் காட்டான்கள் போலத் தெரிந்தார்கள்.

இருவர் அவனை நோக்கி வர, சிறிது நகர்ந்தான் முல்லைராமன்.

இருவரும் தாவி அவன் கையைப் பிடிக்கப் போக, ஒரு துள்ளலில் அவன் எகிறினான்

அதே நேரம் அவன் கால் ஆகாயத்தில் விரிய, அந்த இருவரில் ஒருவன் தாடை அதில் சிக்கியது. பட்ட அடியில் சுருண்டு போய் அந்த ஆள், விழுந்தான்.

மற்றவன் தப்பித்து கோபத்துடன் முல்லைராமன் மீது பாய, முல்லை சற்றே விலகி காலை மட்டும் ஒரு கோல்போல் நீட்ட–

அதன் தடங்களில் அகப்பட்டு கரணம் அடித்தான், மற்றவன்.

மூன்றாமவன் இதுவரை மீசையைத் தடவிய வண்ணம் சற்று எட்டத்தில் நின்று பார்த்திருந்தான்.

அவன் கை அவனது இடுப்பு வாள் மீது சென்றது.

அடுத்தகணம், பள பள என்று நிலவில் மின்னிக் கொண்டு ஒரு வாள் உயர்ந்தது.

ஒரு விநாடி முல்லைராமனுக்கு யோசனை எழுந்தது. இங்குமங்கும் பார்வையை ஓட்டினான்.

சட்டென்று பாய்ந்து, பல்லக்கைத் தள்ளிவிட்டு, அதன் ஆழக்காலை உருவினான்.

அவன் ஆழக்காலைத் தூக்கவும்! மூன்றாம் ஆளின் வாள் காற்றில் சத்தத்தோடு இறங்கவும் சரியாக இருந்தது.

ஆழக்காலை சிலம்பம் போல உயரத் தூக்கிப் பிடித்திராவிட்டால் அவன் உடல் இரண்டாகப் போயிருக்கும்.

நல்லவேளை, அவன் கற்ற சிலம்புவித்தை பூராவும் அவன் கைவசம் வந்தது. வாள் மின்னல்கள் உதிர, அது வரும் திசை பார்த்து எதிரில் போய் கோல் நின்று கொண்டது.

இருவரும் வியர்த்துக்கொண்டு சண்டை செய்ய, அந்தப் பெண் திருமங்கை மரத்தின் பின்னே நின்று எட்டிப் பார்த்தவாறு இருந்தாள்.

முல்லைராமன் களத்தில் தொடர்ந்து நின்றான். களைப்போ. அயர்வோ ஏற்படவில்லை. அவன் நடவடிக்கை எல்லாம் எதிரிக்கு களைப்பு உண்டாக்குவதாக இருந்தது. கடைசியில் ஆத்திரமாக விழுந்த வாள், முல்லையின் கோலில் ஆழ்ந்து அப்படியே சிக்கிக்கொள்ள, அந்த வீரன் அதை மீண்டும், எடுக்க முடியாமல் சிரமப்பட்டான்.

முல்லைராமன் காலைச் சுழற்றி ஒரு போடுபோட, மூன்றாமவனும் ஒரு சுற்றலோடு கீழே உதிர்ந்தான்.

அப்போது, "புலவரையா!" என்று ஒரு எச்சரிக்கை ஒலி தோன்ற, திரும்பினான்.



காற்றில் விஷ்ஷ் என்ற சத்தத்தை ஏற்படுத்தி கத்தி ஒன்று சுழிந்து வந்தது.

அவன் மார்பை நோக்கி லட்சியமாக அது வருவதை அறிந்து, சட்டென்று நகர்ந்து விட்டான்.

எனினும் இடது புஜத்தின் ஓரமாக அது சீறிக் கொண்டு, சற்று அப்பால் போய்த் தரையில் விழுந்தது.

வலி ஒரு தீக்காயம் போல எழுந்தது. வலது கையால் இடது புஜத்தைப் பொத்தினான். கை ஒருவேளை தனியாகி விட்டதோ?

அவசரமாக அவன் யோசனை படர சட்டென்று வந்தவர்களின் குதிரை ஒன்றை நோக்கித் தாவினான்.

தாவி அமர்ந்து, குதிரையை அங்குமிங்கும் திருப்பி மற்ற இரு குதிரைகளின் தலைக் கயிற்றையும் பற்றினான்.

பிறகு, "ஹோய்..." என்ற சத்தத்தைக் கிளப்பிக் கொண்டு, மூன்று குதிரைகளையுமே ஓட்டினான்.

ஏறிய குதிரை முன்னால் செல்ல, மற்ற இரு குதிரைகளும் சமவேகத்தில் பின்தொடர்ந்தன.

"ஏய்... ஏய்...ஏய்...!" என்று மூவரில் ஒருவன் பின்னால் ஓடிவந்து கூச்சலிடுவது சிறிது தூரம் வரை தொடர்ந்து வந்தது, பிறகு நின்றுவிட்டது.

இலஞ்சிச் சாமியார் வருகிறார் என்றால், தென்காசி அரண்மனையில் ஒரு பரபரப்பு இருக்கும். பக்தியும் மரியாதையும் அரண்மனை வாசிகள் எல்லார் முகத்திலும் ஒடும்.

அன்று காலையில் சாமியார் தமது பாதக்குறடு ஒலிக்க வந்தபோது, வீரர்கள் வணங்கி அவருக்கு வழிவிட்டார்கள்.

நேராக அத்தாணி மண்டபம் சென்று ஓரமாக இருந்த மர ஆசனம் ஒன்றில் அவர் அமர்ந்து கொள்ள,

அந்தப்புரம் வரை செய்தி ஓடியது.

ராஜமாதேவி உலகம்மை அவசர அவசரமாக நடந்து அத்தாணி மண்டபத்தை அணுகினாள்.

"சுவாமிகளே வணக்கம்!" என்று அருகில் சென்று வணங்கினாள், உலகம்மை. அவள் முகத்தில் ஒரு தனி மகிழ்ச்சி ஓடியிருந்தது. இலஞ்சிச் சாமியார் அவளை ஆசிர்வதித்து அமரச் சொல்லியும் அமராமல்,

"தாங்கள் வந்தது எங்கள் பாக்கியம் சுவாமி! பார்த்து வெகுநாள் ஆயிற்றே! தங்கள் தரிசனம் எப்போது கிடைக்கும் என்று ஏங்கிவிட்டோமே!" என்றாள், உலகம்மை.

இலஞ்சிச் சாமியாருக்கு எண்பது வயது இருக்கும். இருந்தும் அறுபது வயதின் பொலிவு அவரிடம் இருந்தது. நரைத்த தாடியும் முடியும் அவருக்கு அசாதாரண அழகைக் கொடுத்திருந்தது.

"ராஜமாதேவி! எங்கே தங்கள் புதல்வன் அதிவீர ராமன்!" என்றார், அவர் மென்மையான குரலில்.

"அதுவா! ராஜ காரியம் பார்க்க வெளியே புறப்பட்டுப் போனவன்தான்! முன்பெல்லாம் தினம் யாரிடமாவது "இன்னின்ன இடத்தில் இருக்கிறேன்" என்று செய்தியாவது அனுப்புவான். இப்போது அதுவும் இல்லை! எங்கேயாவது ஒரு புலவர் வீட்டில் தங்கிவிட்டானோ என்னவோ!" என்றாள், உலகம்மை.

இலஞ்சியார் சிறு புன்னகையுடன் தலை ஆட்டினார். பிறகு, "நாட்டு நிலை நன்றாக இல்லையே! இப்போது புலவரிடம் போகலாமா?" என்று கேட்டார், அவர்.

"ஏன் சுவாமி! நாட்டில் ஏதாவது அபாயம் வந்திருக்கிறதா?" என்று திடுக்கிட்டுக் கேட்டாள் உலகம்மை.



ஓசையில்லாமல் சிரித்தார், இலஞ்சியார்! கண்களில் மிருதுவான ஒளி ஒன்று அடித்தது.

"நாட்டுக்கு அபாயம் வந்திருக்கிறதம்மா!" என்றார், அவர் தழுதழுத்த குரலில்.

"அப்படியா, சுவாமி?" என்று கையைப் பிசைந்து கேட்டாள், அவள்.

"அபாயம் ஒரு பக்கத்தில் அல்ல! இரண்டு பக்கமும்! சொல்லப்போனால் மூன்று பக்கமும்...." என்றார் இலஞ்சியார்.

"சுவாமி! இதென்ன வேதனை! இதுவரை எதுவும் நேராமலிருந்ததே! இப்போது ஆபத்து எப்படித் தோன்றியது?" என்று கலவரத்துடன் கேட்டாள், அவள்.

இலஞ்சியாரின் முகம் தீவிரமாகியது.

## 4

தென்காசி அரண்மனையில் அத்தாணி மண்டபத்தில் ராஜமாதா உலகம்மை, இலஞ்சிச் சாமியார் முன்னால் விநயத் துடன் அமர்ந்திருந்தாள்.

கண்களில் அச்சம் தோன்றி இருந்தது.

"ஏன், சுவாமி? எங்கள் ராஜ்ஜியமே சிறியது. இதற்கு அ[illegible]?" என்றாள்.

(உலகம்மை கூறியது முற்றிலும் உண்மையானது. பதினாறாம் நூற்றாண்டுப் பின்பகுதியில் பாண்டியர்கள் மதுரையை இழந்து தெற்கே திருநெல்வேலிச் சீமைக்குப் போய் சிற்றரசர்களாக வாழத் தொடங்கி இருந்தார்கள். அது மட்டுமல்ல. திருநெல்வேலிச் சீமையை ஐந்து பகுதிகளாக்கி, ஐந்து பகுதிகளையும் ஐந்து பாண்டியர்கள் ஆண்டு வந்தார்கள்.)

"அம்மா! கலவரப் படாதீர்கள்! அபாயம் இல்லாத ஆட்சி உலகத்தில் உண்டோ? இன்று இல்லாவிட்டால் நாளை வரும்!"

"இப்போது எங்கிருந்து ஆபத்து வருகிறது சுவாமி?"

"எல்லாம் உள் பூசல்தான்!" என்றார் இலஞ்சியார்.

"எங்கள் குடும்பத்துப் பூசலா?" திடுக்கிட்டுக் கேட்டாள் உலகம்மை.

மெல்லிதாகச் சிரித்தார் இலஞ்சியார். கண்களில் பொறி சிந்தியது.

"நன்றாக இருக்கிறது! உங்கள் குடும்பத்துள் பூசலா? அதுவும் அண்ணன் தம்பிகளுக்குள்ளா?" என்றார் இலஞ்சியார். பிறகு தமது வெண்மைத் தாடியை வருடிக்கொண்டு. "அண்ணன் வரதுங்கனும், தம்பி அதிவீரனும் மெத்தக் கற்றவர்கள் ஆயிற்றே! இவர்கள் கவிதையில் சண்டையிடுவார்களே தவிர களத்தில் சண்டையிடமாட்டார்கள்! தாங்கள் நிச்சயமாக அறியலாம். அதற்கெல்லாம் அவர்களிடம் நேரம் கிடையாது. ஏட்டைப் படிப்பதிலேயே" பாதி நேரமும் போயிற்று" என்று கூறினார்.

"அரண்மனைப பண்டாரத்தில் (வாசகச்சாலை) போயப் பாருங்கள்! ஏடுகள் நிரம்பி வழிகின்றன. ஏடுகளுக்காக இன்னொரு அரண்மனை கட்ட வேண்டும் போல் இருக்கிறது" என்று தம் மகனின் கல்வியாற்றலை பெருமையோடு கூறினாள் உலகம்மை!

"இருக்கட்டும்! இருக்கட்டும்! அறிவை வளர்ப்பதில் எவ்வளவு செலவு செய்தாலும் தேவலை! அது, அழிவை வளர்ப்பதில் செல்லாமல் இருந்தால் சரி!" என்றார் இலஞ்சியார்.



"இப்போது வந்துள்ள ஆபத்து, எப்படி சுவாமி?" என்றாள் உலகம்மை!

"அம்மா! விஜயநகரத்தில் ராயர்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து மதுரையில் நடக்கும் நாயக்கர் ஆட்சியை நாம் எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறோம். நம் பாண்டியரிடையே நிறைய பூசல் வந்துவிட்டதால் நம்மவர்கள் மதுரையை இழக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. மதுரையை ஆளவந்த நாயக்கரும் நம்மை அடிமையாக நடத்தாமல் நேசம் பூண்டு நடத்துவதால், அவர்கள் ஆட்சிக்கு நாமும் அனுசரணையாக இருந்து வருகிறோம். இதெல்லாம் தங்களுக்குத் தெரியாதது அல்ல! ஆனால், இப்போது தஞ்சை மண்டலத்தை ஆளும் நாயக்கருக்கு ஆசை ஏற்பட்டிருக்கிறது" என்றார், இலஞ்சியார்.

"யார்? அச்சுதப்ப நாயருக்கா?" என்றாள் உலகம்மை!

"ஆமாம்! மதுரை ஆட்சியைப் பிடித்து, அதன் மூலம் தென் பாண்டி நாடு முழுவதையும் அடிமை ஆக்க விரும்புகிறார் அவர்" என்றார் இலஞ்சியார்.

உலகம்மை கையைத் தட்டி கன்னத்தில் புதைத்துக் கொண்டாள். "ஏதேது? அவருக்குமா அப்படி ஆசை?" என்று வியப்போடு கேள்வி கேட்டாள்.

இலஞ்சியார் முறுவல் காட்டிப் பேசினார். எப்போது விஜயநகரம் அழிந்து ராயர் ஆட்சி பலவீனமாகி விட்டதோ, அப்போதிலிருந்தே மண்டல அரசர்கள் தலைக்குத் தலை அதிகாரம் காட்ட ஆரம்பித்து விட்டார்கள்! தங்களிடையே சண்டை போட்டு தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்."

"ஏன் சுவாமி இந்தப் பொல்லாத ஆசை?" என்றாள் உலகம்மை.

"ஏனம்மா ஏற்படாது? ராயர்கள் நலிந்துவிட்டார்கள். நாளைக்கு அவர்கள் அழிந்துவிட்டால் இவர்கள் தனி ராஜ்ஜியமாக அரசாளலாமே! யாருக்கும் உட்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லையே!" என்றார் இலஞ்சியார்.

"அதற்காகத்தான் இப்போதே நிலத்தைப் பெருக்க ஆரம்பித்துவிட்டார்களோ?" என்று அங்கலாய்த்தாள் உலகம்மை.

"அதுவும் உண்மைதான்! மதுரையிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை ஒரே ராஜ்ஜியமாக இருந்தால் கசக்கவா செய்கிறது?"

"அப்படி ஒருநாள் வருமா, சுவாமி?"

"வரட்டும் அம்மா! அது இந்தப் பாண்டிய குலத்துக்கே வரட்டும்!"

"வருமா சுவாமி?"

"ஏன் வராது? வர வேண்டும் என்றுதான் நானும் கனவு காண்கிறேன்! முதலில் பாண்டியரிடையே பூசல் தீர்ந்தால் தானே அதற்கு வழி ஏற்படும்! இவர்களைத் தீர்த்து வைத்தாலும் பாலையக்காரர்கள் வேறு இருக்கிறார்கள்."

"ஊம்" என்று பெருமூச்சு விட்டாள் உலகம்மை! அது எங்கே நடக்கப் போகிறது? என்ற ஒரு கவலை அவள் நெற்றியில் ஒட்டி இருந்தது.

இதற்குள் தாதி ஒருத்தி இலஞ்சியார் முன்னால் சூடான பாலை வைத்து விட்டுச் சென்றாள்.

"அருந்துங்கள் சுவாமி! களைத்திருக்கிறீர்கள்!" என்றாள் உலகம்மை.

இலஞ்சியார் பாலை எடுத்துப் பருகினார்.



பாத்திரத்தைக் கீழே வைத்ததும், "அப்படியானால் அச்சுதப்பன் மதுரை நாயக்கரோடு சண்டை போடப் போகிறாரா?" என்றாள் உலகம்மை!

"மதுரை நாயக்கரோடு இல்லை அம்மா! சிற்றரசன் வாணாதி ராயனோடு..."

"என்ன? புகழ்பெற்ற வாணாதியோடா?"

"ஆமாம்!"

"சரி! மதுரைக்கு வடக்கே அல்லவா இந்தப் பூசல்! இதில் நமக்கு எங்கே ஆபத்து?"

"இருக்கிறது! இது தோற்றத்திற்குத்தான் வாணாதியோடு சண்டை! சற்று ஆழ்ந்து பார்த்தால் மதுரை நாயக்கரோடுதான் சண்டை!"

"அப்படியா சுவாமி?"

"ஆமாம்! வாணாதி நம் மதுரை நாயக்கருக்கு வேண்டியவர் ஆயிற்றே! "உன் சிற்றரசனோடு சண்டை செய்கிறேன். நீ என்ன செய்வாய். பார்க்கலாம்!" என்று சவால் விடுவது போல் இருக்கிறது."

"இதற்கு மதுரை நாயக்கர் என்ன செய்வார்?"

"அதுதான் பார்க்க வேண்டும்!"

"பெரிய சண்டை ஆகிவிடுமோ?"

"ஆனாலும் ஆகலாம்!"

"அதனால்தான் ஆபத்து என்கிறீர்களா?"

"ஆமாம்! கடைசியில் இது தஞ்சை – மதுரை யுத்தமாக முடியலாம்!"

"நாமும் இதில் ஈடுபட வேண்டியிருக்குமோ?"

''ஆமாம்! மதுரைக்கு ஆபத்து என்றால் நாமும் உடனே உதவி செய்ய வேண்டியவர்கள் ஆயிற்றே! மதுரைக் கோட்டையில் உள்ள 72 பரிசத்தில் இருபத்தெட் டாவது பரிசத்தைக் காக்க வேண்டியவர்கள் நாமாயிற்றே''

''தஞ்சை நாயக்கர்களை மதுரையை ஆளவிடக் கூடாது என்கிறீர்கள்?''

''ஆமாம்! மதுரை நாயக்கரோடு நமது தொடர்பு ஒரு நூற்றாண்டு ஆகப்போகிறது. மதுரை நாயக்கர்கள் நம்மை சரிசமமான மன்னர்களாக மதித்து நமக்கு வேண்டிய மரியாதைகளை எல்லாம் தருகிறார்கள். நாமும் அவர்களை நமது பாதுகாப்பாளராக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் தஞ்சையின் தலைமையை நாம் விரும்பமாட் டோம் இல்லையா?''

''ஒருபோதும் விரும்பமாட்டோம்! பாண்டிய ராஜ்ஜியம் என்றால் அதை மதுரையில் வசிக்கும் மன்னர்தான் ஆள வேண்டும்''

''சரி! இவ்வளவு புரிந்து கொண்டீர்களே மகிழ்ச்சி! இப்போது இன்னொரு செய்தியையும் சொல்லிவிடுகிறேன்.''

''சொல்லுங்கள் சுவாமி!''

''திருவடிராஜா தெரியுமல்லவா?''

(மலையாள ராஜ்ஜியத்திற்கு திருவடி ராஜ்ஜியம் என்று பெயர்.)

''ஆமாம்.''

''அவர் இந்த அச்சுதராயனுக்கு உதவப் போகிறார்.''

''தஞ்சை நாயக்கருக்கா?''

''ஆமாம்.''



''மதுரைக்கு எதிராக?''

''ஆமாம்!''

இப்போதுதான் உலகம்மை முகத்தில் மாறுதல் ஏற்பட்டது.

''அப்படி என்றால் சுவாமி, வடக்கே போர் மூண்டால் திருவடி ராஜ்ஜியம் நம் ராஜ்ஜியத்தை முழுங்கிவிடுமே.''

இலஞ்சியார் மென்மையாகப் புன்னகை செய்தார்.

''அதுதானம்மா ஆபத்து!''

''இதுதான் உண்மையான ஆபத்து! ஏதாவது உடனே நடந்துவிடக் கூடாதே சுவாமி! மகன் எங்கேயோ போயிருக் கிறானே!'' என்று கவலையாக ஒலித்தாள், உலகம்மை.

''பதட்டப்படாதே அம்மா! மகன் தற்சமயம் இல்லா விட்டால் என்ன? சேனாதிபதிகள் இல்லையா? படை இல்லையா? கவலை வேண்டாம். மகன் போனாலும் இது காரியமாகத்தான் போயிருப்பான் என்றார் இலஞ்சியார்.

அவர் சொல்லி, வாய் மூடி இருக்கமாட்டார்.

தாதி ஒருத்தி ஓடி வந்து, ''மகாராணி, மன்னர் வந்து கொண்டிருக்கிறார்'' என்று தெரிவித்து ஓடிவிட,

இருவரும் வாயிலை நோக்கி ஆவல் விழியோடு பார்த்தார்கள்.

முதலில் நிழல் தெரிந்தது.

அதன்பின் ராஜ உடையில் அந்த உருவம் உள்நோக்கி வந்தது.

உலகம்மை அவனை நோக்கிப் பரவசமாகி, ''அதிவீரா! உனக்கு நூறு வயசு! உன்னைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போதே வந்தாய். ஐயோ இதென்ன கட்டு?''

அதிவீரன் இலஞ்சியாரைப் பார்த்ததும், "சுவாமி வணக்கம்!" என்று சொல்லி, அவரது பாதங்களைத் தொட்டான். அதேபோல தாயாரின் பாதங்களையும் தொட்டு கண்ணில் ஒத்திக் கொண்டான்.

"இதென்ன கட்டு?" என்று மீண்டும் கவலையுடன் கேட்டாள் உலகம்மை.

அதிவீரன் தாயைப் பொருட்படுத்தவில்லை. இலஞ்சியாரை நோக்கி.

"சுவாமி, தாங்கள் இங்கே வருவீர்கள் என்று தெரியாதே! சங்கரநாயினார் கோயிலில் தேடினேன். வரும் வழியில் யாத்திரைத் தலங்களை எல்லாம் பார்த்தேன். தங்களைச் சோழவந்தானில் அல்லவா சந்தித்தேன். தாங்கள் எப்படி இங்கே இவ்வளவு துரிதமாக வந்தீர்கள்?"

"வாயுவேகம் என்று கேள்விப்பட்டது இல்லையா? அப்படித்தான் வந்தேன்." என்று முறுவலைக் காட்ட, அவரது தாடிகூட நீண்டு முறுவலிப்பது போல் இருந்தது.

பிறகு இலஞ்சியாரின் பார்வை அவன் புஜத்தை நோக்கிப் போவதைப் பார்த்து,

"சுவாமி! தாங்கள் அறிவித்தபடி வடக்குப் போகும் ராஜபாட்டையைக் கவனித்தேன். அதில் நடந்த சின்ன பூசலில் எழுந்த காயம் இது. கடைசியில் எதிர்பார்த்தவள் இல்லை. யாரோ தவறான நபரை பாதுகாக்க போய் விட்டேன்" என்றான்.

"யார் அது?"

"யாரோ வேலைக்காரி! திருமங்கை என்று பெயர்! ஏமாந்து திரும்பிவிட்டேன்!" என்றான்.



"திருமங்கையா?" என்று திடுக்கிட்டுக் கேட்டார் இலஞ்சியார்.

"ஆமாம்!" என்றான் அதிவீரன்.

இலஞ்சியாரின் முகம் மாறியது.

## 5

திருமங்கை என்ற பெயரைக் கேட்டதும் இலஞ்சிச் சாமியாரின் முகத்தில் நிழல் பரவியது.

பிறகு ஏதோ பேச வாய் எடுத்தார். ஆனால் அதை நிறுத்திவிட்டு, "நல்லது நல்லது!" என்று சொல்லி தமது தாடியைத் தடவிவிட்டார்.

இதற்குள் உலகம்மை எழுந்து, "சுவாமி! மகன் வந்து விட்டதில் கவலைவிட்டது! நான் கோவிலுக்குப் போக வேண்டும். விடை கொடுங்கள்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

இருட்டிக் கொண்டிருந்தது. கையில் தூங்கா விளக்கு எடுத்து தாதி விளக்கு மாடங்களை நோக்கிச் சென்றாள். அவள் ஒவ்வொரு மாடத்தை கடந்து வரும்போதும், ஒவ்வொரு தீ மொக்கும் புஷ்பித்திருந்தது.

சீக்கிரம் அரண்மனை பூராவும் பொன் முறுவலாக வெளிச்சம் உதிர்த்து விட்டது.

உலகம்மை போனதுதான் தாமதம். இலஞ்சியார் உடனே பேசினார். "என்ன அதிவீரா! திருமங்கையை சந்தித்தாயா? அவளை இழுத்து வந்தாயோ?" என்று கேட்டார், ஆவலுடன்.

"அப்படிச் செய்ய வேண்டும் என்றுதான் தாங்கள் ஓலை அனுப்பி இருந்தீர்கள். ஆனால், என்னால் அப்படிச் செய்ய முடியவில்லை" என்றான், அதிவீரன்!

"ஏன் என்ன ஆயிற்று?" என்று கவலையோடு கேட்டார், இலஞ்சியார்.

"அந்த நீலத் தலைப்பாய்க்காரர்கள் வந்துவிட்டார்கள்!"

"அப்படியா? எங்கே?" என்று நிமிர்ந்து அமர்ந்தார், இலஞ்சியார்.

"சங்கரநயினார் கோவிலுக்கு வந்தார்கள்."

"திருநாள் நடக்கிறபோதா?"

"ஆமாம்!"

"என்ன செய்தார்கள்?"

"அந்தப் பெண்ணை அபரிக்கும் குறியோடு வந்தார்கள்!"

"ஓ! ஒற்றைக்காதுக்காரனும் வந்தானா?"

"அவனை இந்தச் சமயத்தில் காணவில்லை சுவாமி!"

"சரி! அந்தப் பெண்ணை அபகரித்தார்களா?"

"இல்லை. நான் விடவில்லை! கோவிலிலேயே மறைத்து வைத்தேன்."

"அடேயப்பா! அதை அவர்கள் கண்டுபிடிக்க வில்லையா?"

"ஒற்றைக்காதன் வந்திருந்தால் கண்டு பிடித்திருப்பான்! இவர்களுக்கு சாமர்த்தியம் போதாது.

"சரி! பிறகு என்ன நடந்தது?"

"இரவுவரை காத்திருந்து அந்தப் பெண்ணின் பல்லக்கோடு புறப்பட்டேன்."



"இரவில்...?

"ஆமாம். இனிமேல் அவள் அந்த ஊரில் இருந்தால் ஆபத்து என்று நினைத்தேன்."

"சரி! என்ன நடந்தது?"

"போகிற வழியில் வந்து, திரும்பவும் மடக்கினார்கள்?"

"அப்படியா?"

"நான் தனி! மற்றவர்கள் பல்லக்குத் தூக்கிகள்! என்ன செய்வோம். இருந்தும், அவர்களுக்குச் சமமாக சளைடை செய்தேன். அவர்களில் மூவர் குதிரைகளையும் பறித்து வந்து விட்டேன்."

"அப்போ அந்தப் பெண் என்ன ஆனாள்?"

"சுவாமி! அவள் அரச குலம் இல்லை போலும்!"

"ஏன் அப்படிச் சொல்கிறாய்"

"சாதாரண தயிர்க்காரி மொழி பேசினாள்."

"அப்படியா?" என்று கேட்ட இலஞ்சியாரின் புருவம் மேலே தூக்கியது.

"கோவிலில் தீந்தமிழில் பாடினாள். பேசினாள்! ஆனால் இங்கே முகத்தைக் கோணி, வேலைக்காரி மொழியில் பேசினாள்."

"தோற்றம் உனக்கு எப்படித் தோன்றியது?"

"சுவாமி! மலையாள ராஜ்ஜியத்துப் பெண் ஆயிற்றே! செக்கச் செவேர் என்று நல்ல அழகில் தென்பட்டாள். அங்கே சாதாரண பெண்களும் அழகாக இருப்பார்களே!"

தாதி குறுங்குடியாள் அதிவீரனுக்குச் சூடான பாலை வைத்துவிட்டு, ஒதுங்கி நின்றாள்.

மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார். இலஞ்சியார்! அவர் தீவிரத்துடன் எதையோ சிந்திப்பது தெரிந்தது.

பிறகு நிமிர்ந்து, "அந்தப் பெண்ணை என்ன செய்தாய்?" என்றார், அவர்.

"நான் ஒருவன் எதையும் செய்ய வழியில்லை. விட்டு விட்டு வந்துவிட்டேன்."

"ஆ! இப்படிச் செய்யலாமா?"

"தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டாமா, சுவாமி! என் புஜத்தில் காயம் பட்டுவிட்டதே! தவிர அந்த வீரர்களின் குதிரையைப் பறித்து வந்துவிட்டேன்! அதுதான் என்னால் செய்ய முடிந்தது!"

இலஞ்சியார் பெரு மூச்சுவிட்டார்.

"சரி! இனி என்ன நடக்கிறது பார்ப்போம்!" என்றார், தமக்குள் முணகலாக.

அதிவீரன் பாலைப் பருகினான். தூண் ஓரத்தில் நிழலாக இருந்த தாதி குறுங்குடி பாத்திரத்தை எடுத்துப் போனாள்.

"ஏன் சுவாமி! அவள் உண்மையில் அரசகுமாரியா?"

"எனக்குச் செய்தி அப்படித்தான் வந்தது."

"இப்படி வெளிப்படையாகப் போவாளா?"

"ஒளிந்து போவதை விட வெளிப்படையாகப் போனால் சந்தேகம் குறைவாகிவிடும். தெரியும் அல்லவா?"

"உண்மை சுவாமி! அவள் வடக்கே எங்கே போகிறாள்? என்ன செய்யப்போகிறாள்."



"அதுதான் தெரியாது! அதற்காகத்தான் உன்னை ஏவி விட்டது!"

"நெருங்குவதற்கே சந்தர்ப்பம் இல்லாமல் போய் விட்டது சுவாமி."

"நெருங்கி இருந்தாலும் அவளிடம் இருந்து உன்னால் அந்த இரகசியத்தைப் பெற்றிருக்க முடியுமோ, என்னவோ?"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் சுவாமி."

"அவள் பெரிய சமார்த்தியக்காரி."

"அப்படியா?"

"ஒரு பெண் சகலகலா வல்லவள் என்றால், அவளைத் தான் சொல்லவேண்டும்?"

"அப்படியா!"

"ஆமாம்! பலமொழிகள் கற்றவள். பல கலைகள் கற்றவள். பல வித்தைகள் கற்றவள்!"

"அப்படி ஒரு அரசகுமாரியா?"

"ஆமாம். சேரமன்னன் தனது பிள்ளை இல்லாக் குறைக்கு அப்படி வளர்த்திருக்கிறான். ஏதோ வேலைக்காரி மொழி பேசினாள். என்றாயே!"

"பேசமட்டுமில்லை! அதுபோலவே கை கால்களை விரசமாக நடித்துக் காட்டினாள்!"

"அதுவும் அவள் கற்ற கலை! நாட்டியம் ஆடுவாள், நாடகம் ஆடுவாள், ஈட்டியும் பிடிப்பாள், வாளையும் பிடிப்பாள்."

"இப்போது அவளைப் பிடித்துள்ள மூன்று வீரர்களின் கதி என்ன ஆயிருக்கும் தெரியுமா?"

"விரட்டியிருப்பாளா!"

"கொல்லவும் செய்திருப்பாள்."

அதிவீரன் பெருமூச்சு விட்டான். இப்படியும் பெண் உலகத்தில் இருக்கிறாளா?

அவன் மனதில் எழுந்ததை இலஞ்சியார் புரிந்து கொண்டார்.

"அதிவீரா! நானும் எவ்வளவோ நாடுகளில் சுற்றி இருக்கிறேன். அவளைப் போல ஒரு பெண்ணைப் பார்த்ததில்லை."

அதிவீரனின் நெஞ்சம் புடைத்து, அமிழ்ந்தது.

"அவள் உண்மையில் கலாதேவி. சரசுவதியின் அவதாரம். அவளை அடைந்தவன் உலகில் பெறாத பேறு பெறுவான்! அவள்முன் எந்த பட்ட மகிஷியும் வெறும் தாதிதான்!"

இலஞ்சியார் வர்ணிக்க வர்ணிக்க அதிவீரனின் தாபம் அதிகரித்துச் சென்றது.

ஏற்கனவே அவளது மீன் விழிகள் அடிக்கடி வந்து மனதில் லயித்தது.

அவள் விழி ஒரு ஆகாய அண்டத்தைக் காட்டுவது போல் இருந்தது.

ஒரு சமயம் பிரம்மாண்ட கடலையே காட்டுவது போல இருந்தது.

பார்த்த கணத்தில் நினைவு தடுமாறி எங்கேயோ மிதப்பது போலிருந்தது.

கோவிலில் அவள் காட்டிய காட்சி, அம்மனே வந்து நின்றதுபோல இருந்தது.



"புலவரைய்யா!" என்று விளித்தபோது, ஏழு சுவரங்களும் ஒருமித்து ஒலித்ததுபோல் இருந்தது.

ஆ! அவள் அருகில் இருந்தால் காவியம் படைக்கலாம் அல்லவா?

அவன் முகத்தில் பரவசங்களும் பாவங்களும் மாறி மாறி ஏற்படுவதை இலஞ்சியார் கவனித்துக்கொண்டு வந்தார்.

அவர் கண்களில் பெரிய உலகமே தோன்றியது.

"சுவாமி!" என்றான். அவன் நீண்ட மவுனத்திற்குப் பிறகு.

"என்ன அதிவீரா!" என்றார், அவர்.

"அவள் என்ன ஆனாள் என்று திரும்பப் போய்ப் பார்க்கவா?" என்றான், உணர்ச்சிப் பெருக்கோடு.

"இரு! இரு! உன்புஜம் குணமாகட்டும்!" என்றார், இலஞ்சியார்.

"அதற்கென்ன சுவாமி! வைத்தியர் நம்பிரானையும் அழைத்துச் சென்றால் போயிற்று! நான் இப்போதே கிளம்புகிறேன்."

"இப்போதேவா! அவ்வளவு அவசரமா! போய், தாயாரிடம் விடைபெற்றுக்கொள்!" என்றார், இலஞ்சியார்.

"அதற்குக் கூட நேரமில்லை சுவாமி! இதோ கிளம்புகிறேன்" என்று சட்டென்று எழுந்து அவர் பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு, விரைவாக வெளியேறினான்.

இலஞ்சியாருக்கு வாய் ஓரமாக ஒரு புன்னகை ஏற்பட்டது.

"நடக்கட்டும்! நடக்கட்டும்" என்பதுபோல தலையை ஆட்டிக்கொண்டார்.

பின்னர் உலகம்மை அங்கே வந்து, "எங்கே அதி வீரன்?" என்று கேட்ட போது–

"என்ன சொல்ல அம்மா! திடீர் திடீர் என்று முடிவு எடுக்கிறான்! யுத்த அபாயம் வருகிறது என்று ஆரம்பித்தேன். இதோ உடனே வடக்கு எல்லையைப் போய்ப் பார்க்கிறேன்! என்று கிளம்பிவிட்டான்! நாளை போகலாம் என்று சொல்லியும் கேட்கவில்லை" என்றார், அவர்.

உலகம்மை கல்லாகி நின்றாள்.

அத்தாணி மண்டபத்து படிக்கட்டில் அதிவீரன் அதி வேகமாக இறங்கும் போது–

"சுவாமி!" என்று இனிய குரல் கேட்டது.

திரும்பினான்.

தாதி குறுங்குடி நின்று கொண்டிருந்தாள்.

"என்ன?" என்று புருவத்தைத் தூக்கினான்.

ஓலை நறுக்கு ஒன்றை அவன் கைகளில் கொடுத்தாள்.

அவசரமாக விரித்து பக்கத்து விளக்கு அருகில் போய்ப் பார்த்தான்.

அவன் முகம் சட்டென்று தீவிரமாகியது.

## 6

நான்கு வாயிலும் நான்கு கட்டுகளும் கொண்ட பரிமள சாந்தி என்ற தாசியின் வீடு, அலங்காரமாக இருந்தது.

அத்தனை மாடங்களிலும் எண்ணெய் விளக்குகள் எரிந்தன. நடுக்கூடங்களில் தொங்கு விளக்குகள் ஆடாமல் அசையாமல் எரிந்தன.



உள்ளே நிறைய புகை ஏற்றிவிட்டு, தீக்கணப்பை நடுக் கூடத்தில் வைத்து விட்ட பரிமளசாந்தி, "ஏண்டி அல்லிக் கொடி! நான் சொன்னது காதில் விழுந்ததா?" என்று கோபத்தில் கேட்டாள்.

பரிமள சாந்திக்கு நாற்பது வயது இருக்கும். இன்னும் கட்டுக் குலையாமல் பழைய சொரூபத்தை வைத்திருந்தாள். பாவாடை தாவணி அணிந்தால் போதும், "இப்போதுதான் பூப்பு எய்தினாளோ?" என்று கேட்கும்படி இருந்தாள்.

தாய் இப்படி இருந்தால், பெண் எப்படி இருப்பாள்?

சயன அறையில் தந்தம் பதித்த கட்டில் மேல் இறகுப் படுக்கையில் அல்லிக்கொடி மல்லாந்து சாய்ந்திருந்தாள்.

கையில் ஏடும் எழுத்தாணியும் இருந்தது.

பக்கத்தில் ஓலை நறுக்குகள் பல நடுவில் துவார மிட்டு, மஞ்சள் தடவிய மங்களத்தோடு இருந்தன.

கண் ஆயிரம் என்று, முதல் வாக்கியத்தை அமைத்து, அதற்கு ஏற்ற மோனை சரிவர அமையாமல் நீக்கி இருந்தாள், அல்லிக்கொடி!

நல்ல பதினெட்டில் பருவம்! பதமான இளசு! தேகம் சிற்ப இலக்கணம்! மார்பு இரண்டும் நிமிர்ந்து பார்க்கும் மயிலைக் காளைகள்! இடுப்பு ஒடிசலோ, கடைசல் எடுத்த வளைவுகள்!

அப்போதுதான் அவள் இரவு ஆகாரம் உண்டு, தாம்பூலம் தரித்திருந்தாள். வாயில் கற்பூரம், கிராம்பு, லவங்கமாக வசந்தம் வீசியது. தாம்பூல ஈரம் அவளது உதடுகளை மென்மையாகப் பூசி, "வாய்கூட இவளுக்கு பூப்பு எய்யுமோ!" என்று கூறும் வண்ணம் இரத்தச் சிவப்பாக இருந்தது.

கண்ணாயிரம் கொள்ளினும் காணாது....என்ற வரி அப்படியே முறிந்து நின்றுவிட-

அவளோ அந்த வெள்ளி எழுத்தாணியால் சிந்தூரல் கன்னத்தில் சிறிதாகக் குத்தி சொறுகும் கண்ணோடு யோசித்திருக்க,

தாய் பரிமளசாந்தி ஆடிச் சுழல்போல உள்ளே வந்தாள்.

சீற்றத்தோடு மகளைப் பார்த்து, "அடிப்பாவி! நீயும் உன் எழுத்தும் நாசமாய் போக!" என்று சொல்லி,

அவள் கையிலிருந்த எழுத்தாணியையும், மெத்தையில் கிடந்த வெற்று ஓலைகளையும் வெளியே தூக்கிக் கடாசி விட்டாள்.

"என்ன நீ! சொத்தைச் சேர்க்காமல், செத்தையைச் சேர்க்கிறாயே! பனையோலையா குடும்பத்தைத் தாங்கப் போகிறது! பொன் ஓலையை பூட்டிக் கொள்ளடி, பாதகி! எத்தனைதரம் சொன்னாலும் கேட்காமல் கொள்ளாமல், ஆகாயத்தையும் பூமியையும் பார்க்கிறாயே! அரசர் வரப் போகிறார்! எழுந்துபோய் அவரை மயக்கவேண்டியதைக் கவனி!" என்று கூறி நிறுத்தினாள், அவள்.

பெண் அல்லிக்கொடி கண்ணில் சுள்ளி எரிந்தது.

இரண்டு புருவ இடுக்கில் ஒரு சிணுங்கலான நெரிப்பு எழுந்தது.

"இந்தாம்மா! இதுபோல இன்னும் ஒருமுறை செய்தாயோ, நான் கப்பரை ஏந்தி விட்சுணியாக வெளியே போவேன்" என்று கடிந்து கூறினாள்.

தாய் அவ்வளவில் முகம் சிவந்தவளாகி, பெண்ணின் மெத்தைக் கட்டிலேயே அமர்ந்து,



"அடி, துப்புக்கெட்டவளே இப்படி உலகம் தெரியாமே எத்தனை காலம் இருக்கப் போகிறாய்! உன்னையொத்த பெண்கள் உலகத்தை வெல்கிறார்களே! நீ இப்படி, கொண்டதே கோலம் என்று இருக்கிறாயே! எத்தனை தடவைதான் உனக்கு உபதேசம் செய்வது?" என்று சரமாரி யாகப் பேசினாள் தாயார்.

பெண்ணுக்குத் துக்கம் வெகுண்டு வந்தது. உறுத்த லாக ஒரு பார்வை பார்த்தாள். "அம்மா! நீ சொன்னபடி அரசரை நான் வசப்படுத்தியாகிவிட்டது. இன்னும் என்ன தான் செய்யச் சொல்கிறாய்?"

"அப்படிக் கேள்! சொல்கிறேன்! ஏற்கனவே குற்றாலத்தில் வைத்து நான் சொல்லவில்லை!" என்று கேட் டாள், பரிமளசாந்தி ஆத்திரத்துடன்.

"என்ன சொன்னீர்கள்?"

"இந்த அருவிலேயே குளிக்க, எத்தனை மன்னர்கள், மந்தரிகள், சேனாதிபதிகள் வருவார்கள் தெரியுமா? இப்போது யாரும் வருவதில்லையே என்றேன்! நினைவு இருக்கிறதா?" என்றாள், தாயார்.

அல்லிக்கொடி புருவத்தைத் தூக்க, சட்டென்று அத்தனை விஷயமும், மனசில் நினைவுக்கு வந்தன. தாயார் கெட்டிக்காரி, சாமர்த்தியக்காரி! எல்லோரும் சொத்தை வளைக்கப் பார்த்தால், இவள் தேசத்தையே வளைக்கப் பார்ப்பாள்! அவள் ஆசையைப் பாரேன்! ஒரு தேசத்தை ஆளவேண்டுமாமே!

அதற்காக ஏன் இவளிடம் சண்டை போடவேண்டும்? அவள் ஆசை அவளுக்கு!

"சரிம்மா! மன்னரை நான் இன்னும் வசப்படுத்தி நீ சொல்றபடியே செய்யறேன்... போதுமா!" என்ற வார்த்தைகளை நுனிநாவால் சொன்னாள், அவள்'

"என் கண்ணே, என் ராஜாத்தி!" என்று பெண்ணைத் தழுவிக் கொண்டாள், பரிமளசாந்தி.

பிறகு எழுந்துகொண்டு, "அல்லி! இன்னும் கொஞ்ச நேரத்தில் மன்னர் இங்கே வரப்போகிறார். சித்தமாய் இரு!" என்று சொல்ல—

"மன்னவரா? இப்போது வருகிறாரா?" என்று திகைத்துக் கேட்டாள், அல்லிக்கொடி.

"ஆமாம்! உன் பெயரில் நான் லிகிதம் அனுப்பியிருக்கிறேன்" என்றாள், பரிமளசாந்தி.

"அம்மா, உனக்கு வேறு வேலையில்லை?" என்று அவள் நிந்தனையாகச் சொல்லும் வார்த்தையைக் கேட்கத் தாயார் அங்கே நிற்கவில்லை.

சிறிதுநேரத்தில் குதிரை வரும் சத்தமும், அது நிற்கும் சத்தமும் கேட்க,

அதிவீரன் கம்பீரவசமாக உள்ளே நுழைந்து ஒரு மிருதுவான புன்னகை செய்து ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

கண்ணைக் கொட்டாது ஒரே ஒரு விழி அளவால் பார்த்தாள் அல்லி! அடுத்து அடுத்து அவளால் அடக்கத்தில் இருக்க முடியவில்லை.

ஏட்டையும் எழுத்தாணியையும் அள்ளி வைத்து விட்டு, தாவி அவன் அணைப்பில் ஆழ்ந்து கொண்டாள்.



26645
4241229

கண் சுழிந்தது.

கால் துவண்டது.

அவளது குளிர்ந்த உடம்பு பூராவும் அவனது விஸ்தார தேசத்தில் சரணடைந்து கொண்டன.

சித்தினி இளம் பெண் தானே இவள் என்று நினைத்தான்.

அவளை அப்படியே தூக்கி, மெத்தை மீது தவழ விட்டு, அவனும் தலையணையில் ஆய்வாக அமர்ந்து கொண்டான்.

அதிவீரன் மன்மதக் கலையில் தேர்ந்தவன். கைகள் முதலில் அவள் மீது விரவிக்கொண்டு சென்றன.

அவளது மென்மையான தேகம் பல இடங்களில் வழுக்கியது. சில நெருக்கங்களில் வியர்வை பூத்து மென்மையாக இருந்தது. மேலே மேலே கையை நோவில்லாமல் வழுக்கி செலுத்த அந்தப் பசபசப்பு உதவியது.

அந்த ஸ்பரிசம் பட்டு நாளாகிவிட்டதா?

அவள் தன் உடலை அவனது விரல்கள் பரிமாறுவதற்கு வசதியாக தளர்த்திக் கொடுத்தாள். சில வாரங்களாக அவளது உடலில் சேர்ந்துவந்த வெப்பம் மெல்ல மெல்லக் குறைந்து கொண்டிருந்தது.

நாவிக் குழிவுக்குக் கீழே மெல்லியதாக அது இறங்கும் போது, அவளது உயிர் நாடிக்குள் ஏதோ சென்று தொடுவது போல் தோன்ற, "ஆ..." என்று சிருங்காரமாகக் கத்தினாள்.

அந்த "ஆ"வை வரவழைக்கும் தொடு குறி சாத்திரம் அவனுக்குத் தெரியும்.

தனது ஸ்பரிசங்களை பஞ்சுபோல் ஆக்கிக்கொண்டு, அவளது இடை ஆடையை நெகிழ்த்தி உள்ளே செல்ல,

அடைபட்டிருந்த அந்தப் பிரதேசத்திலிருந்து ஒரு வெம்மை ஆவி அவன் விரல்களை நோக்கி வீசியது.

அதை ரசிப்பவன் அவன்.

அந்தச் சூட்டின் இதம் அவனைச் சற்றே மெய் மறக்கச் செய்யும். மேலும் மன்மதச் சிகரங்களுக்கு ஏறவேண்டிய அவன் விரல்களை, அவை வெந்நீர் வைத்து ஒத்தியது போல இருக்கும்.

அவள் இப்போது அக்னிக் குழம்பாக மாறி இருப்பாள் என்று அவனுக்குத் தெரியும். ஆற்றாமை அவளுக்குத் தாங்காது. போதை பெற்றதுபோல உறக்கமாகக் கண் பார்க்கும் தன் தணலை எல்லாம் எங்கேயாவது கொட்டி ஆற்றதா என்று துடியாகத் துடித்துக்கொண்டிருப்பாள் என்று அவனுக்குத் தெரியும்.

அவன் எதிர்பார்த்ததற்கு இணங்க, அவள் தன் அங்கங்களை தளர்த்தியும் படர்த்தியும், புரளவும் விட்டு அவன் கவனத்தை இழுத்துக் கொண்டிருந்தாள்.

அதிவீரனுக்கு மேலும் அவளைத் தவிக்கவைக்க விருப்பமில்லை.

ஒரு வீணையை அள்ளுவது போல எழுந்து, தலையணியில் பொருத்தமாகப் படுக்கவைத்தான். பிறகு கால்களில் ஜுரம் ஜொலிக்க, அவளை நோக்கி இறங்கினான், அவன்.



இமய உச்சிக்குச் சென்று அதன் குளிரில் அபிஷேகமாகிவிட்டுத் திரும்பினாள், அவள்.

மெல் மெல்ல தன் சுயநினைவுக்குள் இறங்கிக் கொண்டிருந்தாள்.

இழைப்பும் மூச்சும் சீரானதும், உடல் வியர்ப்புகள் மெல்லிய கோடுகளாக அங்கங்கு வழிய.

"சுவாமி!" என்றாள்.

"என்ன அல்லி!" என்றான், அவன்.

"ஏன் இத்தனை காலம் வரவில்லை?"

"ம்ம்ம்...." என்று பெருமூச்சுவிட்டு, "ராஜகாரியத்தையும் கவனிக்க வேண்டாமா?"

"கவனிக்கிறீர்களா!" என்று நிமிர்ந்துகொண்டு கேட்டாள், அவள்.

"ஏன் அதில் என்ன சந்தேகம்?"

"உண்மையில் கவனிக்கிறீர்களா? அல்லது அந்த இனத்துப் பெண், இந்த சுகம் தருவாள், இன்ன இனத்துப் பெண்ணுக்கு எங்கே தொட்டால் ஆசை வரும் என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறீர்களா?" என்றாள், அவள்.

அதிவீரன் சிரித்தான். "அது ஒரு தனி கலை, அல்லி! எந்தக் கலைக்கும் ஆராய்ச்சி செய்து இலக்கணம் எழுதலாம்..."

"இதுதான் ராஜ காரியமா?"

''என் ராஜகாரியத்தில் இது ஒரு பங்கு!''

''இந்தப் பங்கைத் தவிர மீதிப் பங்குகளை ஒழுங்காகச் செய்கிறீர்களா, சுவாமி!''

''ஏன் இப்படிக் கேட்கிறாய்?''

''என்னென்னவோ செய்திகள் என் காதில் விழுகின்றனவே, சுவாமி!''

''என்ன செய்தி சொல்!''

''நாட்டில் பெரிய யுத்தம் வரப்போகிறதாமே?''

''பெரிய யுத்தமா?'' என்று சிரித்தான், அதிவீரன், ''இருக்கும். மன்னவர்கள் எல்லோரும் சின்னவர்கள் தானே! அவர்கள் எப்படி பெரிய யுத்தம் செய்யமுடியும்?''

''ஏன் முடியாது? பலர் ஒன்று சேர்ந்தால்....''

''சேரமுடியுமா?''

''முடியும் நிலை வந்தால்...''

''அப்போது அதைப் பார்த்துக் கொள்ளலாம்.''

சட்டென்று எழுந்து அமர்ந்தாள், அவள்.

''சுவாமி! என்ன எதுவும் தெரியாமல் இருக்கிறீர்கள் தாங்கள்? நாட்டில் நடப்பது எதுவும் தங்களுக்குத் தெரியாதா?''

''என்னதான் நடக்கிறது அல்லி!'' என்று வேடிக்கை அக்கறையோடு கேட்டாள், அவன்.

''திருவடி ராஜ்ஜியத்தில் இருந்து வடக்கு நோக்கி, பெண்ணும் பொருளும், ஆட்களும் போய்கின்றனராம், தெரியாதா?''

''ஏதோ கொஞ்சம் கேள்விப்பட்டேன்! அரச குமாரி யாரோ போவதாக...''



''அவள் மட்டுமில்லை. இன்னும் ஆட்களும் பொருளும் போகின்றனவாம்!''

''எதற்கு?''

''வடக்கே ஏதோ கூட்டுச்சேரப் பார்க்கிறார்களாமே! மதுரை ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு?''

அதிவீரன் நிமிர்ந்து அமர்ந்தான். புதுமையாக இருந்தது செய்தி.

''நாயக்கர் ஆட்சியையாவது... கவிழ்க்கிறதாவது?''

''இல்லை சுவாமி! நிறைய சதிகள் நிகழ்ந்து கொண் டிருக்கின்றன. பிரதானி அரியநாதர் எங்கே தெரியுமா?''

''மதுரைப் பிரதானி மதுரையில் இருப்பார்!''

''இல்லையே! இப்போது அவரை மதுரையிலே காணவில்லையாமே?''

''எங்கே போயிருப்பார்!''

''ஒன்று அவர் மறைந்து போயிருக்கவேண்டும். அல்லது அவரை யாராவது கடத்திப் போயிருக்கவேண்டும்.''

அதைக் கேட்டுக் கட கட என்று சிரித்தான், அதிவீரன்!

''அந்த வயதானவரைக் கடத்தி என்ன பிரயோசனம்!'' என்றான், அவன்.

''அவரிடம் பெரிய ரகசியம் இருக்கிறதாமே?''

''ரகசியமா? என்ன ரகசியம்?''

அந்தக் கேள்வி கேட்டு முடியவில்லை, வாசலில் சல சலப்பு கேட்டது. ''ஆ'' என்று ஒரு ஈனக் குரலுடன் கேட்க, திடுக்கிட்டு எழுந்தான், அதிவீரன்.

அவன் கை வாளைப் பற்றியது.

# 7

வெளியே சலசலப்பு!

அதிவீரன் எழுந்து கதவருகே போனான். அல்லி, "வேண்டாம்" என்று ஜாடைகாட்டியும் கதவைத் திறந்து வெளியே பார்த்தான்.

பகீர் என்று, கத்தி ஒன்று வீறிட்டு, அவன் காதருகே பிய்த்துக் கொண்டு ஓடியது.

அதிவீரன் பட்டென்று குனிந்து உள்ளே தத்திக் கொள்ள, மேலும் ஒரு கத்தி வீறிட்டு பெருத்து உலோக ஓசையோடு தரையில் உருண்டது.

துணுக்குற்றான், அதிவீரன்!

கோபம் எழுந்து கண்கள் சிவப்பேறின!

கதவை விருட்டென்று மூடித் தாழிட்டு உள்ளே, ஓடி உக்கிராணத்தில் இருக்கும் ஆயுதப் பெட்டியில் இருந்து, கத்திகளை அள்ளிக்கொண்டு, மாடிப் படி ஏறினான்!

தட்டோட்டின் திட்டி வாயிலை எச்சரிக்கையாகத் திறந்து, திறந்தவெளிக்கு வந்து ஆகாய இருட்டைச் சற்று நேரம் பார்த்திருந்தான்.

இதற்குள் கண்களுக்கு இருட்டில் பார்க்கும் சக்தி கூடி விட்டது.

கைப்பிடிச்சுவர் ஓரமாகச் சென்று, மெல்ல எம்பிப் பார்த்தான், இருட்டுக்குள் நாலைந்து குதிரை வீரர்கள் நிற்பது தெரிந்தது. என்ன ஆச்சரியம்! பாண்டியனின் தென்காசித் தலைநகரிலா இப்படி நடக்கிறது!

இரண்டு கையில் ஒன்றில் காயம்! ஒன்றைத்தான் உபயோகிக்கலாம்! கத்தி ஒன்றைச் சுழற்றினான். "விண்" என்று ஏவினான்.



அது ஒரு இலக்கில் பாய, கீழே சலசலப்பும், கூக்குரலும் கேட்டது.

இரண்டாவது கத்தியும் அவன் கையிலிருந்து பாய, கூச்சல் அதிகமாகியது. குதிரைகள் தடுமாறுவது கேட்டது.

அதன்பின் தொடர்ந்த சில விநாடிகள், அவனுக்கு யுகங்களாகத் தோன்றின.

திடீரென்று அப்போது அல்லியின் அலறலும் மனிதச் சந்தடிகளும் கேட்டது.

"ஐயோ! என்னைப் பிடித்துப் போகிறார்களே! ஆபத்து! சுவாமி, வாருங்கள்! வாருங்கள்! என்று அவள் கூக்குரல் கேட்டது.

அவ்வளவில் அதிவீரன் வெகுண்டு, மேலும் கத்திகளை மானாவாரியாக எறிந்துவிட்டு,

"அல்லீ!" என்று வாளை மட்டும் எடுத்துக் கீழே ஓடினான்.

படிகளில் இறங்கி, வாயிலில் போவதற்குள் அந்த வீரர்கள் அல்லியைக் குதிரையில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள்.

படிகள் தாண்டிக் குதித்த அதிவீரன் அந்தக் குதிரைகள் திரும்பி ஓடுவதைத்தான் பார்க்க முடிந்தது. அவர்கள் எல்லோரும் நீலத் தலைப்பாகை கட்டி இருந்தார்கள்.

தனது குதிரையைத் தேடி அவசரமாக ஓட, அது காணாமல் போனது அப்போதுதான் தெரிந்தது.

விக்கித்து அவன் நிற்க, அல்லியின் தீனக்குரல் மட்டும் சிறிது நேரம் வரை உருக்கமாகக் கேட்டது.

பெருமூச்சு விட்டு, பதட்டத்துடனும் என்ன செய்யலாம் என்ற பரபரப்புடனும் அவன் மாளிகைக்குத் திரும்பி வர, இத்தனை நேரம் நடந்ததை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்த பரிமளசாந்தி, குய்யோ முறையோ என்று கத்திக்கொண்டு அவன் முன்னால் வந்தாள்.

"ஐயோ! என் அல்லி போனாளே! என் தங்கம் போனாளே! என் ராசாத்தி போனாளே!" என்று பிரவாபித்து தலைவிரி கோலமாய் அரற்றி அழுதாள்.

அதிவீரன் அவளைச் சமாதானப்படுத்தப் போனான். அவளோ அவன் மீது எரிந்து விழுந்தாள், "நீரும் ஒரு மன்னரா? உங்களுக்கு ஒரு கோட்டையா? ஒரு தலை நகரமா? வெட்கம் இல்லையா, கண்முன்னால் உன் ஆசை நாயகியைப் பறித்துப் போகிறான். சும்மா இருந்தீரே! என் சொத்தை இழந்தேனே! என் பொக்கிஷத்தை இழந்தேனே!" என்று மேலும் கூக்குரலாகக் கத்தினாள்.

அவள் வார்த்தைகள் உண்மை அம்புகளைவிட, மனசில் அதிகமாகத் தைக்க—

அதிவீரன் அவளை விறைத்துப் பார்த்துவிட்டு, உள்ளே விரைவாகப் போனான்.

சரச சல்லாப அறைக்குள் போனபோது, இன்னும் தூபம் கமழ்ந்தது.

பழங்கள் கும்பலாக நின்றன.

மது ஜாடி ஓரத்தில் நின்றது.

மெத்தை மீது அவனது பிரதிநிதிபோல அவன் தலைப் பாகை மட்டும் அமர்ந்திருந்தது.



அதைச் சற்று விரக்தியோடு பார்த்தான், அதிவீரன்! பிறகு சற்று யோசனையோடு அதைக் கையில் எடுத்துக் கொண்டான்.

வாயில் நடையில் இன்னும் பரிமளசாந்தி சோகப் புலம்பலோடு இருப்பதைப் பார்த்தான்.

மனதில் இரக்கமும், அதேநேரம் அவமானமும் கொண்டவனாக, "அம்மணி! சில வார்த்தைதான் சொன்னீர்கள்! சொன்னதையும் அழுத்தமாகச் சொல்லி விட்டீர்கள்! ஒரு அழகுப் பெண்ணை வீடு புகுந்து அபகரித்துப் போகும் அளவுக்கு என் நாடு சீர்குலைந்துவிட்டது! "நீரும் ஒரு மன்னரா? என்று கேட்டீர்களே! சரியான கேள்வி அம்மா அது! அதற்கு மறுமொழி சொல்லத்தான் இத்தனை நேரம் குழம்பிக்கொண்டிருந்தேன்! "உங்களுக்கு ஒரு கோட்டையா? ஒரு தலைநகரமா? என்று கேட்டுவிட்டீர்கள்! இன்னும் ஒரு வார்த்தை கேட்க மறந்துவிட்டீர்கள்? இந்தாருங்கள்! என் மணிப்பாகை. என் தலை அதற்குத் தகுதி அல்ல! இதைக் கழற்றி இதோ வைத்துவிட்டேனம்மா! என்றைக்கும் உங்கள் அல்லியை மீட்டுத் தருகிறேனோ, அன்றைக்கு இதை ஏற்றுக் கொள்கிறேனம்மா! அதுவரை இந்த அதிவீரனுக்கு ஆகாயம்தான் தலை! நட்சத்திரங்கள் தான் மணிகள்! நாட்டில் அமைதியைக் குலையவிட்ட மன்னனுக்கு இவைதான் இனி அணிகலன்கள். பூமிதான் இனிப் படுக்கை! வருகிறேன் அம்மா! என் கண்ணைத் திறந்துவைத்தவர் நீங்கள்! அதற்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன். நிச்சயம் அல்லியை மீட்டு வருகிறேன், அம்மா! இது சபதம்!" என்று அழுத்தமும் வேகமும் கொண்டு பேசினான், அதிவீரன்.

கையிலிருந்த பாகையைத் தாழ்வாரத்தில் மெல்ல வைத்தான்.

அவன் பேச்சு அத்தனையும் கேட்டுவந்த பரிமள சாந்திக்கு. இப்போது திடீரென்று அவன் மீது துக்கமும் இரக்கமும் பொங்கி வந்தது.

''மன்னவா! மன்னிக்க வேண்டும்! மகளை இழந்த நிலையில் ஏதோ வாய் பிதற்றிவிட்டேன்! தங்களது குணத்திலும், கருணையிலும்தான் நாங்கள் வாழ்கிறோம். தங்கள் சுகம் இன்றி, எங்கள் இலட்சியம் ஏது? பாகையை எடுத்துக் கொள்ளுங்கள்! அணிந்து கொள்ளுங்கள்! உங்கள் பேச்சு ஒன்றே போதும். என் பெண் எனக்குத் திருப்பிக் கிடைப்பாள் என்ற நம்பிக்கைக்கு! இந்தாருங்கள்....!'' என்று கனிந்த குரலில் பேசி, பாகையை எடுத்துக் கொடுத்தாள்.

பலமுறை பரிந்து பேசியும் பாகையை அதிவீரன் ஏற்றுக் கொள்ளவில்லை.

''உரிய நேரத்தில் வந்து எடுத்துக் கொள்கிறேன் அம்மா! இப்போது அவசரமாகப் போகிறேன்! உடனே காரியத்தில் இறங்க வேண்டும்! விடை கொடுங்கள்'' என்று சொல்லி, தாழக் குனிந்து வணங்கி வெளியேறினான், அதி வீரன்.

அரை நாழிகையில் தென்காசிக் கேட்டை மூடப் பட்டது!

அதன் இழு பாலம் மேலே இழுக்கப்பட்டுவிட்டது.

காவல் ஆட்கள் கோட்டைக்கு உள்வசமாய் சுற்றி வரத் தொடங்கினார்கள்.



வீதிகளில் அரச வீரர்கள், குதிரைகளில் குறுக்கும் நெடுக்குமாகச் சென்றார்கள்.

மடங்களிலும் சத்திரங்களிலும் உள்ளவர்களை எழுப்பி அதிகாரிகள் வினவ ஆரம்பித்தார்கள்.

குளம் கோவில்களில் வேவுக்காரர்கள் தேட ஆரம்பித் தார்கள்.

இரவு ஒரு ஜாமத்திற்குப் பிறகு அதிவீரனும் அவனது பிரதானிகளும் சைனிய அதிபதிகளும், விசுவநாதர் கோவில் முன் கூடினார்கள்.

எல்லோரும் களைத்திருந்தார்கள். அவர்கள் குதிரை களும் களைத்திருந்தன.

பிரமாண்ட கோபுரத்துக்கு வெளியே இரவுக்கு அடைக்கப்பட்டிருந்த வாசல்முன் நின்றுகொண்டார்கள்.

''என்ன ஆச்சரியமாய் இருக்கிறது. ஐந்து வீரர்களும், ஐந்து குதிரைகளும் எப்படித் தப்பமுடியும்? வீரர்களாவது பதுங்கி இருக்கலாம். குதிரைகள் எங்கே பதுங்கி இருக்க முடியும்?'' என்று அங்கலாய்த்தான், அதிவீரன்.

''நீலத் தலைப்பாகைக்காரர்கள் தானா?'' என்று கேட்டார், ஒரு அதிபதி!

''அதைக் கண்கூடாகப் பார்த்தேன்! சந்தேகம் என்றான். அதிவீரன்.

கூட்டம் மவுனமாக நின்றது.

''இந்த நீலத் தலைகளை நடத்துபவன் யார் என்று தெரியவில்லையா?'' என்றான், அதிவீரன்.

''தெரியவில்லை சுவாமி!'' என்றார், சைனியாபதி.

''நாட்டுப் புறங்களில்தான் நடமாடுகிறார்கள் என்று கேள்விப்பட்டோம்! இப்போது நகரத்துக்கும் வந்து விட்டார்களே!'' என்றார், ஒரு உபதளபதி!

''தலைநகரத்தில் அவர்களை உலாவவிடுவதா? அநியாயம்! அநியாயம்!'' என்றான், அதிவீரன்!

''நாட்டில் குழப்பம் விளைவிக்கவே இவர்களை யாரோ ஏவிவிட்டிருக்கிறார்கள்!'' என்றார், பிரதானி.

''மன்னவா!'' என்றார். ஒரு வயதான தளபதி. ''சண்டைக்கு உரிய அறிகுறிகள் தோன்றிவிட்டன! எச்சரிக்கை வேண்டும்!''

''இன்று நடந்த சம்பவம், மன்னரைக் கொல்ல ஒரு ஏற்பாடே!'' என்றார், ஒரு உபதளபதி.

''நம் கோவிலின் பரம்பரை தாசிகளில் முதன்மை பெற்றவள், பரிமளசாந்தி! அவள் மகள் பறிபோனது ரொம்ப வருத்தமாக இருக்கிறது!'' என்றார், பிரதானி.

''அது பெருத்த அவமானம்!'' என்றான், அதிவீரன்.

அவன் குரல் உச்சத்தில் ஏறியது.

''என் கொடி, குடை, பல்லக்கு போனதுபோல இருக்கிறது, என் தாசி போனது!'' என்று கடிந்து கொண்டு கூறினான்.

''சுவாமி! மலையாள ராஜ்ஜியங்களும், தஞ்சை ராஜ்ஜியமும் ஒன்று சேருகிறது. இதனால் மதுரை ராஜ்ஜியத்துக்கு தீங்கு வருகிறதோ இல்லையோ, நம் பாண்டியத்துக்குப் பயம்!

''மலையாள அரசர் நம் பாண்டியத்தின் மீது கண்ணாக இருக்கிறார். அதுவும் விஜயநகரம் அழிந்து போனதில் இவர்களுக்குத் துள்ளாட்டம் வந்துவிட்டது.''



''சதிகள் நிறைய நடந்திருக்கவேண்டும். நமக்குத் தெரிய வந்தது. அல்லியின் பிடிப்புதான்!''

''அதிபதிகளே! பிரதானிகளே! நிறுத்துங்கள்! என் காதில் வேல் பாய்ச்சுகிறீர்கள்! ஒன்றை நிச்சயம் சொல்கிறேன். உங்கள் மீது நான் குறை கூறப்போவதில்லை! என் குறைதான் இந்த நாட்டின் குறையாக மாறி இருக்கிறது! என் குறை! என் கவனக் குறை! என் ராஜரீகக் குறை! நல்லது. விசுவநாதர் என் கண்ணைத் திறந்துவிட்டார். அவர் சன்னதி முன் சத்தியம் செய்வோம்! இந்த நீலப் பாதகைகளை நிர்மூலமாக்குவோம். அவர்களும் பகை மன்னர்களும் சேர்ந்து செய்யும் சதிகளை முறியடித்த பின்தான், மறுவேலை! இது சத்தியம்!'' என்று அதிவீரன் உணர்ச்சி பொங்கக் கூச்சல் இட,

எல்லோருமே, ''சத்தியம்!'' என்றார்கள்.

அடுத்து நான்கு கோட்டை வாயிலுக்குப் பாதுகாவலுக்காக நான்கு குழுவாகப் பிரிந்து அவர்கள் கிளம்பினார்கள்.

வடக்கு வாசலை அணுகிய அதிவீரன், களைத்து நிற்க—

அவன் மனதில் ஒரு யூகம் உதித்தது.

## 8

வடக்குக் கோட்டை வாயில் பக்கம் அதிவீரன் போன போது, அந்த நிழல் சலனம் கவனத்தைக் கவர்ந்தது.

பிராணிபோல ஏதோ ஒன்று ஓரமாக நகர்ந்து கொண்டிருந்தது. வியப்புடன் பக்கத்தில் போய்ப் பார்க்க, குட்டையான ஒரு கூனன் தலையை நிமிர்ந்து அவரைப் பார்த்தான்.

"யார் நீங்கள்?" என்று அதிவீரன் கேட்க, அவனைப் பொருட்படுத்தாமல் மேலே கூனன் நின்று, வெறுப்போடு அதிவீரனைப் பார்த்தான். "என் பெயர், வெங்கடநாயகன்!" என்றான்.

"இந்த ராத்திரியில் எங்கே போகிறீர்?" என்று கேட்க—

"ஐயா! பாபவிநாசம் போய்த் தீர்த்தம் ஆட நினைத்திருந்தேன். அடியேனுடைய பிரார்த்தனை அது? இங்கே வந்து பார்த்தால், கோட்டைக் கதவை அடைத்திருக்கிறார்களே! அநியாயமா இப்படிச் செய்வார்களா? மக்கள் எப்படிப் போவார்கள்? கலி முத்திவிட்டது" என்று பிரலாபித்தார்.

"ஐயா!" என்றான், அதிவீரன்! "ஊரில் எதிரி வேவுக்காரர்கள் வந்திருக்கிறார்கள்! அவர்களைப் பிடிக்க வேண்டி, கோட்டைக் கதவுகளை அடைத்திருக்கிறார்கள்!"

சிரித்தான், கூனன் வெங்கடநாயகன். "ஐயா, உங்களைப் பார்த்தால் அரசாங்க அதிகாரிபோல தென்படுகிறீர்கள். வேவுக்காரனைப் பிடிக்கவேண்டுமானால், வேவுகாரனை அல்லவா ஏவவேண்டும். அதை விட்டு கோட்டையை மூடி, அவர்களைத் தேட முடியுமா? அத்தனை பேரும் மறைந்துவிடுவார்களே!" என்றான்.

அவன் சொன்னது சுருக்கென்று தைத்தாலும், "இல்லை ஐயா! அத்தனை பேரும் குதிரை வீரர்கள்!" என்றான், அதிவீரன்.

"சரிதான்! யானையையே மறைப்பார்கள் வேவுக்காரர்கள். குதிரையை மறைக்க மாட்டார்களா?" என்று சொன்னவன் சற்று நின்று.



"ஐயா! எத்தனைக் குதிரைக்காரர்கள்?" என்றான், ஆவலோடு.

"நான்கு பேர்" என்றான், அதிவீரன்.

"அப்படியா? இரண்டு நாழிகை முன்னால் சேணியர் தெருவில் நான்கு வீரர்களைப் பார்த்தேன். அவர்களாக இருக்குமோ?" என்று சந்தேகமாகப் பேசினான், கூனன்.

"உடை எப்படித் தரித்திருந்தார்கள்?" என்றான் அதிவீரன் பரபரப்புடன்.

"நிச்சயம் உள்ளூர்க்காரங்கள் இல்லை! கோட்டைக்கு வழிபற்றி இரண்டு பேர் தர்க்கம் செய்து கொண்டிருந்தார்கள்!" என்றான், கூனன்.

"ஐயா! எப்போது பார்த்தீர்கள்?" என்று ஆத்திரமாகக் கேட்டான், அதிவீரன்!

"இரண்டு நாழிகை இருக்கும்" என்று சொன்னான், கூனன்.

இதற்கிடையில் மன்னனின் அதிகாரிகள் அங்கே வந்து சேர,

"நல்லவேளை! அவர்கள் தப்பித்திருக்க முடியாது. இரண்டு நாழிகை முன் சேணியர் தெருவில் இருந்தார்களாம்?" என்றான், அதிவீரன்.

"அப்படியா?" என்றார், பிரதானி கூனனைப் பார்த்துக் கொண்டு, "இனி ஒவ்வொரு வீட்டையும் தேட ஆள்விட வேண்டியதுதான்."

''அதுதான் வழி. சீக்கிரம் கண்டுபிடித்துவிடலாம்'' என்றான், அதிவீரன்.

இதற்குள் கோட்டை வாயில் தளபதி வந்து வணங்கி நிற்க,

''தளபதி! கதவை மூடுமுன் யாராவது குதிரை வீரர்கள் வாயில் வழியே சென்றார்களா?'' என்று கேட்டான், அதி வீரன்.

''இல்லை பிரபு!'' என்று, தலைகுனிந்து கூறினான், தளபதி.

''நல்லது'' என்று கூறிய அதிவீரன் வெங்கட நாயகனை நோக்கி, ''ஐயா! பெருந்தகையீர்! நகரத்தில் விஷமிகள் வந்திருக்கிறார்கள். அவர்களைப் பிடித்த பிறகு தான் கோட்டையைத் திறப்பார்கள். அதுவரை தயவு செய்து வெளியே போகவேண்டாம் !'' என்று சொல்லிவிட்டு, மற்றவர்களுக்கு சைகைக் காட்டிக் கிளம்பினான்.

மறுநாள் காலையில் அதிகாரி யாவரையும் அரண் மனைக்கு வரவழைத்து, நகரத்தில் உள்ள எல்லா வீடுகளிலும் புகுந்து, குதிரைகளையும் குதிரை வீரர்களையும் தேடச் சொன்னான், அதிவீரன்.

பிறகு முதல் காரியமாக இலஞ்சிச் சாமியாரின் மடத்திற்குப் போனான்.

மடத்தில் சாமியார் இல்லை, வெளியூர் போய்விட் டார் என்று கூறினார்கள்.

அடாடா! அதற்குள்ளாகவா போய்விட்டார்! நம்மிடம் சொல்லாமல் போய்விட்டாரே!

மன்னர் யோசனையிட்டுத் தவித்துக்கொண்டிருந்த போது, மடத்தில் இருந்த மூத்த தம்பிரான் உருத்திராசமும் விபூதியுமாக வந்து,



''மன்னவா! வணக்கம்! நமது குரு போகும்போது, இதைத் தங்களிடம் கொடுக்கச் சொன்னார். நானே அரண் மனைக்கு எடுத்து வரலாம் என்று நினைத்திருந்தேன்! தாங்களே இங்கே வந்துவிட்டீர்கள்!'' என்று கூறி, பட்டு பையில் பொதித்த ஓலைச் சுருளைக் கொடுத்தார்.

அதிவீரன் அதை வாங்கி தாழ்வாரத் திண்ணையில் அமர்ந்து படிக்க ஆரம்பித்தான்.

மன்னருக்கு இலஞ்சி முருகன் ஆசீர்வாதமும் கடாட் சமும் உண்டாவதாக!

தலைநகரத்தில் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றிக் கேள்விப்பட்டோம்! விசனமாக இருக்கிறது. பாண்டியக் கொடிக்கு ஆபத்து வரக்கூடாது என்பது நம் அவா! அதற் காகத் தலங்களில் சென்று தெய்வங்களிடம் வேண்டிக் கொள்ள, நாம் புறப்பட்டு விட்டோம். திருமங்கைக்கு யாது நேர்ந்தது என்பதை மன்னர் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். அவள் ஆபத்தில் இருந்தால் அவளைக் காப்பாற்ற வழி செய்ய வேண்டும். அல்லிக் கொடியையும் உடனே கண்டுபிடித்தாக வேண்டும்? நீலத் தலைப்பாகைக் காரர்கள்தான் இந்த தீயச் செயலுக்குப் பின்னால் இருக் கிறார்கள் என்பது தெளிவு. நோய்மூலம் அறிந்து அதைக் களைய வேண்டுவது போல் இந்தத் தலைப் பாகைக்காரர் கள் யார்? அவர்களை யார் தோற்றுவித்து பாண்டிய நாட்டுள் அனுப்பியிருக்கிறார் என்பதை மன்னர் நிச்சயம் தம் வேவுக் ,காரர் மூலம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் தலைப் பாகைக்காரர்களின் பிறப்பிடத்தையே கொன்று நிர் மூலமாக்க முடியும். மன்னர் சற்று காலம் தமது கல்விக் கேள்வியிலே திளைத்துப் பொழுதைக் கழிக்காமல், உடனே இந்த அரசாங்கக் காரியங்களில் இறங்க வேண்டும்.

அப்போதுதான் தொன்மைவாய்ந்த பாண்டியக் கொடியைக் காப்பாற்றமுடியும். இல்லாவிடில் கொடிக்கே ஆபத்து வந்துவிடும். மன்னர் உடனே ஆவன செய்ய வேண்டுகிறோம்.

—திரு இலஞ்சி மடம் சாமியார்.

ஓலை நறுக்கைச் சுருட்டி தமது அங்கிப் பையில் அதிவீரன் திணித்தான்.

அந்தக் கணமே, அரண்மனையை நோக்கி விரைந்தான்.

மத்தியானப் பொழுது தாண்ட தாண்ட அதிவீரனுக்கு மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

வீடு வீடாகத் தேடச் சென்ற ஒவ்வொருவரும் வெறுமையாகத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். குதிரை களையும் காணவில்லை. குதிரை வீரர்களையும் காண வில்லை!

ஒரு அதிகாரி மட்டும், இரவில் அதிவீரன் இழந்த அரச குதிரையைக் கண்டு பிடித்து அரண்மனைக்குக் கொண்டு வந்தார்.

மற்றபடி நீலத் தலைப் பாகைக்காரர்களைப் பற்றி ஒரு சிறு செய்தியும் கிடைக்கவில்லை.

அதிவீரனுக்கு இது பெருத்த வருத்தத்தைக் கொடுத்தது.

தனது தலைநகரத்தில் இப்படி ஒரு அபகீர்த்தி நடந்து விட்டதே என்று மனம் நோவெடுத்தது.

அல்லிக்கொடி அந்தக் கொடியவர்கள் கையில் அகப் பட்டு என்னமாகத் துடிப்பாளோ!



இதுவரை அதிவீரன் வந்து அவளைக் காப்பாற் றாதது குறித்து, அவன் மீது நம்பிக்கையை இழந்திருப்பாளோ!

குதிரைக்காரர்கள் நகரத்துள் இருந்தால், அவளும் நகரத்துள்தான் இருக்கவேண்டும்.

அல்லியை இன்னும் கண்டுபிடிக்கமுடியாதது பெரும் வருத்தத்தைத் தந்தது.

தவிர, மனதின் அடி ஓரத்தில் ஒரு புதுமையான இன்பம் ஒதுங்கியிருந்தது. அது அடிக்கடி ஜாலம் காட்டி, அது இருக்கும் இடத்தை நெருடிக் காட்டியது.

அதை நினைத்தால் கூட ரோஜா மணம் கமழ்கிறது. சங்கரநயினார் கோவிலில் கணீர் என்று பாடிய அந்தப் பாவையை, எப்படி அவனால் மறக்க முடியும்.

அவள் கண்கள் ஒரு குளிர்ச் சுனை. குளிரக் குளிர அதில் நீராடலாம்.

பெண் என்றால், அவள் பெண்.

சாமுத்திரிகா லட்சணம் அத்தனையும் பொருந்தியவள், அவள்!

இவள் மலையாள அரச குமாரியா?

இவள் எங்கே போகிறாள்?

வடக்கே தீர்த்த யாத்திரையாக இருக்குமோ!

அவளையும் அந்த நீலத் தலைப்பாகையார் வழி மறித்தார்களே! கோவிலுக்குள் வந்து அவளை அபகரிக்கப் பார்த்தார்களே!

யார் இந்தத் தலைப்பாகையார்?

இவர்கள் பின்னால் இருப்பது யார்?

இந்தக் காரியம் எல்லாம் ஏன் செய்கிறார்கள்?

பாண்டியத்தை நிலை குலைக்கவா இப்படிச் செய்கிறார்கள்.

இரவுப் பொழுதுவரை சிந்தனையிலும் யோசனையிலும் இருந்துவிட்டான், அதிவீரன்.

இடையில் அரண்மனை வைத்தியர் வந்து அவன் புஜத்தில் மருந்துகள் வைத்துக் கட்டிவிட்டுப் போனார்.

அதன் உபாதைகள் வேறு உடம்பில் அடிக்கடி நோவு கொடுத்துக்கொண்டிருக்கிறது.

இரவு சீக்கிரமே தனது உணவை முடித்துவிட்டு, தனது அத்தியந்த நண்பர்களான வீரகேசரியையும், விஜயகேசரி யையும் அழைத்துக் கொண்டான்.

"நீங்கள் என் நண்பர்கள்! எனக்காக உயிர்விடச் சித்தமாக இருப்பீர்கள்! நமது தலைநகரத்தில் நடந்த சம்பவம் என்னை தலைகுனியச் செய்துவிட்டது. பாருங்கள், நான் என் அரச முடியைக் கழற்றி வைத்துவிட்டேன். தாசி அல்லிக் கொடியை அபகரித்த ஆட்கள் இன்னும் நகரத்துள்தான் இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும் இடத்தை நாம் நிச்சயம் கண்டுபிடித்தாக வேண்டும். இதில் நான் உங்களை அதிகம் நம்பி இருக்கிறேன்! வாருங்கள் போகலாம்" என்றான்.

மூவரும் சாதாரணக் குடிமகன் வேடம் தரித்து அகலமான ராஜ வீதிகளை விடுத்து குறுகலான தெருக்களில் நுழைந்து குதிரை வீரர்களைத் தேடத் தொடங்கினார்கள்.

இரண்டு மூன்று நாழிகைகள் அலைந்து, மிகவும் களைப்பான பிறகு–



ஊரின் மாவடிச் சத்திரத்தின் அருகே இளைப்பாறத் தொடங்கினார்கள்.

அதிவீரனுக்கு மனம் நொந்திருந்தது. என்ன செய்தும் இந்தக் குதிரைக்காரர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லையே!

அவர்கள் எப்படி மாயமாக மறைந்துவிட முடியும்?

ஒவ்வொரு வீட்டையும் அதிகாரிகள் சோதனை செய்தார்களா இல்லையா?

அல்லது இந்தக் கொடியவர்களுக்கு உதவியாக நகரத்தில் யாராவது இருக்கிறார்களா?

மாவடிச் சத்திரம் பழைய சத்திரம். பல இடங்கள் இடிந்து அது உபயோகம் இல்லாமல் இருந்தது. இங்கிருந்து பார்த்தாலே அதன் வெற்றுக் கூடு தெரிந்தது. ஒரு பக்கம் வழியே ஊடுருவி மறுபக்கம் வரை பார்த்துவிடலாம். பெரிய தூண்கள் மட்டுமே நிற்க, இடையே உள்ள சுவர்கள் இடிந்து கிடந்தன. சுற்றி வர மரங்கள் சூழ்ந்த இந்தச் சத்திரத்தை யாராவது சீர்செய்து நடத்த முன் வரவில்லையே என்று அதிவீரன் வருத்தப் பட்டான்.

சுற்றிச் சுவர் மண்ணால் வடிக்கப்பட்டிருக்க, யதேச்சையாக அந்தச் சுவர் ஓரமாகச் சிறிது தூரம் நடந்த அதிவீரன் சட்டென்று நின்றான்.

ஏதோ மனதில் உறுத்த, காற்றில் மூக்கைக் கொடுத்து உறிஞ்சி உறிஞ்சிப் பார்த்தான்.

இன்னும் சில அடிகள் போய்விட்டும் உறிஞ்சிப் பார்த்த பிறகு, அந்த வீச்சம் இன்னதென்று புரிந்துவிட்டது.

ஆ! இது குதிரைகளின் சிறுநீர் வீச்சம் அல்லவா? நன்றாகத் தெரிகிறதே!

அப்படியானால் உள்ளே குதிரைகள் இருக்கின்றனவா?

கட்டிடத்தை நன்றாக ஊடுருவிப் பார்க்கமுடிகிறதே! உள்ளே அவை இருக்கமுடியாதே!

இருந்தாலும், மனதில் ஏதோ உறுத்தல் தோன்ற உள்ளே போனான்.

நண்பர்கள் தொடர்ந்தார்கள்.

கட்டிடத்தின் அருகில் நிறைய புதர்களும் செடிகளும் கொழித்து வளர்ந்திருந்தன.

இவ்வளவு நெருக்கத்தில் பார்த்தபோது, கட்டிடத்தின் வெறுமை நன்றாகத் தெரிந்தது.

ஒரு ஆட்டுக்குட்டி நின்றால் கூட அதன் வடிவம் வெளிப்புற வெளிச்சத்திற்குப் பின்னணியில் நன்றாகத் தெரிந்துவிடும்.

இந்த லட்சணத்தில் குதிரைகள் எங்கே நிற்க முடியும்?

வீண்முயற்சி என்று திரும்பும்போது, அவன் பார்வை சற்றுத் தள்ளி தரையில் விழுந்து, அப்படியே லயித்து நின்றது.

"ஜெயா, வீரா இங்கே வாருங்கள்" என்று கத்தினான்.

அதிசயத்தோடு தரையைச் சுட்டிக் காட்டினான்.

## 9

புதரும் தழையும் மண்டிக்கிடந்த தரைவெளியில் ஒரு நீண்ட பலகை கிடந்தது. அதிவீரன் வியப்பு அடைந்து மேலும் சுற்றிப் பார்க்க அதுபோன்ற பல பலகைகள் தெரிந்தன. ஒன்றை எடுத்துப் பார்த்ததில் நிறையத் தழும்புகள் தெரிந்தன. பலமாக அங்கங்கே உலோகத்தால் அழுத்திய தழும்புகள்.



யோசனை தோன்ற கட்டிடத்தின் வலப்புறம் சென்று பார்த்தான். இரண்டு மரத் தடிகள் தரையில் நின்றிருந்தன.

யோசனை பரபரக்க, கட்டிடத்து பக்கச் சுவரில் கால் வைத்து மேலே ஏறினான். தட்டோட்டியை அணுகியதும், குதிரைச் சாணமும் சிறுநீரும் மூக்கில் நெடி ஏற்றின.

"வீரகேசரி" என்றான். வீரன் ஓடிவந்து, மன்னரை மேலே பார்த்து ஏறினான்.

தட்டோட்டியில் ஏறிப் பார்த்ததும் அவனும் ஆச்சரியத்தில் மூழ்கினான். "பார்வீரா! இப்படி ஒரு தந்திரம் செய்திருக்கிறார்கள். சாரம் கட்டி குதிரைகளை மேலே ஏற்றி இருக்கிறார்கள்!" என்றான், வீரன்!

"எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?" என்றான், வீரன்.

"குதிரையின் மூத்திர நெடி அடித்தது. கீழே சோதித்ததில் சாரப் பலகைகள் தென்பட்டன!" என்றான், அதிவீரன்.

"அப்போ இங்கேதான் நீலத் தலைப்பாகைக்காரர்கள் தங்கி இருக்கிறார்கள்."

"அப்படியானால் இப்போது எங்கே போய் இருப்பார்கள்?"

"கோட்டைக் கதவு மூடி இருக்கிறது. தப்ப முடியாது."

அடுத்து மேலே தீவர்த்தி ஏற்றிக் கொணர்ந்ததில் சாணக் குவியல் பரவலாக இருந்தது.

அங்குதான் இரண்டு நாட்களும் தங்கி இருக்கிறார்கள் என்பது உறுதியாயிற்று.

வியப்பும் வேதனையும் அடைந்த அதிவீரன் தீவர்த்தியை வாங்கி, சுற்றிவர ஆராய்ந்தான். ஒரு பக்கம் கைப்பிடி கல்சுவர் எழுப்பப்பட்டு இருந்தது.

சுவரில் ஒரு கல் சற்று துருத்தலாகத் தெரிய, அதைக் கையால் அசைத்துப் பார்த்தான். அசைந்தது. கையோடும் வந்தது. உள்ளே ஒரு துணிப்பை இருந்தது. அதிவீரன் அதை எடுத்துப் பார்த்தான். தீவர்த்தியை வீரனிடம் கொடுத்து, பையைப் பிரித்துப் பார்த்தான்.

உள்ளே வெள்ளிக் காசுகள் நிறைய இருந்தன. ஒரு பொன் நாண் ஒன்று இருந்தது. ஒரு பித்தளைச் சிமிழும் இருந்தது.

சிமிழைத் திறந்து பார்த்தான். ஒரு பரிமள வாசம் அடித்தது. உள்ளே வாசப்பொடி சிறிது இருந்தது. அவ்வளவே என்று மூடும் வேளையில் ஏதோ சிந்தனை வந்து, சிமிழின் வட்டமான பக்கவாட்டச் சுவரில் விரலை விட்டுப் பார்த்தான். நினைத்தது சரி என்று பட்டது. ஒரு மெல்லிய நறுக்கு ஓலை சிமிழின் உட்புறச் சுவரோடு பதிக்கப்பட்டிருந்தது.

நறுக்கைத் தெள்ளி வெளியே எடுத்தான். பிரித்துப் பார்க்க, உள்ளே எழுத்து தெரிந்தது. படித்தான்.

நீலி, நீலமலை ஆத்தாள் துணை! இப்பவும் நறுக்கு கண்டதும் அதிவீரராமனின் தாசி அல்லிக் கொடி விஷயத்தை முதலில் கவனிக்க வேண்டியது. அடுத்து உடனே வடக்கே போகவேணும். இளைய நாச்சியாரை நமது ஆட்கள் பிடித்தார்களா, நரசிங்கம் குன்றில் வைத்தார்களா என்று தெரியவில்லை? இளைய நாச்சியாரைப் பிடித்தால்தான் பாண்டியனுக்கு நிறைய



தலைவலி கொடுக்கலாம். எனவே மெத்தனமாக இருக்கக் கூடாது. தலைவர் மன வியாசலப்பட்டு இருக்கிறார். உடனே போய் அதைக் கவனிக்க வேண்டியது.

இங்ஙனம்,<br>
திருவாய்க் கேள்வி<br>
நீலி, நீலமலை<br>
ஆத்தாள் துணை.

நறுக்கை மற்ற இருவர்களும் படித்தார்கள்.

"நல்லது!" என்று வெப்ப மூச்சுவிட்ட அதிவீரன், "வீரா, நிச்சயம் இவர்கள் கோட்டையைக் கடந்திருக்கமாட்டார்கள்! வேறு எங்கேயாவது இருப்பார்கள்! வாருங்கள்" என்று கூறி, அவசர அவசரமாகக் கீழே இறங்கினான்.

மூவரும் குதிரை ஏறி குறுக்குத் தெருக்களைக் கடந்து பிரதான சாலைக்கு வந்தார்கள்.

சாலையில் சிறிது தூரம் செல்லவில்லை. அதற்குள் பிரதானியார் பத்து குதிரை வீரர்களுடன் எதிரே வருவது தெரிந்தது. வருபவர்கள் வேடத்தில் இருக்கும் அதிவீரனை அடையாளம் கண்டு கொண்டு, "மன்னவா! தங்களைத்தான் தேடி வருகிறோம். குதிரைக்காரர்கள் கோட்டையை விட்டுத் தப்பிவிட்டார்கள்" என்று பதட்டத்தோடு சொன்னார், பிரதானி.

"என்ன! தப்பினார்களா? எப்படி?" என்று அதிவீரன் ஆத்திரத்தோடு கேட்க,

"மன்னவா! கீழ்க் கோட்டை வாசலுக்குச் சற்று தூரத்தில் உள்ள இடத்தில் நெருப்பு உண்டாக்கி, அதன் புகை மூட்டம் கோட்டை வாயிலை மூடும்படி செய்து விட்டார்கள். பின்னர் புகை நடுவே புகுந்து நம் வீரர்கள் கண்களில் ஏதோ

பொடியைத் தூவி எரிச்சலுண்டாக்கி விட்டு, கோட்டைக் கதவை அவர்களே திறந்து, இழுபாலத்தை அவர்களே கீழே இறக்கி, குதிரைகளோடு ஓடிவிட்டார்கள்!'' என்றார், பிரதானியார்.

''எப்போது நடந்தது?'' என்றான், மன்னன்.

''நடந்து இரண்டு முகூர்த்தம் ஆகிவிட்டது! செய்தி வந்து ஒரு முகூர்த்தம் ஆயிற்று!''

நீண்டமூச்சை இழுத்துவிட்டான் அதிவீரன். பிறகு, ''சரி! நீங்கள் கோட்டை வாயிலுக்குப் போய் அங்கே நிலையைக் கவனியுங்கள்! பக்கத்து காடுகளில் ஒரு படையை விட்டுத் தேடச் சொல்லுங்கள்!'' என்று சொல்லி, ''இங்கே வாருங்கள்'' என்று பிரதானியாரைத் தணிந்த குரலில் அழைத்தான் அதிவீரன்.

பிரதானி குதிரையை விட்டு இறங்கி மன்னன் அருகில் வந்தார்.

''கையை நீட்டுங்கள்!'' என்று சொல்லி, பிரதானியின் விரிந்த உள்ளங்கையில் ஒரு பொருளை வைத்து மடக்கினான், அதிவீரன்.

''நாட்டின் நிலைமை சரியில்லை! பகைவர்கள் உளவுகளை அனுப்பி, நிறையச் சதி செய்கிறார்கள் என்று அறிந்தேன். நேரில் சென்று எதிர் உளவு செய்யப் போகிறேன். நகரத்தை ஒழுங்காகக் கவனித்துக்கொள்ளுங்கள். கோட்டையை நான் சொன்னால் தவிர, திறக்க வேண்டாம். அவசியம் போகிறவர்களுக்கு அனுமதி கொடுங்கள். புலவர்களுக்கும் அனுமதி! நான் வருகிறேன். என் அன்னையிடம் என் வணக்கங்களைத் தெரிவியுங்கள். நான் விடைபெறுகிறேன்'' என்று தழதழப்புடன் கூறினான், அதிவீரன்.



பிறகு, தம் சகாக்களை அழைத்துக்கொண்டு வேகமாகக் கிளம்பினான்.

தம் கையில் அரசனின் முத்திரை மோதிரத்தைப் பார்த்துக் கண்கலங்கி நின்றார், பிரதானி மன்னன் திரும்பும் வரை நகரத்தையும் நாட்டையும் ஆட்சி செய்யவேண்டும் அவர்.

சிறிதுநேரம் சிந்தனை வசப்பட்டிருந்தவர், ''வாருங்கள்!'' என்று தமது மெய்ப்படைக்கு சைகை செய்து, கோட்டை வாயிலை நோக்கி விரைந்து சென்றார்.

அடுத்த நாள் மதிய வேளையில் கோதை நல்லூர் போய்ச் சேர்ந்தார்கள்! வடக்கே போகும் வழியில் அது இருந்தது அல்லாமல் இரண்டு முக்கிய விஷயங்களுக்காக அதிவீரன் அங்கே போக விரும்பினான். முதலில் குண்டலராமனைச் சந்திப்பது குண்டலராமன் வடமொழி விற்பன்னர்! கைவிரல்களைச் சொடுக்கினால், காளிதாசனும் பர்த்துரு ஹரியும் உதிர்வார்கள். நாவில் சொல்வளம் புரண்டு விளையாடும்.

குறிப்பாக சிருங்கார ரசத்தில் தயங்காது மழை பொழிவார். தித்திக்கத் தித்திக்கக் கேட்டுக்கொண்டிருக்கலாம். கோதை நல்லூர் கோவில்களை திருமடைப்பள்ளி கைங்கரியம் செய்பவர். சமையல் செய்தால் நளபாகம்தான்! வெறும் பாத்திரத்தை அவர் தூக்கினால்கூட வாசனை வந்துவிடும் அதிவீரன் சில யாத்திரைகளில் அவரைத் தம்முடன் அழைத்துச் செல்வான், சுருள் அமுது செய்வதில் (வெற்றிலை மடித்துக் கொடுப்பது) நிபுணன்.

இரண்டாவது முக்கியமான விஷயம் சித்ராங்கி! கோவில் தாசி. அவள் சென்ற ஆண்டு வந்தபோது பக்குவத்துக்கு வரும் நேரம். இப்போது பக்குவம்

ஆகியிருப்பாள் என்பது அதிவீரனின் நம்பிக்கை! அவள் கண்ணில் மயக்கமான கவர்ச்சி ஒன்று உண்டு. கவிழ்த்திய சின்னக் கிண்ணம்போல இருந்தன. அவளது இரு மார்புகள். இப்போது கனத்து பருத்து, கடின மிருதுவாக ஒரு பந்துபோல இருக்கும் என்பது அதிவீரனின் நம்பிக்கை! இந்த அவசரத்தில் அவளையும் ஒருமுறை பார்க்கமுடியுமா என்று நப்பாசை!

குண்டல ராமனைப் பற்றி விசாரித்தபோது, அவர் பக்கத்தினுள் கலசமங்கலம் திருவிழாவுக்குச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள்.

அவருக்காகக் காத்திருப்பதில் பயன் இல்லை என்று உணர்ந்த அதிவீரன், விரைவாக அங்கிருந்து புறப்பட்டு, மாலையில் பிரசித்திப் பெற்ற ஆழ்வார் சத்திரத்திற்குப் போய் சேர்ந்தான்.

நாலு மார்க்கங்கள் வந்து சேரும் இடத்தில் இருந்தது. ஆழ்வார் சத்திரம், பெரிய பரோபகாரிகளாக இருந்த மூன்று செட்டியார்கள் அதைக் கட்டி இருந்தார்கள்.

சத்திரம் ஒரு கட்டிடம் அல்ல! பல கட்டிடங்களாக இருந்தது. பல கிணறுகளும் இருந்தன. பல தோட்டங்கள்! பல தொழுவங்கள்!

"இங்கே சற்றுத் தங்கிப் போகலாமா!" என்றான், அதிவீரன்.

"மன்னவா, நேரம் இல்லை! நாம் எங்கும் நிற்காமல் போனால்தான் அந்தத் தலைப்பாகைக்காரர்களைப் பிடித்து விட முடியும். நாம் பின்பற்றி வருகிறோம் என்பது அவர்களுக்குத் தெரியாது. எனவே அங்கங்கே தங்கித்தான் செல்வார்கள். நாம் மட்டும் தங்காமல் போனால், அவர்களைப் பிடித்துவிடலாம்!" என்றான், வீரன்.



"வீரா! இங்கே தங்குவது என் நோக்கம் அல்ல! தென் காசியிலிருந்து தலைப் பாகைக்காரர்கள் வடக்கு நோக்கிப் போனால், இந்த வழியாகத்தான் போயிருப்பார்கள், எனவே சத்திரக்காரியக்காரரிடம் உளவு கேட்டால் சொல்வாரே!" என்றான், அதிவீரன்.

"நல்லது. நீங்கள் இப்படி வெளிப்புறத்திலேயே இருங்கள்! நான் கேட்டு வருகிறேன்" என்ற வீரன், குதிரையைச் செலுத்தி சத்திர முகப்பு வாயிலுக்குள் நுழைந்தான்.

மன்னன் ஒரு மரத்தடியில் நின்றான். கீழே குதித்து, கை கால்களை நீட்டிவிட்டு ஆசுவாசமாக, அவன் கண்கள் பக்கத்து சத்திரத்து சாளரம் மீது பதிந்தது.

சட்டென்று அவன் புலன்கள் துள்ளி எழுந்தன.

## 10

ஆழ்வார் சத்திரத்துக்கு அப்பால் இருந்த வேம்பு மர குளிர்ச்சி நிழலில் நின்று அதிவீரன், சத்திரத்துக் கட்டிடம் ஒன்றின் சாளரத்தில் பார்த்தபோது அங்கே சந்திரன் ஒன்று தோன்றி திடீரென்று மறைவதைக் கண்டான்.

மனதில் அமிருதமான நினைவுகள் தோன்றின. அந்தச் சந்திரவதனி யார்? அவளது விழிகள் இரண்டும் மையல் கொட்டுகிறதே! அவளது பிரமிக்கும் பார்வையில் அவனை நோக்கி; "இந்த சுந்தர புருஷன் யார்?" என்ற கேள்வி ஓடுவது போல் தெரிகிறதே!

மனம் குடைந்தது. உள்ளே எழுந்த தாபம் திமுதிமு என்று ஒரு வெப்பத்தை வளரச் செய்ததால், அதிக நேரம் யோசிக்க முடியவில்லை!

குதிரையை மரத்தில் கட்டினான். "இதோ சற்று போய் வருகிறேன்" என்று மற்ற மெய்யாளிடம் கூறி, சத்திரத்துச் சுற்றுச் சுவரைச் சுற்றிச் சென்றான்.

மெய்யாள் பார்வை விழாத இடத்திற்குச் சென்று சுவர் ஏறி குதித்து அந்தக் குறிப்பிட்ட கட்டிடத்தை நோக்கிச் சென்றான்.

முகப்புத் திண்ணையில் பல்லக்குத் தூக்கிகள் பல பேர் அமர்ந்து வெற்றிலை போட்டுப் பேசிக்கொண்டிருந்தார்கள். சுற்றிவர புளிச் புளிச் என்று அவர்கள் அடித்த உமிழ்நீர்ச் சாயமாக இருந்தது.

அதிவீரன் ஓரமாகப் போக, அவர்கள் பேசுவது காதில் விழுந்தது.

''தென்காசிக் கோட்டையை அடைச்சுட் டாங்களாமே!'' என்றார் ஒருவர்.

''உள்ளே கலவரமாமே!'' என்றார் ஒருவர்.

''விஷயம் என்னென்னு தெரியலை! குற்றாலம் போற மக்கள் எல்லாம் தவிச்சுப் போச்சு!'' என்றார் மூத்தவர்.

''ராஜா ஊரிலே இல்லையா?''

''அவரா! வேட்டைக்குப் போயிருப்பாரு!''

''என்ன வேட்டை?'' என்று ஒருவர் கண்சிமிட்டிக் கேட்க–

''பெண் வேட்டைதான்! மன்மதப் பாண்டியர் ஆச்சே அவர்!'' என்றார் மூத்தவர்.

பொக்கென்று எழும் சிரிப்புக்கு இடையே அதிவீரன் உள்ளே போனான்.

கூடத்தில் பரிமளங்கள் பல வீச, அறை வாசல் ஓரமாக ஒரு சேடி அமர்ந்து சந்தனம் குழைப்பதைப் பார்த்தான்.

தனது அகன்ற கருவிழியால் அவள் அவனை நோக்கி குறுகுறு என்று ஒரு முறுவல் காட்ட–



அவன் அவள் அருகில் சென்று ''நான்தான் அதிவீரன்'' என்று காதோரமாகச் சொன்னான்.

சேடியும் இளமை, சுகந்தவல்லி என்று பெயர் தரித்தவள். அதிவீரனைப் பற்றி நிறையக் கேள்விப் பட்டிருக்கிறாள். இன்பக் கேளிக்கைகளில் வல்லவன் என்று பெண்களிடையே பேச்சு இருந்தது.

இத்தனையும் நினைவில் வர, சுகந்தவல்லி கண் மட்டும் குறுகுறுக்காமல் அங்கங்கள் அனைத்தும் குறுகுறுக்க, துகிலை எல்லாம் வியர்வையும், மதன நீரும் படிந்து ஈரமாக்கி விட, வேகமாக உள்ளே சென்று கதவை மூடிக் கொண்டாள்.

அதிவீரன் இதற்குள் காம வேட்கை முதிர்ந்தவனாய், கண்களில் தபதப என்று எரியும் கனலோடு நின்றுகொண் டிருந்தான்.

சேடி சுகந்தவல்லி திரும்பி வந்து, அவர் காதோரம் குனிந்து, ''அடுத்து அறைக்குச் செல்லுங்கள்! எங்கள் எஜமானி உம்மைத் தேடி வருவாள்!'' என்று பக்குவமாகக் கூறினாள்.

காதோர நெருக்கத்தில் அவள் பேசியதில் அவளது மெல்லிய பட்டு இழையான சுவாசங்கள் காதின் மெல்லிய சருமத்தில் வருடி பரவசத்தை வழங்க–

அவளது உடல் வாசங்கள் வேறு அவன் மனதைக் கிறுகிறுக்க வைத்தது அவளை மறுகிப் பார்த்து, முகவாயைப் பிடித்து, செண்டு போல் மேலே தூக்கி, அவள் கண்ணில் தனது கண்ணை உறுத்தி வைத்து அதிலேயே ஒரு சம்போக உணர்வை அவளுக்கு ஊட்டினான்.

பின்னர் அவள் பணித்தது போல அடுத்த அறைக்குச் சென்றான். அது, ஏற்கனவே அலங்காரங்களால் ஜோடிக் கப்பட்டிருப்பதை அறிந்து, மகிழ்ச்சி அடைந்து, மஞ்சக் கூடத்துக் கட்டில் மீது அமர்ந்தான்.

சிறிது நேரத்தில் கம்மென்று கமழும் கதம்ப வாசனையோடு அந்தச் சாளரத்துச் சந்திரவதனி உள்ளே வர.

அதிவீரன் அவள் திசை திரும்பி கண்ணை அவள் மீது வைத்தான். வைத்த கண்ணை எடுக்க முடியவில்லை.

சித்திரமா? சொப்பனமா?

கற்பனையா? காவியமா?

ஒரு விஷயம் அதிவீரனை குதூகலிக்க வைத்தது.

அவன் முன் நிற்பது சித்திராங்கி.

யாரை அவன் தேடிப் போனானோ அவளே அவன் முன் பிரசன்னமாகி விட்டாள்.

ஒரு வருடத்தில் என்ன மாறுதல்!

உடற் பரப்பின் வளைவுகள் யாவும் தெளிவாகி வனப்பாகி விட்டன. மார்பு நல்ல முகப்போடு ததும்பி விட்டது. குழந்தைத்தனம் விளையாடிய கண்களில் இப்போது தயக்கம் வந்துவிட்டது.

இன்னும் அவள் கழுத்தில் முத்துச்சரம் விழவில்லை. எனவே கன்னி கழியவில்லை என்று தெரிந்தது.

மருட்சியோடு அவன் முன்னால் வந்தாள். உடனே அமராமல் அவரைக் கூர்ந்து நோக்கி, "மன்னவரா?" என்று வாய்புதைத்துக் கேட்டாள்.

அதிவீரன் முகத்தில் புன்முறுவல் லயித்தது.

"ஆமாம்" என்று தலை அசைத்தான் அவன்.

"அடியாள் மீது ஏது இவ்வளவு கரிசனம்?" என்று மதுரமாக மொழிந்தாள்.



"உன்னைத் தேடி உன் ஊருக்கே போய் வருகிறேன். சித்திராங்கி! சென்ற ஆண்டு திருவிழாவில் பார்த்ததை மனதில் படம் வரைந்து வைத்திருக்கிறேன். பாவாடையும், சட்டையுமாக பிம்பம் போல் நின்றாயே!" என்றான் அவன்.

அதைக் கேட்ட சித்திராங்கி மகிழ்ச்சி மேலிட்டவளாய், "சுவாமி அடியாளை அவ்வளவு தூரம் நினைவு வைத்ததற்கு ஜன்ம ஜன்மத்திலும் தங்களை மறக்காமல் இருப்பேன். என்றைக்கு தங்களைத் தரிசித்தேனோ அன்றைக்கே தங்களை மோகித்துவிட்டேன். பின்னர் தங்கள் கீர்த்தி கேட்கக் கேட்கத் தங்கள் நினைவிலேயே லயித்துப் பைத்தியமாகி விட்டேன். இன்று அடியாளுக்குப் புனித நாள்! தங்களால் தான் கன்னித்திரை விலக வேண்டும் என்று உறுதி பூண்டிருந்த அடியாளுக்கு இந்த இடத்தில் தங்கள் சந்திப்பு நேர்ந்தது என்பதை நினைக்க நினைக்க ஆனந்தமாக இருக்கிறது" என்றாள் அவள்.

கீழே மடிந்து அமர்ந்து அதிவீரனின் பாதங்களைத் தொட்டு ஒத்திக்கொண்டாள்.

"நானும் அவசரமாகப் போகிறவன். என் ராஜரீக விஷயத்தில் உன்னைப் பார்க்கக்கூட நேரம் கிடையாது. ஆனால், எப்படியும் பார்த்துப் போக வேண்டும் என்று விடாப் பிடியில் வந்தேன்!" என்றான் அதிவீரன்.

"என் பாக்கியம் அது, சுவாமி! இல்லாவிடில் இன்று நான் மேலகிராமம் பாளையக்காரருக்கு அடியாளாகப் போயிருப்பேன்! தாங்கள் நல்ல வேளையாக என்னைக் குறுக்கிட்டு ஆட்கொண்டீர்கள்!" என்றாள் அவள் நன்றிப் பெருக்கோடு.

அப்போது "யாரடி! உள்ளே யார் வந்திருக்கிறது?" என்று இடிகுரல் கேட்க

அதைத் தொடர்ந்து சித்திராங்கியின் தாயார் மாணிக்க ஆத்தாள் உள்ளே நுழைந்தாள்.

அங்கே சப்பிர மஞ்சத்தில் ஒரு புது ஆள் திக்பிரமையோடு இருப்பதைப் பார்த்து, சற்று கண்களை இடுக்கிப் பார்த்து,

"ஒகோகோ! மன்னர் அதிவீர ராமபாண்டியரா? இங்கே கைவரிசை காண்பிக்க வந்துவிட்டாரா?" என்று கைகொட்டி, முகவாயில் ஒரு ஆட்காட்டி விரலை வைத்து—

தன் மகளை நோக்கி, "ஏண்டி? உனக்குப் புத்தி எங்கே போயிற்று? இந்த மாமன்னரின் பவிசு உனக்குத் தெரியாதா? தம்முடைய பிரதம தாசியை தம் கண் முன்னாலேயே பறி கொடுத்த சேலைப்பாண்டியர்தாண்டி இவர்! சேலை உடுத்தும் பாண்டியர்! இவரை நீ நம்பினாயோ, தட்டுலே வைத்து தலைப்பாகைக்காரன் கையிலே கொடுத்துடுவார்! ஆண்பிள்ளை என்று கைப்பிடிக்கப் போனாயே, இவன் கிட்டே!"

சித்திராங்கி இப்போது கோபத்தோடு குறுக்கிட்டு "அம்மா! வாயை அடக்கிப் பேசு! நாட்டுக்கு அரசரை அவமதியாதே! நாளைக்கு உன் கதி அதோ கதி ஆகிவிடும் தெரியுமா?" என்று இரைச்சலாகக் கூறினாள்.

"அடி என் சமர்த்தே!" என்று ஆரம்பித்தாள் மாணிக்கம் ஆத்தாள். "தலையைச் சீவி விடுவாரோ சீவி! இது யார் நாடு தெரியுமில்லே? வரதுங்க ராமன் நாடு! இங்கே இவர் செல்வாக்குப் பலிக்காது. ஆமாம், அவர் கையாலாகாதவர்டி! இவர்கிட்டே போய் கன்னி கழியணும் என்று ஆசைப்படாதே!" என்று மேலும் தொடர்ந்தாள் ஆத்தாள்.



"அம்மா!" என்று ஆத்திரப் பார்வை பார்த்துக் குறுக்கிட்டாள் சித்திராங்கி! "அம்மா! வாயை மூடிக்கொள்ளுங்கள்! உங்கள் அசுத்த வாயால் அவதூறு பேசாதீர்கள்! பாண்டியர் என்றால் அவர்தான் பாண்டியர்! பாண்டித்தியம் பெற்றவர்" என்று சொல்ல—

"உன் பாண்டித்தியம் இங்கே யாருக்குடி வேணும்! காலம் மாறிப் போயிடுத்துடி! எழுதி வைக்கிற நூல் பேசாதடி! வேல் பேசும்! அவர் பாண்டித்தியம் என்ன செய்தது பார்! பறிபட்டுப் போன பிரதம தாசியை பறிக்க முடிந்ததா, திரும்பி?" என்றாள் மாணிக்க ஆத்தாள்.

அவள் வாய் கோணிப் பேசியதும், கையைக் காட்டி அபிநயத்ததும் சித்திராங்கிக்குப் பெரும் வெறுப்பைக் கிளறி விட்டது.

அவள் பயமும், தாபமும் பொங்க, அதிவீரனைத் திரும்பிப் பார்த்தாள்.

அந்தக் காட்சி தொடங்கியதுமே அதிவீரன் கட்டிலை விட்டுக் காலைக் கீழே ஊன்றிவிட்டான். அவன் முகம் சிறிது சிறிதாகக் கல்லாகி வந்தது. மாணிக்க ஆத்தாள் பேசிய எல்லா வார்த்தைகளும் அவன் நெஞ்சில் சுருக் சுருக் என்று தைத்தன.

உள்ளே கனன்று கொண்டு ஒரு கோபம் வீறிக் கொண்டு வந்தது. அவனது அனுபவம் வாய்ந்த மனம் "பொறுமை! பொறுமை!" என்றது.

"ஆத்தாளே! என்றான் அவன், அவனை மீறி ஆத்திரம் வந்துவிட்டது. "நல்லது! நீங்களும் என்னை ஏசினீர்கள்! உங்களை நான் எதுவும் சொல்லமாட்டேன்! ஏனெனில் இது உங்கள் குற்றமல்ல! என் குற்றம்! இலஞ்சிச் சாமியார்

எத்தனையோ முறை சொல்லுவார்! ராஜாங்கத்தைக் கவனி! அதைச் செப்பனிட்டால்தான் மற்ற கேளிக்கையில் நான் ஈடுபடலாம் என்று அவர் சொன்னதை நான் செவி மடுத்தேன் இல்லை! அதன் பலன் இதோ இந்த அவமானத்தை நான் தாங்க வேண்டி வந்துள்ளது! நல்லது! ஆத்தாளே! சித்திராங்கியை நான் தொடமாட்டேன்! இது சத்தியம்!'' என்றான் அதிவீரன்.

''சுவாமி! சத்தியம் செய்யாதீர்! வேண்டாம்! வேண்டாம்!'' என்று சொல்லி அவனது அடிகளில் தடால் என்று விழுந்தாள் சித்திராங்கி!

மாணிக்க ஆத்தாள் அவளைப் பற்றி இழுத்தாள். ''விடுடீ அவரை! தாசியாகப் பிறந்துவிட்டு ஒரு புருஷன் மேலே என்ன காதல் வேண்டியிருக்கிறது, விடுடீ அவரை!'' என்றாள் அவள்.

''மாட்டேன்! மாட்டேன்! அவர் எனக்குக் கிடைக்கா விட்டால் நான் கன்னிதான்! நான் கன்னிதான்! என்று இரைந்தாள் சித்திராங்கி.

அதிவீரன் எதையும் பொருட்படுத்தாது வெளியே விருட்டென்று சென்றான். சேடி சுகந்தவல்லி வெளியே இருந்து கொண்டு அவனை ஒரு காதல் பார்வை பார்த்தாள். முகத்திலும் முறுவலும் வந்தது.

வாசலில் சென்றிருப்பான்!

''பிரபு! பிரபு! என்று குரல் கேட்டு பார்வையைத் திருப்பினான்.

வீரன் கைகளை ஆட்டி அவனை அவசரமாக அழைத்துக் கொண்டிருந்தான்.



கனத்த மனதோடு வெளியே பாய்ந்து சென்றான் அதிவீரன்.

அவன் கண்கள் வெளியே என்ன நடந்திருக்கிறது என்பதை அறிய விழைந்தன.

மனதில் கோபம் ஒன்று உக்கிரமாக எழுந்து வந்து கொண்டிருந்தது.

தன் ஆத்திரத்தை வெளியே காண்பித்துக் கொண்டால் தான் ஆயிற்று என்கிற முறையில், வாளை விருட்டென்று உருவி மேலே தூக்கினான்.

# 11

வீரசேனன் குரல் எழுப்ப, அதிவீரன் சட்டென்று பாதையில் இருந்து விலகி, கிணற்றுச் சுவரில் ஏறி, வேலிதாண்டி வெளியே குதித்தான்.

அதிவீரன் மீது சத்திரத்து தட்டோட்டியில் இருந்து எறியப்பட்ட கத்தி, சரல்பாதையில் கொத்திக் கொண்டு நின்றது.

அதிவீரன் விருட் என்று தாவி, தன் குதிரை மீது ஆரோகணித்துக் கொள்ள,

அவனது இரு சகாக்களும் சத்திரத்தை நோக்கி ''விடாதே, பிடி! கொலைகாரனைப் பிடி!'' என்று குரல் கொடுத்தார்கள்.

அனைத்துச் சத்திரத்தில் இருந்தும் புற்றீசல் சிதறியது போல் மக்கள் திரண்டு வெளியே வந்து, ''என்ன விஷயம்?'' என்று நாலாபக்கமும் பார்க்க,

தட்டோட்டிச் சோர்வாய் மூலம் வெளியே குதித்து இருவர்,

ஒரு பாய்ச்சல் குபீரில் பின்புறத்தில் ஓடி மறைய,

அடுத்த கணம் எழுந்த குதிரையின் லடக் லடக் ஓசைகள் அவர்கள் குதிரை ஏறிப் பறக்கிறார்கள் என்பதைக் காட்டிவிட்டது

"ம்....?" என்று அதிவீரனின் ஒரு குரல், இரண்டு சகாக்களையும் உலுப்பிவிட...

மறுவிநாடி மூன்று புரவிகளும் காற்றில் தேய்ந்து பறக்க ஆரம்பித்தன.

சத்திரத்தின் முடுக்குகளைத் தாண்ட, பிரதான பாட்டை வரும்பவரை அவர்கள் சற்று நிதானத்தைக் கையாண்டு,

பிரதான பாட்டை வந்ததும் வேகத்தை முடுக்கிவிட்டார்கள்.

சோலைகளும், தோட்டங்களும் உபவனங்களும் நிறைந்த பிரதேசம் அது.

சாலையோ இதில் நெளிவும் வளைவுமாகச் செல்ல, முன்னால் தப்பித்து ஓடும் அந்தக் குதிரை வீரர்களை சற்று தூரம் போன பின்னரே கண்டுபிடித்தார்கள்,

"துரோகிகளை விடக்கூடாது! என்று வீரசேனன் இரைந்து, குதிக்கால் தாரைக் குத்தி குதிரையைக் கிளப்பிவிட,

அதிவீரன் சலனம் அதிகம் காட்டாமல், தூரத்தில் நெளியும் சாலையை மட்டிலும் தீவிரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் பார்வை வெகு சூசகமாக பாதைப் பரப்பு மீது படர்ந்தது.



வீரசேனன் முண்டியடித்துக் குதிரையை முன் செலுத்தி ஓட,

"வீரா" என்று இரைந்தான், அதிவீரன்.

"பிரபு வாருங்கள்! என்னை நிறுத்தாதீர்கள்" என்று கூவினான், அவன்.

குதிரையும் அவனும் ஒரே வெறியில் இணைந்து பறந்து கெண்டிருந்தார்கள்.

"வீரா, வேண்டாம்? நில்லு! நில்லு! பாதையில் முள் உருண்டை போட்டு இருக்கிறார்கள்! எச்சரிக்கை! எச்சரிக்கை!" என்று கத்தினான். அவரது வீறிட்ட சத்தம் ஒரு வளையம்போல் சகாவின் கழுத்தில் விழுந்து அவன் விருசலைக் குறைக்க ஆரம்பித்தன.

தக்க சமயத்தில் சகாக்கள் இருவரும் குதிரையை இழுத்து நிறுத்தினார்கள்.

அல்லது அன்று அத்து நீறி ஓடி, பாட்டையில் கிடக்கும் முள் உருண்டையில் அடிபட்டு குதிரைகளின் கால்கள் பிரயோசனம் அற்றதாக மாறியிருக்கும்.

உலோகப் பந்துகளில் நிறைய உலோகமுட்களைப் பொறுத்தி வைத்திருக்கிறார்கள்.

குதிரைகள் இவை மீது மிதித்தாலும் ஆபத்து! இவைகளை அடுத்து மிதித்தாலும் ஆபத்து.

அடுத்து மிதித்தால், குதிரைக் கால்களில் எப்படியும் இந்த முள்கள் தாக்கி விடும்.

சகாக்கள் இருவரும் வியர்வைச் சிலும்பலோடு குதிரைகளை இழுத்து நிறுத்த.

"சுவாமி! சேர மன்னனாக இருக்கலாம்! அல்லது தஞ்சை மன்னனாக இருக்கலாம்! அல்லது இரண்டு பேரும் சேர்ந்து இருக்கலாம்! என்றான், வீரசேனன்.

"என்ன ஆதாயத்திற்கு இதைச் செய்கிறார்கள்?"

"பாண்டிய நாட்டில் அமைதியைக் குலைக்க விரும்புகிறார்கள். குழப்ப நிலையை உண்டாக்கிப் பின்னர் சுபளீகரம் செய்து விட விரும்பி இருப்பார்கள்"

"தர்மசேனா! உன் அபிப்பிராயம் என்ன?"

"வீரன் சொன்னதை நானும் ஆமோதிக்கிறேன். நமது பிரதானிகள், சைனிய அதிபதிகள் யாவுமே இந்த அபிப் பிராயத்தைத்தான் கொண்டிருக்கிறார்கள்.

"இதன் காரணம் என்ன?"

"தற்போது இருக்கும் ராஜரீகத்தில் இந்த இரண்டு மன்னர்கள்தான் நிலம் சேர்க்கும் வெறியில் இருக்கிறார்கள்!"

அதிவீரன் சற்று யோசித்து இருந்தான்.

"இவர்களுக்கு ஏன் பாண்டியத்தின் மீது கண் விழ வேண்டும்?" என்றான்.

"நாம்தான் அவர்களுக்கு அண்டையநாடு!" என்றான், வீரன்.

அதிவீரன் யோசித்தான், "உண்மை! நம்மைப் பலவீனம் ஆக்குவதில் அவர்களுக்கு விருப்பம் நிறைய இருக்கும். இதை இனியும் விடக்கூடாது?" என்றான்.

"இலஞ்சிச் சாமியாரும் அதைத்தான் கூறுகிறார், சுவாமி! தங்களிடம் எடுத்துக் கூறச் சொன்னார்!"



"இனி கூறவேண்டியதில்லை, வீரா! வாய் பேச வதைவிட—சம்பவங்களே பேசிவிட்டன. இனி வாளா விருப்பதற்கு இல்லை! ம்... புறப்படுங்கள்"

பிறகு, மூவருமாகச் சேர்ந்து பாட்டையில் இருக்கும் முள் உருண்டைகளை எடுத்து பக்கவாட்டில் வீசி எறிந்தார்கள். அரை நாழிகையில் இந்த வேலையைச் செய்து விட்டுப் புறப்பட்டார்கள்.

பொழுது சாயுமுன் கரிசூழ்ந்த மங்கலத்தை அடைந்தார்கள்.

அதன் கோட்டை மூடப்பட்டிருந்தது.

மேற்கு வாசலை அணுகி, கையைத் தட்டி, "அஹோய்! அஹோய்!" என்று அழைத்தார்கள்.

கோட்டைக் காவலர் மேலே பரிகத்தில் வந்து நின்றார்.

அதிவீரன் அவரைப் பார்த்ததும், "வீரபத்திரா! நான்தான்! கதவைத் திற!" என்றான்.

"சுவாமி!" என்று வணக்கம் போட்டு பரிகத்திலிருந்து மறைந்தான், காவலன்.

அடுத்த நிமிடங்களில் இழுபாலம் விடப்பட்டு, கோட்டைக் கதவுகளும் திறக்கப்பட்டன.

மூவரும் உள்ளே செல்ல, மீண்டும் வீரபத்திரன் அவர்களை வணங்கினான்.

அண்ணன் வரதுங்க ராமனின் ராஜ்யம் அது! இந்த நகரம்தான் அவர் வாழும் தலைநகரம்!

அரண்மனைக்கு நேரே சென்று அதிவீரன் விரைவாக உள்ளே நுழைந்தான்.

மற்ற இருவர்களும் வெளியில் தங்கினார்கள்.

மன்னர் மாடி அறையில் படுத்திருக்கிறார் என்று தெரிந்து அங்கே விரைந்தான்.

அவரது அறைக்குள் நுழைந்ததும், அவன் கண்ட காட்சி அவனைத் துணுக்குற வைத்தது. வரதுங்கர் காய்ச்சலில் படுத்திருந்தார். அவர் அருகே அண்ணி வரகுண மங்கை நின்று கொண்டிருந்தாள்.

வரதுங்கனின் பாதங்களைத் தொட்டு வணங்கி விட்டு, அண்ணியாரையும் வணங்கினான், அதிவீரன்.

பிறகு ''என்ன உடம்புக்கு?'' என்று கேட்க,

''சாதாரணக் காய்ச்சல்'' என்று கூறி, வரதுங்கர் அவனை அன்புடன் குசலம் விசாரித்தார்.

''ஏது அண்ணா? கோட்டையை மூடிவிட்டாயே!'' என்று கேட்க,

''இல்லாவிடில் வாழ்க்கையைக் கோட்டை விடுவோம்!'' என்று கூறினார், அண்ணி.

அண்ணி குணமங்கை படித்தவர். பல சாத்திரங்களைக் கற்றதுடன் சொந்தத்தில் கவி எழுதும் திறமை பெற்றவர். அண்ணனது ராஜரீகத்தில் அவரது வலதுகையாக இருப்பவர். ஆனால், அதேநேரம் அண்ணனும் தம்பியும் ஏட்டிலேயே பொழுது போக்குவதை விரும்பாதவர்.

''ஏன்? இங்கேயும் நீலப்பாகைக்காரர்கள் வந்துவிட்டார்களா?'' என்று கேட்டான், அதிவீரன்.

''ஏன் வராமல்! அண்ணனும் தம்பியும் பாட்டுக் கேட்டே காலத்தைக் கடத்தினால் நீலப்பாகை என்ன, அங்கே



தூத்துக்குடித் தொப்பிக்காரன்கூட வந்துவிடுவான்'' என்றாள், அண்ணி கடுமையாக.

வரதுங்கர் இலேசாக புன்னகைத்தார்.

''அண்ணி! இனி பயப்படவேண்டாம். கத்தியை எடுத்தாகிவிட்டது! கவிதையை உதறியாகிவிட்டது!'' என்றான், அதிவீரன்.

''ஓகோ! இப்போதுதான் ரோஷம் வந்துவிட்டதோ! அதுவும் தாசி போன பிறகு?'' என்றாள், அவள்.

அதிவீரன் கண்கள் மேலே சடக்கெனப் பறந்தன. இங்கேகூட செய்தி வந்துவிட்டதா? அதற்குள்ளாகவா?

''ஆமாம், அண்ணி! கண்முன் நிதர்சனமாக எதுவும் நடக்காதவரை எதுவும் நமக்கு வலுவாகப் பதிவதில்லை.''

''மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்'' என்று எழுதியவர் நீங்கள்தானே?'' என்றாள், அவள்.

''ஆமாம்!''

''தங்கள் மந்திரிகள் வரும் பொருள் உரைக்க வில்லையே?'' என்றாள், அண்ணியார்.

அதிவீரனுக்குக் குத்தலாகப் பட்டது.

''இல்லை! அவர்கள் உரைத்தார்கள். ஆனால் எனக்கு அது உறைக்கவில்லை.''

''தாசியைக் கடத்திய பிறகுதான் தெரிகிறதாக்கும்!''

''ஆமாம்! அதுவும் என் துர்பாக்கியமே!'' என்றான், அதிவீரன்.

அண்ணி முகத்தைச் சுளித்தாள்!

"ஆமாம்! அண்ணனும் தம்பியும் ஏற்கனவே "க" விலும் "வி" யிலும் ஈடுபட்டிருப்பவர்கள்! இப்போது இரண்டாவது "க" வும் "வி" யும் சேர்ந்துவிட்டது!" என்று இடித்துரைத்தாள், அண்ணி.

அதிவீரன் உடனே நுட்பமாக யோசித்தான். பட்டென்று அதன் பொருள் விளங்கிவிட்டது. முதல் "க" வும் "வி" யும் கல்வி! இரண்டாவது "க" வும் "வி"யும் கலவி!

அண்ணியார் சொல்வது ஓரளவு உண்மை!

தமிழில் தாங்களே அலசியாற்றுவதைத் தவிர, வடமொழியில் வெவ்வேறு நிபுணர்கள் எழுதியதைத் தமிழில் ஆக்கவும் அவர்கள் முனைந்திருந்தார்கள்.

அந்த வகையில் இப்போது இருவருக்கும் காம சாத்திரம் அது! அதன் மீது கண்படர்ந்திருந்தது. என்ன அற்புதமான சாத்திரம் அது! மானிட வாழ்க்கையில் "காமம்" எவ்வளவு சிறப்பு வாய்ந்தது! "காமம்" இல்லாவிடில் வாழ்க்கை ஏது?

அந்தக் காமத்தை ஆய்ந்து, அறிந்து, வகைப்படுத்தி வட மொழியில் பல நூல்கள் வந்துவிட்டன. தமிழில் வர வேண்டாமோ! தமிழ் பேசும் மக்களும் அதைத் தெரிந்து கொள்ள வேண்டாமோ!

இதன் காரணமாக இருவர்களும் வடமொழியில் எழுதப்பட்டிருந்த "ரதி சாத்திர"த்தின் மீது கண் விழுந்திருந்தது. அதை எழுதியவர், கொக்கோக முனிவர். அவர் எழுதியது போல், தாங்களும் எழுத மனம் நினைத்து சமீப காலங்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

இதற்காக சில பல வழிகளை ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

இதைத்தான் அண்ணி சுட்டிக்காட்டி இடித்துரைக்கிறார், என்று தெரிந்தது

"அண்ணி!" என்றான், அதிவீரன்! "அது எல்லாவற்றையும் கட்டி அப்பால் வைத்துவிட்டேன். வீர சபதத்தோடு புறப்பட்டிருக்கிறேன்" என்றான், அவன்.



"அதுதான் இந்தப் புதுவேடமோ!" என்றாள், அண்ணி.

"ஆமாம்! என்னை என் காரியத்தில் ஆசிர்வதியுங்கள்!" என்று கூறி நெடுஞ்சாண் கிடையாகத் தரையில் விழுந்து வணங்கினான், அவன்.

"எழுந்திருங்கள்! போதும்! போதும்! என் ஆசிர்வாதம் எப்போதும் உண்டு!" என்று கண்கள் பொங்கக் கூறினாள் அவள்.

அதிவீரனின் பணிவு அவளை வெகுவாகக் கவர்ந்துவிடுவதுண்டு.

பிறகு, எல்லோரும் ராஜரீகத்தைப் பற்றி பேசினார்கள். நீலத் தலைப் பாகைக்காரர்கள் திடீர் என்று தோன்றியிருப் பதை எல்லோரும் சற்று கவலையுடன் உணர்ந்திருந்தார்கள். வடக்கே பூசல் எழ வாய்ப்புண்டு என்பதையும் தெற்கே உள்ள சேரர்கள் தங்களுக்குத் தொல்லை தரலாம் என்ப தையும் உணர்ந்திருந்தார்கள். தற்சமயம் நாட்டில் ஒரு கொந்தளிப்பும், யுத்த அபாயமும் தோன்றி இருப்பதை இருவரும் தங்களுக்குள் பேசித்தீர்த்துக் கொண்டார்கள்.

இரவு உணவு அருந்துவதற்கு அதிவீரன் சித்தமானான்.

## 12

அந்தப்புரத்தை அடுத்த போஜனசாலையில் தங்க பீடத்தின் முன் அதிவீரன் அமர்ந்தான். தங்கப் பாத்திரத்தில் நீர்! சுற்றிலிருந்த தங்கக் கிண்ணங்கள்! சேடி ஒருத்தி பின்னால் நின்று ஆலவட்டம் வீசினாள்.

பரிகாரகர் வரிசையாக அமுது வரிசைகளைக் கொண்டு வந்தார். வாசனை கம கம என்று கமழ்ந்தது.

தம்பி உண்பதைக் கவனிப்பதற்கு வரதுங்கர் தமது காய்ச்சலையும் பொருட்படுத்தாது எழுந்து வந்து எதிரே அமர்ந்தார்.

அவர் அருகே அண்ணி குணமங்கையும் அமர்ந்து கொண்டார்.

''என்ன அதிவீரா! புறப்பட்ட அவசரத்தில் பாகையைக் கூட மறந்து வைத்துவிட்டாயா?'' என்றார், வரதுங்கர்.

''இல்லை, அண்ணா! இப்போது நான் அதிவீரனாக வரவில்லையே! வேடத்தில் வந்திருக்கிறேன்! என்றான். அதிவீரன்.

''இந்த ஜம்பத்திற்கு எல்லாம் குறைவில்லை! பாகை ஏன் காணவில்லை என்று உண்மையாகச் சொல்லச் சொல்லுங்கள்!'' என்றாள், குணமங்கை.

கையில் கவளத்தை எடுத்து அதிவீரன் சட் என்று அண்ணியை பார்த்தான்.

அண்ணி முகத்தில் மர்மமான புன்னகை மலர்ந்தது.

''ஏன், அதிவீரா! என்ன காரணம்?'' என்றார், வரதுங்கர்.

அதிவீரன் இன்னும் விழித்தான். அண்ணி இப்படி அவனை ஆழம் பார்க்கிறாளே!

''இல்லை சுவாமி!'' என்று கணவரை நோக்கித் திரும்பினாள், குணமங்கை. ''எல்லா அரசர்களும் கொடி போனால் குலைவார்கள், குடைபோனால் குலைவார்கள், ஆதமை போனால் குலைவார்கள். இவர் எதற்காகக் குலைந்திருக்கிறார் என்று கேளுங்கள்!'' என்றாள்.



பக்கென்று அடிவயிற்றில் பற்றியது. ''அண்ணி!'' என்றான். ''பழியா வருவது, மொழியாது ஒழிவது'' என்றான்.

''ஒகோ! உங்கள் ''கொன்றை வேந்தன்'' உபதேசத்தை பிறகுக்கு வைத்துக் கொள்ளுங்கள்! எங்களிடம் வேண்டாம்!'' என்றாள்.

உடனே வரதுங்கர் மனைவி பக்கம் திரும்பி, ''என்ன மங்கை! என்ன பேசுகிறாய்! எதாவது இலக்கண இலக்கியத்தை எடுத்துவிடாதே! தம்பி உண்பதை நிறுத்திவிடுவான்! அவனுக்கு எப்போதும் செவிக்கு உணவுதான்!'' என்று ஆதுரமாகக் கூறினார்.

''இல்லை இப்போது விவாதம் ஏதுமில்லை!'' என்றாள், குணமங்கை.

''பழியா வருவது என்றாயே! அது என்ன?'' என்றார், வரதுங்கர்.

''ஒன்றுமில்லை'' என்றாள், குணமங்கை.

''ஏன் சொல்லேன்?'' என்றார், வரதுங்கர்.

''உங்கள் தம்பிதான் ''கொன்றை வேந்தனை''ச் சொல்லிப் பூட்டுப் போட்டுவிட்டாரே!''

''அண்ணி!'' என்று இடைமறித்தான், அதிவீரன். ''கொன்றை வேந்தனில் மற்றொன்றை மறந்திருக்கிறீரே!''

''மெய்யுடை ஒருவன் சொல் மாட்டாமையால் பொய் போலும்மே! பொய் போலும்மே!''

''உண்மையை உடைய ஒருவன் அதைச் சொல்ல முடியாத காரணத்தால் பொய்யன்போல ஆவான்! அதைப்

போல நானும் பொய்யன் போல இருக்கிறேன். நீங்கள் அண்ணனிடம் உண்மையைச் சொல்லி, என்மேல் பொய்யன் பழி வராமல் பார்த்துக் கொள்ளக் கூடாதோ!'' என்றான்.

''ஏன், நீங்களே சொல்லுங்கள்!'' என்றாள், அவள்.

''நீங்கள் சொல்லுவதுதான் பொருத்தம்! கொடி என்றீர்! குடை என்றீர்! ஆதமை என்றீர்! அண்ணனுக்கு விளக்கமாகக் கூற வேண்டாமோ!''

''ஏது! இருவரும் புதிருக்கு மேலாகப் புதிர் போடுகிறீர்களே! என்ன விஷயம்?''

''அண்ணி! அந்த விஷயத்தை நீங்களே சொல்லுங்கள்! அதுதான் பொருத்தம்!''

அண்ணி சிரித்தவாறு சொன்னாள் : ''உங்கள் தம்பி ஏன் இப்போது வீறு கொண்டு புறப்பட்டிருக்கிறார் என்று நினைக்கிறீர்கள்? குடையோ, கொடியோ போனதற்காக அல்ல! அல்லிக்கொடி போனதற்கு!'' என்றாள்.

''இந்தப் புதிர் வேண்டாம்! விளக்கிச் சொல்!'' என்றார், வரதுங்கர்.

''அல்லிக்கொடி தெரியாதா?''

''தெரியாதே!''

''அதிவீரனின் பிரியத்தைக் கவர்ந்தவள்.''

''என்ன?'' என்றார், வரதுங்கர் திடுக்கிட்டு

''அண்ணா! தேவரீரிடம் நான் சொல்வது முறை ஆகாது! இருந்தாலும் கூறுகிறேன். அரச சபையின் பிரதான தாசி, கடத்தப்பட்டுவிட்டாள்.''



''அப்படியா!'' என்று ஆச்சரியம் பொங்கக் கேட்டார், வரதுங்கர்.

அதிவீரன் தலை குனிய, அண்ணி நிமிர்ந்து தலையாட்டினாள்.

''அப்படியா! பேஷ்...பேஷ்...பேஷ்..'' என்றார், வரதுங்கர்.

அதிவீரன் திடுக்கிட்டான்.

''அண்ணன் என்னவோ கடினமொழி கூறப்போகிறார் என்று நினைத்தால், அவர் பாராட்டுகிறாரே!'' என்று நினைத்தான்.

''அதிவீரா! நீதான் மன்னன். தேவலம் நாட்டுக்கும் கொடிக்குமா, சபதம் செய்வது, மனிதர்கள் மேல் அல்லவா! அதுவும் பெண்கள் அதைவிட மேல் அல்லவா!'' என்றார்.

பாராட்டா, பரிகாசமா! எது என்று தெரியவில்லை. அதிவீரன் திகைத்தான்.

''கடைசியில் தாசி போய்தான் உங்கள் தம்பிக்கு ரோஷம் வந்திருக்கிறது'' என்றாள்.

''வரட்டுமே! யாரால் வந்தால் என்ன? நன்மை தானே!'' என்றார், வரதுங்கர்!

பிறகு அவர் அதிவீரனை நோக்கி, ''அதிவீரா! கல்வி கற்பது நல்லதுதான்! நீ சொல்லி இருப்பதுபோல, ''பிச்சை புகினும் கற்கை நன்றே!'' ஆனால், அதற்காக அதிலேயே மூழ்கி இருந்துவிடக் கூடாது. கோல்தான் காக்குமே தவிர, நூல் காக்காது!'' என்றார்.

''அதை இப்போது உணர்ந்துவிட்டார்!'' என்றாள், குணமங்கை.

"ஆமாம், அண்ணி! இப்போது உணர்ந்துவிட்டேன்!" என்றான், அதிவீரன்.

உடனே, மன்னர் "இரு, மங்கை! அவன் உண்டு முடிக்கட்டுமே!" என்று கூறினார்.

அதிவீரன் உணவு அருந்தி, கைகழுவி, தாம்பூல அறைக்கு வந்தான்.

அங்கே எல்லோரும் மீண்டும் அமர்ந்தார்கள்.

துளிர் வெற்றிலையும், பாக்குமாக அவர்கள் தாம்பூலம் தரிக்க,

"தம்பி...! நாடு இப்போது சரியில்லை! அதுவும் நீ, மலையாளத்துப் பக்கத்தில் இருக்கிறாய்! அவர்கள் உன் நாடு மீது கண்ணாக உள்ளவர்கள்!" என்றார்.

"புரிகிறது அண்ணா!"

"கோட்டைக் கதவைப் பற்றிக் கூறினாய்! நாங்கள் அதைச் சாத்தி ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. தெரியுமா?" என்றார்.

"அவ்வளவு காலம் ஆகிவிட்டதா!"

"ஆமாம்! நாட்டின் ராஜரீகம் சரியில்லை! எல்லா அரசர்களும் நம்பிக்கை இழந்துவிட்டார்கள்! ஒருவரை ஒருவர் சந்தேகத்தோடு பார்க்கிறார்கள்!" என்றார்.

குணமங்கை அந்தப்புரக் காரியமாகப் போய்விட, அண்ணனும் தம்பியும் தாம்பூல அறையில் தனியாக இருந்தார்கள்.

வரதுங்கர் கூறினார்.

"இந்தா, அதிவீரா! அண்ணி சொல்வதை மனதில் வையாதே! நமது மனச்சாட்சிக்கு மாற்று உரு இந்த



26645

அண்ணி! எப்போதும் இ[illegible] சும்மா இருக்கிறேன் என்று நினைத்துவிடாதே! எனது உளவுப் படைத் தலைவர் நல்ல தம்பி மதுரைக்குப் போயிருக்கிறார். யுத்தம் மூண்டுவிட்டாலோ, மூள்வதற்கு அடையாளங்கள் தெரிந்துவிட்டாலோ, உடனே செய்தி அனுப்பும்படி ஏற்பாடு! பாளையத்தை எல்லாம் எச்சரிக்கை செய்து, படை திரட்டி வைக்கச் சொன்னோம்! நீ இப்போது ஏன் வடக்கே புறப்பட்டாய்? கேவலம் ஒரு தாசியைத் தேடியா போகிறாய்?" என்றார்.

"இல்லை! அதைக் காரணமாக வைத்துக் கொண்டு, நீலத் தலைப்பாகைக்காரர்கள் யார் இவர்கள் என்று அறிந்து வரப்போகிறேன். நிறையத் தொல்லை தர ஆரம்பித்து விட்டார்கள்!

"யார் இந்த தலைப்பாகையா? அவர்கள் தலைவர் யார்? நமக்கும் நல்லதம்பி ஓலை அனுப்பினார் . ஏதோ ஒரு சக்தி வாய்ந்த அரசர் இதன் பின்னால் இருக்கிறாரோ? விஜயநகர அரசுபோய், தெற்கத்தி அரசுகளை எல்லாம் ஒன்று சேர்கக முயல்கிறாரோ?"

"ஒருவேளை வெறும் கொள்ளைக்கூட்டத்தினராக இருப்பார்களோ?" என்றான், அதிவீரன்.

"எப்படி இருந்தாலும் எல்லாருக்கும் நிறைய தொல்லை தருகிறார்கள்!" என்றார், வரதுங்கர்.

"காரணம், எதிர்பாராத நேரத்தில் அவர்கள் தாக்கி விட்டு ஓடிவிடுகிறார்கள்! அதனால்தான் அவர்களை எதுவும் செய்ய முடியவில்லை."

"உண்மைதான்! நீ சொன்னதுபோல் அவர்களின் ஆணிவேர் யார் என்று தெரிந்து, அழித்து விடுவது மேல்!"

''அதைத்தான் நான் செய்ய விரும்புகிறேன்!'' என்றான், அதிவீரன்.

''இன்னொரு பகையும் நமக்கு இருக்கிறது'' என்றார், வரதுங்கர்.

''எந்தப் பகை?'' என்றான், அதிவீரன்.

''மலையாளமும் தஞ்சையும் சிநேகமாகப் பார்க்கிறார்கள்!''

''இடைவெளியில் உள்ள நம்மை விட்டுவிட்டா?''

''ஆமாம் இந்தச் சிநேகமே நம்மை விழுங்குவதற்குத் தான்?''

''இலஞ்சிச் சாமியாரும் அதைத்தான் சொல்கிறார்.''

''இந்தப் பாகை கை ஓங்குவதற்குள் அதையும் நாம் முறியடிக்கவேண்டும்!''

''இந்தச் சமயத்தில் நாம் ஐந்து பாண்டியர்களும் சேர்ந்தாலே நன்றாக இராதா?''

''பகல் கனவு காணாதே! நாம் இருவரும் ஒன்றாக இருந்தாலே பெரிசு! பாதிக்குமேல் பாண்டிய நாட்டை ஆள்பவர் நாம்தானே!''

''ஆமாம், அண்ணா! நம்மைக் கேவலம் இரத்தம் மட்டும் சேர்த்து வைக்கவில்லை? தமிழ்தான் சேர்த்து வைத்திருக்கிறது!'' என்றான், அதிவீரன்.

வரதுங்கருக்கு அந்த வார்த்தைகள் மகிழ்ச்சியாக இருந்தது.

''தமிழ்தான் தம்பி! தமிழ்தான்! கடைசிவரை அதுதான் சேர்த்து வைத்திருக்கும்'' என்றார், அழுத்தமாக.



''நம்முடைய ஒற்றுமையைக் கேவலம் மலையாளமும் தஞ்சையும் சிதைத்து விட முடியுமா? முடியாது!'' என்றான், அதிவீரன்.

''நானும் ஆமோதிக்கிறேன் தம்பி! இருந்தாலும் உறவையும் தமிழையும் மட்டும் நம்பி சும்மா இருக்கக் கூடாது!''

''உண்மைதான் அண்ணா! இலஞ்சிச் சாமியார் கூட அதைத்தான் தெரிவித்தார். எப்போதும் எச்சரிக்கையாக இருக்கச் சொன்னார். தவிர இன்னொரு செய்தி சொல்லி என்னை நடவடிக்கையும் எடுக்கச் சொன்னார்!''

''என்ன நடவடிக்கை?''

''மலையாள அரசர் தமது மகளை அனுப்பி தஞ்சை மன்னரோடு பரிசம் போடப் பார்க்கிறாராம்.''

''அப்படியா?''

''அந்த அரசகுமாரியும் சமீபத்தில்தான் நமது நாடு தாண்டி தஞ்சை நோக்கிப் போயிருப்பதாகக் கூறினார்.''

''உண்மைதானா?''

''ஆமாம்! இலஞ்சியார் சொல்லி நான் அந்த இளவரசியை சங்கர நயினார் கோவிலில் சந்தித்தேன்! அவளை நீலப் பாகையர் அபகரிக்கும் முயற்சியையும் தோற்கடித்தேன்.''

''ஓ! அவ்வளவு தூரம் செய்தாயா? அந்த இளவரசி என்ன ஆனாள்?''

''தெரியாது! எனக்குப் புஜத்தில் காயம் ஏற்பட்டு விட்டதால் நான் உடனே தலைநகரம் திரும்ப வேண்டி வந்தது.''

''அப்படியா!'' என்று கூறிய வரதுங்கர், சற்று புருவத்தை உயர்த்தினார். ஒரு வேளை.... ஒரு வேளை.... அந்த இளவரசி இங்கே எங்கள் ஊர்க்கோவிலுக்கு வந்திருப்பார் களோ?''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''யாரோ நர்த்திகிகள் வந்திருப்பதாகக் கூறினார்கள்'' என்று நெற்றியைச் சுருக்கிக்கொண்டு கூறினார், வரதுங்கர்.

''அப்படியானால் உடனே போய்ப் பார்க்கிறேன்!'' என்றான், அதிவீரன்.

''நிச்சயமாக அவர்கள்தான் என்று தெரியாது. இந்த ஊர்க் கோவிலுக்கு வரும் யாத்திரிகர்களுக்கு அனுமதி தந்து கோட்டைக்குள் விடச் சொல்கிறோம். இவர்களும் வந்திருக் கிறார்கள்.''

''இதோ அவர்களைப் பார்த்துவிட்டு வடக்கே புறப் படுகிறேன்!'' என்றான், அதிவீரன்.

''ஏதாவது விசேஷம் இருந்தா சொல்லிவிட்டுப் போ!'' என்றார், வரதுங்கர்.

அதிவீரன் தலை அசைத்துவிட்டு, வெளியே வந்தான்.

தனது சகாக்களைத் தேடி, ராஜ விடுதிக்குப் போன போது......

அது என்ன?

## 13

அதிவீரன் விடைபெற்றுப் புறப்பட்டு கோவில் வாசலை அடைந்தான். நன்றாக இருட்டி இருந்தது. தெருவில் அரவம் இல்லை. கோட்டைக் கதவு மூடப்பட் டதால் சீக்கிரம் போக்குவரத்து முடிந்திருந்தது.

சன்னதித் தெரு பலமாட விளக்குகளுடன் அழகாக இருந்தது. இரு வரிசை விளக்குகளையும் பார்க்கும் போது, தெரு பல் முளைத்துச் சிரிப்பது போல இருந்தது.



கோயிலுக்கு சற்று தொலைவில் குதிரையை நிறுத்தினான் அதிவீரன்.

பிறகு முகப்புப் படிக்கட்டுகளை நோக்கி விரைந்து போனான்.

அவனிடம் வேகம் வந்திருந்தது.

இத்தனை நாளும் ராஜரீகத்தைக் கவனியாதது போல குறை ஒன்று தோன்றி இருந்தது.

அண்ணி இடித்துரைத்தால், அது உண்மைதான்!

அண்ணி மாதிரி படித்தவர்கள் உலகத்தில் ஏது!

தமிழில் என்ன புலமை! தேர்ச்சி! ''உம்'' என்றால் கவி பாடும் சாமர்த்தியம்.

படிகளை நெருங்கும் போது, மேலே இருந்து யாரோ இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

அவனுக்கு இருக்கும் அவசரத்தில் முதலில் யார் என்று கவனிக்கவில்லை. ஆனால், ஏறும்போதே கண் எதேச்சையாகத் திரும்ப,

அந்தக் கணத்தில் கால் விரைந்து நின்றது.

இறங்கி வருபவள் அந்தப் பெண்! மங்கை! சங்கர நயினார்! கோவிலில் சந்தித்தோமே! அந்தப் பெண்!

அவள் பின்னால் அவளது தாதி!

கண் அவனை அறியாமல் அவள் மீது லயிக்க,

மனதில் ஆயிரம் கிண்ணங்களாக மது நிரம்பிக் கொண்டிருந்தது.

நாதங்களாகக் கீதங்கள் காதுகளில் வந்து ஒலித்தன.

"ஓ! உன்னைத் தெரியுமே!" என்று ஒரு அர்த்தத்தை தனது பார்வையில் காட்ட முயலும்போது–

"உங்களைப் பார்த்திருக்கிறேன்!" என்ற பாவனையில் அவள் பார்வை மிதந்து வந்தது.

"சவுக்கியமா!"

"சவுக்கியம். நீங்கள்?"

"நானும் சவுக்கியம். அப்புறம் எப்படி இங்கே வந்தீர்கள்?"

"ஓ! அதைச் சொல்ல ஒரு பகல் போதாது. எனினும் நீங்கள் என்னைக் காப்பாற்றி விட்டீர்களே! நன்றி! இல்லாவிடில் அந்த நீலத் தலைப்பாகைக்காரர்கள் என்னைப் பிடித்துப் போயிருப்பார்கள்."

"ஓ! உங்களை வழி மறித்தவர்கள், அவர்கள் தானா?"

"அப்படித்தான் இருக்க வேண்டும். நல்லவேளை உங்களால் பிழைத்தேன். அப்புறம் உங்களையே நினைத்துக் கொண்டிருந்தேன். நீங்கள் காணாமல் போய்விட்டீர்களே!"

"ஆமாம்! அவசரக் காரியம் இருந்தது. போய்விட்டேன்! அப்புறம் உங்களையேதான் நானும் நினைத்துக் கொண்டிருந்தேன்."

"மெய்யாகவா!"

"மெய்யாக."

"ஓ! நான் பாக்கியவதி!"

"நான் பாக்கியவான்."

இத்தனையும் அவள் கண்கள் பேசுவதாக அவன் கற்பனை செய்துகொண்டான்.

அரை நொடியில் முடிந்துவிட்டது உரையாடல்! அத்தனை நேரமும் இருவர் கண்களும் ஒன்றை ஒன்று பிணைந்திருந்தன என்பது ஆச்சரியமாக இருந்தது.



பார்வையை அவள் தயக்கமாகத் திருப்பும் போது மெல்லிய குங்குமக் குழைவாக ஒரு புன்னகை புரிந்தாள்.

அவனை மெய்மறக்க வைத்தது அது.

அதிவீரன் பிறகு தன் வேலையில் லயித்தவனாய் உள்ளே ஓடினான்.

நெஞ்சு விம்மி சுவாசங்கள் வந்தன.

கோவில் உள்புற சர விளக்குகள் முழுமையாகக் கண்ணில் விழுந்தன.

கோவிலின் அந்தப்புரங்கள் தெரிந்தும் தெரியாமலும் ஒரு சோபையில் இருந்தன.

சன்னதி சென்று வணங்கும்போது மனம் ஒரு லயப்பட மறுத்தது.

அடிக்கடி அந்தப் பெண்ணின் கண்கள் சுழிந்து வந்து மனதுள் புதைந்தது.

கற்பூர தீபம் ஜொலித்த போது அத்தனையும் அவள் புன்னகைகளாகத் தோன்றின.

"சுவாமி! என் மனம் ஒன்றுகூட வில்லையே! கையொன்று செய்ய, விழி ஒன்று நாட, வஞ்சகக் கருத்து ஒன்று எண்ண, என்கிறது போல் உங்களை வணங்குகிறேனே! இந்தக் கடையேன் பிரார்த்தனையை ஏற்று அடியேனுக்கு அருள் புரிய வேண்டும். நான் எடுத்துள்ள காரியம் எளிதில் முடிய வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தான் அவன்.

பிறகு பிரகாரம் சுற்றி வெளியே வந்தான். தெருவில் இறங்கி குதிரையை அவிழ்க்கச் சென்றபோது,

"ஐயா!" என்று ஒரு மென்மையான குரல் கேட்டது. திடுக்கிட்ட கண்களை அங்கும் இங்கும் திருப்ப,

பக்கத்தில் இருந்த அம்பலத்தாடும் மடத்தின் முகப்புத் தூண் ஓரம் மறைவிலிருந்து ஒரு பெண் வெளிப்பட்டாள்.

அவளை உடன் இனம் கண்டு கொண்டான் அதிவீரன்.

மங்கையின் சேடி இவள்!

புல்லாக்கு போல ஒரு புன்னகை பூத்து, அவன் முன்னால் நின்றாள்.

அதற்குள் அதிவீரனுக்கு ஒரு இன்பம் மேலிட்டது.

"ஐயா! தாங்கள் வடக்கே மதுரை போவதானால் எங்கள் எஜமானி ஒரு விண்ணப்பம் விடுகிறாள். தாங்கள் எங்களையும் மதுரைக்கு அழைத்துப் போக முடியுமா? தனியாகப் போக முடியவில்லையே! வழியில் கொள்ளைக்காரர்களும் கடத்தல்காரர்களும் தென்படுகிறார்களே!" என்று கூறினாள்.

அந்த வார்த்தைகள் அவனுக்கு ஒரு சிலிர்ப்பைத் தந்தாலும், அதன் சாதகப் பாதகங்களை அவன் யோசிக்க ஆரம்பித்தான்.

அவசரமாக நீலத்தலைப் பாகைக்காரர்களைப் பின்பற்றி அவன் செல்ல வேண்டும். இதுவரை அவர்கள் போன தடம் தெரிந்து விட்டது. இனி எங்கே போவார்களோ, எப்படித் திரும்புவார்களோ!

முதலில் அவனது ராஜசபை தாசி அல்லிக்கொடியை மீட்க வேண்டும்! நீலத்தலைப்பாகைக்காரர்கள் யார் என்பதை உளவறிய வேண்டும்! பிறகு தஞ்சை மன்னனும்



மலையாள மன்னர்களும் கூட்டுச் சேர்ந்து யுத்தம் ஆரம்பிக்கப் போகிறார்களா என்று கண்டுகொள்ள வேண்டும்.

"அம்மணி!' நான் போவதில் பல வேலைகள் செய்ய வேண்டி உள்ளது. ஒரே திசையில் நான் போவேன் என்று சொல்வதற்கில்லை. அதனால்தான் தயங்குகிறேன்" என்றான் அதிவீரன்.

"அதனால் ஒன்றும் தவறில்லை! எங்கள் எஜமானி மதுரைப் பக்கம் எவ்வளவு தூரம் போகிறீர்களோ, அவ்வளவு தூரம் தங்களோடு வருவதற்குச் சித்தமாக இருக்கிறார்" என்றாள் சேடி.

"நான் தஞ்சைப் பக்கம் திரும்பினால்?" என்று கேட்டான் அவன்.

"ஐயா! எங்கள் எஜமானி இரண்டு வேண்டுகோள்களுடன் வருகிறார். ஒன்று மதுரை மீனாட்சியைத் தரிசிக்க வேண்டும்! இரண்டாவது இராமேசுவரத்திற்குச் செல்ல வேண்டும். இந்த இரண்டில் எந்தத் திசையில் தாங்கள் சென்றாலும் எங்களுக்கு அது வசதியாகவே இருக்கும்!" என்றாள் அவள்.

"அம்மணி! தாங்கள் சொல்வது சரி! ஆனால் பெண்களோடு சேர்ந்து செல்வதில் எத்தனையோ தொல்லைகள் உண்டு. உங்கள் வசதிகளை நாங்கள் கவனிக்க முடியாது..."

"அதைப் பற்றி கவலை வேண்டாம், சுவாமி!! நாங்கள் எந்தவித வசதிக்கும் வசதியின்மைக்கும் சித்தமாக இருக்கிறோம்" பிரயாணத்தில் இவைகளைப் பார்த்தால் முடியுமா?" என்றாள் அவள்.

''எல்லாவற்றையும் விட இன்னொரு விஷயம் இருக்கிறதம்மா! நாங்கள் குதிரைகளில் செல்கிறோம். உங்கள் பல்லக்கு எங்களோடு ஒத்து வராது!'' என்றான் அவன்.

''ஐயா! அதற்குக் கூடக் கவலைப்பட வேண்டாம்! நாங்கள் பல்லக்கை விடுத்து குதிரைகளில் வர முடியும்.''

ஒவ்வொரு ஆட்சேபனைக்கும் அவள் ஒவ்வொரு பதிலாக சொல்லி வந்தது அதிவீரனை ஆச்சரியத்துள் ஆழ்த்தியது.

இனி சொல்வதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை!

சொல்லவேண்டுமானால், உங்களைக் கூட்டிப் போக இஷ்டமில்லை'' என்று கூறலாம். அதற்கு அவர்கள், ''ஐயா! எங்களை நீங்கள் கூட்டிப் போகாவிட்டாலும் வேண்டாம். தங்கள் பின்னால் நாங்கள் வந்துகொண்டிருக்க அனுமதியுங்கள்!'' என்று சொன்னாலும் சொல்லிவிடுவாள்!

தார்மீக ரீதியில் பார்த்தால், அது அவனுக்குச் சங்கடம் விளைவிப்பதாக இருந்தது.

''ஐயா! தயங்காதீர்கள்! அனுமதி அளியுங்கள்! தாங்கள் முன்னால் எங்களைக் காப்பாற்றியதிலிருந்தே எங்கள் எஜமானி அம்மாளுக்குத் தங்கள் மீது நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. வேறு எத்தனையோ ஆண்கள் குழுக்கள் போனாலும் எஜமானி தங்கள் குழுவைத்தான் தேர்ந்து எடுத்திருக்கிறார். தயவுசெய்து மறுப்புத் தெரிவிக்காதீர்கள்!'' என்றாள் சேடி.

''சரி! நீங்கள் யார்? அதை முதலில் சொல்லுங்கள்!'' என்றான் அதிவீரன்.

''பிரசித்திப்பெற்ற கொல்லங்கோடு தன் வணிகர் கேசவன் பிள்ளையுடைய மகள், என் எஜமானி! கல்விக் கேள்விகளில் சிறந்தவள். அது போலவே மல், வில், வாள் மூன்றிலும் தேர்ச்சி பெற்றவள்! குதிரை ஏற்றம், யானை ஏற்றம் எல்லாம் தெரியும். அதனால் அவரைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்! எங்கள் பாதுகாப்பையும் பராமரிப்பையும் நாங்களே பார்த்துக் கொள்வோம்'' என்று கூறினாள் அவள்.



''சரி, புறப்படுங்கள்!'' என்று கூறினான் அதிவீரன்.

அடுத்த ஜாமத்தில் அந்தக் கும்பல் வடக்குக் கோட்டை வாசலில் நின்றது.

''கோட்டைக் காவலன் எங்கே?'' என்று கோட்டை மதிலை நோக்கி அதிவீரன் வினவ, கூட வந்த சகா திடீரென்று அதிவீரனைப் பின்னால் தள்ளினான்.

அது எதிர்பாராதது.

அதிவீரன் சரிய, குதிரை கால்களை மேலே தூக்கியது.

# 14

குதிரையின் மீது ஒரு அம்பு தைத்துக் கொண்டு நின்றது. அதிவீரன் மயிரிழையில் தப்பி இருந்தான்.

''ஏய், ஏய், ஏய்!'' என்று ஓங்கிக் கத்தினான் அதிவீரனின் சகா வீரசேனன். ''ராஜாவின் தம்பியார் வந்திருக்கிறார்! தென்காசிப் பாண்டியர்'' என்று மீண்டும் இரைய,

கோட்டைக் காவல்காரர் ஒரு கட்டுச் சூழ்ந்தியை நெருப்பில் கொளுத்தி அவர்கள் அருகே வீசி எறிந்தார்.

சூழ்ந்தி எரியும் வெளிச்சத்தில் அதிவீரனின் முகத்தை அடையாளம் கண்டதும், ''மகாராஜா, வணக்கம்!'' என்று கூறி கீழே குதித்து ஓடிவந்தார்.

''அடியேனைப் பொறுத்தருள வேண்டும். இரண்டு நாழிகை முன் சாமர்த்தியமாக நால்வர் ஒரு பெண்ணோடு தப்பித்து ஓடிவிட்டார்கள்!'' என்றார் கோட்டைக் காவலர்.

"நீலப் பாகைக்காரர்களா?" என்றான் அதிவீரன்.

"தெரியவில்லை! முதலில் ஒரு ஆண் வெளியே போக அனுமதி கேட்டார். அவருடன் வந்த பெண் பேசாமல் மவுனமாக நின்றாள். யாத்ரீகர்கள் என்று சொல்ல, நாங்கள் கதவைத் திறந்து அகழியை மூடியதுதான் தாமதம், மூன்று பேர் நான்கு குதிரைகளோடு வந்தார்கள். வெற்றுக் குதிரையில் ஆண் ஏறி பெண்ணைத் தூக்கிக் கொள்ள நால்வரும் வாசலைக் கடந்து ஓடிவிட்டார்கள். எல்லாமே கண் இமைக்கும் நேரத்தில் நடந்துவிட்டது. அதனால்தான், தாங்களும் யாரோ என்று நினைத்து எச்சரிக்கை அம்பு விடுத்தேன்!" என்றார்.

அதிவீரன், "நல்லது!" கதவைத் திறவுங்கள்!" என்றார்.

காவல் பெரியவர் வணங்கிவிட்டு, கதவைத் திறக்க பணியாட்களுக்குக் கட்டளை இட்டார்.

கதவு திறந்தது. வெளியே போனார்கள்.

அரை நிலா வீசிக் கொண்டிருந்தது.

பரந்த வெளிகளும், தோப்புகளும், காடுகளும் ஏதோ சொப்பனம் போல் தெரிந்தது.

அதிவீரன் எச்சரிக்கையாக வந்துகொண்டிருந்தான்.

மூன்று நாழிகை தூரம் சென்ற பிறகு தூரத்தில் நரசிம்மபுரம் கோபுரம் தெரிந்தது.

எல்லோரும் சற்று ஓய்வாகப் போகும் நிலையில்தான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

ஒரு திருப்பத்தில் அவர்கள் திரும்பும்போது, மூன்று குதிரை வீரர்கள் அவர்கள் வழி மறித்தார்கள்.



பெண்கள் சென்ற இரு குதிரைகளும் நின்றன.

வந்த வீரர்கள் அட்டகாசமாய்ச் சிரிப்பதைப் பார்த்தும் அவர்கள் வந்த காரியம் நல்லதற்கு அல்ல என்று தெரிந்தது.

அதிவீரன் சட்டென்று குதிரையை இழுத்துவிட்டான்.

அவன்முன்னே போவதற்கு முன், இரு பெண்களும் வாளை உருவி இருந்தார்கள்!

சேடியாக இருந்தவளின் குதிரை விருட்டென்று பாய்ந்து மூன்று எதிராளிகளையும் மறைத்தது.

வாள் அங்கங்கே மின்னுவதுதான் தெரிந்தது. அத்தனை வேகத்தில் சுழற்சி நடந்தது.

மூவரும் சற்று திகைத்தது நன்கு தெரிந்தது.

"அம்மணி! நான் கவனித்துக்கொள்கிறேன்" என்று அதிவீரன் பாய்ந்து வாளை காற்றில் வீசினான்.

பின்னர் அதன் உஷ்.... உஷ் சத்தங்களே கேட்டன.

சீக்கிரத்தில் எதிரிகள் உக்கிரம் வாய்ந்தவர்கள் என்பது தெரிந்துவிட்டது.

எனவே அதிவீரனுக்கு உதவியாக இரு சகாக்கள் சண்டையில் நுழைந்தார்கள்.

ஒரு வெறியான யுத்தம் அங்கே நடந்தது.

பயந்துபோய் மரங்களில், காக்கைகள் கத்தின. பூமி அதிர்ந்து துகள்கள் மேலே கிளம்பின.

தூசியில் மூவரும் மறைந்து அவர்களது நிழல்கள்தான் சாடிக் கொண்டிருக்கும் சாயல் தெரிந்தது.

எதிரியில் ஒருவன் காயமாகித் திரும்பினான். இருவர் இன்னும் உன்மத்தில் இருந்தார்கள். அதிவீரனைக் குறித்து அவர்கள் குறியாக இருந்தார்கள். சகாக்களை அவர்கள் அதிகம் பொருட்படுத்தவில்லை.

ஒரு நேரத்தில் அதிவீரனை இருவரும் ஒரு நெருக்கத்தில் வைத்துவிட்டார்கள் என்பதும், சகாக்கள் அந்த நெருக்கடியை உடைக்கச் சிரமப்படுகிறார்கள் என்பதும் தெரிந்தது.

சேடியும் மங்கையும் ஒருவருக்கு ஒருவர் கண்ணைச் சிமிட்டினார்கள்.

இருவரும் ஏக காலத்தில் இரு கத்தியை உருவி விருட்டென்று வீசினார்கள்.

சக்கரங்களாகச் சுழன்று சென்ற கத்திகள் சண்டை செய்வோரின் இடுக்களில் நுழைந்தது அற்புதமான காட்சி! அதை வீரன் கவனித்தான்.

மங்கையின் கத்தி ஒரு வீரனின் மார்பு ஓரம் பாய்ந்தது.

மற்ற கத்தி சற்றோ குறி பிசகி மற்றொரு வீரனின் தோள் வழியே விலகிச் சென்றது.

ஒரு வீரன் கத்தியோடு திரும்பினான்.

மற்றவனுக்கு எச்சரிக்கை கொடுத்தான்.

மங்கை விடவில்லை. மற்றொரு கத்தியை வீச, அதுவும் சுழன்று அடுத்த வீரனை நோக்கிப் பாய்ந்தது.

அது அவனைத் துரத்துவது போல் பாய்ந்துவர, அவன் அதிலிருந்து விலக முயற்சி செய்து கடைசியில் எதுவும் இயலாமல் குனிய, தோள் மீது ஒரு முத்திரை போல் ஆழப் பதிந்தது.



அவன் குதிரை திரும்பியது. மற்ற இருவரைத் தேடி ஓட ஆரம்பித்தது.

உடனே அதிவீரன் கீழே குதித்து, மங்கையை நோக்கி ஓடிவந்தான்.

அவளும் கீழே குதித்தாள்.

"ஆச்சரியம்! அற்புதம்! இதென்ன அதிசயக் கத்தி வீச்சு!" என்று அவளைப் புகழ்ந்து நின்றான்.

மங்கை அவனை நாணக் கண்களோடு பார்த்தாள். முகத்தில் குறுநகை வீசி மறைந்தது.

"அம்மணி! நீங்கள் செய்த காரியத்தைப் பார்த்தால், நீங்கள்தான் எனக்குத் துணை வந்திருக்கிறீர்கள் போல இருக்கிறது! நாங்கள் உங்கள் துணையல்ல!" என்றான் அதிவீரன்.

"அப்படி இல்லை அய்யா! சில வேலைகள் கற்று வைத்திருக்கிறோம். சமயம் வந்தால் பயன்படுத்துவோம்! இல்லாவிட்டால் இந்த யாத்திரைக்கு நாங்கள் புறப்படுவோமா?" என்றாள் அவள்.

குரல் மெல்லிய வீணை போல ஒலித்தது.

மனதுக்குள் அது சென்று ஏதோ குறுகுறுப்பை ஏற்படுத்துவது போல் தோன்றியது.

"அதை எப்படி எறிகிறீர்கள்? தயவுசெய்து காட்டுங்கள்!" என்றான் அதிவீரன்.

மங்கை தலைகுனிந்தாள்.

மங்கை முறுவலித்து சேடியைப் பார்த்தாள். சேடியும் கண்களில் முறுவலித்தாள்.

"இந்த வித்தையைக் காட்டுங்கள்!" என்று மீண்டும் தழைந்து கேட்டான், அதிவீரன்.

மங்கையின் ஒரு புருவம் சொடுக்கியது.

சேடி தனது சேணத்திலிருந்த கத்தி ஒன்றை எடுத்தாள். மங்கையிடம் நீட்டினாள்.

மங்கை அந்தக் கத்தியைக் கைப்பிடியில் பற்றவில்லை. கூர்மை நுனியில் இரு விரல்களால் பற்றினாள்.

அருகில் இருந்த மரத்தின் கிளை ஒன்றில் கண்ணை வைத்தாள்.

கால்களை அகற்றி நின்றாள்.

தோளுக்கு மேல் கையைத் தூக்கி விருட்டென்று கத்தியை விடுத்தாள்.

காற்றில் அது சுற்றுவது விநோதமாக இருந்தது. வேகமும் வீச்சலுமாக பாய்ந்து மரக் கிளையில் களுக்கென்று தைத்தது.

அதிவீரன் கண் இமைப்பதற்குள் மங்கை மேலும் இரு கத்திகளை வீசிவிட அவை அதிசயமாகக் குறி தவறாமல் முதல் கத்திக்கு அடுத்து அடுத்து, வரிசையாகப் பதிந்து கொண்டன.

பந்திக்கு அமர்வது போல் வரிசையாகப் பற்றிகொள் வது வியப்பாக இருந்தது.

"அம்மணி! இந்த வித்தை எங்கே கற்றீர்கள்?" என்றான் அதிவீரன்.

அவன் விழிகளில் எல்லாம் அதிசயம்.



"இதை ஒலாந்தியரிடமிருந்து (டச்சுக்காரர்கள்) கற்றோம்!" என்றாள் மங்கை.

அந்தப் பேச்சும் குரலும், முறுவலும் அவனுக்குப் பரசவமாக இருந்தது.

"எவ்வளவு காலம் ஆகும் இது கற்க?" என்றான் அதிவீரன்.

"தினம் பயிற்சி செய்தால் ஒரு வருடம் ஆகும்!" என்றாள் அவள்.

பிறகு எல்லோரும் அருகே ஓடையைத் தேடிச் சென்று நீர் பருகினார்கள்.

"யார் இவர்கள்? நீலத் தலைப்பாகைக்காரர்கள் தானே?" என்றான் அதிவீரன்.

"அவர்கள்தான்! பாகை அவர் சேணத்தில் தொங்கியது" என்றான் வீரன்.

"இவர்கள் மர்ம மனிதர்களாக இருக்கிறார்களே! கடைசி வரை சண்டை செய்வதில்லை!" யாரும் அகப் படாமல் ஓடிவிடுகிறார்கள்!" என்றான் அதிவீரன்.

"இதுதான் அவர்களது போர் முறையாக இருக்கிறது. வடக்கே ஒரு இனத்தார் இதைப் போலவே சண்டை செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றான் வீரன்.

"இந்த முறையினால் இவர்களை தொடர்வதும், முறியடிப்பதும் கஷ்டம்!" என்றான் தீரன்.

"ஏன் இப்படிச் செய்கிறார்கள்? இவர்கள் நோக்கம் என்ன? வழிப்பறியா? கொள்ளையா? பெண் கடத்தலா? எதுவும் புரியவில்லையே!"

"முக்கிய நோக்கம் நாட்டில் அமைதி சீர்குலைந்து விட்டது என்று காட்டுவது!" என்றான் தீரன்.

"அதனால் என்ன லாபம்?"

"நாட்டில் கிலி ஏற்படுத்திவிட்டால், பிறகு நுழைவது சுலபம்?"

"இதை யார் செய்கிறார்கள்?"

"அதைக் கண்டுபிடிக்கத்தானே புறப்பட்டிருக்கிறோம்!" அல்லிக்கொடியைக் கடத்தியவர் தெரிந்தால் இவர்களைக் கண்டு பிடித்த மாதிரி!"

"அவர்கள் இந்த வழிதானே போனார்கள் என்று கோட்டைக் காவலர் சொன்னார். சீக்கிரம் பின்பற்ற வேண்டும்."

"நரசிம்மபுரம் ஒரு கூடுமிடம் ஆயிற்றே! நிச்சயம் அங்கே இருப்பார்கள்!"

குதிரைகள் விரைவாக நடக்க, இரவின் முடிவுக்கு இரு ஜாமங்கள் முன்னாலேயே நரசிங்கபுரத்தை அடைந்தார்கள்.

வழக்கமான குணவதி அம்மாள் சத்திரத்தில் தங்கினார்கள். ஊருக்குத் தென் எல்லையில் இருந்தது.

அங்கே சென்று யாரையும் அந்த வேளையில் எழுப்ப மனமில்லாமல் நீளமான திண்ணை மீது ஏறி சற்று நேரம் அயர்ந்தார்கள்.

கண்கள் ஆழ்ந்து போயிருக்கும். விடியலுக்கு ஒரு ஜாமமம் முன்னால் அந்தக் குரல் கணீர் என்று கேட்டது.

அருமையாக ஒரு கடவுள் பாடலைப் பாடிக் கொண்டிருந்தது.



அது யார் என்று அதிவீரனுக்குத் தெரியும்.

இவர் இங்கே எப்படி வந்தார்?

அதிவீரன் சட்டெனை எழுந்து கண்களைக் கலைக்க, அதே நேரம் எட்டத்தில் படுத்திருந்த மங்கையும் அவனைப் போலவே எழுந்திருப்பது தெரிந்தது.

அதிவீரன் திண்ணையை விட்டுக் கீழே குதித்தான்.

பாட்டு வரும் திசையை நோக்கிச் செல்ல.

மங்கையும் அதை நோக்கியே வருவது தெரிந்தது.

## 15

மங்கை அந்த கருக்கல் இருட்டில் போவதைப் பார்த்து அதிவீரன் யோசித்தான்.

பாடலில் கனிந்து வரும் குரல் இலஞ்சிச் சாமியாருடையது என்று நன்றாகப் புரிந்துவிட்டது.

இந்தப் பெண்ணுக்கு இலஞ்சியாரைத் தெரிந்திருக்குமோ?"

இருக்கலாம்!

இலஞ்சியார்தான் ஒரு சந்நியாசி ஆயிற்றே! அவர் போகாத இடம் ஏது! மலையாள தேசம் போயிருக்கும்போது இந்தப் பெண்ணையும் அறிந்திருக்கலாம்.

சட்டென்று நின்று, முற்றம் பக்கம் போவது போல் திரும்பினான்.

அவன் திரும்புவதைப் பார்த்த மங்கை, தன் வழியே வேகமாகப் போனாள்.

முற்றம் வரை சென்ற அதிவீரன் சிறிது காத்திருந்தான்.

பிறகு மெல்ல பூனைப் பாதம் வைத்துச் சென்று, தோட்டத்தில் எட்டிப் பார்த்தான்.

இருள் மாறி சாம்பல் நிற வெளிர்வு எங்கும் பரவி இருந்தது. அத்தனை தென்னைகளின் அடிவாரங்களும் ஆயிரங்கால் மண்டபத்தின் தோற்றத்தைத் தந்தன.

சற்று தூரத்தில் தென்னை ஒன்றின் கீழே இலஞ்சியார் அமர்ந்திருப்பதையும், அவர் அருகே மங்கை விநயமாக வீற்றிருப்பதையும், பார்த்தான்.

இலஞ்சியார் அப்போதுதான் திருவாசகத்தை முடித்திருந்தார்.

பிறகு அவரும் மங்கையும் ஏதோ பேசுவது கேட்டது.

அவன் எதிர்பார்த்ததைவிட, சற்று அதிகமாகவே பேசினார்கள்.

இலஞ்சியாருக்கு இந்தப் பெண்ணைத் தெரியுமா?

அவர்கள் பேச்சு முடிந்த பிறகு, அந்தப் பெண் எழுந்திருக்க,

அதிவீரன் விலகிப் போய் மறைவில் நின்று கொண்டான்.

தாழ்வாரம் ஏறிய மங்கை, நாலா பக்கமும் பார்த்தாள்.

அவனைத்தான் தேடுகிறாள் என்று அதிவீரன் யோசித்தான்.

அவளது யோசனைக்கு அதிக இடம் கொடுக்க விடாமல், முற்றத்தில் ஓசையில்லாமல் தாவி ஓடி கிணற்று ராட்டையைச் சட சட என்று ஓசைப்படுத்தி குளிக்க நீர் எடுக்கிற பாவணையை உண்டாக்கினான்.

ஒரு நாழிகை கழித்தே இலஞ்சியாரை அவன் சந்திக்கச் சென்றான்.



அப்போது காலையின் இள வெளிச்சம் வந்துவிட்டது. எங்கும் சோபையான முறுவலில் இயற்கை மினுக்கியது. அந்தத் தென்னந்தோப்பு, ஒரு பொன் கூரை வேய்ந்த வனப்பு கொடுத்தது.

"அதிவீரா! நீ இங்கேயா இருக்கிறாய்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் இலஞ்சியார்.

"ஆமாம். சுவாமி! தங்களை இங்கே சந்திப்பது ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றான் அதிவீரன்.

"நான் துறவி! கால்போன இடமெல்லாம் செல்வேன்! எனக்கு குறி ஏது, இலக்கு ஏது? சரி, வந்திருக்கிற காரியத்தைச் சொல்!" என்றார் அவர்.

"அல்லிக் கொடியை அபகரித்துப் போய்விட்டார்களே! நீங்கள் கேள்விப்படவில்லையோ?"

"யார் அல்லிக்கொடி?"

"தங்களுக்குத் தெரியாதா? தாசி அல்லிக்கொடி!"

"ஒகோ, தாசியா? அவளைத் தேடி இங்கு வந்துவிட்டாயா!"

அவர் குரலில் கலந்திருந்த கலகலப்பை அவன் அறியாமல் இல்லை.

"ஆமாம், சுவாமி! பெரிய கவுரவப் பிரச்சினை ஆயிற்றே!"

"முக்கிய விஷயந்தான், இல்லை என்று சொல்லவில்லை! அதைவிட முக்கியம் ஏதேனும் இல்லையோ?"

"சுவாமி! நாட்டுக்கு அபாயம் நெருங்கி இருக்கிறது; யுத்தம் வரப்போகிறது என்றீர்கள்!"

"ஆமாம்!"

"அதையும் அறிந்து விடத்தான் கிளம்பி வந்திருக்கிறேன்!"

"ஏதாவது தெரிந்ததா?"

"தாங்கள் கூறியது போல, நீலத் தலைப்பாகைக் கூட்டம் அங்கங்கே தலைநீட்டுகிறது. எதிரில் நேருக்கு நேர் சண்டை செய்வதில்லை! தாக்குகிறார்கள், ஓடுகிறார்கள்" என்றான் அதிவீரன்.

சிரித்தார் இலஞ்சியார்

"அது அவர்கள் பழக்கம். அதற்கு நாம்தான் பரிகாரம் தேடவேண்டும்! சரி, அல்லிக்கொடி விஷயம் என்ன ஆயிற்று?"

"இதுவரை தடயம் கண்டுபிடித்து வந்துவிட்டோம்! இனிமேலும் தெரிய வேண்டும்."

இலஞ்சியார் குறுநகையுடன் மவுனமானார்.

"சுவாமி! தங்களுக்கு என்ன தோன்றுகிறது?" என்றான் அதிவீரன்.

"நான் என்ன முக்காலத்தை உணரும் ஞானியா? ஒரு "காலம்" கூட எனக்குச் சரியாகத் தெரியாது. நான் என்னத்தைக் கண்டேன்?" என்றார் இலஞ்சியார்.

"தாங்கள் எதுவும் கேள்விப்பட வில்லையா?" என்றான் அதிவீரன்.

"நான் கேள்விப்பட்டதை எல்லாம் சொல்லிவிட்டேனே! அங்கங்கே படைகள் திரட்டப்படுகின்றன."

"எனக்கு அறிகுறி ஏதும் தெரியவில்லையே!"



"இங்கே தென்பாண்டிய நாட்டில் இருந்தால் உனக்கு என்ன தெரியப்போகிறது? அண்ணனும் தம்பியும், தமிழையும் இலக்கியத்தையும் படித்துக் கொண்டிருந்தால் நாட்டு நடப்பு எப்படித் தெரியும்? வடக்கே போனால்..."

"அதையும்தான் செய்து கொண்டிருக்கிறேன், சுவாமி!"

"வருகிற வழியில் பாளையக்காரர்களைப் பற்றி ஏதாவது வினவினாயா?"

"இல்லை சுவாமி!"

"ஏன்?"

"நான் மாறுவேடம் பூண்டிருக்கிறேனே!"

"அதனால் என்ன? இந்த ஊர்ப் பாளையக்காரர் எங்கே இருக்கிறார் என்று கேட்கலாமில்லையா?

"கேட்கவில்லை சுவாமி!"

"விருப்பமில்லையா?"

"விருப்பம் உண்டு சுவாமி! அது எனக்குத் தோன்ற வில்லையே!"

"அதைத்தான் நான் குறை கூறுகிறேன். சாமித் தேவரை மட்டும் நினைத்து இருந்துவிடாதே" என்றார் இலஞ்சியார்.

சாமித் தேவர்தான் அதிவீரனுக்கு ஆசான்! தமிழைப் புலமை நிறைந்த ஞானி! அதிவீரனுக்குத் தமிழ்க் கற்றுக் கொடுத்தவர் அவரே! அடிக்கடி அவருடன் அளவளாவி இருப்பதைத்தான் இலஞ்சியார் அப்படிக் கூறினார்.

"தங்கள் சொல்லுக்குக் கீழ்ப்படிகிறேன் சுவாமி! சொல்லுங்கள்! பாளையக்காரர்கள் எல்லோரும் எங்கே போயிருக்கிறார்கள்?"

“எல்லாப் பாளையக்காரர்களும் அல்ல! மண் ஆசையும் மகுட ஆசையும் பிடித்தவர்கள் எல்லாம் மதுரைக்கு உளவாகவும், தஞ்சைக்குத் தோழனாகவும் சென்றிருக் கிறார்கள்”

“தஞ்சைக்குத் தோழனாகப் போவது சரி! நம் பகைவனோடு உறவு கொள்ளப் போகிறார்கள். மதுரைக்கு ஏன் உளவாகப் போகிறார்கள்?”

“தளவாய் பற்றி தெரியாதா?”

“தளவாய் அரியநாதர் தானே! அவருக்கு என்ன?”

“அவரை சில காலமாகக் காணவில்லை என்பது தெரியுமா?”

“கேள்விப்பட்டேன். அவருக்கு என்ன நேர்ந்தது?”

“யாருக்குத் தெரியும்?”

“இப்போது நாயக்க அரசிடம் அவர் இல்லையா?”

“இருக்கிறார், ஆனால் ஆளைக் காணவில்லை!”

“யாராவது கொன்று விட்டார்களா?”

“இருக்கலாம். கிழம் ஆயிற்றே!”

“அவரைக் கொன்று என்ன லாபம்?”

சிரித்தார் இலஞ்சியார்.

“கிருஷ்ணா ஆற்றங்கரைப் போர் தெரியாதா?”

“விஜய நகர சக்கரவர்த்தி இட்ட போரா? தலைக்கோட்டை யுத்தம் தானே?”

“ஆமாம், நடந்து பதினெட்டு ஆண்டுகளாகின்றன. அப்போதுதான் நீ பட்டணத்திற்கு வந்த இளைஞன்! உனக்கு அதிகம் தெரிந்திருக்காது.”



“உண்மை சுவாமி! தென்னாட்டில் நடந்த பெரிய போர் அது! மக்கள் லட்சக்கணக்கில் மாண்டார்கள். அதன் பலனாக பேரெழில் வாய்ந்த விஜய நகரமே அழிந்து போயிற்று.

“ஆமாம்! அந்த நகரத்தை நீ பார்த்திருந்தால், இப்போது அது பாழாக இருக்கும் நிலை கண்டு இரத்தக் கண்ணீர் விடுவாய்!”

“பலர் சொல்லி இருக்கிறார்கள். என் தந்தையார் கூட படை அனுப்பி இருந்தார்”

“ஆமாம்! பாளையக்காரர்கள் அனுப்பினார்கள். அவர்களை எல்லாம் சேர்த்து, மதுரை நாயக்கர் தமது தளவாய் அரியநாதர் தலைமையில் வடக்கே அனுப்பி வைத்தார். சமுத்திரம் போல் திரண்ட படை அது. இந்த சமுத்திரப் படையை எந்த வடக்குப் படையும் வென்றிருக்க முடியாது. ஆனால் சூழ்ச்சியில் வென்றுவிட்டார்கள். இது தெற்கத்தி நாடுகளுக்கு எல்லாம் பெரிய துரதிர்ஷ்டம்”

“தெற்கத்திப் படைகள் என்ன ஆயிற்று, சுவாமி?”

“எல்லாப் படைகளும் தோல்வியில் ஓடும் போது தெற்கத்தி படைகள் மட்டும் என்ன செய்யும்? அப்படி இருந்தும் இராம ராயனைக் கூடியமட்டிலும் காப்பாற்றி அவர் பக்கத்திலேயே இருந்தன படைகள்! அவர் கொலையுண்டார் என்று தெரிந்த பிறகுதான் களத்தைவிட்டு வெளியேறின.”

“ஓகோ! பல போர்களில் வெற்றி கண்ட தளவாய் அரியநாதரே எதுவும் செய்ய முடியவில்லையே!”

“அவர் மட்டும் என்ன செய்ய முடியும்? பகைவர் தாக்கு முன் விஜய நகரப் படைகளை கிலி தாக்கிவிட்டது. வீழ்ச்சி அடைந்தது. அரியநாதர் கடைசி வரை மாமன்னர்

இராமராயர் அருகில்தான் இருந்தார். யுத்த நிலை மோசமாகிறது என்று தெரிந்ததும், இராமராயர் தளவாய் அரிய நாதரைக் கூப்பிட்டு "அரியநாதரே! யுத்த முடிவு என்ன ஆகும் என்ற கவலை எமக்கு! உம்மிடம் ஒரு காரியம் ஒப்படைக் கிறோம். நாம் தோல்வியடையும் பட்சத்தில், இதோ என் கூடாரப் பகுதியில் இருக்கும் பொக்கிஷம் அனைத்தையும் எங்கேயாவது எடுத்துச் சென்று காப்பாற்ற வேண்டியது தங்கள் கடமை! நாம் மறைந்தாலும் பின்னர் ஒரு சாம்ராஜ் ஜியம் மீண்டும் எழுப்ப இந்தப் பொக்கிஷத்தைக் கொடுத்து உதவுங்கள்" என்றார்.

அதிவீரன் வெகு ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருந்தான்.

"அப்படியா? விஜயநகர மன்னர்தான் தோல்வி அடைந்தாரே! பொக்கிஷம் என்ன ஆயிற்று?"

"தம் படை ஆட்களோடு தளவாய் அரியநாதர் அந்தப் பொக்கிஷங்களை தெற்கே கொண்டு வந்துவிட்டார்!"

"மதுரையில் வைத்திருக்கிறாரா?"

## 16

இலஞ்சிச் சாமியார் பதினெட்டு வருடங்களுக்கு முன்னால் நடந்த அந்தக் கதையைப் பற்றிக் கூறும் போது அதிவீரனுக்கு அதிக ஆர்வம் ஏற்பட்டது.

அந்த மகத்தான சண்டையைப் பற்றி பல பேரிடமிருந்து கேள்விப்பட்டிருக்கிறான்.

ஆச்சரியமும் கண்ணீரும் பொங்கக் கூறியிருக்கிறார்கள்.



ஏன், அவன் தந்தை பராக்கிரம பாண்டியரே, கூறி இருக்கிறார்.

அவரே விஜய நகரத்துக்குப் படை கொடுத்து உதவி இருக்கிறார். தெற்கத்தி ராஜ்ஜியங்கள் எத்தனையோ அத்தனை பேரும் படை கொடுத்து, விஜய நகரப் படையை சமுத்திரம் போல் பெருக்கி இருந்தார்கள்.

இந்த மாபெரும் படையை யாரும் வென்றிருக்க முடியாது.

ஆனால் என்ன நடந்தது?

சில சூழ்ச்சிகளும் சில துரோகங்களும் இந்த மாபெரும் படையைக் கலக்கிவிட்டன.

சண்டை ஆரம்பித்த நான்கு மணி நேரங்களில் படை சின்னாபின்னமாகிவிட்டது.

நாலா திசையிலும் ஓட ஆரம்பித்தது.

எதிரியாக வந்த காட்டுச் சேனை விஜய நகர சேனைகளை விடவில்லை! துரத்திக்கொண்டே சென்றன. விஜய நகரத்துள் புகுந்தன. அந்த அற்புதமான நகரைக் கொள்ளை அடித்தன. சூறையாடின. உடைக்க வேண்டியதை உடைத்தன. எரிக்க வேண்டியதை எரித்தன.

ஒருநாள் இரு நாள் அல்ல! மாதக்கணக்கில் இதைச் செய்தன.

இன்று.....

அந்தப் பிரசித்திப்பெற்ற நகரம் பாழாகக் கிடக்கிறது.

பல முயற்சிகள் செய்தும் அதில் மக்கள் குடியேற இசையவில்லை.

அதை சாபமிடப்பட்ட நகரம் என்று நினைத்தார்கள்.

ராமராயருக்குப் பின்னால் வந்த விஜய நகர அரசர்கள் தங்கள் தலை நகரை பெனுகொண்டாவுக்கு மாற்றிவிட்டார்கள்.

"விஜய நகர மன்னர் ராமராயரின் கடைசி நிமிடம் வரை தளவாய் அரியநாதர் அவர் பக்கத்திலேயே இருந்தார். அவரைவிட்டு விலகவில்லை. ஆபத்தான சோதனைக் கிடையே இப்படி தம்மோடு இருந்த அரிய செயலை உணர்ந்து ராமராயர் அரியநாதரை, "என் தம்பீ!" என்று உள்ளன்போடு அழைத்தார். தாம் கொண்டு வந்திருந்த பொக்கிஷங்களை அவரிடம் ஒப்படைத்து "நான் இறந்து விட்டால், இந்தப் பொக்கிஷங்களைப் பாதுகாத்து மீண்டும் ஒரு சாம்ராஜ்ஜியம் தலை எடுக்க உதவி செய்யுங்கள், நமது தர்மத்தை நிலைநாட்டுங்கள்!" என்று கூறினார்.

கண்ணீர்ப் பெருக்கோடு அரியநாதர் அவர் கைகளைப் பற்றிக்கொண்டார்.

ராமராயர் எக்கச்சக்கமாக எதிரியிடம் அகப்பட்டு கொலை யுண்டதுதான் தாமதம், அரியநாதர் தாம் கொடுத்துள்ள உறுதிமொழிக்கு இணங்க, பொக்கிஷங்களை குதிரை, யானைகளில் ஏற்றிக் கொண்டு தெற்கே போய் விட்டார்."

"அரியநாதர் அந்தப் பொக்கிஷத்தை எங்கே வைத்திருக்கிறார்?" என்று ஆவலோடு கேட்டான் அதிவீரன்.

இலஞ்சியார் சிரித்தார்.

"அதைத்தான் எல்லோரும் தேடுகிறார்கள்!" என்றார் அவர்.



"மறைத்துத்தான் வைத்திருக்க வேண்டும். அவர் வாக்குறுதி கொடுத்தவர் ஆயிற்றே?"

"எங்கே வைத்திருக்கிறார் என்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே?" என்றான் அதிவீரன்.

"அவர் சொல்வாரா?" என்றார் இலஞ்சியார்.

"மதுரை நாயக்கரே கேட்டால் சொல்லமாட்டாரா?"

"அவர் கேட்டாரா? இவர் சொன்னாரா என்பது தெரியாது. ஒரு விஷயம் அதிவீரா! அரியநாதரிடம் பொக்கிஷம் ஒப்படைக்கப்பட்டது என்ற விஷயமே சமீப காலத்தில்தான் தெரிய வந்தது" என்றார் இலஞ்சியார்.

"என்னது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் அதி வீரன். "ஏன் இந்த விஷயம், முன்னாடியே தெரியவில்லை? அந்த சண்டை நடந்து பதினெட்டு ஆண்டு ஆயிற்றே, சுவாமி."

"அதனால் என்ன? சண்டை முடிந்தவுடன் அரியநாதர் மதுரைக்கு நேரே திரும்பவில்லை. அங்கே வருவதற்கே இரண்டு வருடம் ஆயிற்று."

"ஏன், எங்கே போனார்?"

"பல இடங்களுக்குப் போய்விட்டு வந்தார்! வடக்கே ராஜரீக காரியங்களில் ஈடுபட்டிருந்தார் என்று கேள்வி! அது போலத்தான் அவரும் செய்தி அனுப்பிக்கொண்டிருந்தார்! ஆனால், இந்த இரண்டு வருஷங்களில் அந்தப் பொக்கிஷத்தை அவர் சரியான இடத்தில் வைத்துவிட்டுத் தான் வந்திருக்க வேண்டும் என்பது பின்னர் தெரிந்தது."

"எவ்வளவு பொருள் இருக்கும் சுவாமி?" என்றான் அதிவீரன்.

"ஒரு சாம்ராஜ்ஜியத்தை மீண்டும் நிறுவு!" என்று ராமராயரே கூறியிருக்க வேண்டுமானால் அது எவ்வளவு பெரிய சொத்தாக இருக்க வேண்டும், கணக்கிட்டுக் கொள்."

"அப்படியா?" என்று வியப்போடு பார்த்தான் அதிவீரன்.

"ஏன் சுவாமி? மதுரை நாயக்கரிடம்தானே அவர் தளவாயாக இருக்கிறார்? அந்த ராஜ்ஜியத்துக்குச் செலவு செய்ய வேண்டியதுதானே?"

"செய்யலாம்! மதுரை ஒரு சாம்ராஜ்ஜியம் ஆகுமா என்று அவருக்குச் சந்தேகம் வந்திருக்கலாம்."

"ஏன் அப்படி?"

"மதுரை ராஜ வம்சம் அதற்குத் தகுதியானது தானா என்று அவருக்குச் சந்தேகம் தோன்றியிருக்க வேண்டும்! என்ன இருந்தாலும் அவர்கள் தெலுங்கர்கள், ஆயிற்றே?"

சுள்ளென்று உறைத்தது அதிவீரனுக்கு!

இரண்டு தலைமுறைக்கு முன்பு அதுபோன்று பகைமை நிறைய இருந்ததாக அதிவீரன் கேள்விப்பட்டிருக்கிறான்.

தற்சமயம் அவர்கள் தமிழில் கலந்து முழுதும் தமிழராகி விட்ட நிலையில் இருந்தார்கள்.

அப்படியும் ராமநாதபுரம் போன்ற இடங்களில் உள்ள மறவர் குலத்தினர் அவ்வப்போது மதுரை நாயக்கர்கள் மீது விரோதம் பாராட்டியே வந்தார்கள்.

இவை எல்லாம் அதிவீரன் அறிவான்.

"ஓகோ! அரியநாதர் அப்படியும் நினைக்கிறாரோ?"



"அவர் நினைக்கிறாரோ, என்னவோ தெரியாது. நினைக்கலாமே என்று தோன்றுகிறது. யார் கண்டார்கள் அவர் மனதை?"

"இப்போது தளவாய் எங்கே இருக்கிறார் சுவாமி?"

"தெரியவில்லை. சிறிது காலமாக அவர் மதுரையில் இல்லை! எங்கே போயிருக்கிறாரோ தெரியாது. ராஜரீகமாகப் போனாரா, ஒரு மறைவு வேண்டிப் போனாரா, அல்லது வயதாகிவிட்டதே என்று, சிகிச்சை வேண்டிப் போனாரா, தெரியாது."

"அவருக்கு என்ன வயதாகி இருக்கும் சுவாமி?"

"எண்பதுக்கு மேல் இருக்க வேண்டுமே."

"அடேயப்பா! அவரைப் பார்த்தால் அப்படித் தோன்ற வில்லையே!"

"உண்மைதான்! இருந்தாலும் அவர் சிரஞ்சீவியாக வாழ்ந்துவிட முடியுமா? அதை எண்ணியே பலர் கவலை கொண்டிருக்கிறார்கள்."

"ஏன் சுவாமி?"

"பொக்கிஷம் இருக்கும் இடத்தை அறிவிக்காமல் அவர் இறந்துவிட்டால்...."

"ஓ! அதுவும் உண்மைதான், சுவாமி!"

"அதனால்தான் அவர் இருக்கும் இடத்தைப் பலர் தேட ஆரம்பித்துவிட்டார்கள். பலர் பழைய ஊகங்களை வைத்து பொக்கிஷம் இன்ன இடத்தில்தான் இருக்கிறது என்று தேட ஆரம்பித்திருக்கிறார்கள். பலர் ஜோஸ்யர்களைத் தேடிப் போயிருக்கிறார்கள்."

சிரித்தான் அதிவீரன்.

"இதற்கு இவ்வளவு பாடா?"

"பாடுதான்! அந்தப் பொருள் மட்டும் இருந்தால் போதும். ஒரு புது ராஜ்ஜியத்தையே உருவாக்கிவிடலாம்! அல்லது சரியான முயற்சி எடுத்தால், ஒரு சின்ன ராஜ்ஜியத்தை, ஒரு சாம்ராஜ்ஜியமாக மாற்றிவிடலாம். அவ்வளவு சாத்தியங்கள் உண்டு."

"அதனால்தான் மன்னர்கள், குறுநிலக்காரர்கள், பாளையக்காரர்கள் எல்லாம் பொக்கிஷ வேட்டைக்குப் போயிருக்கிறார்கள்."

அதிவீரனின் கண்கள் ஆச்சரிய விரிப்பில் மலர்ந்தன. பளீர் என்று ஒரு ஒளிக் கூட்டம் உள்ளே தெரிந்தது.

இலஞ்சியார் சொல்வதின் உட்பொருள் எல்லாம் ரொம்பத் தெளிவாகத் தெரிந்தது.

அதைப் புரிந்த நிலையில் பேச ஓடவில்லை.

இலஞ்சியார் அவன் மவுனத்தை கனிவுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"அதிவீரா!" என்றார் அவர் குறுநகையோடு. "எல்லோரும் பொன் தேடிப் போகிறார்கள். நீ பெண் தேடிப் போகிறாய்?" என்றார் கனத்த அடிக் குரலில்.

"சுவாமி! என்று அவர் கால்களில் அடியோடு வீழ்ந்தான்.

"சுவாமி! அடியேனுக்கு நாட்டின் நடப்பு என்ன என்று கூறுகிறீரா? அல்லது எனது அகக் கண்ணைத் திறந்து விடுகிறீரா?" என்று கேட்டான் அவன்!

இலஞ்சியார் தமது வெள்ளித் தாடியோடு புன்னகை கொட்டினார்.

"ஏன்? இரண்டு விதத்திலுமே எடுத்துக்கொண்டால் என்ன?"



அதிவீரன் பார்வையைத் தூக்கி அவரைப் பார்த்தான்.

சிறிது நேரம் தன்னுள் மூழ்கியவனாய் மவுனமாக இருந்தான்.

அவன் முகம் கலங்கிவிட்டது.

"சுவாமி!" என்றான் தழைத்துக்கொண்டு. "நான் இதுவரை நடந்துகொண்டதெல்லாம் சரியான மார்க்கம் இல்லையா?" என்றான் கவலையுடன்.

அஹ்ஹ ஹஹ்ஹஹ! என்று மெல்லிதாக இலஞ்சியார் சிரித்தார்.

"அப்பா! அதிவீரா! எல்லாமே நல்ல மார்க்கம்தான்! சில நம் குறிக்கோளுக்குச் சீக்கிரம் அழைத்துச் செல்லும். சில தாமதமாக இழுத்துச் செல்லும். அவ்வளவுதான். மன்னர்களாக இருந்தால் ஒருவர் மூன்று ஆசைகளையும் நிச்சயம் கொள்ளவேண்டும். பெண், பொன், மண்! இதில் ஏதாவது ஒன்றைப் பற்றிவிட்டு மற்றவைகளை விட்டுவிடக் கூடாது என்பதே பெரியவர்கள் உபதேசம்! இந்தா, இப்போது பெண்ணைத் தேடிப் போகிறாயா? பொன்னையும் தேடு! சந்தர்ப்பம் வந்தால் மண்ணையும் தேடு" என்றார்.

**வ**ழிநெடுகிலும் கேட்டுக்கொண்டு நீலப்பாகைகளைப் பின்பற்றி அதிவீரனும் அவன் சகாக்களும் பன்னிரண்டு தினங்கள் பிரயாணம் செய்தார்கள்.

நீலப் பாகையார் ஒரு நேரான பாதையை எடுக்க வில்லை! சில சுற்று வழிகளை எடுத்தார்கள். ஆனால், அல்லிக்கொடியையும் அவர்கள் அபகரித்துச் செல்வதால் போகும் இடமெல்லாம் அவர்கள் யார் கண்ணிலாவது பட்டுக் கொண்டுதான் சென்றார்கள்.

எனவே அதிவீரனும் அதிகக் கஷ்டமில்லாமல் அவர்களைப் பின்பற்ற முடிந்தது.

கடைசியில் மதுரைக்கு அவர்கள் போய்விட்டார்கள் என்று தெரியவந்தது.

பதிமூன்றாம் நாள் அதிவீரனும் சகாக்களும், மங்கையும் அவள் சேடிகளோடு கோட்டைக்குள் நுழைந்தார்கள்.

மாலை நேரம் அது!

கோட்டைக் கதவு திறந்திருந்தது.

உள்ளே வீதிகள் கலகலப்பாக இருந்தன.

இரு வீதிகளைக் கடந்ததுதான் தாமதம், "நாங்கள் விடை பெறுகிறோம்" என்று கூறினாள் மங்கை.

மனதில் அந்த வார்த்தைகள் சுருக்கென்று தைத்தன.

ஏன் அவனுக்கு வருத்தம் வந்தது.

இருப்பினும் வெளியே எதையும் காட்டிக் கொள்ளாமல், "சரி!" என்றான் அவன்.

அந்தப் பெண்கள் சற்று தூரம் விலகிப் போய் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள்.

கைகளைத் தூக்கி மங்கை, மீண்டும் காண்பித்து விரைவாகக் குதிரையைச் செலுத்தியபடி போனார்கள்.

அதிவீரனின் மனம் பொங்கியது.

கண்கள் நீர்த்திரையிட்டன.



# 17

மதுரை மாநகரில் அந்த அந்திச்சாயலில் மங்கையும் அவள் சேடியும் விடைபெற்றுப்போக மனதில் சிறிது சிறிதாக ஒரு வெறுமை விழுந்துகொண்டிருந்தது.

பதினோரு நாட்கள் அவளுடன் பிரயாணம் செய்து விட்டான். எந்தவித தொடர்பும் கிடையாது. அவள் ஒரு மாதவிலக்குப் பெண்போல எப்போதும் விலகியே இருந்தாள். சத்திரத்தில் தனியே பின்புற அறைக்குப் போய்விடுவாள். திறந்தவெளியில் இளைப்பாறினால் தனியே ஒரு மர நிழலுக்குப் போய் விடுவாள்.

பேச்சோ, புன்னகையோ வைத்துக்கொள்ளவில்லை.

உண்டாளா, உறங்கினாளா என்பது தெரியாது. எந்த நேரம் புறப்பட்டாலும் உடனே சித்தமாக இருந்தாள்.

சாதாரணப் பெண்ணாகத் தெரியவில்லை. குதிரை ஏற்றம், வாள் வீச்சு எல்லாம் என்ன நேர்த்தியாகக் கற்றிருந்தாள்!

அந்த வழிமறிப்பு நடந்தபோது எப்படி கத்தி எறிந்து எதிரிகளை மடக்கினாள்! அதுவும் குதிரையை மாறி மாறிச் செலுத்திக் கொண்டு...

அதென்னவோ, அவள் பேசிப் பழகாவிட்டாலும், அவள் மீது எப்படிப் பாசம் ஒட்டிவிட்டது!

அவனை அறியாமல், நுண்ணிய நேசநூல்கள் ஆயிரம் அவனோடு ஒட்டிக் கொண்டு ஒரு பிணைப்பை ஏற்படுத்தியது போல தோன்றியது.

அந்தப் பிரிவை ஒரு வெம்மையாக மனம் உணர்கிறது.

எதுவும் இழக்காவிட்டாலும், எல்லாம் பறிகொடுத்த உணர்வு அல்லவா தோன்றுகிறது.

சிந்தனையில் சற்று நேரம் நீடித்து நின்று கொண்டிருக்க,

அவன் சகலைதீரசேனன் அவனை அணுகி–

"பிரபு" என்றான்.

விழி துள்ள, அதிவீரன் திரும்பினான்.

"வாருங்கள், போகலாம்!" என்றான்.

அவன் அப்படிச் சொல்லவும்தான், அவனுக்கு அந்தக் கோட்டையடி வீதியிலேயே நிற்கும் பிரமை தெரிந்தது.

"நல்லது போகலாம்!" என்றான்.

ஏற்கனவே யோசித்தபடி, கூடிவந்தான் சத்திரத்தை நோக்கிப் போனார்கள்.

சாதாரணச் சத்திரம் அது! எப்போதும் ஆட்கள் நிறைந்து கலகல என்று இருக்கும். வசதிவேண்டுகிறவர்கள் அங்கே தங்கமாட்டார்கள்.

தங்கள் அடையாளம் வெளித் தெரியக்கூடாது என்ற எண்ணத்தில்தான் அங்கே போக விரும்பியிருந்தார்கள்.

மூவரும் குதிரையைச் செலுத்திக்கொண்டு போக,

அடுத்த தெருவில் திரும்பியதும், "அய்யா!" என்று குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தார்கள்.

அங்கிதரித்து, பாகைதரித்த ஒரு மெல்லிய மனிதன் அவர்களை நோக்கி வந்தான்.

குதிரையை நிறுத்தினார்கள். வந்தவனுக்கு ஒரு வணிகனின் தோற்றம் இருந்தது.



"அய்யா, யாத்தரீகர்களா?" என்று கேட்டான் அவன்.

"ஆமாம்!" என்றான் அதிவீரன்.

"இப்படி வாருங்கள்! இங்கே தும்பிச்சி சத்திரம் இருக்கிறதே, அங்கே ஏராள வசதி ஆயிற்றே! வெந்நீர் வைத்து, தலைக்கு எண்ணெயும் தருகிறார்கள்! குதிரைக்கு லாயமும் இருக்கிறது! தாராளமாக வந்து தங்குங்கள்!" என்று கூறினான், அந்த மெல்லியன்.

அதிவீரன் திரும்ப சகாக்களைப் பார்த்தான்.

தீரசேனன் உடனே, "அய்யா! நாங்கள் கூட வந்தானுக்குப் போகிறோம்! எப்போதும் அங்கே தங்குவது வழக்கம்!" என்றான், அழுத்தத்தோடு.

"ஆ! கூடிவந்தான். இப்போது உங்களுக்கு அது கூடிவராது!" என்றான், மெல்லியன், "போன மழைக்கு அதன் பின்பகுதி விழுந்துவிட்டது. யாரும் இப்போது அங்கே தங்க பயப்படுகிறார்கள்! இங்கே வாருங்கள்! ரொம்ப வசதி!" என்று கூறினான், அ ன்.

அதிவீரன் தலை அசைத்து குதிரையைக் கிளப்ப, மற்றவர்களும் அவனைத் தொடர்ந்தார்கள்.

சத்திரம் உண்மையில் விசாலமாகவும், வசதியாகவும் இருந்தது. ஒரு போக்குவரத்து இல்லாத தெருவில் ஒடுங்கி விட்டதால், அதற்கு அதிகப்பேர்வராமல் இருந்தார்கள்.

அதை பார்த்தால் அதிவீரனுக்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சி! "நமது ரகசிய வேலைகளுக்கு இதுதான் தகுதி" என்று கூறிக்கொண்டான்.

இரவு உணவு அருந்திய பிறகு அதிவீரனுக்கு உறக்கம் வரவில்லை. எத்தனை நாட்களாகிவிட்டன! ஒரு பெண்ணோடு சயனித்து!

கைகள் ஏங்கின. மார்பு வெப்பமாக மூச்சுவிட்டது. கால்கள் தம்மை அறியாமல் பின்னிக்கொண்டன.

ஆகா! இந்த உலகத்தில் பெண்ணின் சுகத்தை விட மேலானது எது?

அதுவும் தினமும் ஒருவருக்கு அது கிடைக்கப் பெற்றால்........

அந்தத் தினமும் வெவ்வேறு பெண்ணாகக் கிடைத்தால்........

நூறு வயதில்லை! மனிதன் அப்போது ஆயிரம் வயது வரை வாழ்வான்.

நல்லவேளையாக அரசனாகப் பிறந்தோம்.

இல்லாவிடில்.... ஒரு அந்தப்புரம் கிடைத்திருக்குமா?

போகும் இடமெல்லாம் சுவை பார்க்கிறானே, அரசனாக இல்லாவிடில் அதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா?

இப்போது எத்தனை நாட்கள் ஓடிவிட்டன. ஒரு பெண்ணின் சுகம் கிடைக்காமல்!

ஒரு இரவு ஆகியிருந்தது! குறை நிலா ஒன்று வானில் தோன்றி இருந்தது.

அதன் கிரணங்கள் சாளர துவாரங்கள் வழியே உள்ளே வந்து, வெள்ளி வட்டங்களாக விழுந்திருந்தன.

யார் இந்த நிலாக்கிண்ணங்களை சுவர் ஓரம் பரப்பி வைத்தார்கள்.

அதிவீரனுக்கு மனம் மென்மையாகச் சிலிர்த்தது.

உள்ளே ஒரு மோகத் தென்றல் சிலு சிலு என்று அடித்தது.

புரண்டு மூச்சுவிட்டான்.



திடீரென்று கண்முன் ஒரு மங்கை தோன்றினாள். என்ன வாளிப்பான பெண் அவள்?

நிலா முகம்! கண்கள் இரண்டும் மது குடித்தவை. ஒரு பார்வையில் சுரக்கும் உணர்வில் ஓராயிரம் கவிதை எழுதலாம்.

உம்! கடைசியில் எங்கோ தங்குகிறாள் என்று கேட்காமல் விட்டுவிட்டோமே!

நீண்டு சர்ப்பம் போல் ஒரு மூச்சுவர, எழுந்தான்.

கதவைத் திறந்து வெளியே வந்தான்.

வாசலில் இரவு பிரமித்துக்கொண்டு நின்றது. நிசப்தம், சமனமில்லாது எல்லாம் உறைந்த நிலை. நடை எங்கும் நிலா வெள்ளித் தகடு அடித்திருந்தது.

வீதிக்கு வந்தான்.

வெளிப்புறத்துக் குளிர் உடம்பில் மெல்லிதாய் உரசியது.

நெஞ்சம் பொங்கியது

மனசில் ஒரு தாப நிலை குவிந்துகொண்டு எழுந்தது.

உண்டு உறங்கி, பெண்டிரை அனுபவிப்பதை விட்டு விட்டு சண்டை எதற்கு மனிதனுக்கு? சச்சரவு எதற்கு?

வெம்மை மூச்சு ஒன்று நீண்டதாக வர, தூரத்தில் வரும் நிழல் பார்வையில் விழுந்தது.

யார் அது?

நெருங்கி வரவர, அதன் தோற்றத்தை எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது.

மனசை அவன் தூண்டி விடுவதற்குள், "ஆ! தாங்களா! சுவாமி! நான் மாலை பார்த்தபோதே நினைத்தேன். மனிதரின் கண்களைப் பார்த்தாலே மன்மதக் காற்று வீசுகிறதே! இவர் ஒரு சிருங்கார புருடராக இருப்பார் என்று நினைத்தேன்! அதுபோல இரவு வேளையில் இருப்புக்கொள்ளாமல் வெளிவந்து விட்டீர்களே! வாருங்கள்! வாருங்கள்! என் பெயர் வெண்ணைக் கண்ணன்!" என்று கூறி அவன் கையைப் பிடித்தான், சாயங்காலம், சந்திக்க நேர்ந்த மெல்லியன்.

என்னவோ தெரியவில்லை! அவன் அழைத்த முறையும், பேச்சில் குழைந்த பரிவும், கையைப் பிடித்த சுவாதீனமும் அதிவீரனின், மனசை அந்த நேரத்தில் வெகுவாகத் தொட்டுவிட்டது.

பதில் சொல்லவேண்டிய வாயும் அடைத்துவிட்டது. அதற்கு இணையாக புன்னகைகள் பூத்து புதிதாக மின்னி வந்தன.

"தங்களைப் போன்று இரவை அனுபவிப்பவர்களுக்காகவே அடியேன் காத்திருக்கிறேன்! உலகம் உங்களுக்குத்தான் ஆமாம்! மனிதவாழ்க்கை நாளை முடியும் தறுவாயில் இன்றைய இரவைச் சும்மா விடலாமோ? தாங்கள் யார்? வடக்கத்திக்காரரா..... தெற்கத்திக்காரரா?" என்றான், வெண்ணைக் கண்ணன்.

"தெற்கத்திக்காரன்!"

"ஆகா! தென்பாண்டிய நாடா! அவர்களுக்குத்தான் வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியும். அதுவும் அதிவீர ராமன் ஆளும் பூமி என்றால், காமன் சதிராடுவான். பிறந்தால் அப்படி அல்லவா பிறக்கவேண்டும்! தென்மொழித் தமிழிலே "ரதி ரகசியம்" எழுதப் போகிறார் என்று கேள்விப்பட்டோம்! ஆகா! இந்த மண்ணிலே, இத்தனை ராஜாக்கள், பண்டிதர்கள், கவிஞர்கள், ஞானிகள் எல்லாரும் பிறந்தார்களே! மன்மதக் கலையைப் பற்றி யாராவது ஒருவர் தமிழில் எழுதினார்களா? எழுத வேண்டும் என்றாவது தோன்றிற்றா! ஆனால், அதிவீரராமனுக்கு அது தோன்றியதே, பெரிசு! அவர், மனம் ரொம்பப் பெரிசு! எழுதட்டும் ஒவ்வொரு அடியான் வீட்டிலும் அதைப் பாராயணமே பண்ணவைக்கலாம்!" என்று இன்பம் நல்கும் கிளுகிளு மொழிகளை கொட்டிக்கொண்டே பிடித்த கையை விடாமல், அவன் இழுத்துப் போனான்.



இருந்தாலும் "எங்கே போகிறோம்" என்கிற ஆதங்கத் தால் அதிவீரன், "வெண்ணைக் கண்ணரே!" என்று அழைக்கப் போக,

அவன் குறுக்கிட்டு, "ஒன்றும் பேசவேண்டாம்! எனக்குத் தெரியும் அதெல்லாம்! எங்கே போகிறோம் என்று கேட்பீர்கள்? அப்படி அல்ப சொல்பமான இடத்துக்கு நான் அழைத்துச் செல்வேனா? தங்களைப் பார்த்தவுடனே செல்வந்தர் என்று நான் கணக்குப் போட்டுவிட்டேனே! எனக்குத் தெரியாதா, தங்களை எங்கே அழைத்துப்போக என்று!" கூறிய அவன்.

அந்த வீதி முனைவாக்கும் போய், அடுத்த வீதி முனையிலிருக்கும் ஒரு பெரிய மாளிகை வாயிலுள் நுழைந்தான்.

ஆச்சரியம்! அந்த மாளிகை அந்த நேரத்தில் வெளிச்ச மாக இருந்தது.

மாடங்களில் விளக்குகள் மெல்லிய தங்க நாக்குகளைச் சுடராகக் காட்ட,

உள்ளே பொன் தூவியது போல் ஒரு புதுமை வெளிச்சம் பரவியிருந்தது.

அகிலும், பூவும் சேர்ந்த கதம்ப வாடை எங்கும் மணத்தது.

அதனூடே பெண்டிரின் மேனி வாசம் கலந்து வீசுவதையும் அதிவீரன் அறிந்துகொண்டான்.

உள்ளே கூடங்களும், அறைகளும், அறைகளின் சுவர்களும் மனசில் பிரமிப்பை உண்டு பண்ணின.

பிரசித்திப்பெற்ற தேவதாசியின் வீடாக இருக்க வேண்டுமென்று நினைவு தோன்றியது.

அவன் எங்கேயும் நிற்கவில்லை. மேலும் மேலும் உள்ளே இழுத்துப் போய் புழைக்கடைக்கு வந்துவிட்டான்.

அங்கே கடைசி வாயிலின் கதவைத் திறந்ததும், அப்பால் தெரிந்த முற்ற வெளியில் தெரிந்த காட்சி "ஆ" என்று மெல்ல வாயைத் திறக்கவைத்தன.

பெரிய தீபத் தூண்களும் பெரிய மாடங்களும் தீப ஒளிகளை எங்கும் பகல் போல் பாய்ச்சிக்கொண்டிருக்க,

முற்றத்து நடுவில் ஒரு சித்திரக்குளம் தெரிந்தது.

அதைச் சுற்றிவர சொர்க்கத்து மோகினிகள் போல் பெண்கள் வந்து அமர்ந்திருந்தார்கள்.

கொஞ்சமான ஆடை! மெல்லிய பசும் உடம்புகளை கச்சும் சின்ன அரைத்துணியுமே இருந்தன.

நிலாச் செதுக்கலில் அமைந்த பால் பாவைகள் போல அவர்கள் தெரிய,

குளத்தின் நறுமணம் கலவிசெய்த நீரில் ஒரே ஒரு இளம் பெண் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தாள்.



முற்றத்தில் இறங்கி குளத்தை நோக்கி நடக்கும்போது,

குளத்து உள்ளே நீந்திய அந்தப் பெண், நீருள் விழுந்த சந்திரிகை போல் விகசித்துத் தெரிந்தாள்.

முகமும் உடலும் இடையிடையே விட்டுத் தெரிய நிலாச் சில்லுகள் உடைபட்டு மிதப்பன போல தோன்றியது.

அதிவீரனை வெண்ணைக் கண்ணன் அழைத்துப் போய் குளத்து விளிம்பில் நிறுத்தினான்.

"சந்திரி! சந்திரி! தெற்கத்தி பிரபு..." என்று சொல்லி அதிவீரனைப் பார்க்க, 'சீவல்லபன்" என்றான், அதிவீரன்.

"ஆமாம்! இவர்தான் தனவான் சீவல்லப்பன், உன்னைக் காணவே வந்து இருக்கிறார்" என்று சொல்ல,

குளத்து நடுவில் இருந்த சந்திரிகை இன்ப நாதங்களாகக் குலுங்கிச் சிரித்து நீச்சலிட்டே கரை நோக்கி வந்தாள்.

அதிவீரன் வந்ததும் அவனைக் கடைக்கண் கிரணங்களால் குளிர்ந்து பார்க்க, அவளது அத்தனை வசிய சக்தியும் அவனைப் போர்த்துவதுபோல் இருந்தது.

பிறகு அவள் அவனை நோக்கிக் கையை நீட்ட, அதிவீரனும் தன் கையை நீட்டி அவளை வெளியே இழுத்தான்.

வனப்பு மிகுந்த ஒரு பூவுடல் நீரில் கண்ணாடிச்சில் விழும் சப்தம் ஏற்படுத்திக்கொண்டு மேலே எழுந்தது.

அத்தனை பெண்களும் கலகல என்று சிரிக்க, அங்கே அந்தக் கணத்தில் சொர்க்கம் பிறந்துவிட்டது என்று நினைத்தான், அதிவீரன்.

## 18

சந்திரி என்ற அந்தக் குளத்து மோகினியை கைதூக்கி விட்டதும், அவள் பசுமை உடம்பில், முத்துப் படிவங்களாக நீர் உருண்டைகள் தரித்து நிற்க, ஈரத்தோடு மேனியில் ஒட்டிய துணி அவளது மறைந்த பகுதிகளை அப்பட்டமாக காட்சி தந்து பொருளாக்கிக்கொண்டிருக்க–

இவள் சித்தினி இனமோ! பத்மினி இனமோ! நால்வகை இனத்தில் எந்த இனமோ தெரியவில்லையே என்று எண்ணி மாய்ந்திருக்க–

"வாருங்கள், நீராடலாம்!" என்று அவள் மெல்லிய முறுவல் பூத்து, அவரை அழைக்க–

அந்த மதுரக்குரலில் புதைந்திருந்த ஒரு மாயம் அவனது அந்தரங்கத்தை வசீகரித்தது.

அவள் அவனது கைகளைக் கோர்த்துக் கொள்ள, அதன் குளிர் அவனது உயிர்க் குறுத்து வரை சென்றது.

எத்தனையோ நாள்விட்ட தாபம் மனதில் ஒட்டிக் கொள்ள, அந்தக் கணத்தில் ஆடைகளைக் கழற்றி மேடை மீது உள் வைத்துவிட்டு, உள்ஆடை ஒன்றோடு தொபீர் என்று நீருள் பாய்ந்தான்.

அலைகள் ஆயிரம் இங்குமங்கும் சறுக்காகிப் புரண்டு கொள்ள–

மகரந்தப்பொடிகளும், வாசனைத் திரவியங்களும், மலர் இதழ்களும் கலந்து பரிமள வாடை வீசும் குளிர்ந்த நீரில் வெகுநேரம் திளைத்தான்.

பூ எறிதல், பந்து பிடித்தல், பாதங்களைத் தேடல், கண்ணாமூச்சி ஆடல் என்ற பலவித கேளிக்கை ஆட்டங்களை சந்தரியுடன் ஆடி,



மேனியில் மதன உணர்வு ஆக்கிரமித்தவனாகக் கரையேறி ஆடைகளை உடுத்திக் கொண்டான்.

சேடிகள் வந்து, அவனை அழைத்து, குதூகலமாய் மணிச் சிரிப்புகள் நிறைய சிரித்து, மாளிகையின் மேல் தளங் களுக்கு அழைத்துச் சென்றார்கள்.

ஆகாயத்தைக் கூரையாகக் கொண்ட அந்தத் திறந்த வெளியின் தரை, மேடை, ஆதனங்கள் அனைத்துமே இழைத்த பளிங்குக்கற்களால் அழகுற வேயப்பட்டிருந்தன.

இரவின் கதிர்களைக் கிரகித்து ஆதனங்கள் பனிக் குளிராக இதத்தைக் கொடுக்க, அதிவீரன் அதில் அதிக மகிழ்ச்சியுடன் அமர்ந்துகொண்டான்.

அதேநேரத்தில் சந்திரி அவன்முன் பிரசன்னமானாள்.

குளிக்கும்போது ஆடைகள் அற்ற உடலால் அவனுக்கு போதை தந்தாள்–

இப்போது மெல்லியதாக சருகுபோல், அணிந்த பட்டு ஆடையும், அழகிய கச்சும், இன்னும் அதிகம் போதை தந்தன.

சேடிகள், பொன் தாம்பாளத்தில் மதுவையும் கிண்ணங்களையும் கொண்டு அமர்த்தினார்கள்.

சந்தரி, அவனுக்கும் ஒரு கிண்ணம் வழங்கி, அவளும் ஒரு கிண்ணம் பற்றிக்கொள்ள, அதிவீரனின் மனம் புளகாங்கிதம் அடைந்தது.

சுத்தமான கண்ணாடி போன்ற பளிங்கு மேடையில் ஆகாய நட்சத்திரங்கள் பிரதிபலித்து, புஷ்பங்கள் சிதறி இருப்பது போல், பிரமை கொடுக்க–

சேடி ஒருத்தி மெல்லிய சத்தத் தடங்களாக மிருதங்கத்தை முழக்க,

மற்றொருத்தி மென்மையாகப் புல்லாங் குழலில் பரிமாற,

சுவர்க்கம் என்பது வானத்தில் இருந்து இறங்கி அவன் முன்னால் நிற்பது போல் தோன்றியது.

"பிரபு! மது எப்படி அருந்தவேண்டும் என்று தெரியுமோ?" என்று கேட்ட அவள், மேலும் தொடர்ந்து,

"மது அருந்தும்போது ஒரு பெண் துணையாக இருந்து அருந்தினால் மிக விசேஷம். தானும் உண்டு, அவளையும் உண்பித்து, மதுவை ரசிக்கவேண்டும். அன்றியும் அவசரமாகப் பருகாமல் மதுவை நின்று, நிறுத்தி, சுவைத்து, களித்து சிறிது சிறிதாக உற்சாகம் பெற்று அனுபவித்துப் பருக வேண்டும். அப்படிச் செய்யும் மதுபானமானது கற்பக மரத்திலிருந்து கிடைக்கும் "ரதி பலம்" என்ற மதுவை ஒத்திருக்கும். அதனை அருந்தினால் இந்திரனைவிட சுகத்தை வாழ்க்கையில் அனுபவிக்க முடியும்" என்றாள்.

ஏற்கனவே ரதி மதன விஷயங்களில் மனதைச் செலுத்தி ஆய்ந்துகொண்டிருந்த அதிவீரனுக்கு அந்த வார்த்தைகள் மேலும் மனதை தூண்டிச் சிந்திக்க வைத்தன.

இரவில் வெகுநேரம் மது அருந்தினார்கள். பிறகு உடம்பில் மது வேகமும், பெண் மோகமும் கூடி, சொல்லொனாத வேட்கைத் தீயை ஏற்படுத்த,

இருவரும் உள்ளே சென்று அலங்கரிக்கப்பட்ட அம்சதூளிகா மஞ்சத்தில் ஏறி, அருமையான கலவி சுகத்தை எய்தினார்கள்.

ஆனந்தப் பரவசங்களின் உச்சங்களுக்குச் சென்று, அங்கே வெகு நேரம் சிரக்கம்பம் ஆடிவிட்டுக் கீழே இறங்கினான்.



பிறகு பெருமூச்சுகள் நிறைந்து, வியர்வை நிறைய ஒழுகவிட்டு ஆசுவாசமாகிக் கொண்டிருந்த அவனுக்கு நள்ளிரவைக் கடந்த பின்வரும் கீழைக்காற்று அதிக இதமாய் இருந்தது.

அந்த இதத்தில் ஆழ்ந்து அரை யாமம் இருந்திருக்க மாட்டான்.

"எழுந்திரு!" என்று கடுமையாக, நாராசமாக அவனை உலுப்பி எழுப்பியது, ஒரு குரல்.

எழுந்து கண்களைத் துடைத்துப் பார்க்க, அருகில் சுந்தரியை காணவில்லை.

எதிரே இரண்டு இரு வீரர்கள் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

"ம்.... எழுந்திருங்கள்!" என்றார்கள், அவர்கள்.

"நீங்கள் யார்? என்னை ஏன் எழுப்புகிறீர்கள்?" என்று அதிவீரன் அவசரம் பொங்கக் கேட்டான்!

அவர்கள் அதற்கு மறுமொழி கூறவில்லை. அதற்குப் பதிலாக அரை நொடியில் அவன் மீது தாவி அவன் கைகளையும் கால்களையும் கட்டி, அப்படியே சேந்தூக்காகத் தூக்கிக்கொண்டு போனார்கள்.

அந்த நேரத்தில் அதிவீரன், "சுந்தரி! சுந்தரி!" என்று பலமுறை அழைத்தும் அவள் எங்கே போனாள் என்று தெரியவில்லை.

அந்தக் கணத்திலேயே அது ஒரு துரோகச் செயல் என்பதை அதிவீரன் புரிந்து கொண்டான்.

அவனுக்குப் பல கவலைகள் ஏற்பட்டன!

முதலில் தனது சகாக்கள் வீரசேனன், தருமசேனன் இருவரிடமும் சொல்லாமல் வந்துவிட்டோம்!

இரண்டாவது இந்தக் கிராதகர்கள் யார் என்று தெரியவில்லை.

மாளிகைக்கு வெளியில் கொண்டு போகுமுன், அவனது கண்களை ஒருவன் துணியால் மூடிக் கட்டினான்.

வெளியே வந்ததும் அவனை ஒரு பல்லக்கில் ஏற்றுவது அவனுக்குத் தெரிந்தது.

பின்னர் ஒரு முகூர்த்தப் பிரயாணத்திற்குப் பிறகு, மீண்டும் அவன் ஒரு மாளிகைக்குள் எடுத்தச் செல்லப்படுவது தெரிந்தது.

முடிவில் தனியாக விடப்பட்டு கால் கைகளின் கட்டு அவிழ்க்கப்பட்ட பிறகு,

அவனே தனது கண்ணைக் கட்டிய துணியை அவிழ்த்து வெளிப்புறத்தைப் பார்த்தான்.

முதலில் எதுவும் புலப்படவில்லை. இருக்கும் இடமே இருட்டு மயமாக இருந்தது.

பிறகு மேலே கூரைக்கு அடுத்து மெல்லிதாக வெளிச்சம் தரித்திரமாக வருவதைப் பார்த்ததும், அவன் இருப்பது சிறைக்கிடங்கு என்று தெரிந்து விட்டது.

என்ன ஆச்சரியம்?

அவனா சிறையில் இருப்பது?

தென்பாண்டிய மன்னனா?

அதுவும் மதுரைச் சிறையிலா?

கடமை தவறாது கப்பம் கட்டும் அந்தத் தென்காசி, மன்னனா, மதுரை நாயக்கரது சிறையில் இருப்பது.

யார் அவனை அடைத்தார்கள்?



ஏன் அடைத்தார்கள்?

"ம்... சொல்லப்பா! நீ யார்? தென்காசிப் பாண்டியன் தானே?" என்று கர்ஜனையான குரல் கேட்டது.

அதிவீரன் மீண்டும் ஒருமுறை நிமிர்ந்து பார்த்தான். அவன் முன்னால் கம்பீர உருவத்தில் நிற்பது யார்?

அந்த மீசையையும் முகத் தோற்றத்தையும் பார்த்தால், எந்தப் பாளையக்காரர், என்பது மறந்துவிட்டதே!

இவர் ஏன் அவனைச் சிறையில் தள்ளி பயமுறுத்து கிறார்?

"ம்... யோசிக்காதே! சொல்லு?" என்று மீண்டும் கர்ஜித்தார், பாளையக்காரர்.

"இல்லை அய்யா! நான் வெறும் வழிப்போக்கன், யாத்திரீகன்?"

கடகட என்று சிரித்தார், பாளையக்காரர். அம்பது வயது இருக்கும். நல்ல வைரம் பாய்ந்த உடம்பு! அருகில் ஒருவன் தீவர்த்தி பிடித்திருக்க, அதன் குதிக்கும் ஒளியில் அவர் உடம்பு பசும்பொன் போல்மின்னியது. வாளிப்பான உடம்பு.

"யாரேனும் நம்புவார்கள் என்று பார்த்தாயா? ஒத்துக் கொள்ளப் போகிறாயா, அல்லது சித்திரவதை செய்யட்டுமா?" என்று இரைந்தார், அவர்.

"அய்யா! ஏன் இந்த ரீதியில் பேசுகிறீர்! நானா தென் காசி மன்னன்! அப்படியிருந்தால் மிகவும் மகிழ்ச்சி அடைவேனே! ஏழை வீட்டில் பிறந்த எனக்கு அரியாசனம் எங்கேயாவது கிடைக்குமா?" என்று பணிவுடன் கூறினான், அதிவீரன்.

"நீ எங்கிருந்து வருகிறாய்?"

"திருநாராயணபுரம்!"

"அங்கிருந்து ஏன் இங்கு வந்தாய்?"

"திருவரங்கத்தை சேவிக்க வந்தேன். அப்படியே தென் பாண்டிய நாட்டிலுள்ள நவ திருப்பதிகளைச் சேவிக்கச் செல்கிறேன்! நான் பரமன வைஷ்ணவன். ஸ்ரீமதே ராமானுஜாய நமஹ! என்றான், அதிவீரன்.

"பொய் சொல்கிறாய் நீ?"

"அல்ல, இதுவே மெய்!"

"வேண்டுமென்று சாதிக்காதே! எனக்கு நீ இங்கே வந்த காரணம் தெரியும்!"

"என்ன?"

"உன் பிரதான தாசி அல்லிக்கொடியைத் தேடி வந்திருக்கிறாய்!"

"எனக்கா? பிரதான தாசியா? என்னைத் தாங்கள் யாரென்றுதான் நினைத்தீர்?" என்றான், அதிவீரன்.

"சீ! வாயை மூடு! இந்தா, இவருக்கு இரவு உணவு படையாதே!" என்று கூறிவிட்டு, தமது காலாட்கள் பின் தொடர, கிடங்கைவிட்டு அகன்று படிகளில் ஏறினார், அவர்.

அவர் போனபிறகு அதிவீரன் கவலையும் யோசனையும் மிகுந்தவனாய் அறைக்குள் உலாவினான்.

எந்தவிதச் சத்தமும் அந்த அறைக்குள் வரவில்லை.

மனித நடமாட்டம் எதுவுமே தெரியவில்லை.

வெகு நேரம் உலாவி களைத்துப் போனவனாய் சிறை மேடையில் அவன் அமர்ந்தான்.

அப்போது மெல்லிதாக வந்த காலடிகளை அவன் உணரவில்லை.



வாசலுக்கு வெளியே அவன் கண்ணுக்கு மறைவாக ஒரு இளம்பெண் வந்து நின்றாள்.

இலேசாக எட்டிப் பார்த்து பிறகு சட்டென்று முகத்தை இழுத்துக்கொண்டாள், அந்தப் பெண்.

இதுபோல பலமுறை செய்தாள்.

அதிவீரன் கவனித்ததாகத் தெரியவில்லை.

அவன் கண்கள் மேலே உள்ள சாளரத்தை நோக்கி இருந்தன.

அதன் வெளிச்ச மாற்றம் அவனைத் திடுக்கிட வைத்தது.

26645
12/4/1999

## 19

காலையில் எழுந்ததும் அரசர் அதிவீரனைக் காணாமல் அவனது சகாக்களான வீரசேனனும், தர்ம சேனனும் கவலை அடைந்தார்கள். "என்ன ஆனார்? இங்கேதானே தூங்கினார்? எங்கும் சொல்லாமல் செல்ல மாட்டாரே!" என்று வீரசேனன் பிரலாபிக்க,

"சொல்லிவிட்டுப் போவார் சரி, ஆனால் ஒரு இடத்திற்கு மட்டும் சொல்லாமல் போவார்!" என்று கூறினான், தர்மசேனன்.

"ஓகோ! தாசி வீட்டுக்கோ?" என்று வீரசேனன், "தர்மா! ஒரு விஷயம் நடந்திருக்க வேணும்! நம்முடன் வந்தாளே திருமங்கை, அவள் மீது எனக்குச் சந்தேகம் உண்டு, ஒன்றும் தெரியாதவள் போல் அவள் ஒதுங்கி வந்ததை நான் நம்பவில்லை! அவள் நம் அரசரை மயக்கி இருக்க வேண்டும்!" என்றான்.

"நாம்தான் அரசரோடு கூட வந்தோமே! அவர்கள் இருவரும் நெருங்கிப் பேசக்கூட இல்லையே?" என்றான், வீரசேனன்.

சிரித்தான் தர்மசேனன்.

"காதலின் அத்தனை வார்த்தையும் பேசிவிட கண் ஒன்றே போதுமே!" என்றான், அவன்.

"அப்படியும் அவர்கள் பார்த்துக்கொண்டதாகத் தெரியவில்லையே!" என்றான், வீரசேனன்.

மீண்டும் சிரித்தான் தர்மன்.

"வீரா! இதை நான் சொல்லித் தெரியவேண்டுமா? காதல் அற்புதமான மாயாவி! கண்ணுக்குத் தெரியாத வழியில் நுழைந்துவிடும். யாரும் பாராத நேரத்தில் மலர்ந்து விடும். நம் பயணத்தின் போது எத்தனையோ முறை நாம் கவனிக்காத வேளையில் அவர்கள் பார்த்திருப்பார்கள். ஏன், நமக்குத் தெரியாமல் சந்திக்கக்கூடச் செய்திருப்பார்கள்!" என்றான்.

"என்ன இப்படிச் சொல்கிறாய்? காதல் என்பதை ஒப்புக்கொண்டாலும் அதெல்லாம் அவ்வளவு சீக்கிரம் நடந்துவிடுமா?" என்று கேட்டான், வீரசேனன்.

"காதல் என்றாலும் இது காதல் அல்ல! இது வசியம்! அந்தப் பெண் ஒரு வஞ்சக நோக்கோடு நமது அரசரை வசியம் செய்திருக்கிறாள். நம் மன்னர் அதைக் காதல் என்று நம்பி, அவளது வலையில் விழுந்திருக்கிறார். இப்போது மதுரை வந்த பிறகு அவரை என்ன செய்தாளோ? ஆளைக் காணவில்லை பார்!" என்றான், தர்மசேனன்.

பிறகு இருவருமாகச் சேர்ந்து அவளைத் தேட ஆரம்பித்தார்கள்.

நல்லவேளையாக அந்த "மங்கை" என்பவளும், அவள் சேடியும் குதிரையில் வந்திருந்தார்கள். அந்தக் குதிரைகளை அடையாளம் வைத்துத் தேடலாம் அல்லவா? தேடினார்கள்.



அப்போதுதான் அதன் கடினம் கூட அவர்களுக்குத் தெரிய ஆரம்பித்தது.

மதுரை மாநகரை ஏற்கனவே இருமுறை பார்த்திருக்கிறார்கள்.

குபேரப் பட்டணத்தின் சாயலில் இருந்தது அது. எங்கும் தூபிகள் விதவிதப் பருமன்களில் எழுந்து வானத்தைக் குத்திய வண்ணம் இருந்தன. கோபுரங்களும் அதன் ஒவ்வொரு நிலைவாசலும் ஆகாயத்துக்கு ஏணி வைத்தது போல இருந்தது. மாடங்கள், உப்பரிகைகள், மேடைகள், பூங்காக்கள், கல்தூண் விளக்குகள் எல்லாம் எங்கும் நிறைந்து, மதுரை நகரமே ஒரு பிரம்மாண்ட அரச மாளிகை போல காட்சி அளித்தது.

வீதிகளும் சாலைகளும், ஜனங்களின் கலகலப்பில் மிதந்தன.

உலகத்து பல பாகத்து யாத்திரியர்கள் கலந்திருக்க,

அவர்களது வெவ்வேறு வித உடைகள் கண்களைப் பறித்த வண்ணம் இருந்தன.

ஜனங்களில் பாதி பேருக்கும் குதிரை சொந்தம் போல் தெரிந்தது.

இதில் திருமங்கையும் அவள் சேடியும் உபயோகித்த குதிரைகளை எங்கே தேடுவது?

இருந்தும், இரு சகாக்களும் தளரவில்லை.

பகல் முழுவதிலும், தெருக்களில் அலைந்தார்கள். எந்த வீட்டிலாவது குதிரை லாயம் இருக்கிறதா என்பதைக் கூர்ந்து கவனித்தார்கள்.

இருப்பது தெரிந்தால் ஏதாவது யுக்தி செய்து உள்ளே போய், குதிரைகளைக் கவனித்தார்கள்.

மதியத்தில் உணவு உண்ணவில்லை, அதை ஒரு பொருட்டாகவும் கருதவில்லை.

வீதிகளில் அவசரமாகத் தேடுவதுதான் அவர்களது குறியாக இருந்தது.

பொழுது சாயும் நேரம், மதுரை மேலும் கோலாகலமாகிக் கொண்டிருந்தது.

தீப் பற்றியதுபோல் ஒரு சிரிப்பும், புன்னகையும் எல்லார் முகத்திலும் பற்றியிருந்தது.

கடைவீதிகளில் ஆரவாரங்கள் அதிகமாயின.

பொடிந்த வியர்வையுடன் அவர்கள் நின்ற போது, வீரசேனனின் கண்கள் சற்று எட்டத்தில் இருக்கும் அரபு வியாபாரி மீது விழுந்தது.

''குத்ரே! குத்ரே!'' என்று இடைக்கு இடை பிரலாபித்துக் கொண்டிருந்தார்.

அவர் அருகே ஒரு குதிரை அசையாமல் நின்று கொண்டிருந்தது.

அராபியக் கப்பல் வந்துவிட்டால் மதுரையில் குதிரை விற்கும் படலம் ஆரம்பமாகிவிடும்.

ஏதோ ஒரு உந்தல் ஏற்பட்டு அவரை அணுகி ஒரு புன்னகை காட்டினான், வீரசேனன்.

''குத்ரே வேணுமா?'' என்று உச்சரிப்பு சரியில்லாமல் கேட்டார், அராபிய வியாபாரி!

''விற்கிறீங்களா?'' என்றான், வீரன்.



''ஆமாம்!''

''இந்தக் குதிரைதானா?''

''ஏன்! இதுபிடிக்கலையா?''

''இல்லை! ஒரு குதிரை வைத்துக்கொண்டா வியாபாரம் செய்றீங்க?''

''குத்ரே நிறைய இருக்கு! எல்லாம் தோட்டத்திலே இருக்குது!''

''தோட்டம் எங்கே?''

''கீளக்கோட்டே பக்கத்திலே இருக்கு!''

''குதிரை வீற்பனை மட்டும்தான் செய்வீங்களா?''

அராபியர் அவர்களை ஏற இறங்கப் பார்த்தான்.

''ஏன்! வாங்கிக்கவும் செய்வோம்!'' குத்ரே இருக்குதா?''

''இல்லை'' என்று தலை ஆட்டினான், வீரன்.

''பின்னே ஏம்பா கேட்கிறே?'' என்று கூறி, தெருவை நோக்கி ''குத்ரே! குத்ரே!'' என்று கூவ ஆரம்பித்தான்.

''இந்தாங்க!'' என்று இடைமறித்தான், வீரசேனன்.

அவனை அராபியர் பொருட்படுத்தவில்லை.

''இந்தாங்க! குதிரை வாங்கணும்!'' என்று அழுத்திக் கூறினான், வீரன்.

''குத்ரே வேணுமா?''

''ஆமாம்!''

''அப்படி இருந்துக்க! இப்போ அழைச்சிட்டுப் போறேன்.''

வீரசேனன் சற்று தள்ளி அமர்ந்தான்.

பிறகு அராபியர் "குத்ரே! குத்ரே!" என்று மேலும் அரைமுகூர்த்த நேரம் கூவிவிட்டு, மேலும் இரு ஆட்களைச் சேர்த்துக் கொண்டான்.

இதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. அராபியர் அவர்களை அழைத்துக் கொண்டு, குதிரையை மெல்ல நடப்பித்தவாறு போனான்.

பல வீதிகளைக் கடந்து, சில சந்துகளில் நுழைந்து, கடைசியில் தோட்டத்தை அடைந்தான்.

"தம்பி!" என்று அழைக்க, அய்யா!" என்று குரல் வந்தது.

"இப்படி வா?"

அருகிலுள்ள வீட்டினுள்ளிருந்து ஒரு பையன் கையில் தீவர்த்தி கொண்டு வந்தான்.

தோட்டம் பளிச்சிட்டது.

அத்தனை நேரம் வரை கண்ணுக்கு புலப்படாது இருந்த குதிரைகள் சட்டென்று தென்பட்டன.

அவற்றின் கண்கள் பளிங்குபோல் வெளிச்சத்தைப் பார்த்தன.

அராபியர் ஒவ்வொரு குதிரையாகக் காட்டி வர,

எல்லாக் குதிரைகளையும் மூவரும் பார்த்தார்கள்.

யாரும் பேசவில்லை.

அடுத்து சற்று தள்ளியிருக்கும் குதிரைகளிடம் தீவர்த்தி, செல்ல தர்மசேனன் வீரனின் கைகளை அமுக்கினான்.



அங்கே திருமங்கை உபயோகித்த இரு குதிரைகளும் நிற்பது தெரிந்தது.

தீவர்த்தி அலைகளின் அருகில் சென்றதும் அது உறுதியாகிவிட்டது.

மற்ற இருவர் வெவ்வேறு குதிரைகளுக்குப் பேரம் பேசி, தோது படாது போய்விட்டார்கள்.

உடனே வீரசேனன் அராபியரை அணுகி, "அந்த இரண்டு குதிரைகளை எங்கே வாங்கினீர்கள்?" என்று கேட்டான்.

"யாரோ கொடுத்தாங்கோ?"

"யார்? எங்களுக்குத் தெரியணும்?"

"சோமேசர் தெருவிலே ஒரு இளைஞன் கொடுத்தாங்க!" என்றான், அராபியன்.

"வாங்க! வந்து இடத்தைக் காட்டுங்கள்!"

அராபியர் அவர்களை ஏற இறங்கப் பார்த்தார், "ஏதாவது தகராறா?"

"ஆமாம்!"

"வாங்க! வீட்டைக் காட்டறேன்" என்று சொன்னார், அராபியர்.

இருவரும் அவரை பின்தொடர்ந்து சென்றார்கள்.

சோமேசர் தெருவில் அந்த வீட்டை அராபியர் காட்டிக் கொடுத்தார்.

அதை அடுத்து அந்த இளைஞனையும் காட்டிக் கொடுத்தார்.

வீரசேனன் உடனே அராபியரை அனுப்பிவிட்டு இளைஞனை விசாரிக்கத் தொடங்கினான்.

இரு பெண்களும் இருக்குமிடம் விரைவில் தெரிந்தது. அவர்கள் சொல்லித்தான் குதிரைகளை விற்றதாக இளைஞன் தெரிவித்துக்கொண்டான்.

இரவு ஆராவாரம் அடங்கும் நேரத்தில் அவர்கள் திருமங்கை இருக்கும் இடத்தை அணுகினார்கள்.

வெளியே சாதாரண வணிகர் வீடாகத் தோன்றியது. உள்ளே பெரிய மாளிகை போல் விஸ்தரித்திருந்தது.

திருமங்கை உணவு அருந்திவிட்டு, ஒரு மஞ்சத்தில், சாய்ந்தவாறு அமர்ந்திருந்தாள்.

அவர்களைக் கண்டதும் ஆச்சரியப்பட்டாள்.

அவர்கள் வந்ததைத் திகைப்புடன் அவள் கவனிப்பது தெரிந்தது.

"என்ன விஷயம்?" என்றாள் அவள், பற்றில்லாதது போல

"எங்கள் எஜமானர் வேண்டும்!"

"உங்கள் எஜமானரா?" ஏன் என்னிடம் கேட் கிறீர்கள்?"

"இங்கே இருக்கிறார் என்று தெரியும், அம்மா!" என்றுஅழுத்தமாகக் கூறினான், வீரசேனன்.

திருமங்கை வியப்புடன் நோக்கினாள்.

## 20

வீரசேனனுக்கு மங்கையின் மொழி திருப்தி அளிக்க வில்லை! அவளது கண்ணில் இருந்த அமைதியோ சாந்தமோ உண்மை அல்ல! இவள் ஆழமானவள் என்று நினைத்தான்.



"அம்மணி! இந்த மதுரை மாடிகளில் எங்கள் எஜமான ருக்குத் தெரிந்தவர்கள், எங்களைத் தவிர தாங்கள்தான்! இன்னும் ஒரு முழுப் பகல் பொழுது கூட அவர் இங்கே வாசம் செய்யவில்லை. வேறு யாரையும் அவர் அறிந்திருக்க நியாயம் இல்லை. ஒரு இரவுக்குள் அவர் காணாமல் போக வேண்டுமானால், தங்கள் இருப்பிடம்தான் வந்திருக்க வேண்டும்.... அதனால்..."

அவன் மேலே சொல்லிக்கொண்டு போகுமுன் "வீரரே!" என்று இடைமறித்தாள் அவள்.

அவள் கண்களில் தீக்கொழுந்துகள் துள்ளியிருந்தன.

"பார்த்துப் பேசும்! நான் ஒரு குடும்பப் பெண்! ஏதோ ஒரு கால விசேஷத்தில் ஆண்களோடு பயணம் செய்ய நேர்ந்ததைக் கண்டு, என்னைக் கேவலமாக நினைத்து விடாதீர்கள். எங்கள் ஊர் வந்து எங்களைப் பார்த்து இருந்தால் எங்கள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டிருப்பீர்கள்!" என்றாள் கோபமான வீச்சில்!

வார்த்தைகளில் வெப்பம் தோய்ந்திருப்பதைப் பார்த்து வீரசேனன் சற்று திகைத்து நின்றான்.

இன்னும் அதிகம் பேசினால், ஏதாவது செய்து விடுவாளோ என்ற அச்சம் அவனுக்கு இருந்தது. ஏனெனில் வழிப்பறிக்காரர்களை அவள் முடியறித்தது அவனுக்கு நினைவு இருந்தது.

இருந்தாலும், போக மனமில்லாமலும், அவள் வார்த்தைகளில் நம்பிக்கை இல்லாமலும் அவன் அங்கே குழம்பி நிற்க,

திருமங்கை அவனை மீண்டும் ஒரு கண் வீச்சில் ஏற இறங்கப் பார்த்தாள்.

"இந்தா, ரூபா! இவர்களுக்கு இந்த வீடு முழுதும் காட்டு! இவர்கள் எஜமானரை நாம் நம் முந்தானையில் முடிந்து வைக்கவில்லை என்று தெரியட்டும்" என்றாள் தோரணையாக.

அந்தச் சேடி அவர்களைப் பார்த்து, "வாருங்கள்" என்றாள்.

அந்த வீட்டில் ஒரு பகுதி விடாமல் எல்லா இடமும் அழைத்துப் போய்வந்தாள்.

அவனது சந்தேகத்தைக் கிளப்பிய இடமெல்லாம் நன்றாகத் தேடிப் பார்த்துவிட்டு அவன் திரும்பி வந்தான்.

திருமங்கையை நோக்கி, "அம்மணி! மன்னிக்கவும்! நான் சொன்னது தங்களைப் புண்படுத்தியிருந்தால் பொறுத்தருள வேண்டும்!" என்று விநயமாகக் கூறி விடை பெற்றான்.

வாசல் வரை போனவனை, "ஐயா!" என்று நிறுத்தினாள்.

"உங்கள் எஜமானர் ஏதாவது இக்கட்டில் அகப்பட்டிருந்தால் என்னிடம் தெரிவியுங்கள்! முடிந்தால் என்னாலான உதவியைச் செய்கிறேன்" என்றாள்.

"நல்லது அம்மணி!" என்று வீரசேனன் வணங்கி விட்டுச் சென்றான்.

வெளியே போனபிறகு வீரசேனன் தர்மசேனனை நோக்கி, "இவள் சொல்வது உண்மையாக இருக்குமா? நம் எஜமானர் பற்றி நிச்சயம் இவளுக்குத் தெரியாதா?" என்றான்.

"அவள் சொல்வதைப் பார்த்தால் மெய் போலத் தோன்றுகிறது! நாமும் இவள் வீடு முழுதும் தேடி



விட்டோம்! அனாவசியமாய் இவள் மீது சந்தேகப் பட்டிருக்கிறோம்" என்றான் தர்மசேனன்.

"அப்படியானால் மன்னர் எங்கே போனார்?" என்றான் வீரசேனன்.

"யாராவது எதிரிகள் அவரைப் பிடித்திருப்பார்களோ?"

"எதிரிகளா?" நம் எஜமானர் இன்னார் என்று அவர்களுக்குத் தெரியுமா?"

"தெரிந்திருக்கலாம்!"

"எப்படி?"

"நாம் வேடத்தை மாற்றினோமே தவிர, அதிக எச்சரிக்கை எடுக்கவில்லை!"

"எப்படிச் சொல்கிறாய்?"

"கரிசூழ்ந்த மங்கலத்தில் நாம் என்ன என்ன செய்தோம் நினைவு இருக்கிறதா?" "என்ன செய்தோம்?" என்று யோசித்தவாறு கேட்டான், வீரசேனன்.

"கோட்டைக் காவலர் நம்மை வழி மறைத்த போது நம் எஜமானரை தென்காசி மன்னர் என்று குறிப்பிட்டு விட்டோம். நினைவிருக்கிறதா?" என்றான் தர்மசேனன்.

"ஆ!" என்று கையை உதறினான் வீரசேனன். "உண்மை! மெய்மறந்து கூறிவிட்டோம்!" என்று ஒரு விரலைப் பல்லில் வைத்துக் கடித்தான். "ஆனால்.... அப்போது இந்தப் பெண்கள்தானே இருந்தார்கள்?" என்றான் அவன்.

"பெண்கள்தான். ஆனால், சாதாரணப் பெண்கள் இல்லை என்பதை அறிந்திருப்பாய், வீரசேனா! வழியிலேயே அவர்கள் சாமர்த்தியத்தை அறிந்தோம்! உயர்

குடி மக்கள் அவர்கள். விஷயத்தை எங்கேயாவது சொல்லி விடக் கூடாது!'' என்றான் தர்மசேனன்.

''சொல்வார்களா?'' என்று ஆதங்கத்துடன் கேட்டான் வீரசேனன்.

''யார் கண்டார்கள்?'' என்றான் தர்மன்.

வீரசேனனுக்கு மனது சரியாகவில்லை. குழம்பிக் கொண்டே நடந்தான்.

மேல்மாட வெளியில் திருமங்கையும் சேடி ரூபாவதியும் அமர்ந்திருக்க –

''நிச்சயம் அவர் அரசவம்சந்தான். முகத்தைப் பார்த்தால் தெரியவில்லையா? தவிர, கரிசூழ்ந்த மங்கலத்துக் கோட்டைக் காவலரிடம், அவரது துணை ஆள் பேசியதை மறந்துவிட்டாயா?'' என்று கேட்டாள் திருமங்கை.

''என்ன சொன்னார்?'' என்றாள் ரூபா.

''வரதுங்க ராஜாவுக்கு சகோதரர் என்றாரே!''

''அப்படியா? நான் சரியாகக் கவனிக்கவில்லையே!''

''தென்காசிப் பாண்டியர் இவராகத்தான் இருக்க வேண்டும். அவரது மன்மத சொரூபமே அதைச் சொல்கிறதே!''

''ஓ!'' என்று ஓரக் கண்ணால் பார்த்தாள் ரூபா.

''நல்ல ராஜகளை! கவனித்தாயா?''

''எங்கே நான் கவனித்தேன்?'' என்று அங்கலாய்த்தாள், ரூபா.

''கல்வியில் சிறந்தவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்!'' என்றாள் திருமங்கை.

''கல்வியில் சிறந்தவரோ என்னவோ? கலவி விஷயத்தில் ஆராய்ச்சி செய்கிறவர்.''

''செய்யட்டுமே! நாம் எத்தனை நாள் அவருடன் பிரயாணம் செய்தோம்? எப்போதாவது நம்மைத் திரும்பிப் பார்த்தாரா?''



''இல்லைதான். ஆனால் அதனால் என்ன?''

''நினைத்தபோது மனதைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார் இல்லையா?''

''ஆமாம்!''

''அதுவே அவரது அடக்கத்தையும் ஒழுக்கத்தையும் காட்டுகிறதே!''

சேடி ரூபா பேசவில்லை!

திருமங்கையின் கண்கள் எங்கேயோ பார்த்திருந்தன.

மதுரை வந்த பிறகு உடனே அவர்கள் ரகசியமாய் வீரபாளையக்காரரைச் சந்தித்திருக்க வேண்டும்.

அவரிடம் கொடுக்க வேண்டிய ஓலை திருமங்கையிடம் இருந்தது.

''சிறிதும் தாமதிக்கக் கூடாது!'' என்று புறப்படும் போது உபதேசம் பண்ணியிருந்தார்கள்.

திருமங்கை இங்கே வந்தபிறகு, அன்றைய பகல் பொழுது ஓடுகிறது. ஆனால், வீரபாளையக்காரரைப் பற்றி இன்னும் பேச்சு எடுக்கவில்லை.

வந்ததில் இருந்து ஒருவித மனக் கலக்கமாய் இருந்தாள் மங்கை.

அது சேடி ரூபாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இரண்டு மூன்று முறை அவள் காரணம் கேட்டும் மங்கை சரியாக மறுமொழி கூறவில்லை.

ஆனால், காலையில் எழுந்த பிறகு மங்கையின் உள்ளக் கிடக்கை ஒருவாறு புரிய ஆரம்பித்தது.

''ஊம்! என்ன ரூபா? என்ன சொல்கிறாய்? மதுரை ஏன் சீக்கிரம் வந்துவிட்டது என்று தோன்றவில்லையா? இன்னும் பிரயாணம் போய்க்கொண்டே இருந்தால் நன்றாய் இருந்திருக்குமல்லவா?'' என்றாள் அவள்.

"ஆமாம் ஆமாம்! தஞ்சாவூர் இன்னும் சீக்கிரம் வரவில்லை என்கிறீர்கள்? அவ்வளவுதானே?" என்றாள் சேடி.

மங்கை முகத்தில் தோன்றிய சுருக்கம் அந்த வார்த்தையை அவள் ரசிக்கவில்லை என்று தெரிவித்தது.

ஒரு பெருமூச்சு விட்டு விட்டு அவள் சொன்னாள். "இல்லை ரூபா! எனக்கு இப்படி ஒரு பிரயாணம் போனது எவ்வளவு பிடிக்கிறது தெரியுமா? பிரயாணத்தை முடிக்காமல் போய்க்கொண்டே இருக்கலாம் என்று தோன்றுகிறது" என்றாள் அவள்.

பிறகு, "அந்த வீரரைப் பார்த்தாயா? என்ன கம்பீரமாக இருந்தார்? அவரோடு நேற்றுவரை பிரயாணம் செய்துவிட்டு இன்றைக்குத் திடீரென்று அது இல்லாமல் போனால் மனசு எவ்வளவு சூன்யமாகிறது?" என்றாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும்தான் ரூபாவுக்கு மனதில் ஏதோ குறுகுறுப்பு ஏற்பட்டது.

சட்டென்று மங்கையின் மனம் நினைக்கும் தடம் தட்டுப்பட்டது போல் இருந்தது.

அது உண்மையாக இருக்குமா?

"உம்....எந்த முடிவும் திடீரென்று எடுத்துவிடக் கூடாது!" என்று நினைத்தாள், சேடி ரூபா.

மங்கையை நோக்கி, "அம்மா! வீரபாளையக்காரரை உடனே போய் நாம் பார்க்க வேண்டாமா?" என்று கேட்டாள், அவளை நினைவு படுத்தும் ரீதியில்.

"எல்லாம் போகலாம்! அதற்கு முன்னாடி, பாவம், அந்த மனிதரைக் காணலையாம். கேட்கிறதுக்கே வருத்தமாக இருக்கிறது!" என்றாள்.

அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை.



# 21

வீரசேனனுக்கும் பீமசேனனுக்கும் கவலை அதிகமாகியது. திருமங்கையிடம் விசாரித்து வந்துவிட்டார்கள், அவள் சொல்வதில் நம்பிக்கையும் இருந்தது. இருந்தாலும் சிறிதளவு சந்தேகமும் இருந்தது. அவள் இருக்கும் மாளிகையைக் கண்காணிக்க வேண்டும் என்று இருவரும் தீர்மானித்தார்கள். குறிப்பாக இரவு வேளைகளில் அவசியம் கவனிக்க வேண்டும்!

பகலில் இருவரும் வியாபாரிகள் போல நடித்து ஊரின் கடைத்தெருவில் மற்றவரோடு பழகும்போது, பல செய்திகள் உதிரிகளாக அவர்கள் காதுகளில் விழுந்தன.

மதுரை மாநகரம் நிறைய ஒற்றர்களுக்கு இலக்காகி இருந்தது.

ஆனைகுந்திக்குத் தெற்கில் உள்ள அனைத்து நாட்டாரும் தங்கள் தங்கள் ஒற்றர்களை மதுரைக்கு அனுப்பி நிலவரம் பார்த்துவரச் சொல்லி இருந்தார்கள்.

விஜய நகரம் அழிந்து அதன் பலம் குன்றிப்போய் ஆனை குந்திக்குள் அடங்கிப் போய்விட்டதால்,

தெற்கில் கப்பம் கட்டிய மன்னர்களும், கட்டாத மன்னர்களும் இனி நாடுகளின் நிலைமை என்னாகும் என்பதைப் பற்றி தெரிந்து கொள்ள ஆவல் பெற்றிருந்தார்கள்.

அவரவர்க்கு வேண்டிய ஆதாயங்கள் ஏதாவது கிடைக்குமா, மதுரை நாயக்கர் ஆட்சி மறையுமா, அல்லது அதன் அதிகாரம் குறையுமா என்பனவற்றையெல்லாம் அறிந்துவர ஒற்றர்களை அனுப்பி இருந்தார்கள்.

இன்னொரு விஷயமும் அவர்களுக்கு ஆவலை அதிகமாக்கியிருந்தது.

விஜயநகரத்தின் பெரும் சொத்துகள் அனைத்தும், தெற்கே எங்கேயோ ஒளித்து வைக்கப்பட்டிருப்பது பலத்த வதந்தியாக எங்கும் பரவிவிட்டது.

அதனோடு, மதுரை ஆட்சியின் பிரதானி அரியநாயக முதலியார் சமீபத்துக் காலமாய் எங்கிருக்கிறார் காணவில்லை என்பது மற்றொரு பேச்சச் செய்தியாகப் போய்விட்டது.

அந்தச் சொத்துக்களை அவர்தான் எங்கேயோ வைத்துப் பராமரித்து வருகிறார். அது விஷயமாகத்தான் அவர் எங்கேயோ போய் இருந்து வருகிறார் என்பதும் ஒரு பேச்சாக இருந்தது.

இது தவிர, தஞ்சை மன்னர் அச்சுதப்பனின் பகை பற்றியும் பலரும் பேசினார்கள்.

இந்தப் பகையை அடுத்து, பல மன்னர்களும், பாளையத் தலைவர்களும் தஞ்சைப் பக்கம், மதுரைப் பக்கம் என்று இரு கட்சிகளாகப் பிரித்து வருகிறார்கள் என்பதும் தெரிந்தது.

இப்படி மதுரை பலவித வதந்திகளுக்கும் செய்திகளுக்கும், சூழ்ச்சிகளுக்கும் இடமாகியிருக்க,

வீரசேனனுக்கும் தர்மசேனனுக்கும் கவலை அதிகமாகி விட்டது.

தெற்கே தென்காசிப் பாண்டியராக இருக்கும் அவர்களது மன்னர் அதிவீரன், பெயர் பெற்றவர். தெற்கு மண்டலத்தில் பலம் வாய்ந்தவர், பெரியவர்.

அவர் எப்போதுமே மதுரைக்கு உடன்பாடோடு இருந்து வருகிறார்.

இதை மற்ற சில பாண்டியர்கள் (வெவ்வேறு பாளையங்களை ஆண்டு வருகிறவர்கள்) விரும்பாமல் இருக்கிறார்கள்.



மதுரை நாயக்கர் ஆட்சியைத் தள்ளிவிட்டு அதன் மூலம் தாங்கள் தனி ராஜாக்களாக வாழ விரும்புகிறார்கள்.

இதன் காரணமாக தஞ்சை மன்னரோடு ரகசியக் கூட்டுச் சேர, சித்தமாக இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல!

தாங்கள் கூட்டுச் சேர்வதோடு மற்றவர்களையும் சேர்ப்பதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மதுரை, கொந்தளித்துக் கொண்டிருக்க,

அதிவீரர் ஏதாவது சிக்கலில் மாட்டிக்கொண்டு இருக்கிறாரோ என்றும் வீரசேனனும் தர்மசேனனும் கவலைப்பட்டார்கள்.

"தர்மா! ஒரு விஷயம் நன்றாகத் தெரிகிறது. நாம் வந்து இறங்கிய இரவுதான் மன்னர் காணாமல் போயிருக்கிறார்! ஆனால், நம்மோடு உணவு அருந்திவிட்டுப் படுத்துக் கொண்டது நமக்குத் தெரியும். இல்லையா?" என்றான்.

"ஆமாம்!" என்றான் வீரசேனன்.

"அந்த இரவில் யாராவது சத்திரத்தில் வந்து மன்னரைக் கடத்திப் போயிருக்க முடியாது. ஏனெனில் நிச்சயம் சச்சரவு ஏற்பட்டிருக்கும். நாம் எழுந்திருப்போம், இல்லையா?"

தர்மன் அதை யோசித்துவிட்டு "ஆமாம்" என்று தலை அசைத்தான்.

"எனவே, இப்படி நடக்காதபோது, நமது மன்னரே தான் எழுந்து அந்த நடுநிசி வேளையில் வெளியே போயிருக்க வேண்டும்" என்று நினைக்கிறேன்."

"ஏன் போகிறார்?"

"இது தெரியாதா! நம் மன்னர்தான் மன்மதப் பாண்டியர் ஆயிற்றே?"

"ஓ!..." என்று விநயமான சிரிப்போடு தர்மன் தலை ஆட்டினான். "ஏதோ பெண் கலவி சம்பந்தமாய் நூல் எழுதுகிறார் என்று கேள்வி."

"ஆமாம்! வடமொழியில் இருப்பது போல் நமது மொழியில் அதுபோல நூல் இல்லையாமே!"

"அப்படியா! எனக்குத் தெரியாது. ஆனால், இப்போது நாம் ஒற்றுப் பார்க்க வந்த இடத்திலும், அவர் ஏடும் எழுத்தாணியும் கொண்டு வந்திருப்பது ஆச்சரியமாக இருந்தது."

"ஆச்சரியமென்ன? படித்தவர்கள் எல்லாருமே கையில் ஏடு இல்லாமல் இருப்பார்களோ! அதுவும் நம் மன்னர் போல் அதிகம் கற்றவர் கையில் இவ்வாறு இருக்குமே?"

"உண்மைதான்! அவரேதான் எழுதியிருக்கிறார். "கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று!

"ஆமாம்! நீதி நூல் எழுதியவர் இப்போது காம நூல் எழுதி வருகிறார்"

ஆகா! படித்தால் மகிழ்ச்சியாக இருக்குமோ?"

"அதற்காக நாலு இனப் பெண்களை ஆராய்வதில் இருக்கிறார்."

"நான்கு இனமா?"

"ஆமாம்! போக உணர்ச்சியில் வெவ்வேறு பெண் களுக்கு வெவ்வேறு ருசி உண்டு."

"அப்படியா!"



"ஆமாம்! தானாகவே விரும்புவாள் ஒருத்தி! அழைத்தால் எழுவாள் ஒருத்தி! சல்லாபம் செய்தால்தான் விழிப்பாள் ஒருத்தி! எது செய்தாலும் ஜடமாக இருப்பாள் ஒருத்தி! இதெல்லாம் பிறவியிலிருந்து வளர்ந்து வரும் குணங்கள்!"

"புரியுது! அதை எல்லாம் ஆய்ந்து வருகிறாரா?"

"ஆமாம்! இதனால் ஒரு இரவுப் பொழுதை அவர் வீணாக விடுவது இல்லை. ஒன்று நூலைப் படிப்பார். அல்லது ஆராய்வதற்குப் போயிருப்பார்."

"எங்கே போவார்?"

"மடையா! இதைக்கூடச் சொல்ல வேண்டுமா? பெண்ணைத் தேடி"

"அப்படியானால், வீரா, மன்னர் அன்று இரவும் பெண்ணணைத் தேடிப் போயிருப்பாரோ?"

வீரசேனன் முகம் பளிச்சிட்டது. "இருக்கலாம்! ஆனால் ஏன் திரும்பி வரவில்லை?"

"அதுதான் பிரச்சினை."

"அவர் போயிருந்தாலும் அதிக தூரம் போயிருக்க முடியாது."

"ஆமாம்! சமீபத்தில் உள்ள தாசிகளைத் தேடிப் போயிருக்கலாம்"

"அங்கே அவருக்கு ஏதாவது நடந்திருந்தால்..."

"அதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும்."

"நாம் ஒன்று செய்யலாம்! இரவில் சத்திரத்து அருகே உள்ள தெருக்களில் உலாவலாம்! யார் நம்மை பெண் சுகத்திற்கு அழைக்கிறார்கள் என்று பார்க்கலாம்."

அன்று இரவில் அவர்கள் தெருக்களில் மெதுவாகச் சுற்றினார்கள்.

அதற்காக நடு யாமத்தைத் தேர்ந்து எடுத்திருந்தார்கள். ஏனெனில் அதிவீரர் அந்த நேரத்தில்தான் போயிருக்க முடியும்.

ஒருவர் பின் ஒருவராக இடைவெளிவிட்டுப் போகும்போது.

''ஐயா!'' என்று முன்னால் போன வீரசேனனை யாரோ அழைத்தார்கள்.

ஒரு நடுத்தர வயது மனிதர் ஓடிவந்தார்.

''இரவில் வழி தெரியாது திண்டாடுகிறீர்களா? அல்லது தங்க இடம் வேண்டுமா? வாருங்கள் மாளிகை இருக்கிறது! தங்கிவிட்டுச் செல்லுங்கள்! அற்புதமான சொர்க்கம் கிடைக்கும்'' என்றான்.

''நல்ல இடமா?'' என்றான் வீரசேனன்.

''ஆமாம் ஐயா! அது போல மாளிகையையும், தண்ணீர்ச் சுனையையும் எங்கும் பார்த்திருக்க மாட்டீர்கள்! வாருங்கள்! நல்ல சரசத்தையும் சல்லாபத்தையும் அனுபவிக்கலாம்'' என்றார் வந்தவர்.

வீரசேனன் அவரோடு போக ஆரம்பித்தான். தர்மசேனன் அவனைப் பின்பற்றி வருவான் என்பது தெரியும்.

மாளிகையுள் நுழைந்தார்கள்.

அவனுக்குப் பின்புறம் கதவு மெதுவாக மூடியது. அழைத்து வந்தவர் நின்றுவிட்டார்.

ஒரு கொத்து பெண்கள் ஓடிவந்து அவன் மீது பன்னீர் தெளித்து, பூவைச் சொரிந்து அவனை அழைத்துப் போனார்கள்.



சல்லாப அறையில் அவனைக் கொண்டு விட்டார்கள்.

சந்திர நிலவு போல ஒரு பெண் அவன் கைகளைப் பிடித்து கட்டிலில் இருத்தி அவனிடம் சரசம் ஆட ஆரம்பித்தாள்.

வீரசேனனுக்கு உல்லாசம் தூக்கி வந்தது.

''உன் பெயர் என்ன?'' என்றான்.

''சந்திரப்பிரபா!''

''பொருத்தமான பெயர்!''

அவன் சொல்லும்போதே அவள் எழுந்து அவனைப் பலமாக முத்தமிட்டாள்.

அவள் சுவாசத்தில் எழுந்த நறுமணத்தில் அவன் தன் மனதைப் பறிகொடுத்தான்.

## 22

பன்னீர், கஸ்தூரி, அத்தர், சந்தனம் என்று பலவித சுகந்த சந்தங்களுடன், அந்த அறை பரிமளிக்க,

அதில் மஞ்சத்தில் மெல்ல மேனியைச் சயன கோணத்தில் ஆழ்த்தி இருகண் விழிகளால் பார்த்துக் கொண்டிருந்த அந்த தாசி,

வீரசேனனைக் கண்டதும் எழுந்து முகமன் கூறி தன்னிருப்பிடம் அழைத்து, மஞ்சத்தில் அமர்த்திக் கொண்டாள்.

வாசனைகள் அனைத்தும் கலந்து ஏதோ ஒரு விகிதமாய் வீச,

அதில் ஒரு மயக்க நிலை தோன்றுவதை சீக்கிரம் உணர்ந்தான், வீரசேனன்.

அவனை அருகில் இழுத்து, கைகளை நீவிவிட்டு முதல் சல்லாபத்தை ஆரம்பித்தாள், அவள்.

வீரசேனன் அந்த சுகந்த அனுபவங்களை புளகிதமாய் அனுபவித்துக் கொண்டிருக்க–

மனம் மட்டும் எச்சரிக்கை! எச்சரிக்கை! நீயே இதில் முடங்கிவிடப் போகிறாய்! என்று, கட்டியம் கூறியது!

வீரசேனனும் பொறுப்பு மிகுந்தவனாய் தன் ஆசை எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு அவளிடம் சல்லாபிக்க ஆரம்பித்தான்.

''நீ வித்தயாசமாக இருக்கிறாயே!'' என்றான், அவன்.

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

''அழகு மட்டுமல்ல! நீ எங்களை அழைக்கும் முறையும்!''

அவள் சிரித்தாள்.

அவளுக்குப் புரிந்து விட்டது.

பொதுவாக, அந்தி நேரங்களில் வாயிலில் நின்று போவோர் வருவோர் மீது அம்புகளைத் தொடுப்பார்கள்.

சிலர் கையால் கூட அழைப்பார்கள்.

சிலர் வீதிக்குள் சென்று கையால் தொட்டு இழுத்து விடுவார்கள்.

இந்த முறைகள் எல்லாவற்றையும் தவிர்த்து வீட்டில் இருந்தவாறே அவள் ஆடவர்களைக் கவர்ந்து கொண்டிருந்தாள்.

அதற்கு உதவியாகச் சிலர் அவளைப் பற்றித் தனித் தனியாக ஒவ்வொருவரிடமும் விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

''இதில் மட்டும் நூதனம் இல்லை!'' என்று தொடங்கினாள், சந்திரப் பிரபா. ''இங்கே இன்னும் எத்தனையோ புதுமைகளைக் காணப்போகிறீர்கள்!



இதுவரை காணாத இன்பங்களைக் காணப் போகிறீர்கள்'' என்றாள்.

இதற்குள் ஒரு பணிப்பெண் இரு குடுவைகளில் மதுவை அவர்களிடம் கொடுத்தாள்.

''பருகுங்கள்?'' என்று சந்திரப்பிரபா சொல்ல, அவன் அதைச் செய்யவில்லை.

''உன் பார்வையே போதை கொடுக்கிறது. இது எதற்கு?'' என்று சொல்லி அவளை இழுத்து அணைத்தான்.

''அய்யோ!'' என்று பொய்யாக வலி காட்டித் திமிற நினைத்தாள், அவள்.

வீரசேனன் அவளை விடவில்லை!

அதற்குள் அவளது கச்சுவின் முடியை அவனது ஒரு கை அவிழ்க்க, மற்றொன்று அவள் மார்பில் புகுந்து, பெரிய வியாபகமாகப் பரவியது.

''ம்ம்ம்ம்'' என்று ஒரு பரவச முனங்கல் அவனை மீறியும் வந்தது.

அவ்வளவு மிருதுவாக இருந்தன அவள் மார்புகள்!

சருமம் எந்த அப்பழுக்கும் இல்லாமல் வழுக்கிவிட்டது.

அவனது கைகளுக்கே போதை ஏறுவதை அவன் உணர்ந்தான்.

அவன் இப்போது இரு கைகளையும் பரிமாறி, தனது திறமைகளை சாமர்த்தியமாக உபயோகிக்க–

அவள் தன்னை மீறி தானே நெகிழ்ந்து போனாள்.

பரவசங்கள் அவள் கண்களை மூடின.

வீரசேனனுக்கு உற்சாகமாக இருந்தது.

சரி! இவளிடம் ஆரம்பித்த உடனேயே இவ்வளவு துணிச்சலாக யாரும் செய்திருக்கமாட்டார்கள்?

இப்போது அவன் செய்வதால் மனம் குமைந்து போகிறாள்.

எவ்வளவோ முயன்றும் முடியாமல் தன்னைத் தானே இழந்து, தனது உடல் சுகங்களுக்கு அவ்வளவு சீக்கிரத்தில் பலியாகி விட்டாள்.

இப்போது அவளது மோக வெள்ளத்திலே அவளே அழைத்துச் செல்லப்பட்டாள்.

வீரசேனன் அவளை விடவில்லை!

விட்டால், எங்கே முறுக்கிக்கொள்ளும் நிலைக்குப் போய்விடுவாளோ, என்று நினைத்து–

அவன் அவசர அவசரமாகத் தனது கைவிளையாடல்களை, கீழே கொண்டு போனான்.

இத்தனை சுகம் அதில் உற்பவிக்கும் என்பது அவளுக்குத் தெரியாது போலும்.

அவன் மிருதுவழி, கூடுவழி, மிகக் கூடுவழி என்று வெவ்வேறு வேகவகைகளையும் கையாண்டு அவளை இடையறாது மெய்மறக்கும் நிலைக்குக் கொண்டுபோய்க் கொண்டே இருந்தான்.

அவள் உடம்பு முழுவதும் வெட்கை கொதித்துக் கொண்டு வந்தது.

''அம்ம்...... அம்ம்.....'' என்று மெல்லிதாக முனகினாள்.

உடம்பு அடிக்கடி நெளிந்து அவன் செய்கைக்கு ஜாடை செய்து கொண்டிருந்தன.

வீரசேனனும் சந்தர்ப்பத்தை வீணடிக்கவில்லை, அவளுக்கு இசைவாக செயல்படத் தொடங்கினான்.

கடைசியில் எல்லாவற்றையும் தாண்டி பெண்மையின் மையத்தை நோக்கிப் போனபோது, அங்கே அவள் சித்த நிலையில் இருப்பது தெரிந்தது.



அவனுக்குத் தடை சொல்லாமல், அவள் இசைந்தபோது–

''எனக்கு இன்றைக்கு எதுவும் செய்யப்பிடிக்கவில்லை'' என்றான்.

''அய்யோ!'' என்று பாதி வேதனையாக அவள் கூறினாள்.

''எனக்கு இன்றைக்குத் துக்கநாள்!''

''என் நண்பன் வெளியிலே போனவன், இரண்டு நாளாய்க் காணவில்லை! ஒரே வருத்தமாக இருக்கிறது!''

''யார் அந்த நண்பன்!''

''என்னோடு மதுரைக்கு வந்தான்! இங்கே பக்கத்திலே சத்திரத்திலேதான் இருந்தோம். கொஞ்சம் விளையாட்டு புத்தி உண்டு. ராத்திரி வெளியிலே போனான்! அப்புறம் காண வில்லை!'' என்றான்.

அவள் மேலும் உலைந்தாள்.

''உங்கள் நண்பரைப் பற்றிய விசாரிப்பை அப்புறம் வைத்துக்கொள்ளுங்கள்! இப்போது இங்கே சொர்க்கத்தை அனுபவியுங்கள்!'' என்று முனங்கினாள், அவள்,

''அப்படி இல்லை சந்திரப்பிரபா! அவன் என் உயிர்! அவன் இல்லாவிடில் எனக்கு எதுவும் ஓடாது!'' என்றான்.

''எங்கே போய்விடப்போகிறார்! நிச்சயம் எந்த அநியாயமும் நடக்காது. வாருங்கள்!'' என்றாள்.

''இல்லை, சந்திரப்பிரபா! இங்கே எங்கேயாவது ஒரு தாசி வீட்டில் அவன் இருக்கவேண்டும் அவர்கள் ஏனோ வெளியில் விடாமல் வைத்திருக்கவேண்டும்'' என்று கூறினான். வீரசேனன்.

''வந்துவிடுவார்! கவலைப்படாதீர்கள்'' என்றாள், அவள்.

''அவன் இருக்குமிடம் தெரிந்துவிட்டால் போதும் நிம்மதியாகி விடுவேன்! நிச்சயம்?'' என்றான், அவன்.

அவள் மறுமொழி கூறவில்லை.

''உனக்குத் தெரியுமா சந்திரப்பிரபா?'' என்றான், அவன்.

''தெரியாது!''

''நிச்சயம் தெரியும்! அல்லது இருக்கிற இடத்தையாவது தெரிந்து வைத்திருப்பீர்கள்! சொல்லுங்கள்'' என்றான்.

''தெரியாது!''

''நான் நம்பவில்லை நிச்சயம் நீங்கள் தெரிந்து வைத்திருப்பீர்கள்! சொல்லுங்கள். அதற்குமேல் நான் உங்கள் ஆசைக்குக் கட்டுப்படுகிறேன்!'' என்றான்.

அந்த விஸ்தார கூடத்தில் திருமங்கை ஒரு மஞ்சத்தின் மீது அமர்ந்தாள்.

சேடி ரூபாவதி ஓடி ஓடி வந்தாள்.

''வீரபாளையத்தார் வருகிறார்'' என்று பரபரப்போடு கூறினாள்.

திருமங்கை எழுந்து அமர்ந்துகொண்டாள்.

அவசரமாக முகத்தைத் துடைத்து பளிச்சிட வைத்தாள்.

வீரபாளையத்தார் கம்பீரமாக கட்டிடத்துள் நுழைந்தார். நல்ல உயரம்! அதற்குத் தகுந்த தேகக்கட்டு! வயதாகிவிட்டாலும் இன்னும் இளைஞர் போல் தோற்றம் கொடுத்தார்.

மிடுக்கும் துடுக்குமாக நடந்து வீரபத்திரர் சிலை வருவது போல வந்தார்.

''வரவேண்டும் வரவேண்டும்!'' என்று எழுந்து கைகூப்பினாள், திருமங்கை.



வீரபாளையத்தார் கைகூப்பி தனது மரியாதையைத் தெரிவித்துவிட்டு–

''சவுக்கியந்தானே!'' என்று கூறி மீசையோடு சேர்ந்து பெரிய புன்னகை காட்டி, அவள் எதிரே அமர்ந்தார்.

திருமங்கை அமர்ந்ததும்,

''தாங்கள் வந்தது ரொம்ப நல்லதாயிற்று நமக்கெல்லாம் இதனால் நன்மை ஏராளம் பிறக்கப் போகிறது!'' என்று கூறினார், வீரபாளையத்தார்.

''பிறக்கட்டும்! பிறக்கட்டும்! நம் வம்சங்கள் தழைக்கட்டும்!'' என்று கூறினாள், அவள்.

''ஆளைப் பிடித்துவிட்டோம். தெரியுமா?'' என்றார், வீரபாளையாத்தார்.

''அப்படியா! ஆச்சரியமா இருக்கிறதே! இனி நம் அதிருஷ்டந்தானா?'' என்று கேட்டாள், திருமங்கை.

''இனி தென்பாண்டியத்தைக் கைப்பற்றிவிடலாம்!'' என்றார், அவர்.

''அய்யா! தாங்கள் யாது சொல்கிறீர்கள்? யாரைச் சிறை வைத்திருக்கிறீர்கள்? சொல்லுங்கள்'' என்றாள், அவள்.

அவள் முகத்தில் கலவரம் ஓடியது.

## 23

சந்திரப்பிரபா அந்த இரவில் உடல் வேகம் தாங்காது தவித்துக் கொண்டிருந்தாள்.

வீரசேனனோ அவளிடம் அந்த நேரத்தில் அவளிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தான்.

சந்திரப்பிரபா கடைசியில் உடல் தினவு தாங்காது ''முதலில் உடல் சுகத்தைத் தாருங்கள். பிறகு மற்றதெல்லாம்!'' என்று கூறினாள்.

வீரசேனனுக்கு யோசனைகள் பறந்தன! உண்மையில் சந்திரப்பிரபா துடிக்கிறாள் என்பது தெரிந்து விட்டது. பொதுவாக இது தாசிகளிடம் நிகழாத செயல்! அந்த அளவுக்கு அவன் அவளுக்குப் போக இச்சையைக் கொடுக்க முடிந்தது. சில வித்தைகள் செய்து, அவள் உடலை முறுக்கிவிட்ட வீணை போல் ஆக்கிவிட்டான். இப்போது எங்கே லேசாகத் தொட்டாலும் அவள் பேசுவாள். கொதிப்பாள்! ஆர்ப்பரிப்பாள்.

இந்த நிலையில் அவனுக்கு ஒன்று தோன்றியது.

எப்போது ஒரு பெண்ணுக்குப் போக இச்சையை இந்த அளவுக்குக் கொடுத்து விட்டோமோ, அவள் நாளையும் இதை வேண்டி அவனிடம்தான் வந்து சேருவாள்.

வேறு யார் போகம் செய்தாலும் அது திருப்தியாக இராது.

ஆக, எப்படியும் அவனைத் தேடி வருவாள் என்ற நினைப்பு உறுதி ஆக—

சரி இவளுக்கு இவளது விருப்பத்தைக் கொடுத்து விடுவோம் என்று, அவள் மீது படர்ந்தான்.

அவன், உச்சத்தில் இருந்து இறங்கியபோது—

அவள் புலம்பி முனகி, உடம்பை பல தினுசுகளில் வளைத்து ஒரு போகத்தின் பின் அதிர்ச்சிகளை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

கடைசியில் அவன் அவளை மெல்ல உலுப்பி, "இப்போ சொல்லு" யார் இங்கே சிறைப்பட்டிருக்கிறார்கள்?" என்று அதட்டிக் கேட்டான்.

சிறிது நேரம் வரை இங்கும் அங்கும் புரண்டு அவள் புலம்பினாள்.



பிறகு அவள் ஆசுவாசமானாள். வெகு நேரம் இயக்கப்பட்ட வாகனம் போல், அவள் சூடு இறந்தாள்.

"இந்தா, சொல்லு! என்று வீரசேனன் வற்புறுத்த—

"இங்கே எங்கள் எஜமானி வீட்டில் இருக்கிறார். அவள் அவரைச் சிறைப்படுத்தி இருக்கிறாள்!" என்ற திடுக்கிடும் செய்தியைக் கூறினாள்.

"அவரை ஏன் சிறைப்படுத்தினாள்? இன்னும் பல நாள் அவரோடு மோகம் துய்க்க ஆசையா?" என்றான் அவன்.

"அல்ல! எங்கள் எஜமானி வீரபாளையக்காரரின் அபிமான தாசி ஆயிற்றே! அந்தப் பாளையக்காரர் சொற்படிதான் அவரைச் சிறைப்படுத்தி இருக்கிறார்கள்!" என்றாள்.

"ஆ" என்று மனசுக்குள் ஒலி எழும்ப, வீரசேனனுக்கு எல்லாம் புரிந்து விட்டது. வஞ்சகப் பாளையக்காரர் இங்கேயும் வந்துவிட்டாரா? எப்போது வந்தார்? எப்படி வந்தார்? அவருக்கு எப்படி அதிவீரன் இங்கே வந்துள்ளார் என்பது தெரிய வந்தது?

இது ஒரு பயங்கர விஷயமாயிற்றே! நாளைக்கு இதனால் எத்தனையோ விபரீதம் நடக்குமே. சீக்கிரம் மன்னரை மீட்க வேண்டுமே! நேரம் தாழ்த்தக் கூடாதே.

இப்படிப் பலவாறாக எண்ணியவன் அவளிடம் விடை பெற்றுப் புறப்பட்டான்.

பெரிய சித்திரக் கூடத்தின் கீழே ஆசனத்தில் அமர்ந்திருந்தார், வீரபாளையாக்காரர்.

எதிரே திருமங்கை சற்று திகைப்புடன் காணப்பட்டாள்.

"சரியான குள்ள நரி இந்தத் தென்காசிப் பாண்டியன்! இலேசில் அகப்பட மாட்டான்! யாரும் பிடிக்கவும் முடியாது. அத்தனை வித்தைகளையும் பிடிப்பது என்றால் இரண்டு அத்தனை வித்தைகளையும் பிடிப்பது என்றால் இரண்டு விஷயங்களை உபயோகிக்க வேண்டும். நூலையும்

தையலையும்!'' என்று சொல்லி பலமாகச் சிரித்தார் வீர பாளையக்காரர்.

''நூலும் தையலுமா?'' என்று கேட்டாள் திருமங்கை.

''ஆமாம்! நூல் என்றால் தமிழ் நூல், தையல் என்றால் பெண்! இந்த இரண்டும் இருந்தால்போதும். மடக்கி விடலாம். ஆள் மசிந்துவிடுவான்!'' என்றார்.

''நூல்களைப் படிக்க ஆர்வமுள்ளவரா?'' என்றாள் திருமங்கை.

''ஆமாம்! அது மட்டுமல்ல; நூல்களை ஆக்கவும் வல்லவன்!''

''அப்படியா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் திருமங்கை.

''ஆமாம்! அதனால் அவனது காம லீலைகளைக் கூட பலர் மறந்து அவனை ரசிக்கிறார்கள்!''

திருமங்கையின் கண்கள் பிரமை தட்டின. தணிந்த குரலில் காற்றை நோக்கிப் பேசுபவள் போல் ''ஒரு கவியா அவர்?'' என்று கேட்டாள்.

''ஆமாம்! நூதனக் கவி. பெரியவர்களுக்கும் நூல் எழுதுவான். சிறியவர்களுக்கும் எழுதுவான். இன்றைக்கு தமிழ் கற்பதற்கு யாரெல்லாம் பால பாடத்தைப் படிக்கிறார்களோ அவர்கள் எல்லாரும் அவன் எழுதியதைத்தான் ஆரம்ப நூலாகக் கற்றுவிட்டு மேலே போகிறார்கள்! அப்படி ஒரு நீதி நூலை ரொம்ப எளிதாக யாவரும் படிக்கும் வண்ணம் எழுதி இருக்கிறான்.''

''அப்படியா!'' என்று குதூகலத்துடன் கேட்டாள் திருமங்கை. தங்களுக்கு ஏதாவது மனப்பாடமாகத் தெரியுமா?'' என்றாள் அவள்.

''ஏன் தெரியாமல்? என் ஊரில் தமிழ்ப் பாடசாலை வழியாகத்தான் நான் ஆற்றுக்குக் குளிக்கச் செல்வது வழக்கம். ஒவ்வொருநாளும் அவன் எழுதியதைக் கேட்காமல்



இருக்க முடியாது. மாணாக்கர்கள் எல்லோரும் முறை வைத்துப் பாடுவார்கள்'' என்று சொல்லி–

''இதோ கூறுகிறேன், பார்!'' என்று ஆரம்பித்தார்.

''ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.

ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.

மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்..'' என்று பாடி நிறுத்திவிட்டு ''எப்படி?'' என்றார் வீரபாளையக்காரர்.

''அற்புதம்! அற்புதம்! கவிதை என்றால் பண்டிதர்க்கு மட்டும் என்று அல்லாமல் கீழே பாமரர்க்கும் கொண்டு வந்துவிட்டாரே!'' என்று ஆர்ப்பரிப்புடன் கூறினாள் அவள்.

''இன்னும் என்ன சொல்றான் கேளு!''

''கற்கை நன்றே
கற்கை நன்றே
பிச்சை புகினும்
கற்கை நன்றே!''

திருமங்கை மனத்தின் மகிழ்ச்சி மாளவில்லை! தமிழ்க் கவிதைகள் இப்படி இருக்கலாமே என்று நினைத்திருக்கிறாள். அப்படியே மாற்றிவிட்டாரே அவர்! எளிதாக, எல்லாரும் புரியும்படி சுலபமான சாதாரண வார்த்தைகளில் பாட்டு இயற்றிவிட்டாரே! இனி கவிதைகளுக்கு மனசுகளை எளிதில் திறந்துவிடலாமே! சிக்கல் இல்லாது உள்ளே நழுவிச் செல்லுமே!

அவள் அந்தப் பாட்டுகளை பரவசமாய் ரசிப்பதை வீரபாளையாக்காரர் ரசிக்கவில்லை.

''இப்படிப் பாட்டுப் பாடி எல்லாரையும் பாட வைத்து தென்பாண்டிய நாட்டையே கெடுத்து வைத்துவிட்டானம்மா!

இவன் இந்த மதுரை நாயக்கருக்கு ஒரு பாதம் தாங்கி! அவருக்கே அடிமையாக வாழ்பவன்! இவன் மட்டும் நம் கோஷ்டியோடு சேர்ந்தால் நாயக்கர் ஆட்சியிலிருந்து என்றைக்கோ தப்பியிருப்போம்! இவன் இணங்காமல்தான் நமது லட்சியம் எல்லாம் கெடுகிறது. எனவே, இவன் நமக்குப் பரம விரோதி!'' என்றார் வீரபாளையக்காரர்,

திருமங்கை அவரைப் பார்த்துக்கொண்டிருந்தாளே தவிர, கேட்டுக் கொண்டிருந்தாளா, தெரியவில்லை.

''மங்கை! உங்கள் தந்தையும் அவனைப் பரம விரோதி என்றுதான் கருதுகிறார். அவனை ஒழித்து விட வேண்டும் என்கிறார்'' என்று உரக்கக் கூறினார் வீர பாளையக்காரர்.

அவளை அது உலுப்பி விட்டிருக்க வேண்டும்.

''ஓ சொல்லியிருக்கிறார்!'' என்று சொல்லி, ''இப்போது அந்தப் பாண்டியரை எங்கே வைத்திருக்கிறீர்கள்?'' என்றாள்.

''என் மாளிகையில்தான்! பின்னால் கிடங்கு கட்டி பாதாள சிறை வைத்திருக்கிறேனே! அங்கே தள்ளி இருக்கிறேன்!'' என்றார் அவர்.

## 24

''கிடங்கிலேயா தள்ளி இருக்கிறீர்கள்?'' அது நேர்மையா?'' என்றாள் அவள்!

''ஏன், செய்தால் என்ன?'' என்றார் வீரபாளையக்காரர்.

''அதனால் என்ன லாபம்?'' என்றாள் மங்கை.

சிரித்தார் வீரபாளையக்காரர்!

''ஒன்று அவன் நம் வழிக்கு வரவேண்டும் அல்லது உயிரை இழக்க வேண்டும்'' என்று சொல்லிச் சிரித்தார் அவர்.



''சரி! அந்த விஷயத்தை விட்டுத்தள்ளுவோம்! உங்கள் தந்தையிடமிருந்து ஓலை வந்திருக்கிறது! உங்களை வெகு ரகசியமாக தஞ்சையில் கொண்டு சேர்த்துவிட வேண்டும் என்று! நான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்! நாளையோ, மறுநாளோ புறப்படுகிறீர்கள்! இன்று இரவில் நமது மாளிகையில் விருந்து அருந்துகிறீர்கள்!'' என்றார்.

இரவு பாளையக்காரர் மாளிகையில் விருந்து கொடுத்தார்கள். வீரபாளையக்காரருக்கு ஒத்துழைக்கும் இன்னும் ஐந்து பாளையக்காரர்களும் வந்திருந்தார்கள். அவரவருடைய மனைவி மாரும் வந்திருந்தார்கள்.

கோலாகலமாக தங்கத் தட்டங்களில் அமர்ந்து உண்டு விட்டு, அவரவர் சிறிது நேரம் அளவாளாவி விட்டு, பிரிந்து போக, வீரபாளையக்காரரின் நான்காவது மனைவி மின் கண்ணாளுடன் தனியே சென்று அவளுடன் சீக்கிரம் சிநேகமாகிக் கொண்டாள்.

இருவரும் வெகு நேரம் பேசி இருந்துவிட்டு, ''உங்கள் மாளிகையில் சிறைக் கிடங்கு இருக்கிறதாமே! நான் பார்க்க வேண்டுமே!''என்றாள்.

''ஓ! நானும் அதை இங்கே வந்ததும் போய்ப் பார்த்தேன்! எனக்கு அந்தப் பாதாளத்தில் இறங்குவதற்கே மயக்கமாக வரும். அமிர்தவல்லியை அனுப்புகிறேன்! அவளுடன் போய்ப் பாருங்கள்!'' என்றாள்.

அமிர்தவல்லி அங்கே பணிப்பெண். அவள் கையில் சிறிய தீவர்த்தி ஏந்தி, பின்புறம் அழைத்துச் சென்றாள்.

உண்மையில் அது ஒரு பாதாளக் கிடங்குதான்.

மூன்று முழ அகலப் படிக்கட்டில் எச்சரிக்கையாக இறங்க வேண்டி வந்தது.

பூமியின் கர்ப்பத்துள் நுழைகிறோம் என்று கூட எண்ணம் தோன்றியது. அவ்வளவு அதி ஆழமாகச் சென்றது படிகள்.

கீழே சமதளத்தை அடைந்ததும், அவள் மனம் பதக் பதக் என்று அடித்துக் கொண்டது.

இரண்டு இரும்புக் கதவுகள் அங்கே தென்பட்டன.

''உள்ளே யாராவது இருக்கிறார்களா அமிர்தவல்லி?'' என்றாள் மங்கை.

தன்னை இவ்வளவு அழகாக, பெயர் சொல்லி பாசத்தோடு அழைப்பதைக் கண்டு அமிர்தத்துக்கு ஒரே மகிழ்ச்சி!

''ஆமாம், அம்மா! ஒருவர் இருக்கிறார்'' என்று அவள் சொல்ல—

''இந்தா, அமிர்தம்! என்னை ''அக்கா'' என்றே அழை! அம்மா மரியாதை வேண்டாம்'' என்றாள்.

மேலும் அது அமிர்தத்தை புளகாங்கிதம் ஆக்கிவிட்டது. கண்ணில் நன்றியும் விசுவாசமும் பொங்க அவளைப் பார்த்தாள்.

''ஆமாம்! நீ என் சகோதிரி மாதிரி'' அவளது ஒரு கரத்தைப் பிடித்தாள்.

''தள்ளி நில்லுங்கள் அக்கா! தீவர்த்தி!'' என்றாள்.

''ஆழிக்குள்ளே நான் பார்க்கலாமா?'' என்றாள்.

''இருங்கள்!'' என்று சொல்லி முதலில் அவள் பார்த்துவிட்டு வந்தாள்.

''ஆள் மயக்கமாக இருக்கிறான் போல இருக்கிறது. பாருங்கள்!'' என்றாள்.



மங்கை நடுங்கிக் கொண்டே கதவின் ஆழியை நெருங்கினாள்.

உள்ளே தீவர்த்தி வெளிச்சம் அடித்துக் கொண்டு பரவியது.

தரையில் கிடக்கும் அந்த உருவம் அதிவீரனா?

நம்ப முடியவில்லையே.

அதற்குள் எவ்வளவு இளைத்துக் குற்றுயிராக இருக்கிறார்?

மயங்கியா கிடக்கிறார்?

தாபத்தில் அவள் கண்கள் மருண்டன! தலை சுற்றுவது போல இருந்தது. ''ஆ'' என்று வெளிவரும் அனுதாப ஒலியை அவள் அடக்க—

''என்ன? என்ன?'' என்று கேட்டு அமிர்தம் அவள் பக்கத்தில் வந்தாள்.

சிறைக்குள் அதிவீரன் தொய்ந்த தாம்புக் கயிறு போல் கிடந்தான்.

அவன் முகம் பாதி மறைந்திருந்தது.

உடல் மெலிந்திருந்தது.

கையும் காலும் துவண்டு போய் மடிந்திருந்தன.

இடுப்புத் துணியின் இடுக்கில் ஏடு ஒன்று ஓரமாகத் துருத்தியிருந்தது.

''ஆ'' என்று மனம் அலறியது.

கண்கள் படபடத்தன.

கண்ணீர் ஒரு நதிபோல் உருவாகிக் கொண்டிருந்தது.

அந்தக் கொடுமைக் காட்சி அவளை நிறையத் தாக்கியது போலும். கால் நிற்கப் பெறாமல் சேடி மீது சாய்ந்துகொண்டாள்.

''என்ன அம்மா! இவ்வளவு பயப்படுறீங்களே?'' என்று கேட்டாள் அவள்.

திருமங்கை அழுகையை அடக்கிக்கொண்டாள்.

''ஏன் இவரை இங்கே போட்டிருக்கிறார்கள்?'' என்று கேட்டாள் பாதிப் புலம்பலாக.

''நமது எஜமானின் எதிரி இவர்'' என்றாள் அவள்.

''எதிரியா! உங்கள் எஜமானுக்கு எதிராக என்ன செய்தார்?''

''என்ன செய்தாரோ தெரியாது. இங்கே போட்டு வைத்து, வாட்டுகிறார்கள்!''

''உணவு போடமாட்டார்களா?''

''போடுவார்கள், வெறும் கஞ்சியும், மிளகாயும்தான். அதுகூட வேளா வேளைக்குக் கொடுப்பதில்லை.''

''ஏன் இப்படிச் செய்கிறார்கள்?''

''பட்டினி போட்டு வழிக்குக் கொண்டுவர வேண்டும் என்று பார்க்கிறார்கள்.''

''யார் வழிக்கு?''

''எங்கள் எஜமானர் வழிக்கு!''

''அதனால் என்ன லாபம்?''

சேடி மறுமொழி சொல்லாது திகைத்தாள். ''இதற்கு மேல் எனக்குச் சொல்லத் தெரியாது. நீங்கள் எஜமானரையே கேளுங்கள்!'' என்றாள்.



சற்று நேரம் இருவரும் மவுனமாக நின்றார்கள். பிறகு சேடி, ''அம்மா, போகலாமா?'' என்றாள் மெதுவாக.

இருவரும் படிகளில் ஏறினார்கள். அது வளைவுச் சுருளாக மேலே சென்று வீட்டின் பின்புற முற்றத்தில் கொண்டு போய் விட்டது.

பின் இரவு அது. மேலே கார்த்திகைக் கூட்டம் மினு மினுத்தது. கண்ணாடி போல ஆகாயம்.

முற்றம் பெரிய முற்றம் சலவைக் கல் பாவிய முற்றம்.

மேற்கு மூலையில் கிணறு இருந்தது. தொட்டிகளும் தேய்க்கும் கல்லும் இருந்தன.

ஒருபுறத்தில் துளசி மாடம் இருந்தது.

மேற்கு ஓரமாக ஒரு கதவு இருந்தது! அடுத்த புறத்தில் தெரு இருக்கிறது என்பதை வரிசையாகத் தெரிந்த அந்தக் கட்டிடங்கள் சொல்லின.

சற்று நேரம் அங்கே நின்றுவிட்டு, பிறகு இருவரும் உள்ளே நுழைந்தார்கள்,

''இதோ! இங்கே சாவி வைத்துவிட்டு வருகிறேன். சற்றே இருங்கள் அம்மா!'' என்று சேடி இடதுபுறம் இருந்த அறையின் கதவைத் திறந்து உள்ளே போனாள்.

தீவர்த்தி வெளிச்சத்தில், உள்ளே நிறைய சாவி வளையங்கள் சுவர் முழுதும் பதிக்கப்பட்டிருப்பது தெரிந்தது.

அரை நொடியில் சேடி வெளியே வந்தாள். திருமங்கையை அவளது சயன அறையில் கொண்டு விட்டுப் போனாள்.

திருமங்கை சயனித்துக் கொண்டாள்.

விஸ்தாரமான அறை அது!

சாளரங்கள் வெளி நோக்கி இருந்தன.

இதமாகக் காற்று வீசியும் மனது கொதித்தது.

தூங்க முயன்றாள்.

கண்ணை மூட முடியவில்லை.

அடுத்த நொடி அதிவீரன் உருவம் தோன்றி மனதில் கிலேசத்தைக் கொடுத்தது.

பெருமூச்சு வந்தது!

என்ன கம்பீரமான வாலிபன் அவன்! வழிப் பிரயாணம் முழுதிலும் அவனைப் பார்ப்பது ஒரு பொழுது போக்காக இருந்தது.

என்ன கண்ணியமாக அப்போது நடந்து கொண்டான்?

தனது பாதுகாப்பில் இரு பெண்கள் வருகிறார்களே! இவர்களைப் பெண்டாடலாமே என்று நினைத்தானா?

இல்லை!

அவளும் சேடியும் இருக்கும் பக்கம் தலையைக்கூடக் காண்பிக்கவில்லை.

தான் உண்டு தன்காரியம் உண்டு என்று இருந்தான்.

என்னவோ காம வெறியன் என்று இவனைப் பற்றி ஊரெல்லாம் சொன்னார்களே? ஆனால், என்ன கட்டுப் பாடோடு நடந்து கொண்டான் அவன்!

அவன் தமிழ்ப் பண்டிதனா?

அதுதான் கவிதை மீது அவனுக்கு அவ்வளவு ஈடுபாடு!

முகத்தில் சரசுவதியும் லெட்சுமியும் நடமாடுகிறார்கள்!



இப்படிப்பட்ட உத்தம மனிதரையா கிடங்கில் தள்ளி...

வீரபாளையக்காரர் மீது கோபம் வந்தது.

இவரது பாளையம், அந்தத் தென்காசி ராஜ்ஜியத்தில் பத்தில் ஒரு பங்குகூட இராது.

அதிவீரனை இங்கே தந்திரமாக சிறைப் பிடித்து வைத்துள்ளார்.

ஆமாம், இவன்தான் அதிவீரன் என்று வீர பாளையக்காரருக்கு எப்படித் தெரிந்தது?

அந்த விஷயம் அவளுக்கு (திருமங்கைக்கு) மட்டும் தானே தெரியும்? அதுவும் கரிசூழ்ந்தமங்கலம் கோட்டைக் காவலரிடம் அதிவீரன் சகா ஒருவன் தவறுதலாக பெயர் சொல்லப் போய்த்தானே தெரியும்?

அவளைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்?

யோசித்தாள். சட்டென்று எதுவும் புலப்படவில்லை! ஒருவேளை ஒற்று மூலம் தெரிய வந்திருக்குமோ? அப்படித் தான் இருக்கும்!

ஒரு நல்ல யாத்திரீகன் போலத்தான் வேடம் தரித்திருந்தான். அல்லது அவனை ஒரு வர்த்தகர் என்று கூறலாம்.

அவன் இப்படி வசமாக மாட்டிக் கொண்டானே.

உறக்கம் வரவில்லை.

மனதில் இப்போது சிலிர்ப்பாக ஒரு எண்ணம் தோன்றியது.

அவனோடு இன்னும் பயணம் செய்ய வேண்டும் போல தோன்றியது.

ஆமாம்! அது என்ன இன்பமாக இருந்தது.

அங்கங்கே தங்கி இரவுகளைக் கழித்து, பிறகு இவருமாய்ச் சேர்ந்து புறப்படுவது...

குதிரை மீது கம்பீரமாய்ச் செல்லும் அவன் உருவத்தை எத்தனை முறை பார்த்திருக்கிறாள்.

குதிரை ஓட்டுவது மட்டும் கலை அல்ல. அதன் மீது அமர்வதும் ஒரு கலை, அமர்ந்து நான்கு பக்கமும் பார்ப்பது ஒரு கலை....

அவனைப் பொறுத்த வரையில், அவன் செய்த செய்கை எல்லாமே "கலை" ஆகத் தெரிந்தன.

முதல் கோழி கூவியதும் அவளுக்குப் பகீர் என்றது.

திடீரென்று ஒரு பரபரப்பு அவளைப் பற்றிக் கொண்டது.

ஏனோ தெரியவில்லை. அதிவீரனின் நிலையை நினைத்தால் கண் உருகியது.

எந்தக் காரணம் ஆனாலும், அவனை அடைத்து வைத்திருப்பது சரியாகத் தோன்றவில்லை.

அவனுக்கு அவளே ஏதாவது செய்ய வேண்டும் போல் தோன்றியது.

மனதில் தத்தளிப்புகள் வந்துகொண்டே இருக்க, சட்டென்று எழுந்தாள்.

அறையைத் திறந்து வெளியே வந்தாள்.

இருட்டு உச்சத்தில் இருந்தது. நிசப்தம் வேறு. யாவும் இறந்து ஜடம் ஆனது போல் பிரமை!

பெருமூச்சுகள் வந்தன. யோசித்தாள். பிறகு விரைவாக நடந்து அந்தச் சாவி அறைக்குப் போனாள்.



தொட்டுத் தொட்டுப் பார்க்கும்போது அந்த நீண்ட துறவு கோல் அடையாளம் தெரிந்தது. அதைப் பற்றிக் கொண்டாள்.

அதிவீரனுக்கு உடம்பில் எங்கேயோ ஏதோ ஊர்வது மாதிரி இருந்தது.

கண்ணை விழித்த போது ஆச்சரியமாக இருந்தது

யார் அது? அல்லிக் கொடியா? அவள் எப்படி இங்கே வந்தாள்.

ஒரே இருட்டாக இருந்தது. கண்களைச் கசக்கிக் கொண்டு பார்த்தான்.

"ஐயா! நான்தான் திருமங்கை!" என்று மெல்லிதாகக் கூறினாள் அவள்.

"மங்கை?" என்று புரியாதவன் போல் அவன் கேட்டான்.

"நான் மங்கை! தங்களோடு மதுரைக்குப் பிரயாணம் செய்தேனே?" என்றாள் அவள்.

இதற்குள் அதிவீரனுக்கு முழு நினைவும் வந்து விட்டது. அந்தப் பழம் காற்றும், அதன் புழுக்கமும், கெட்டுப் போன உணவின் வீச்சமும் மூக்கில் ஏற,

"ஆ! அந்த வீரபாளையத்தான் கிடங்கில் அல்லவா அடைபட்டிருந்தோம்" என்று நினைத்தான் அவன்.

சடக்கென அவளை நோக்கி, "மங்கையா?" என்று கேட்க,

"ஆமாம் சுவாமி!" என்றாள் அவள்.

"இங்கே நீங்கள் எப்படி வந்தீர்கள்?"

"இங்கே நான் ஒரு விருந்தினராக வந்திருக்கிறேன்!"

"எழுந்திருங்கள்! நீங்கள் உடனே வெளியே போக வேண்டும். இங்கே இருந்தால் ஆபத்து" என்றாள்.

"அப்படியா? வெளியே போக முடியுமா!"

"முடியும் வாருங்கள்."

அவன் தடுமாறி எழுந்தான். சட்டென்று அவள் கை கொடுத்தாள்.

இல்லாவிடில் விழுந்திருப்பான்.

அவனை அழைத்துக் கொண்டு, அவள் வெளியே வந்தாள்.

சுருள் படிகளில் அவர்கள் ஏறினார்கள். மேலே முற்றத்துக்கு வந்தார்கள்.

"இந்தக் கதவைத் திறக்க முடியுமா?" என்றான், அவன், தெருவை நோக்கி இருக்கும் கதவைப் பார்த்து.

"திறக்க வழியில்லை! நீங்கள் சுவர் ஏறித்தான் வெளியே குதிக்க வேண்டும்."

அதிவீரனுக்கு அதற்குள் சுய தைரியம் வந்துவிட்டது!

சுவரைச் சுற்றி வசம் பார்த்தான்.

"அம்மணி! உங்கள் உதவி வேண்டுமே!" என்றான்.

"என்ன உதவி?"

"நான் தொத்தி நிற்கிறேன். நான் கீழே சாயாமல் முன்னால் தள்ளுங்கள்" என்றான்.

இரண்டு முறை அவன் எத்தனித்தான். முடியவில்லை.

மூன்றாம் முறை அவன் சாயாமல் இருக்க, அவள் பலத்துடன் முட்டுக் கொடுக்க, அதிவீரன் சுவர் மீது தொத்திவிட்டான்.



மேலே நின்று அவளை ஒரு முறை பார்த்து "நன்றி" என்றான்.

பிறகு மறுபுறம் குதித்தான்.

## 25

திரும்பி வந்து மஞ்சத்தில் சயனித்தபோது, திருமங்கைக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவு இல்லை.

பஞ்சணைகள் மீது பலமுறை புரண்டு நிசப்தமான சிரிப்புக் கொத்துக்களைச் சிதறவிட்டாள்.

சமயத்தில் கால்களை உயர்த்தி மாறி மாறி வெறுமையில் உதைத்தாள்.

கைகளில் இன்னும் அதிவீரனைத் தொட்ட உணர்ச்சி தங்கி இருந்தது.

மென்மையாக நாசியில் வைத்து அதன் வாடையைப் பறிக்க முயன்றாள்.

அந்தக் கைப்பகுதிகளை அடிக்கடி தொட்டு அதன் உணர்ச்சிப் பகுதிகளைக் கலைத்துவிட விரும்பவில்லை.

பாதாள அறையில் போய் அவரை உலுப்பி எழுப்பிய வுடன் அவருக்கு எவ்வளவு ஆச்சரியம்!

அவளை ஒரு பார்வை பார்த்தாரே!

அதை மறக்க முடியுமா?

குறுகுறு என்று உள்ளத்தில் புகுந்து அவள் உயிரின் அடிவாரத்தைத் தொட்டது.

அப்புறம் கடைசியில் அவர் ஏறியதும் ஒரு பார்வை பார்த்தாரே—

அதில், 'மாயமான கணை' இருந்தது. அவளைக் கட்டிப் போட்டாற்போல மடக்கிவிட்டது.

இன்னும் அதன் சிக்கலில்தான் அவள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அதை ஒவ்வொரு இழையாக எடுக்க வேண்டும். மேலும் அந்தச் சிக்கல் அதிகமாகிறதே தவிர, குறையவில்லை.

அத்தனை இரவும் எண்ணங்களாகவே ஓடியது.

காலையில் எழுந்ததும், தன்னைச் சித்தம் செய்து வீரபாளையக்காரரிடம் விடைபெற்று வெகுவிரைவாகத் தன் மாளிகைக்கு வந்துவிட்டாள்.

வந்ததிலிருந்து ஒரு இடத்தில் இருப்புக் கொள்ளவில்லை.

அங்குமிங்கும் தத்தளித்துக்கொண்டே இருந்தாள்.

சேடி மதனா வாய் புதைத்து அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எஜமானிக்கு என்ன நேர்ந்தது?

ஒரு இரவுப் பொழுதுக்குள் என்ன நடந்திருக்க முடியும் என்று யோசித்தாள்.

"ஏது, ஏது, அம்மா! இப்படி சதிர் ஆட்டம் ஆடுகிறீர்களே! இன்னும் சொல்லப் போவதைக் கேட்டால் எவ்வளவு ஆடப்போகிறீர்களோ?" என்றாள்.

"ஏன், என்ன விஷயம்?" என்று தன்னை நிறுத்திப் பேசினாள், திருமங்கை! அவள் அதரம் என்றுமில்லாத குழைவில் குங்குமம் ஆகியிருந்தது. கண்கள் இரண்டும் துள்ளித் துள்ளி கிளி விளையாட்டு ஆடின.

"சொன்னால் என்ன வெகுமதி தருவீர்கள்?" என்றாள், மதனா கண்ணை வளைத்து.

"எதைக் கேட்டாலும் தருவேன்!" என்றாள், திருமங்கை.

"அப்புறம் நழுவக் கூடாது?" என்றாள், மதனா.



"நிச்சயம் மாட்டேன்!" என்றாள், திருமங்கை.

உடனே மதனா அடுத்த அறைக்கு ஓடி உறை போட்ட எதோ ஒன்றைத் தூக்கி வந்தாள்.

ஒரு ஆசனத்தின் மீது அதை நிறுத்தி வைத்தாள்.

திருமங்கை விழிகள் பொங்க அதைப் பார்த்தாள்.

நிலத்தில் பளபளக்கும் பட்டுத் திரையில் அது போர்த்தப்பட்டிருந்தது.

அதற்கு அவள் மரியாதை கொடுத்த விதமே அது முக்கியமானது என்பதை எடுத்துக்காட்டிற்று.

"என்ன இது?" என்று நெற்றி சுருங்கக் கேட்டாள், திருமங்கை.

"தங்களுக்கு விருப்பமானது?"

"கவிதையா?"

"தங்கள் கருத்தைக் கவரப்போவது?"

"உலா நூலா?"

"பார்த்ததும் எப்போதும் எண்ணி மகிழப்போவது?"

திருமங்கையின் ஆர்வம் மீறி வந்தது.

"என்னது மதனா? என்ன?" என்று கேட்க,

மதனா ஒவ்வொரு கொஞ்சம் அடிவைத்து ஆசனம் அருகில் சென்றாள்.

அபிநயமாக கையை வளைத்து, திரை நீக்கி, அப்பால் வைத்தாள்.

சடக்கென திருமங்கையின் பார்வை அந்தப் பொருள் மீது பாய்ந்தது.

அடுத்தகணம் புருவம் சுழித்தது.

''யார் இது?'' என்றாள்.

மீசை முறைப்புடன் ஒரு அரசர் அதில் நின்றிருந்தார்.

பட்டுத்துணி அங்கி தரித்து கழுத்தில் பல முத்து மாலைகள் அணிந்திருந்தாள்.

இடுப்பு ஓரம் உடை வாள் நீண்டிருந்தது.

35 வயது இருக்கும்.

சாதாரணப் பார்வை என்றாலும் உக்கிரப் பார்வை அதில் இருந்தது.

முகத்தில் சிறிது கடுப்பும் இருந்தது.

''யாருடீ, இந்தக் கடுகடு?'' என்றாள், திருமங்கை.

''உஸ்ஸ்ஸ்....!'' என்று வாயில் விரல் வைத்து ஊதினாள், மதனா. ''யார் என்று தெரிவதற்குள் ஏதாவது சொல்லிவிடாதீர்கள்?''

''யாராம்?''

''உங்கள் உள்ளத்தைக் கவரப்போகிறவர்.''

''இவரா? என்னை நிச்சயம் கவரமுடியாது! மூஞ்சியைப் பார்!'' என்றாள்.

''அய்யோ! அம்மா! அப்படிச் சொல்லாதீங்க! நாளைக்கு நேரிலே வந்தால்....''

''யாருடீ, மதனா, சீக்கிரம் சொல்லு!''

தலைகளை ஒருமுறை மரியாதைப் பூர்வமாக வணங்கி,

''தஞ்சாவூர் மன்னர்!'' என்றாள்.

''இவரா?''

''இவர்தான்! மகா ராஜராஜ ராஜப் பிரவீண, ராஜ கோலாகல ஸ்ரீஸ்ரீ அச்சுதப்ப ராஜா!'' என்று கூறினாள், மதனா.



''அச்சுதப்பரா!'' என்று திடுக்கிட்டுக் கேட்டாள், திருமங்கை.

''ஆமாம்! தங்களுக்காக வரையச் சொல்லிக் கொண்டு வந்தேன்.''

திருமங்கை முகத்தில் இருந்த வெளிச்சம் எல்லாம் மறைந்துவிட்டது. அரைவிநாடியில் ஒரு நிழல் தோன்றி விட்டது.

சோகமாக ஒரு மூச்சு விட்டு, எதிரே ஒரு ஆசனத்தில் அமர்ந்துகொண்டாள்.

மதனா திடுக்கிட்டாள்,

எஜமானி மகிழ்ச்சி அடைவாள் என்று நினைக்க,

அவள் அந்த ஓவியத்தைப் பார்த்ததும் சோர்ந்து ஒரு வார்த்தை பேசாமல் நாற்காலியில் போய் அமர்ந்து விட்டாளே.

திகைப்புடன் நடந்து அவள் அருகில் போய், ''என்ன அம்மா!'' என்று கேட்டாள்.

மீண்டும் பெருமூச்சு விட்டு திருமங்கை, ''இவரா அச்சுதப்பன்?'' என்றாள்.

''ஆமாம்!'' என்றாள், மதனா!

''ஒரு கவிதைபோல் இருப்பார் என்று நினைத்தால், கடுவன்போல இருக்கிறாரே?'' என்றாள், திருமங்கை.

சேடி மதனா மெதுவாகப் பேசினாள். ''இல்லை அம்மா! நேரில் பார்த்தால் நன்றாக இருப்பார்!''

''நீ பார்த்திருக்கிறாயா?''

''இல்லை.''

''பின் எப்படிச் சொல்லுவாய்?''

மதனா பேசவில்லை! "இல்லை அம்மா! புகழ் பெற்ற நாயக்க வம்சம்! மதுரை நாயக்கரை எதிர்த்து சுதந்திரமாகவே வாழும் வம்சம்! அந்த வம்சத்தில் இவர் திலகம் போன்றவர்! இல்லாவிடில் உங்கள் தந்தை இந்த சம்பந்தத்திற்கு ஒத்துக் கொள்வாரா?"

திருமங்கை சற்று வாய் திறக்காமல் இருந்தாள். பிறகு,

"மதனா! என் மனம் இப்போது அல்லாடுகிறது!"

"ஏன்?"

"அதுதான் புரியவில்லை!"

"பாருங்கள் அம்மா! நீங்கள் எல்லாவற்றுக்கும் உடன் பட்டு மதுரை வரை வந்துவிட்டீர்கள்! இனி ரகசியமாக தஞ்சாவூர் செல்வதுதான் மிச்சம் உள்ளது. இந்தச் சமயத்தில் தாங்கள் அல்லாடுவது என்றால்..."

ஒரு பெருமூச்சுவிட்டாள், திருமங்கை.

"என்னவோ மதனா! அப்பா கொடுத்த உந்தலில் தலையாட்டிவிட்டு வீரப்பிரதிக்ஞை எடுத்தவள் போல கிளம்பி வந்து விட்டேன்! ஆனால் இப்போது... என் மனம் பேதலிக்கிறது..."

"ஏன் அம்மா?"

"முதலில் இந்த ஓவியத்தைக் கண்டாலே பிடிக்க வில்லை. நான் மணக்கப்போகிறவர் இப்படியா இருப்பார்?"

"அரசர்களுக்கு வீரம்தான் அழகு?" என்றாள், மதனா.

"என் மனம் அதை ஏற்க மறுக்கிறது. எனக்கு இவரைப் பிடிக்கவில்லை மதனா!"

"இதை ஊரிலேயே தெரிவித்திருக்க வேண்டும், அம்மா!"



"தெரிவித்திருப்பேன், ஆனால் எனக்குப் பரந்த ஞானம் இல்லாமல் போய்விட்டது!"

"இப்போது மட்டும் அது எப்படி வந்தது?"

"ஏன்? இவ்வளவு தூரம் பிரயாணம் செய்து ஓரளவு ஞானம் பெற்றிருக்கிறோம் இல்லையா!"

"இந்தப் பிரயாணத்தில் தங்களுக்கு அப்படி என்ன ஞானம் வந்துவிட்டது?"

"எது வந்ததோ வரவில்லையோ! ஒரு வீர புருஷனுக்கு உரிய லட்சணங்கள் தெரிந்துவிட்டன."

மதனா யோசித்தாள்.

பிறகு, விரித்த விழிகளை திருமங்கை மீது பரிமாறினாள்.

"ஓ! அவரைக் கண்டு கொண்டதாலா?"

திருமங்கையிடம் மறுமொழி இல்லை! நாற்காலி பஞ்சணையில் நுனியைப் பிடித்துத் திருகிக் கொண்டிருந்தாள்.

நெடுங்கால் சத்திரத்து தென்னந்தோப்பு உள்ளே அந்த மூவரும் ஒரு கிடுகின் மேல் அமர்ந்திருந்தார்கள்.

பக்கத்தில் பொதி மூட்டைகள் மூன்று இருந்தன.

தலைப்பாகை தரித்து நன்றாக நாமம் போட்டு, வைசியர்கள் போல அவர்கள் தெரிந்தார்கள்.

"இனி அடையாளம் காண விடக்கூடாது! மூன்று பேர் சேர்ந்தும் போகக்கூடாது. இரண்டுபேர் சேர்ந்தும் மற்றொருவர் தள்ளியும் போகவேண்டும். யாரைப் பற்றியும் பிறகே பேசவேண்டும்!" என்றார், அந்தக் குழுவில் தலை போன்றவர்.

அவர் குரலை அறிந்தவர்கள் அவர் யார் என்று கூறி விடுவார்கள்.

தென்காசி வீரர் அதிவீரர்தான் அவர்.

"சுவாமி! தாங்களே தங்கள் குரலை மாற்றிக் கொள்ள வேண்டும்!" என்று கூறினார், வீரசேனன்.

"ஓ! அதை நான் கவனித்துக்கொள்ளுகிறேன். வீரா! இப்போது நமது லட்சியத்தை முடித்து விட்டு நாம் சீக்கிரம் நமது ஊர் திரும்பவேண்டும். அல்லிக்கொடியை மதுரைக்குள் தான் கொணர்ந்தார்கள் என்பதை அறிவோம். அவள் எங்கே இருக்கிறாள் என்பதைச் சீக்கிரம் அறியவேண்டும்."

"நீலத் தலைப்பாகைக்காரர் யாரையாவது பிடித்து விட்டால் போதும்!"

"சீக்கிரம் அவர்களைக் கண்டுபிடியுங்கள்!"

"ஏன்?"

"யுத்த அபாயம் நெருங்கி வருவதால்."

"எதிரி உளவாளிகள் இங்கே நிறைய வந்திருக்கிறார்களே! அதை மதுரை நாயக்கர் அறிந்திருக்க மாட்டாரா?"

அவன் பேசி முடிக்கவில்லை. அவன் கண்கள் நிமிர்ந்து பார்த்து திடுக்கிட்டு நின்றது.

## 26

வீரபாளையக்காரர் அந்த மாளிகை நோக்கி அவ்வளவு கோபப் பிழம்பாக வந்தார்.

அவர் வருவதை சேடி உள்ளே போய் திருமங்கையிடம் கூறிவிட்டாள்.

திருமங்கை மனதைத் திடப்படுத்தி, வாசல் வழியைப் பார்த்திருந்தாள்.

பாளையக்காரர் புயல் வீச்சமாக உள்ளே வந்து தம்ம் என்ற முத்தாய்ப்பு போல் திருமங்கை முன்பாக நின்றார்.



26645
484180

"இளவரசி! என்ன காரியம் செய்துவிட்டீர்கள்?" என்றார்.

ஒன்றும் தெரியாதது போல் புருவ வளைவை மட்டும் மேலே தூக்கி, "ஏன், என்ன நடந்தது?" என்று மெல்லிதாகக் கேட்டாள், திருமங்கை.

"உங்களால் அந்தப் பாண்டியன் ஓடிவிட்டான்" என்றார் அவர். மார்பு குளக்கரை அலை போல் மேலே எழும்பி லபக்கென்று விழுந்தது.

"பாண்டியனா? யார் அது? என்னாலா?" என்று அங்கலாய்ப்பாய் கேட்டாள் அவள்.

"ஆமாம்! என் மாளிகைக் கிடங்கில் பாண்டியனைப் போட்டிருந்தேன்."

"எந்தப் பாண்டியன்?"

"தென்காசிப் பாண்டியன்தான்! நமக்கு அடித்த மகா அதிர்ஷ்டம் அது என்று நினைத்திருந்தேன். தப்பிவிட்டான்! தப்பிவிட்டான்!

பட படவென்று வார்த்தைகள் அடிப்பது போல் விழுந்தன.

"அப்படியா? அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?" என்று சற்று தூக்கலாகக் கேட்டாள் திருமங்கை!

"நீங்கள் அங்கே போனீர்களாமே!" என்றார் பாளையக்காரர் குற்றக் குரலில்.

"ஆமாம்! கிடங்கைப் பார்த்ததில்லை. காட்டச் சொன்னேன். கிடங்கின் கதவைக் கூட நான் தொடவில்லை! தங்கள் சேடி ஒருத்தியும் வந்திருந்தாளே!" என்றாள் மங்கை.

"இரவில் திரும்ப அங்கே போனீர்களா?"

"இல்லை."

"அப்படியானால் அவன் எப்படித் தப்பினான்?"

"அது எனக்கு எப்படித் தெரியும்?"

"இளவரசி! இது ஒரு ராஜரீக விஷயம்! நாளை தங்கள் தந்தைக்கு இது தெரிந்தால் துடித்துப் போவார்."

"மாட்டார்! தாங்கள் பாதுகாப்புத் திறன் அவ்வளவு குறைவு என்று நகையாடுவார்!"

பாளையக்காரர் கண்ணில் ஒரு நெருப்புத் துளி உட்கார்ந்தது.

"என் பாதுகாப்புக் குறைவா? ஏதாவது தந்திரம் செய்தாலன்றி அந்தப் பாண்டியன் என் கிடங்கை விட்டுப் போயிருக்க முடியாது!"

"அப்போது தந்திரத்திற்கு எளிதாகத் தங்கள் பாதுகாப்பு உடைந்துவிடுமோ?"

"தந்திரத்திற்கு அல்ல! நயவஞ்சகத்திற்கு!"

"இந்தாருங்கள் பாளையராஜாவே! வார்த்தைகளை அடக்கிப் பேசுங்கள். என்னை உங்கள் அடிமை என்று நினைக்க வேண்டாம். நானாவது! அந்தப் பாண்டியன் தப்பித்துப் போக வழிவகுப்பதாவது! எனக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்?"

திருமங்கை கண்கள் மின்னல் சுழியாக ஒளிர வார்த்தைகள் கன சூடாக வெளியே வந்தன.

பாளையக்காரர் சில கணங்கள் பேச்சிழந்து நின்றார்.

அவர் முகத்தில் ஆத்திரம் இன்னும் வடியாமல் அதிகமாவது தெரிந்தது.

திருமங்கை முகத்தை ஒரு திருப்புத் திருப்பினாள்.



சேடியைப் பார்த்தாள்.

"இந்தா மதனா! இனிமேல் என் உத்தரவின்றி யாரையும் உள்ளே விடாதே!" என்றாள் சீற்றமாக.

அடுத்த விநாடி அந்தப் பயங்கரச் சிரிப்பு அவளை அதிர வைத்தது.

திரும்பினாள்.

பாளையக்காரர் பல்லெல்லாம் தெரிய பெரிய சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்தார்.

"இந்தாருங்கள்! உண்மையில் நீங்கள் யார்? இளவரசி என்று பொய்தானே சொல்கிறீர்கள்? நீங்கள் உண்மையில் பாண்டிய உடந்தை தானே?"

"சீ! என்ன பேச்சுப் பேசுகிறீர் பாளையக்காரரே! வேண்டுமானால் ராஜமோதிரத்தைப் பாருங்கள்! ராஜ முத்திரையைப் பாருங்கள்! இதுபோல என்னை அவமதிக் காதீர்கள்!" என்று சொல்லி, அதே வேகத்தில் "மதனா!" என்றாள்.

மதனா துள்ளி ஓடி வந்தாள்.

அந்த மனிதருக்கு நமது ராஜ சின்னங்களைக் காட்டு! மனிதர் சந்தேகப்படுகிறார்" என்று சொல்லிவிட்டு,

"நல்ல பாளையாக்காரர்கள்! சொந்த நிழலையே சந்தேகப்படுவார்கள் போலும்! இவர்களை நம்பி தந்தை பெரிய காரியத்தில் இறங்குகிறாரே! அந்த மீனாட்சிதான் காப்பாற்ற வேண்டும்" என்று சொன்னவாறு ஆசனத்திற்குச் சென்று அமர்ந்துகொண்டாள்.

மதனா உள்ளே துள்ளிப் போய், ஒரு சின்னப் பேழையைத் தூக்கி வந்தாள்.

திறந்து மோதிரங்களாக எடுத்துக் காண்பித்தாள்.

அவநம்பிக்கையுடன் அவைகளைக் கையில் வாங்கிப் பார்த்தார் பாளையக்காரர்.

திருமங்கை அவரை விழியால் அழுத்திப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பேழை அனைத்தையும் பார்த்தபிறகு, பாளையக்காரர் எதுவும் சொல்ல முடியாத நிலையில் நிமிர்ந்தார்.

''நல்லது! இளவரசி! தங்கள் தந்தை தங்களை என் பாதுகாப்பில்தான் அனுப்பி இருக்கிறார். எனவே இனி தாங்கள் தஞ்சாவூர் செல்லும்வரை என் பாதுகாப்பிலேயே இருப்பீர்கள்.''

''தங்கள் பாதுகாப்பா?.....'' என்று சொல்லிச் சிரித்தாள் திருமங்கை. பிறகு ஏளனமாக மேலே தொடர்ந்தாள். ''அது தான் பாண்டிய நாட்டின் குறுக்காகவே வாருங்கள். பாது காக்கிறேன் என்று சொல்லி தவிக்க வைத்தீர்கள்!'' என்றாள்.

''ஏன் என்ன நடந்தது?''

''தென்காசிப் பாண்டியரின் பூமி வழியாக என் மகள் போகலாமா என்று கேட்டதற்குப் போகலாம். அன்னியரின் பூமி ஆனாலும் நான் பாதுகாப்பு அளிப்பேன் என்று கூறினீர்கள்! உங்களால் எங்கே முடிந்தது?'' என்று கோபமாகக் கேட்டாள்.

''ஏன்! உங்களுக்கு என்ன நடந்துவிட்டது! பாதுகாப்பில்தானே வந்தீர்கள்?'' என்று மிடுக்காகக் கேட்டார் பாளையக்காரர்.

''ஓகோகோ!.... மனதில் அந்தப் பிரமை வேறு வைத்திருக்கிறீர்களா? வழியில் சங்கரநயினார் கோயிலிலேயே உங்கள் பாதுகாப்பு ஆட்கள் பறந்து போய் விட்டார்கள்! அதை நான் இன்னும் உங்களிடம் சொல்லவில்லை!'' என்றாள்.

''என் ஆட்கள்! ஏன் பறக்கிறார்கள்?''

''சரிதான்! மதுரைவரை என்னை அழைத்து வந்தது தங்கள் ஆட்கள் அல்ல! அவர்கள் என்னோடு வந்திருந்தால் தான் உங்களைக் காண வந்திருப்பார்களே?''

மறந்த ஏதோ விஷயத்தை திடீரென்று நினைவுக்குக் கொண்டு வந்தவர்போல்,

''ஏன்? அவர்களுக்கு என்ன ஆயிற்று?'' என்று கேட்டார். ஆத்திரமாகக் கேட்டார் அவர்.

''நீலத் தலைப்பாகைக்காரர்கள் விரட்டி விட்டார்கள், தெரியுமா?

''நீலத் தலைப்பாகைக்காரர்களா?''

''ஆமாம். அவர்களிடம் உங்கள் ஆட்கள் ஆட்டம் பலிக்காமல் சிதறிப் போய்விட்டார்கள்.!''

பாளையக்காரர் வாயடைத்து நின்றார்.

திருமங்கை தொடர்ந்தாள்.

''ஒருமுறை அல்ல! இருமுறை அவர்கள் எங்களை வழி மறித்தார்கள்! எங்களைக் காப்பாற்றியவர்கள் பாண்டிய வீரர்கள்தான்!'' என்றாள் திருமங்கை.

பாளையக்காரர் வாய் திறக்கவில்லை.

''நிச்சயம் பாண்டிய வீரர்கள் சாமர்த்தியக்காரர்கள் தான்! நீலத் தலைப்பாகையைப் பற்றி எவ்வளவு கேள்விப் பட்டிருக்கிறோம். அவர்களையே இவர்கள் முறியடித்துவிட் டார்களே! நீங்களானால் என்னவோ அந்தத் தென்காசிப் பாண்டியரின் ஆட்கள் புழுப் போலவும் பூச்சி போலவும் பேசுகிறீர்கள்? அந்தப் புழுப் பூச்சிகள்தான் எங்களைக் காப்பாற்றினார்கள். உங்களுக்குத் தெரியுமா, நாங்கள்

பிற்பாடு குதிரைகளில்தான் பயணம் செய்து வந்தோம். பல்லக்கில் அல்ல! எல்லாம் போய்விட்டது!'' என்றாள்.

நடந்தவை அடுக்கடுக்காக வர, பாளையக்காரரின் வாய்ச் சொல் இறுகிவிட்டது.

''அப்படி சாமர்த்தியமுள்ள வீரர்களின் தலைவனாக இருந்தால், அவர் மாபெரும் சாமர்த்தியசாலியாகத்தானே இருப்பார்! தங்கள் கிடங்கை விட்டு அவர் தப்பி ஓடியதில் என்ன வியப்பு இருக்கிறது!'' என்றாள்.

பாளையக்காரர் கடுகடு என்று பல்லை அரைப்பது தெரிந்தது.

பாண்டியப் புகழ்ச்சியை அவர் விரும்பவில்லை போலும்.

''போதும்! இளவரசி! எதிரிகளைப் புகழ்வதை நிறுத்துங்கள்! இன்று மாலை நீங்கள் தஞ்சாவூருக்குப் புறப்படுகிறீர்கள் அதற்கான பாதுகாப்பு எல்லாவற்றையும் நானே கவனிக்கிறேன்'' என்றார் கோபமாக.

''நிறுத்துங்கள் பாளைய ராஜாவே! நான் தஞ்சாவூர் போக விரும்பவில்லை!''

''ஏன்?''

''என் விருப்பம்!''

''நீங்கள் இன்று மாலை போய்த்தான் ஆக வேண்டும். ஆமாம்!'' என்று கூறி மிடுக்காகக் கிளம்பினார் அவர்.

வெளியே போனவர், ''யாரங்கே?'' என்று சொல்லி உத்தரவுகளாக வழங்குவது கேட்டது.

திருமங்கைக்குக் கோபம் பொத்து வந்தது.

ஆத்திரமாக எழுந்து வாயில் பக்கம் ஓடினாள்.



# 27

வீரபாளையக்காரர் கோபமாகப் போய் விட்டார்.

திருமங்கைக்கு இரத்தம் கொதித்தது.

ஏற்கெனவே தஞ்சை மன்னனின் ஓவிய உருவம் கண்டு வெளுறியவள் அவள்.

இப்போது மனதில் அந்த முறிவு வந்துவிட்டது.

எப்படி அந்தத் தஞ்சை நாயக்கரை நினைத்துக் கோட்டை கட்டினோம். என்று நினைத்தாள்.

அந்த நாயக்கர் நல்ல பலசாலி, அவர் மதுரையை எளிதில் பிடிப்பார்.

தெற்கு முழுதையும் சாம்ராஜ்ஜியமாகத் திரட்டுவார். அவள், அதில் மகாராணியாக வீற்றிருக்கலாம்!

இவ்விதத்தில் தந்தையும் நினைத்தார். அவளும் நினைத்துவிட்டாள்.

அந்த ஆசையில்தானே அப்பா கேட்டுக் கொண்ட போது, தஞ்சை மன்னரை மணக்கச் சம்மதித்தோம்!

அச்சுதப்பன்!

அச்சுறுத்தும் அப்பன்தான், அவன்.

ஓவியத்தைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது

சேடி மதனாவை அழைத்தாள்.

''அவர் சொன்னதைக் கேட்டாயாடி?'' என்றாள்.

''கேட்டேன் அம்மா! மலையாள பூமியில் கொல்லம் ராஜாவின் மகள் தாங்கள் என்ற சிந்தனையே இல்லாமல், ஏதோ அடிமை போல் பேசினாரே?'' என்றாள்.

''இப்போது என்ன செய்யச் சொல்லுகிறாய்! நாளை தஞ்சாவூர் புறப்படவேண்டும் என்கிறாரே!''

"தாங்கள் விருப்பம் என்ன?"

"ஏன்?"

"அந்த மன்னரை மணக்க நான் விருப்பப்படவில்லை!"

"அப்படியா!" என்று வாய் புதைத்து மதனா நின்றாள்.

"ஏன்! மதனா, என்ன?"

"இளவரசி! நாம் புறப்படும்முன் தங்கள் தந்தை கூறியதை மனதில் நினைத்துப் பாருங்கள்!"

பார்த்தேன் மதனா! அப்போது அவர் சொன்னது சொர்க்கமாகப்பட்டது."

"தாங்களைத் தஞ்சாவூர் மன்னருக்குக் கொடுப்பது மூலம் மலையாள பூமியிலே தமது கை ஓங்கும் என்று நினைத்தார். பாண்டிய நாட்டைப் போலவே, மலையாளம் இப்போது துண்டங்களாகப் பிரிந்திருக்கிறது. தங்கள் தந்தையார்தான் முழுபூமியையும் அரசாள உரிமை பெற்றவர். ஆனால், சந்தர்ப்பவசத்தால் கொல்லம் பகுதிக்கு மட்டும் ராஜாவாக இருக்கிறார். மீண்டும் அவர் எல்லா பூமியையும் கைப்பற்ற வேண்டுமானால், அவருக்குத் துணைபலம் வேண்டும்."

இங்கே குறுக்கிட்டாள், திருமங்கை.

"தெரியும் மதனா! அந்தத் துணைபலத்தை தஞ்சாவூர் நாயக்கர் தருகிறேன் என்றார். என் தந்தையும் அவரும் ரகசிய உடன்படிக்கை செய்து கொண்டார்!" என்றாள், அவள்.

"ஆமாம்! அதன்படி தஞ்சாவூருக்கு முதலில் தங்கள் தந்தையார் உதவவேண்டும். அந்த உதவியையும், பெற்று தஞ்சாவூர் மன்னர் மதுரை மீது படையெடுப்பார். அதைத் தம் கைவசம் கொள்வார். அதன்மூலம் பாண்டியபூமி முழுவதும் அவர் கையில் போகும்! அப்படி ஒரு பரந்த சாம்ராஜ்ஜியத்தைப் பெற்ற பிறகு, அந்த நாயக்கர் தங்கள்



தந்தைக்கு உதவுவார்! மலையாளத்து மற்ற ராஜாக்களை வெற்றி கொண்டு தங்கள் தந்தை கையில் முழு மலையாள நாட்டையும் கொடுப்பார்! இவ்வளவுதானே உடன்படிக்கை!" என்றாள், சேடி.

"ஆமாம். இதைத்தான் ரகசியமாகச் செய்து முடித்தார்"

"இந்த உடன்படிக்கையால் ஏற்பட்ட நட்பின் சின்னமாகத்தான் தங்களை தஞ்சாவூர் மன்னருக்கு மணம் செய்விக்க நினைத்திருந்தார்!"

"ஆமாம்!" இந்த விஷயத்தை என்னிடம் எடுத்துச் சொன்னவுடனே நானும் அதற்குச் சம்மதித்தேன். என் தந்தை வயதானவர்! அவருக்கு என் மூலம் ஒரு நிம்மதி கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன்! தவிரவும் எனக்கு நிறையத் தமிழ்ப்பரிச்சயம் இருந்ததில்லையா? அதனால் தமிழ் பூமியோடு என் வாழ்க்கையை இணைத்துக்கொள்ள நினைத்தேன்!"

"ஆமாம் இளவரசி! தங்களது தந்தையின் கஷ்டமான வாழ்க்கையில், பல ஆண்டுகள் தென்பாண்டிச் சீமையில் உங்கள் குடும்பமே மறைந்து வாழவேண்டிவந்தது. அப்போது தங்களுக்குப் பிடித்துக்கொண்டது இந்தத் தமிழ்க் காதல்! ஆர்வத்தோடு அதைக் கற்று உணர்ந்து, கவிதை எழுதும் அளவுக்குத் திறன் பெற்றீர்கள்! தஞ்சாவூர் ராணி ஆனால், தமிழ் கவிதையிலும், பாட்டிலுமே ஈடுபட்டு வாழ்க்கையை இன்பமாகக் கழிக்கலாம் என்று நினைத்தீர்கள்?"

"அதனால்தான் மதனா! தஞ்சாவூர் மன்னரை நான் மணக்கத் துணிந்தது! அதன்மூலம் இரண்டு பலன்களை அடைய விரும்பினேன்! ஒன்று, என் தந்தையை முழு மலையாள பூமிக்கும் அரசராக்குவது! இரண்டாவது—என் தமிழ்ச்சுவையில் நான் வாழ்நாள் முழுவதும் இன்பம் காண்பது!"

"இளவரசி! இப்போது இந்த இரண்டையுமா புறக்கணிக்கத் துணிந்தீர்கள்?"

மதனா கேட்டக் கேள்வி, துடித்துக் கொண்டு ஒரு அசுர உருவம்போல் திருமங்கை முன்னில் நின்றது.

"அப்பாவை நினையுங்கள் இளவரசி! தள்ளாத காலத்தில் இருக்கிறார். அவர் மனம் நோகக்கூடாது! தீர்க்க ஆலோசித்து முடிவு எடுங்கள்!"

மதனா ஒரு நல்ல தோழிபோல் உபதேசம் செய்தாள்.

"அப்பாவுக்கு ஆசையாக உறுதிமொழி கொடுத்தீர்கள்! நீங்கள் பூரணமாக ஒத்துக்கொண்டதன் பேரில்தான் அவர் இந்தத் திருமணத்தை உடனே நடத்த முன்வந்தார். ஆனால், பல காரணங்களுக்காக அதை ரகசியமாக நடத்தத் தீர்மானித்தார். தங்களை முன்னாடியே தஞ்சாவூருக்கு அனுப்பிவிட்டு, தாங்கள் போய்ச் சேர்ந்த விவரம் தெரிந்ததும், அவர் புறப்பட்டு வருவதாக ஏற்பாடு செய்து உள்ளார்! தன் ஒரே மகளின் திருமணத்தைப் பார்க்க அவர் எவ்வளவு ஆசையோடு இருப்பார்! அதுவும் அதன்மூலம், தனக்கும், தன் குடும்பத்துக்கும், தன் ராஜ்ஜியத்துக்கும், நன்மையும் அபிவிருத்தியும் ஏற்படப் போவது என்று தெரிவதால் எவ்வளவு ஆர்வத்தோடு இருப்பார்!"

மதனா சின்னவள்தான்.

எனினும் அவளது அறிவு, கூர்மைக்காகவே அவளை திருமங்கையின் அத்தியந்த தோழியாகச் சேர்த்து வைத்திருந்தார் கொல்லம் அரசர் ஜனார்த்தனவர்மா!

திருமங்கையின் கண்கள் எங்கேயோ பறந்து போயின! ஆலோசனையில் இருக்கிறாள் என்று நன்கு தெரிந்தது.

கனமான நிசப்தம் அங்கே சூழ்ந்தது.

மதனா இதற்குமேல் பேசவேண்டாம் என்று நினைத்துவிட்டாள்.



அந்தச் சமயத்தில் திருமங்கையைத் தனியாக விடுவது நல்லது என்று அவளுக்குத் தோன்றவே.

அங்கிருந்து வெளிவாசலுக்கு வந்தாள்.

பளிங்குக் கற்களால் பளபளக்க வைத்து கட்டிய மாளிகை அது!

ஒரு சின்ன நகைக் கொத்து போல் சுய ஒளியாகவே அது இருந்தது.

வாயில் உள்ள தாழ்வாரத்தில் நின்று வெளியே பார்க்கும்போது,

ஆட்கள் ஒவ்வொருத்தராக அந்த மாளிகை வாயிலுக்கு வந்து சேருவது தெரிந்தது.

ஏதோ சந்தேகம் தோன்ற, படிகளில் இறங்கிப்போய், தன் கண்ணில் பட்டவரை நோக்கி,

"யாரையா நீ" என்று கேட்டாள்.

"அம்மா!" என்று விநயமாகச் சொல்லி அவன் உள்ளே வந்தான்.

பிறகு அக்கம் பக்கம் பார்த்து, தணிந்த குரலில்.

"வீரபாளையம் ஆளுங்க! பாதுகாப்புக்காக அய்யா அனுப்பியிருக்கிறார்!" என்று கூறினான்.

"ஏன்? இதுவரை இல்லாத பாதுகாப்பு இப்போ ஏன்?" என்றாள், மதனா.

"நாளைக்கு ஊருக்குப் புறப்படணுமாமே!" என்றான், காவல்காரன்.

புறப்படலுக்கு அந்தப் பாதுகாப்பு தேவை என்றாலும்,

அந்த நேரத்தில் அந்தச் சூழ்நிலையில் அந்த ஆட்கள் வந்தது அவளுக்கு ஏனோ பிடிக்கவில்லை.

அதுவும், வீரபாளையக்காரர் தனது எஜமானியிடம் அப்படி தர்க்கம் செய்துவிட்டுப் போன பிறகு...

இந்தாருங்கள், வீரரே! உங்கள் தலைவர் யார்?'' என்று பாதி அதட்டலுடன் கேட்டாள்.

''பராக்கிரம பூபதி அய்யாவுங்க! பின்னாடி அவர் வந்துக்கிட்டு இருக்கிறார்!''

''வரட்டும்!'' என்று சொல்லி மனதில் சிறிது கறுவிக் கொண்டு, மதனா வாசலிலேயே நின்றாள்.

வீரபாளையக்காரரின் அந்தக்காரியம் அவளுக்குப் பிடிக்கவில்லை.

உள்ளே திருமங்கைக்குத் தெரிந்தால், அவள் அதிக வருத்தப்படுவாள் என்று வாசலிலேயே காத்திருந்தாள்.

சற்று நாழிகை பொறுத்துதான் பராக்கிரமபூபதி, எந்த வித விமரிசையும் காட்டாமல் சாதாரண மனிதர்போல நடந்து வந்தார்.

வாயில் முற்றத்தில் ஏறியதுதான் தாமதம்.

''இந்தாருங்கள் பூபதியாரே!'' என்றாள், மதனா.

அவர் வினயத்தோடு வர, ''உடனே உங்கள் ஆட்களை அழைத்துப் போங்கள்!'' என்று கூறினாள்.

''ஏன் அம்மா?'' என்று தாழ்மையாக அவர் கேட்டார்.

''பாதுகாப்புக்கு வந்திருக்கிறீர்களா? சிறைப்படுத்த வந்திருக்கிறீர்களா?'' என்று மதனா கொதித்துக் கொண்டு கேட்டாள்.

பூபதியின் கண்கள் மாறின!

''இல்லை அம்மணி! பாளைய ராஜா அனுப்பி வைத்தார்! பாதுகாப்பு கொடுக்கும்படி! அதற்காக வந்திருக்கிறோம்!'' என்றார், அவர் .



''பாதுகாப்பு இப்போது தேவையில்லை! நாளை புறப்படும்போது வந்தால் போதுமானது'' என்று அவள் சொல்ல,

அதைத் தொடர்ந்து இருவருக்கும் வாக்குவாதம் நடந்தது.

மதனா விட்டுக்கொடுக்காமல் கோபமாகவே பேசினாள்.

''சரி! நான் அய்யாவிடம் கேட்டுவருகிறேன்!'' என்று அவர் கிளம்பினார்.

மதனா படபடக்கும் மனதுடன் உள்ளே போனாள்.

அங்கே கூடத்தில் அந்தக் காட்சியைப் பார்த்ததும், திடுக்கிட்டு–

''இளவரசி! இளவரசி!'' என்று கத்திக்கொண்டு ஓடினாள்.

## 28

உள்ளே மதனா கண்டகாட்சி குடலைக் கலைப்பதாக இருந்தது.

திருமங்கை தரித்திருக்கும் நகை ஒன்றில் சின்னதாக பதக்கம் ஒன்று உண்டு!

அது கெட்டியான தங்கம்போல கனமாக இருக்கும்.

திருகினால் எடுத்துவிடலாம்.

அதற்குள் சக்தி வாய்ந்த விஷப்பொடி இருந்தது.

ஆபத்து வேளையில் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டி, இந்த விஷப்பொடி வைக்கப்பட்டிருந்தது.

கற்புக்குப் பங்கமோ, சித்ரவதையோ, அன்னியர் சிறையோ இவைகளில் ஏதாவது ஒன்று நேர்ந்தால், பொடியை உபயோகித்து மாய்த்துக் கொள்ளலாம்! இது, ராஜ குடும்பப் பழக்கம்.

திருமங்கை, தனது பதக்கத்திலிருந்து, அந்தப் பொடியைத் தன் கையில் அவசரமாகச் சிந்திக் கொண்டிருந்தாள்.

அதைத்தான் மதனா கண்டுவிட்டாள்.

உடனே உள்ளே தாவினாள். இமைக்கும் நேரத்தில், திருமங்கையை அடைந்து, அவளது உள்ளங்கையைத் தட்டி விட்டாள்.

பொடி எங்கணும் சிதறியது.

"இது என்ன பைத்தியக்காரத்தனம், அம்மா! ஏன் இப்படி?" என்று சொல்லியவாறே, தனது முந்தானையை இழுத்து, மங்கையின் உள்ளங் கைகளை விடுவிடென்று துடைத்தாள்.

சில கணங்களுக்குள் இது நடந்துவிட்டது.

மங்கை படபடவென்று கண்களைக் கொட்டினாள். மதனாவைப் பார்த்தாள்.

அழுகையும் விக்கலுமாக வந்தது. மஞ்சத்தின் கைப் பிடியில் முகத்தை வைத்து விசித்து குலுங்க ஆரம்பித்தாள்.

இதற்குள், அவள் எழுதிவைத்திருந்த ஓலையை மதனா படித்தாள்.

"எனது பிரியமுள்ள மதனா, நீ பேசியதைக் கேட்ட திலிருந்து என் மனம் தத்தளித்துவிட்டது. எனது அருமைத் தந்தைக்குத் துரோகம் செய்ய எனக்கு விருப்பமில்லை. அதே நேரம், அந்த தஞ்சைக்காரரை மணக்கவும் மனம் இல்லை. அதனால் என்னையே நான் முடித்துக்கொள்ளும் முடிவை எடுத்திருக்கிறேன்!

எனக்காக கடவுளிடம் பிரார்த்தனை செய். நமது மாளிகை பின்னாலிருக்கும் அம்மனுக்குப் பூசை போடு."

படித்ததும் மதனாவிடமிருந்து பெருமூச்சு வந்தது.

ஓலையை எடுத்து தன் இடுப்புப் பையில் சொறுகினாள்.



திருமங்கையின் அருகில் அமர்ந்து அவளுக்கு விசிறத் தொடங்கினாள்.

வெகுநேரம் திருமங்கை விசித்துக்கொண்டிருந்தாள். பிறகு ஆசுவாசமாகி மெல்லத் தலைதூக்கினாள்.

முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

கண்கள் புதிய ஒளியோடு விரிந்தன.

"இளவரசி!" என்று கனிவுடன் அழைத்தாள், மதனா. "இதென்ன தவறான காரியம்! தாங்கள் இப்படிச் செய்யலாமா? நான் தங்கள் தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதி என்னாவது? தங்களுக்கு மனதில் ஏதாவது தோன்றி இருந்தால் அதை என்னிடம் சொல்ல வேண்டாமா?" என்று நயந்து கூறினாள், அவள்.

"மதனா!" என்று கையைப் பிடித்தாள், மங்கை! "என்னை மன்னித்து விடு! என் மனம் பெரிதும் குழம்பி விட்டது! 'என் தந்தைக்குத் துரோகம் செய்கிறேனோ என்று நினைத்தேன்" என்று சொல்ல,

குறுக்கிட்டுப் பேசினாள், மதனா.

"தங்கள் உயிரை எடுத்துக் கொண்டால்தான் துரோகம்! வேறு எதுவும் துரோகம் ஆகாது! தாங்கள் மட்டும் இசைசந்திராவிட்டால் தங்களை இப்படி அனுப்பியிருப்பாரா?" என்று கேட்டாள் அவள்.

"அதுதான் எனக்குப் பெரிய மனக்கவலையை கொடுத்துவிட்டது, மதனா. அப்போதிருந்த மனநிலையில் வாக்குக் கொடுத்துவிட்டேன். இப்போது என் மனம் ஏன் கொடுத்தோம் என்று சொல்கிறது. எனக்கு இந்தத் தஞ்சாவூர் சம்மந்தம் பிடிக்கவே இல்லை! ஓவியத்தை வேறு பார்த்து விட்டேனா! மனம் கசக்கிறது" என்றாள், மங்கை.

"இவ்வளவுதானா? என்று கேட்டாள், மதனா அவள் கண்கள் விசேஷமாக, மங்கையைக் கவனித்தன.

திருமங்கை பேசவில்லை.

மதனா "உம்?" என்று மீண்டும் கேள்வியாக இருந்தாள்.

அந்த "உம்" பழைய கேள்வி முழுதும் தொற்றி நின்றது.

நீண்ட பெருமூச்சு ஒன்று மங்கையின் நெஞ்சத்திலிருந்து அவிழ்ந்தது "மதனா!" என்றாள் மிருதுவாகவும் இனிமையாகவும் அதை உச்சரித்தாள்.

"என்ன?"

"நீ ஏன் அப்படிக் கேட்கிறாய்?"

"மனதில் உள்ளதை தெரிந்துகொள்ளத்தான்!"

"இருக்கிறதா?"

"எனக்கு என்ன தெரியும்?"

"உனக்கு என்ன தோன்றுகிறது?"

மதனா புன்னகை ஒன்றை அரும்ப வைத்தாள். அவள் கண்கள் மிருதுவாகின. அவளுக்கு நெஞ்சம் குழைந்து விட்டது.

"புதிது புகுந்து, பழையதைத் தள்ளிவிட்டது போல் தோன்றுகிறது."

சட்டென்று மங்கையின் முகம் மலர, உணர்ச்சி தாளாமல் "மதனா!" –என்று வீசி அழைத்து, அவளைக் கட்டிக்கொண்டாள்.

"அதுதான் மதனா! அதுதான்! என்னை அறியாமல் என் உள்ளத்தில் ஏதோ ஒன்று வளர்ந்து வந்திருக்கிறது!"

"உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாது, மதனா! தானாக வளர்ந்திருக்கிறது. இப்போது கணத்துக்குக் கணம் கண் முன்னாலேயே வளர்கிறது!"



மீண்டும் ஒரு பெருமூச்சு வந்து, சர்ப்பமாக நெளிந்தது.

"சரி, இளவரசி....."

"மதனா... இளவரசி என்கிற வார்த்தையை மற என்று முன்பே சொல்லிவிட்டேன். இன்னும் நாம் தலை மறைவாகத்தான் இருக்கிறோம்....... நமது உண்மை அடையாளத்தை வெளியில் காட்டவில்லை!" என்றாள், மங்கை.

"நல்லது! எஜமானி! சரிதானா?"

"சரி!"

"எஜமானி! வழிப் பிரயாணத்திற்குப் பிறகு அவரை வேறு எங்கேயாவது சந்தித்தீர்களா?" என்றாள், மதனா.

"யாரை?"

"என்னிடமே புதிரா?"

"புதிர் இல்லை! உனக்கு 'யார்' என்று தோன்றியது என்பதை அறியத்தான்!"

"அந்தத் தென்காசி மனிதர்தானே!"

மறுமொழி இல்லை இளவரசியிடம்!

"அவர்தானே!" கண்கள் மட்டும் மேலெழுந்து பார்த்து, சிரிப்பதை மதனா புரிந்து கொண்டாள்.

"அவரை திரும்பவும் சந்தித்தீர்களா?" என்று மதனா கேட்க,

"ஆமாம், அதுதான் என் மனதை முழுதுமாகக் கலைந்துவிட்டது"

"ஓ! எங்கே எப்போது பார்த்தீர்கள்?"

மதனா இந்தக் கேள்வியைக் கேட்டதும், வீரபாளையக்காரர் வீடு போய் வந்ததை எல்லாம் விவரித்துக் கூறினாள். திருமங்கை.

இரவுக்குள் மாளிகையை சுற்றி பலத்த காவல் விழுந்து விட்டது.

யாத்திரியர்கள் போல் மாளிகை வாசலிலும் ஓரங்களிலும் நின்றுவிட்டார்கள்.

ஒரு நாழிகை போனபின், வீரபாளையக்காரர் மிடுக்குடன் வந்தார்.

"இளவரசி எங்கே?" என்று மதனாவிடம் கேட்டனர்.

"உள்ளே சயனித்திருக்கிறார்!" என்றாள், மதனா.

"சீக்கிரம் எழுப்புங்கள்! உடனே புறப்பட வேண்டும்!" என்று கூறினார், அவர்.

மதனா தனது வில்புருவத்தைத் தூக்கி அவரைப் பார்த்தாள்.

அவரது தோரணை மொழி அவளுக்குப் பிடிக்கவில்லை.

அவரது அவசரத்தை மதிக்காதவள்போல மெதுவாக நடந்து உள்ளே போனாள்.

பிறகு நிதானமாகத் திரும்பி வந்து, "அரசிக்கு உடம்பு சரியில்லை. இன்று புறப்படவேண்டாம் என்கிறார்கள்."

வீரபாளையக்காரர் முகம் சிணுங்கியது. "அய்யோ! இன்றுதான் சரியான தருணம்! நாளை கோட்டைக் கதவை மூடப் போகிறார்கள். பிறகு வெளியில் போவது கடினம்!" என்றார்,

திரும்பவும் இளவரசியிடம் போய் வந்தாள், மதனா.

"இளவரசியின் உடல் நன்றாகக் காய்கிறது. இன்று நிச்சயம் போகமுடியாது!" என்றாள்.

வீரபாளையக்காரர் முகம் மேலும் சிவந்தது.



"இன்று எப்படியாவது போகவேண்டும். கோட்டைக்கு வெளியே வேறு ஏதாவது ஊரில் போய்த் தங்கிக் கொள்ளலாம்" என்று கூறினார், அவர்.

மதனா மறுத்தாள். இருவருக்கும் வாக்குவாதம் நடந்தது.

முடிவில் வீரபாளையக்காரருக்குக் கோபம் அதிகரித்தது.

"அப்படியே! இங்கேயே இருந்துகொள்ளுங்கள்! நான் கொல்லம் அரசருக்கு எழுதிவிடுகிறேன். அவரது சூழ்ச்சி என்ன என்பதை இங்கே மதுரை நாயக்கருக்கும் தக்க ஆள் மூலம் சொல்லி அனுப்பிவிடுகிறேன். இது கேட்டால், நாயக்கர் என்ன செய்வார் தெரியுமா? உங்கள் இளவரசியை அப்படியே கழுவேற்றிவிடுவார்!" என்று கூறி சினமாக வெளியே போனார்.

அடுத்த ஒரு நாழிகையில், அவரால் அத்தனை பணிப் பெண்களை எப்படி அழைத்துவர முடிந்தது என்று தெரியாது.

திமுதிமு என்று அவர்கள் உள்ளே புகுந்து திருமங்கையையும், மதனாவையும் பிடித்துக் கொண்டார்கள். மதனாவைத் தனியாக அழைத்துப் போனார்கள்.

---

பிறகு அந்த மாளிகைக்குள் சுறுசுறுப்பாக நடவடிக்கைகள் நடந்தன.

மதனா திகைத்துப் போய் மாடி அறையிலேயே அமர்ந்திருந்தாள்.

அவளது அறை வாயிலில் காவல் இருந்தது.

அந்தப் பணிப்பெண்கள் பேசிக்கொண்டதில் 'மருந்து மாயம்' என்ற வார்த்தை எல்லாம் அடிபட்டது.

என்ன செய்யப் போகிறார்களோ, என்று அவள் கவலைகொண்டிருந்தாள்.

இரண்டு நாழிகைகளுக்குப் பிறகு, வீட்டுக்குள் ஒரு நிசப்தம் தோன்ற—

வெளியேவந்து எட்டிப் பார்த்தாள். யாருமில்லை!

அவசரமாக மாடிப் படி இறங்கி கீழே வந்ததும், வாயிலில் ஏதோ நடப்பது தெரிந்தது.

மெல்ல அடி வைத்து வாசல் முகம் வந்து எட்டிப் பார்த்தாள்.

ஒரு மூடு பல்லக்கு புறப்பட்டுக்கொண்டிருந்தது. அதற்கு முன்னும் பின்னும் வேலையாட்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

திடுக்கிட்டாள், மதனா.

இளவரசியை ஏற்றிவிட்டார்களா?

பல்லக்கு புறப்பட்டது.

பல்லக்கின் திரையை உற்றுப் பார்த்தால் அவள்.

அவள் கை தானாக எழ, 'போய் வாருங்கள்' என்பது போல கையைக் காட்டினாள்.

கண்களில் நீர் திரண்டு வந்தது.

## 29

**பா**மரர் வேடம் தாங்கி வீரபாளையக்காரரின் ஆட்கள், திருமங்கையின் மாளிகையைச் சுற்றி இருந்தார்கள்.

இந்தச் செய்தி உள்ளே போனதிலிருந்து திருமங்கைக்கு யோசனை ஏற்பட்டது.

அவளை விடாப்பிடியாக தஞ்சாவூர் அழைத்துச் செல்ல இந்த ஏற்பாடோ என்று நினைத்தாள்.

அல்லது அவளைப் பயமுறுத்துவதற்காக இந்த வேலைகள் நடக்கின்றனவோ!

அவர்கள் தலைவனைக் கூப்பிட்டு விசாரி! என்றாள்.

மதனா வெளியே போய் கைட்டி தலைவரைக் கண்டு பிடித்து விசாரித்துவிட்டு வந்தாள்.



அந்த மாளிகையைக் காவல் காக்க வேண்டும், தவிர வேறு எதுவும் தெரியாது என்றார்.

"ஓகோ! தந்திரம் செய்கிறார்களா! மதனா நீ என்ன செய்யச் சொல்கிறாய்?" என்றாள் திருமங்கை.

"அம்மா! இப்போது இருக்கும் நிலையில் இவர்களை நம்மால் எதுவும் செய்ய முடியாது. மாளிகையையே சூழ்ந்து இருக்கிறார்கள். வெளியே நம்மால் போக முடியாது" என்றாள்.

"அப்படியானால்..." என்று சொல்லி திருமங்கை ஆலோசித்தாள்.

மதனா தம் கண்களை மேலே உயர்த்தி யோசனையில் ஆழ்ந்தாள்.

திடீரென்று ஏதோ தோன்றியவள் போல்,

"ஏன் மதனா! இந்த நேரத்தில் நமக்கு யாராவது உதவி செய்ய வருவார்களா?" என்றாள்.

"யார் வருவார்கள்? நமக்கு இங்கே யாரைத் தெரியும், அதிவீரனைத் தவிர!" என்றாள்.

"ஆ! அவருக்கே ரகசியமாகத் தூது விடலாமா?" என்றாள் திருமங்கை.

"முதலில் அதிவீரன் இருக்கும் இடம் தெரிய வேண்டும்! அது லேசில் நடக்கக்கூடிய காரியம் அல்ல!" என்றாள் மதனா.

"ஏன்?"

"அவர் என்ன காரணத்துக்கோ மாறு வேடம் பூண்டு தான் மதுரைக்கு வந்திருக்கிறார். எதேச்சையாய் நாம் கண்டு பிடித்தோமே அன்றி, இனி அவரைத் தேடுவது அரிது."

"ஓ! மறைந்திருப்பாரோ!" என்றாள் மங்கை.

"ஆமாம்! அதுவும் அவரை எதிரிகள் பிடித்துச் சிறை செய்யச் சித்தமாக இருக்கிறார்கள் என்று தெரியும்போது, இன்னும் அதிக கவனமாகவே இருப்பார். தவிர இன்னொரு சிக்கல் அம்மா!"

"என்ன?"

"இந்த மாளிகையை விட்டு யாரும் சுலபமாக வெளியில் போய்விடமுடியாது!"

"ஏன்? அவ்வளவு பாதுகாப்பு உள்ளதோ?"

"ஆமாம்!"

"அப்படியானால்..."

"இரு இளவரசி... யோசிப்போம்."

"இந்தா மதனா, இளவரசி என்ற வார்த்தையை நிறுத்து! இங்கே யாருக்காவது காதில் விழப்போகிறது."

"நிறுத்திவிட்டேன் அம்மா!"

இருவரும் பிறகு யோசனையில் இருந்தார்கள்.

திருமங்கை முதலில் பேசினாள். "ஏன் மதனா, மாறு வேடம் பூண்டு நழுவி விடுவோமா?" என்றாள்.

"நல்ல யோசனைதான்! ஆனால், இப்போது யார் போனாலும் சோதிக்கிறார்கள்!"

"ஓ! அப்போ அது உதவாது."

திரும்பவும் யோசனை.

திருமங்கை மீண்டும் பேசினாள். "அதிவீரருக்குச் செய்தி அனுப்பித்தால் போதும். அவர் காப்பாற்றிவிடுவார் இல்லையா?"

மதனா பளிச்சென்று திரும்பினாள்.



"அதைத்தான் அம்மா நானும் நினைத்துக் கொண்டிருக்கிறேன்."

"ஓ!... அதுக்கு வழி என்ன மதனா?"

"ஒரு வழி! அது சுற்று வழி!"

"சொல்லு!"

"இங்கே தயிர்க்காரி மட்டும்தான் இனி வருவதற்கு இருக்கிறது!"

"சரி!"

"அவளிடம் ஓலை எழுதிக் கொடுக்க வேண்டும்."

"கொடுத்து..."

"அதை அதிவீரனிடம் அவளைக் கொடுக்கச் சொல்ல வேண்டும்."

"அவள் எப்படி செய்வாள்?"

"இந்தத் தயிர்க்காரி சற்று சாமர்த்தியக்காரியாக எனக்குத் தோன்றினாள். அதனால் கொடுத்துவிடுவோம்."

"வேற யாரும் இல்லையா?"

"யாரும் இல்லை! அதனால்தான்...."

திருமங்கை யோசித்தாள். "சரி! சரி! சீக்கிரம் ஏற்பாடு பண்ணு!"

"நீங்கள் லிகிதம் எழுதுங்கள், அம்மா!"

திருமங்கை எழுத ஆரம்பித்தாள்.

மகாராஜ ராஜ தென்பாண்டியச் சக்கரவர்த்தி திரு. அதிவீரனுக்கு,

கொல்லம் ராஜ்யத்தைச் சேர்ந்த திருமங்கை என்பவள் எழுதிக்கொண்டது.

இப்பவும் எங்கள் விருப்பத்திற்கு எதிராக எங்களைத் தஞ்சாவூருக்குக் கொண்டுபோய் கொண்டிருக்கிறார். எங்களுக்கு அங்கே பலவந்த திருமணம் செய்ய ஏற்பாடு நடக்கிறது. தயவுசெய்து தாங்கள் இந்த விஷயத்தில் வலிய வந்து எங்களைக் காப்பாற்றுமாறு வேண்டிக் கொள்கிறேன். நமஸ்காரம் பண்ணி விண்ணப்பம் செய்வது, திருமங்கை.

''இது சரிதானா?'' என்று மதனாவிடம் காண்பிக்க,

''ரொம்ப, சரி'' என்று கூறினாள், மதனா.

பிறகு, ''நான் இதைக் கவனித்துக்கொள்கிறேன்! நீங்கள் கவலைப்பட வேண்டாம்!'' என்று கூறினாள், அவள்.

மறுநாள் காலை மாளிகைக்குள் வந்தார், வீர பாளையக்காரர்.

திருமங்கைக்கு வணக்கம் தெரிவித்து, ''நீங்க உடனே புறப்படும்படி உத்தரவாயிருக்கிறது'' என்றார்.

திருமங்கை அவரை அலட்சியமாகப் பார்த்தாள்.

''யார் உத்தரவிட்டிருக்கிறார்கள்?'' என்று கேட்டாள், அழுத்தத்துடன்.

''ஏன்? தங்கள் தந்தை கொல்லம் அரசர்தான்!''

''என்ன எழுதியிருக்கிறார்?''

''தாங்கள் உடனே தஞ்சாவூருக்குச் செல்லவேண்டும் என்று கூறியிருக்கிறார். அவரும் ஊரிலிருந்து புறப்பட்டு விட்டார்!''

''அப்படியா! எங்கே அவரது லிகிதம்?'' என்றாள், மங்கை!



''ஆ... அதைக் கொண்டுவர மறந்துவிட்டேன்!''

''கொண்டு வந்திருந்தால் உபயோகமாக இருந்திருக்கும்! நான் பார்க்க வேண்டாமா?''

''மறந்துவிட்டேன், இளவரசி! தாங்கள் என் சொல்லை நம்பலாம்!''

''சரி! இது என்ன திடுதிப்பென்று புறப்பாடு! நான் இன்னும் சித்தமாகவில்லையே!''

''கோட்டையை அடைக்கப்போகிறார்கள். நான்தான் சொன்னேனே! அதனால்தான் தாங்கள் கோட்டையை விட்டு வெளியே போய்விட்டால் போதும். அங்கே வைகைக்கரையில் எதாவது சத்திரத்தில் இரண்டு நாட்கள் சிரமப்பரிகாரம் எடுத்துக்கொண்டு கிளம்பலாம்!''

ஒரு பெருமூச்சுவிட்டாள், திருமங்கை.

''வீரபாளையத்தாரே! இப்போது நான் புறப்பட மறுத்தால்...''

''அப்படித் தாங்கள் சொல்லலாமா!''

''தங்களை வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்லும்படி தங்கள் தந்தையார் கட்டளை!''

''என் தந்தையார் ஒரு போதும் அப்படிக் கட்டளை இடமாட்டார்!''

''ஆபத்துக் காலம் ஆயிற்றே! யாரேனும் அப்படிக் கட்டளை இட்டால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை!''

''ஒகோ! அதனால் இழுத்துச் செல்வீராக்கும்! அதற்காகத்தான் இத்தனை பேரையும் இங்கே நேற்று முதலே நிறுத்தி இருக்கிறீர்களாக்கும்!''

சத்தமில்லாமல் சிரித்தார், வீரபாளையக்காரர்.

''இந்தா மதனா!''

மதனா ஓடிவந்தாள்.

"நாம் புறப்படுகிறோம்!"

அப்படியும் நான்கு நாழிகை கழித்தே புறப்பட்டார்கள்.

அந்தப் பாதுகாப்பு மனிதர்கள் எங்கே மறைந்தார்கள்! எப்படித் தனித்தனியாகப் போனார்கள்! என்பது தெரியாது.

கோட்டை அருகே போகும்போது அவளது பல்லக்குகள் இரண்டுதான் தெரிந்தன. வாசலில் அலிகள் வந்து மூடுதுணிகளைத் திறந்து உள்ளே பார்த்தார்கள். விசாரித்தார்கள்.

கோட்டைக்கு வெளியே போனதும், வைகைச் சாலையில் பல்லக்குகள் சென்றன. வைகைக்கரை அடைந்த பிறகு ஓரமாக உள்ள அழகர் சத்திரத்தில் அவர்கள் தங்கினார்கள்.

ஒரே ஒரு நாள தங்கி இருப்பார்கள்.

"மீண்டும் புறப்படலாம்!" என்று கூறினார், வீர பாளையக்காரர்.

"ஏன்! இன்னும் ஒரு நாள் இருக்கலாம்!" என்றாள், இளவரசி.

"தாங்கமுடியாது! ஆபத்து இருக்கிறது!

"ஏன்? அப்படி என்ன ஆபத்து?"

"பகைவர் படை கோட்டை நோக்கி வருவதாகத் தகவல்!"

"மதனா! என்ன செய்ய?"

"ஐயா!" என்றாள், மதனா! "வைகையைத் தாண்டத் தற்சமயம் உத்தேசம் இல்லை! எனவே மேற்கே சற்று தூரத்தில் போய் அங்கே எங்கேயாவது தங்க இறங்கலாம்!" என்றாள்.



பாளையக்காரர் கண் சிவந்தது.

"அங்கே இடம் தேட வேண்டுமே!"

"நாம் என்ன படையா கொண்டுவந்திருக்கிறோம்! இடம் தாராளமாகப் பார்க்கலாம்!"

பாளையக்காரர் என்ன சொல்லியும் இணங்கவில்லை!

கடைசியில் அவளும் ஒத்துப்போக நேர்ந்தது.

பல்லக்குகள் புறப்பட்டன.

ஒரு நாழிகைப் பிரயாணம். மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்தனர்.

பிறகு ஒரு தோப்புச் சூழ்நிலையில் சற்று இளைப்பாறத் தங்கினர்.

திருமங்கைக்குக் கவலை!

எதாவது உதவ எங்கிருந்தாவது கிடைக்குமா?

எட்டத்தில் பார்த்தாள். காவல்காரர்கள் ஏதோ பாமர ஜனம் போல் நின்றார்கள்.

மரத்தடியில் திருமங்கை நின்றாள்.

மதனா அருகில் வர, "என்ன, மதனா! எதாவது நடக்குமா?" என்றாள், ஆதங்கமுடன்.

"அதோ பாருங்கள்" என்றாள்.

திரும்பிப் பார்த்தாள், மங்கை.

## 30

**வை**கைக் கரை ஓரமாகத் தண்டு இறங்கி இருக்கும் போது, சேடி மதனாவின் கண்கள் சற்று எட்டத்தில் பார்த்தன.

அங்கே தூசித்தோகை ஒன்று எழுந்து ஆகாயத்தில் விரிய.

யாரோ வருகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டாள்.

வீரபாளையக்காரர் ஆட்களும் பரபரப்பு தோன்றி அணிகள் அமைக்க முனைந்தார்கள்.

இளப்பாறியவர்களை எல்லாம் கூவி அழைத்து, ஒரே கலவரப்படுத்தினார்கள்.

ஒரு அதிகாரி இப்போது திருமங்கையை நோக்கி வந்தார். "இந்தாருங்கள்! வாருங்கள் இப்படி!" என்று அழைத்து, அவர்களை அரண்யப் பகுதிக்குள் கொண்டு போக ஆரம்பித்தார்.

சற்று தூரம் சென்ற திருமங்கை, "இந்தாருங்கள்! இதற்குமேல் போவதற்கில்லை!" என்றாள் கடுமையாக.

"இல்லை எஜமானி! கொஞ்சம் கண்காணாமல்..." என்று அதிகாரி சொல்ல,

"இந்தாரும் அதிகாரியே! இதற்குமேல் போக மாட்டேன்! எதாவது சொன்னீரானால் திரும்பப் பல்லக்குப் பக்கமே வந்துவிடுவோம்!" என்றாள்.

அதிகாரி திகைத்துக் கொண்டு பின்வாங்க, தூரத்துக் கும்பல் முழுவதும், குதிரை வீரர்கள் என்று தெரிந்து விட்டது.

வீரபாளையக்காரரின் ஆட்கள் அனைவருமே சித்தமாகி விட்டார்கள்.

குதிரைகள் காற்றைச் சீறிக்கொண்டு, நுரை தள்ளி அங்கே வந்து நின்றன.

அதன் தலைவன் உக்கிரமாகப் பார்த்தான்.

"எங்கே அந்தப் பெண்கள்?" என்றான்.

எட்டத்தில் மர ஓரம் நின்ற பாளையக்கார வீரன்.



"பெண்கள் யாரும் கிடையாது இங்கே!" என்றான்.

"அப்படியானால் பல்லக்கில் யார் வந்தார்கள்?"

"வெறும் பல்லக்குகள் அவை! வரும் வழியில் நோயாளிகளை ஏற்றிவருவதாக இருக்கிறோம்."

வந்த ஆசாமி உக்கிரம் குறையாது நின்றான்.

அவன் கண்களில் சூரியச் சுடர் தெறித்தது.

இங்கும் அங்கும் பார்வையைப் பதியவிட்டான்.

பிறகு அரண்யம் பக்கம் அது திரும்பியது.

"அதோ! அதோ!" என்றான் மற்றவர்களைப் பார்த்து.

குபீர் என்று அத்தனை குதிரைகளும் கிளம்பின.

வனத்தை நோக்கி அவை செல்ல முயல, பாளையக்கார ஆட்கள் வாள் உருவி அதைத் தடுத்தார்கள்.

அவ்வளவில் அங்கே ஒரு பூசல் எழுந்தது.

"ஆ..... விடாதே! கொல்லு! வெட்டு! என்று ஆவேச வார்த்தைகள் காற்றில் துண்டித்துவிட,

அவற்றுக்குத் தாளம் இருப்பதுபோல் வாள் உரசல்கள் 'டணார்... டணார்......' என்று எழுந்தன.

தூசித் தோகைகள் விரிந்து எழுந்தன. பூமி நடுங்கிக் கொண்டது.

உலோகத்தோடு உலோகம் உராய பளிச்சிடும் மின்னல் சுடர்கள் தெறித்து ஓடின.

அரை நாழிகை நேரம் நடந்த அற்ப யுத்தம் அது.

வந்த குதிரை வீரர்கள் பலரும் சிதறி ஓட,

வீரபாளையக்காரர்கள் வெற்றி முழக்கம் செய்தார்கள்.

அடுத்து அந்த அதிகாரி மீண்டும் ஓடிவந்து, "வாருங்கள்! வாருங்கள்! உடனே புறப்படுவோம்!" என்று திருமங்கையிடம் வந்து கூறினார்.

திருமங்கை அங்கே நடந்த சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆரம்பத்தில் வெகு உற்சாகமாக இருந்தது. பின்னர் அது மழுங்கிவிட்டது.

நிச்சயம் அது அதிவீரனின் ஆட்கள் என்று நினைத்து இருந்தாள்.

அவளைத்தான் மீட்க வருகிறார்கள் என்று நினைப்புக் கொண்டிருந்தாள்.

வந்தவர்கள் உக்கிரமாகச் சண்டை போட்டனர். இருந்தாலும் போதிய போர்த்திறமை இல்லாமல் இருந்தார்கள்.

இப்போதுதான் பயிற்சி பெற்று களத்தில் இறக்கப் பட்டவர்கள் போலத் தோன்றினார்கள்.

அவர்கள் பாளையக்காரர்களின் எதிர்த்தாக்கு தாளாமல் சீக்கிரமே தள்ளாடுவது தெரிந்தது.

முடிவில் சிதறியடித்து ஓடினார்கள்.

திருமங்கைக்கு சோகமாக வந்தது.

"வாருங்கள்!" என்றார் அதிகாரி மீண்டும்.

மங்கை தயங்கினாள்.

"இந்தாங்க! சீக்கிரம் வாருங்கள்!" என்று அதிகாரி கோபத்தைக் காட்டினார்.

'சுள்' என்று அது அடிவாரத்தில் எங்கேயோ போய்த் தைத்தது.

அவரை நோக்கி ஒரு விழி விழித்தாள்.



"இந்தப் பார்வையைத் தயவுசெய்து என்னிடம் காட்டவேண்டாம்! பல்லக்கு ஏறுங்கள்!" என்று அழுத்தமாகக் கூறினார் அதிகாரி.

மங்கையின் கண்கள் கலக்கமாயின. மதனா அவளை இரக்கமுடன் கவனித்தாள்.

இருவரும் பல்லக்குகளை அடைந்தார்கள்.

பல்லக்குப் புறப்பட்டது.

அதிவீரன் அந்த மாளிகையில் மேன் மாடத்தில் அங்கும் இங்கும் உலாவிக் கொண்டிருந்தான்.

தென்காசியை விட்டு வந்ததிலிருந்து ஏகமான விஷயங்கள் நடந்துவிட்டன.

உலகம் இப்போதுதான் அவருக்கு உண்மையில் தெரிந்தது.

ஏட்டுச்சுவடிகளில் எத்தனை நாள் நிலைத்து இருந்து விட்டான்.

உண்மைதான்! அறிவு நிறைய வந்திருக்கிறது.

ஆனால், அறிவு மட்டும் இருந்து என்ன பிரயோசனம்!

வாழ்க்கையில் எப்படி இருக்க வேண்டும் என்று தெரியாமல் போயிற்றே!

வெளியே வந்து பார்த்தால் எத்தனை பயங்கர விஷயங்கள் நடக்கின்றன?

எத்தனை சதித் திட்டங்கள், சூழ்ச்சிகள், துரோகங்கள்!

அத்தனையும் மனித வாழ்க்கையில் நடக்கும் என்று தெரிந்தும், எல்லாரும் நல்லவர்கள்! என்ற மனப்பான்மையில் சும்மா இருந்துவிட்டோமே!

ஏட்டுச் சுரைக்காய்க் கறிக்கு உதவாது என்பது நன்றாகத் தெரிந்துவிட்டதே!

மதுரை வந்து பார்த்தால்தானே இங்குள்ள சூழ்ச்சிகளும் வஞ்சகங்களும் தெரிகின்றன.

அடேயப்பா! ஒருத்தரை ஒருத்தர் கவிழ்ப்பதற்கு இப்படியா தந்திரங்கள் செய்வார்கள்?

இந்த வீரபாளையக்காரர் என்ன அக்கிரமாக்காரர்! நான் யார் என்பதைப் புரிந்து என்னை தம் வீட்டுக் கிடங்கில் கொண்டு போய் தள்ளிவிட்டார்?

இந்த விஷயத்தை மட்டும் மதுரை நாயக்கரிடம் அவன் (அதிவீரன்) சொல்லிவிட்டால் வீரபாளையக்காரன் கதி என்னாவது!

இருந்தும்.... எதிரே தர்மசேனன் கவலையே குறியாக உட்கார்ந்திருக்க,

அதிவீரனின் நினைவுகள் படர்ந்து சென்றன.

கடைசியில் அவனை நோக்கித் திரும்பி, –நல்லது தர்மசேனா! இப்பொழுதாவது நாம் கண்ணை விழித்துப் பார்த்தோமே! இப்போது நினைத்தாலும் என் உடம்பு சிலிர்க்கிறது. அந்தத் திருமங்கை மட்டும் என்னை வீரபளையக்காரரின் கிடங்கில் இருந்து காப்பாற்றியிராவிட்டால் என் கதி என்னாகிறது!''

–''ஆம் ஐயா! நாமும் இந்த நேரத்தில் அந்தப் பெண்ணுக்கு மறு உபகாரம் செய்கிறோம்!'' என்றான் தர்மசேனன்.

''வீரசேனன் அவர்களைப் போய்ப் பிடித்திருப்பானா?''

''பிடித்திருக்க வேண்டும்!''

''எத்தனை பேர் அவனோடு சென்றிருக்கிறார்கள்?''

''பத்து பேர்.''

''போதுமா?''



''அவ்வளவுதான் இங்கே திரட்ட முடிந்தது!''

''போதும்! வீரசேனன் சமாளித்துவிடுவான்! எப்படியும் அந்தப் பெண்களை மீட்டுவிடுவான். ஆனால், கோட்டைக்குள் அவர்களைக் கொண்டுவர முடியாதே!''

''அப்படி ஒரு நிலை வந்தால் நானே நாயக்கரிடம் சென்று கேட்டுக் கொள்வேன்!''

''இங்கே ஏன் வந்தீர்கள்?'' என்று அவர் கேட்டால்–''

சிரித்தான் அதிவீரன்!

''உண்மையைச் சொல்லிவிடுவோம்! நானோ ரதி லீலை எழுதுகிறேன் என்று பெயர் நாலு இடத்தில் பரவியாயிற்று! அதனால் அல்லிக்கொடி என்ற தாசியைத் தேடி மதுரை வந்தேன் என்பேன்!''

''அவள் மீது அவ்வளவு அக்கறையா என்று நினைக்க மாட்டார்களா?''

''பெண்களுக்கு அவள் ஒரு இலக்கணம்! சொர்க்கத்தின் சுகம் அவளது கலவியில் பெறலாம்! என்று சொல்வேன்.''

''தாங்கள் சாமர்த்தியக்காரர் ஆயிற்றே சுவாமி!''

அச்சமயம் வாசலின் கதவு திறக்க வீரசேனன் வருவது தெரிந்தது.

''வா! வீரசேனா! வருக! வருக! எல்லாம் வெற்றி தானோ!'' என்றான் அதிவீரன்.

வீரசேனன் குனிந்து கொண்டே வந்தான்.

அருகே வந்ததும் தலை நிமிராமல்,

''சுவாமி! ஏமாந்தேன்! தோல்வி அடைந்தேன்!'' என்றான்.

அதிவீரனின் கண்கள் துள்ளின.

"என்ன வீரசேனா?"

"ஆமாம்! திருமங்கையை என்னால் மீட்க முடியவில்லை. நான் தோல்வி அடைந்தேன்!" என்று நடுக்கமுடன் கூறினான் அவன்.

அதிவீரனின் பார்வை சுழல் ஆகியது.

## 31

வீரசேனன் குனிந்து கொண்டு நிற்க,

அதிவீரனுக்கு என்ன நடந்தது என்பது ஊகமாகி விட்டது.

"வீரா! வீரா!" என்று அவனை அழைத்தார்.

கலங்கிய கண்களுடன் அவன் நிமிர்ந்து பார்த்தான். "பிரபு! தப்பு நடந்துவிட்டது. வீரியம் போலப் போனேன். தோல்வி கண்டேன்!" என்றான்.

துள்ளி எழுந்தான் அதிவீரன்!

"அப்போது அந்தப் பெண் என்ன ஆனாள்?" என்று கேட்டான்.

"அவர்களிடம் சிக்கி இருக்கிறாள். அவளை தஞ்சாவூர் கொண்டுபோகிறார்கள்!" என்றான், வீரசேனன்.

அதிவீரனுக்கு மனம் கொதித்தது.

"இந்தா, தர்மசேனா, வீரசேனா இரண்டு பேரும் கிளம்புங்கள்! உடனே நாம் அவளை விடுதலை செய்யணும்" என்று கூறினான், அதிவீரன்.

"சுவாமி! நில்லுங்கள்! நில்லுங்கள்!" என்றான், தர்மசேனன்.

அதிவீரன் சற்றே திரும்பினான்.



"சுவாமி! அந்நிய ஊரில் இருக்கிறோம். நம்மிடம் படை கிடையாது. கோட்டையை கடப்பது வேறு கடினம். பகலில் சில நாழிகை மட்டும் திறந்து வைத்திருக்கிறார்கள்."

"இல்லை வீரசேனா! தடுக்காதே! படை இல்லாவிட்டால் போகிறது. நம் யுக்தியால் அவர்களை வெல்லப் பார்க்கலாம்! கிளம்பு அந்தப் பெண் தத்தளித்துக் கொண்டிருப்பாள்!" என்றான், அதிவீரன்.

எல்லோரும் பாகை தரித்த வியாபாரி உருவில் கிளம்பினார்கள்.

கோட்டை திறந்திருந்த நாழிகையில் வெளியே வந்தார்கள்.

வடக்கு நோக்கி செல்லும் பாட்டையில் விரைந்து சென்றார்கள்.

பகல் சாயும் வரை அன்று பிரயாணம் செய்தார்கள்.

கடைசியில் அந்த பூசல் நடந்த இடத்திற்கு வந்தார்கள்.

"இங்கேதான் சண்டை நடந்தது!" என்றான், வீரசேனன்.

அதிவீரன் கீழே இறங்கிப் பார்த்தான்.

வீரசேனன் எல்லாவற்றையும் விளக்கினான்.

அதிவீரனுக்கு அவனை அறியாமல் கண்ணில் நீர் வந்தது.

மங்கையை நினைத்துப் பார்த்தான்.

அவளது முகம் ஒரு கவிதை!

கண்கள் இரண்டும் இரு சுறாக்கள்!

ஒரு நீண்ட மூச்சு விடுத்தான்.

இவளை எந்த இனத்தோடு சேர்க்கலாம்.

இவளை அடைந்தால் அந்தக் கணமே சொர்க்கம் கிடைக்கும்.

"வீரசேனா! இந்த வழிதானே போயிருக்க வேண்டும்?"

"ஆமாம் சுவாமி!"

"வாருங்கள் போகலாம்! எப்படியும் அவளைப் பிடித்துவிடவேண்டும்!"

அருமையான அரபிக் குதிரைகள்.

'விர்' என்று காற்றுக்குள் செலுத்தி ஓடின!

வைகையை கடந்து திருச்சி மார்க்கமாக சென்றார்கள்.

வழியில் விசாரணை செய்துகொண்டு போனார்கள்.

இரண்டு நாள் பிரயாணம் செய்தும் அந்தக் கும்பலைக் கண்டு கொள்ள முடியவில்லை.

இரண்டாம் நாள் சாயங்காலம் சோர்ந்தது. அக்காள் மடம் என்ற சத்திரத்தில் நுழைந்தார்கள்.

சோர்வும் ஆத்திரமும் பீறிட்டு வந்தன.

சத்திரத்து மணியக்காரரை விசாரணை செய்தார்கள்.

"தஞ்சாவூர் போகணும் என்றால் பல மார்க்கங்கள் உள்ளனவே. எதைப் பிடித்துப் போனார்களோ!" என்று சொன்னார்.

தவிரவும், "இப்போது இங்கே படை நடமாட்டம் வேறு அதிகமாக இருக்கிறது. எங்களுக்கே பயமாக இருக்கிறது! யார் யாருடைய படை என்று தெரியவில்லை. விஜயநகர ராஜ்ஜியம் அழிந்தாலும் அழிந்தது! தலைக்குத் தலை பூமியை ஆள வந்துவிட்டார்கள். கலிமுற்றிவிட்டது. அவ்வளவுதான் சொல்வேன்!" என்றார்.

அதிவீரன் மனசு சங்கடப்பட்டது.



எந்தவழி போனார்கள் என்பது தெரியாமல் தேடிப் போவது சரியல்ல!

நாட்டைவிட்டு வெகுதூரம் வந்தாகிவிட்டது.

அங்கே என்ன நடக்கிறதோ!

வீரபாளையக்காரர் அங்கேயும் ஏதாவது செய்கிறாரோ!

யோசித்துப் பார்த்தால் வீரபாளையக்காரர் தாமாக நின்று இந்தக் காரியங்களை செய்யவில்லை என்று படுகிறது.

அவருக்குப் பக்க பலமாக இன்னும் பல பாளையக் காரர்கள் இருக்க வேண்டும்.

எல்லோரும் மதுரை நாயக்கர் ஆட்சியை வெறுக்கிறார்கள்

'தெலுங்கர்' ஆட்சி என்று நைச்சியம் செய்கிறார்கள்.

தான்தான் தனி ராஜ்ஜியமாக இருக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள்.

இவர்கள் இப்படி வேறுபட்டக் கருத்துக்கள் வைத்திருப் பதனால்தான் கடற்கரையில் பரங்கியர் புகுந்து விட்டார்கள். இவர்கள் தங்கள் தீய பழக்க வழக்கங்களை நாட்டில் பரப்பி வருகிறார்கள்.

இவ்வாறு சிந்தனை வசனாய் இருந்த அதி வீரனிடத்தில் பெரிய பரபரப்பு ஏற்பட்டது.

நாடுகள் எங்கிலும் என்னென்னவோ நடந்து கொண்டிருக்கிறது.

"வா! தர்மசேனா, வீரசேனா! நாம் இனி இங்கே அரைக்கணமும் தங்கக்கூடாது! உடனே மதுரை திரும்புவோம்!" என்றான்.

சிறிதுகூட ஓய்வு எடுக்கவில்லை. மீண்டும் தெற்கு நோக்கிப் புறப்பட்டார்கள்.

மறுநாள் மாலைக்குள் மதுரை அடைந்தார்கள்.

நல்லவேளை கோட்டைக் கதவு திறந்திருக்கும் நாழிகைக்குள் போய்விட்டார்கள்.

உள்ளே சென்று, கங்கை கொண்டான் சத்திரத்தில் போய்த் தங்கினார்கள்.

இப்போதுதான் அதிவீரனுக்கு மேலும் பரபரப்பு ஏற்பட்டது.

இனி என்ன செய்ய?

தெற்கே தனது தலைநகருக்குச் சீக்கிரம் திரும்பி விட வேண்டும்.

அதற்குமுன் மதுரை மன்னரைப் பார்த்து பல விஷயங்கள் பேசவேண்டும்.

மதுரை மன்னருக்கு அவன் நல்ல சிநேகிதன்!

ஆனால், அவன் வந்திருப்பதைக் கூட அவருக்கு இன்னும் அறிவிக்கவில்லை.

மாறுவேடத்தில் வந்தால் அவரைப் பார்க்காமலே திரும்பிவிடலாம் என்று நினைத்தான்.

ஆனால், இப்போது சூழ்நிலைகள் உருவாகி இருப்பதைப் பார்த்தால் நிச்சயம் அவரிடம் பேசி ஆலோசனை பெற்றுப் போகவேண்டும் என்று தோன்றியது.

''வீரசேனா! இன்று இரவு நாம் நாயக்கரைப் பார்க்கிறோம்! ஏற்பாடு செய்!'' என்றான்.

''நல்லது சுவாமி! செய்கிறேன்! மன்னரைப் பார்ப்பதானால் ஏதாவது பரிசில் வாங்கவேண்டும்!'' என்றான், வீரசேனன்.



''என்ன பரிசில்! முத்து, பவளம் ஏதாவது இருந்தால் வாங்கிப்போகலாம்!''

''அப்போது இரவு அங்காடிக்குப் போக வேண்டியது தான்!'' என்றான், வீரசேனன்.

அங்காடிக்குப் புறப்பட்டார்கள்.

கடைகளை ஒவ்வொன்றாகப் பார்த்து வரும்போது ஒரு கணீர் குரல் அதிவீரனின் கவனத்தை அவசரமாக இழுத்தது.

சடக்கெனத் திரும்பிப் பார்க்க, அவன் கண்கள் படபடத்தன.

அந்தக் கணீர் குரலில் பேசிய பெண் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

இருவர் கண்களும் மோதிக்கொண்டு லயித்தன.

அந்தப் பெண் தனது கண் மூலம் நுட்பமாக எச்சரிப்பது தெரிந்தது.

அவனது அல்லிக்கொடியை அதிவீரனால் கண்டு பிடிக்க முடியாதா என்ன?

அல்லிக்கொடி அந்த இடத்தைவிட்டு அகல்வதை ஓரக்கண்ணால் உணர்ந்து,

அவள் சிறிது தூரம் சென்றபிறகு அவன் நன்றாகத் திரும்பிப் பார்த்தான்.

அவள் அருகில் வந்து போகும் அந்த வாட்டசாட்ட பிரயாணிகள், உண்மையில் காவலர்கள் என்பதைப் புரிந்து கொண்டான்.

அந்தக் கணமே அவன் செயலிழந்து நிற்க,

''சுவாமி! இது என்ன? வந்த காரியத்தை மறந்து—'' என்றான் வீரசேனன்.

"வீரா! அதோ ஒரு பெண் போகிறாளே, யார் என்று தெரியுமா?" என்றான் அதிவீரன்.

"யார் அது!"

"அல்லிக்கொடி!"

"அப்படியா?"

"ஆமாம்! அதனால் தவித்து நிற்கிறேன்!"

"இருக்கட்டும் சுவாமி! இப்போது நமக்கு இருக்கும் நெருக்கடிகள் பலவாகிவிட்டன. இப்போது நேரம் தாழ்த்துவது நமக்கு நிறைய சங்கடங்களை விளைவிக்கும்! எனவே உடனே நாம் காரியங்களைக் கவனித்தாக வேண்டும்! வாருங்கள். நீலக்கல் அல்லது சிவப்புக்கல் வாங்குவோம். மன்னரைப் பார்த்தாக வேண்டுமே!"

"இல்லை வீரா! இப்போது அவள் எங்கே போகிறாள் என்பதைக் கவனிக்க வேண்டுமே!" என்று பரபரத்தான் அதிவீரன்.

"அப்போது நாயக்கரைச் சந்திக்க வேண்டாமா?" என்றான் வீரன்.

"அதை அப்புறம் வைத்துக் கொள்ளலாமே!"

திடுக்கிட்டான் வீரன்.

"சுவாமி! தாங்களா அப்படிச் சொல்கிறீர்கள்?"

"கவனி வீரா! நாம் தேடி வந்தது அல்லிக்கொடியைத்தான். அவளை உடனே கவனியாமல்... வா! சீக்கிரம் அவளைப் பின்பற்ற வேண்டும்.

அதிவீரன் அதிவேகமாகச் செல்ல, வீரசேனன், தர்மசேனன் இருவரும் வெலவெலத்தார்கள்.

"மன்னர் இப்படி மாறி மாறி வெவ்வேறு காரியங்களில் இறங்குகிறாரே! இது எதில் கொண்டு விடுமோ?" என்று இருவரும் அங்கலாய்த்தார்கள்.



இருவரும் உடனே விறுவிறு என்று அதிவீரன் பின்னால் செல்லத் தலைப்பட்டார்கள்.

இருட்டு நேரம் அது!

எங்கும் எண்ணெய் விளக்குகள் எரிந்து தெரு முழுதும் புகைப்படலங்கள்.

அதனூடே அவர்கள் நடந்து செல்ல,

இருவர் கண்ணிலும் நிழல் போல ஓரத்தில் நகர்ந்து வரும் உருவத்தின் மீது கவனம் விழுந்தது.

## 32

அல்லிக்கொடி அந்த இருட்டு நேரத்தில் தளுக்கான நடையிட்டு அங்கங்களை அபிநயித்துச் சென்றாள்.

இருட்டில் அதிவீரன் தன்னை அடையாளம் கண்டு கொண்டே வரவேண்டும் என்ற நினைப்பில்தான் அப்படிச் செய்திருப்பாள்.

தேர்முட்டியைத் தாண்டிய பிறகு தனக்குப் பாதுகாப்பாக வரும் பலசாலிகளை அழைத்துக் காதில் என்னவோ சொன்னாள்.

அவர்கள் அதன்பிறகு பின்னால் தொடரும் அதிவீரனிடம் அதிகம் கவனம் காட்டினார்கள்.

அதிவீரன் அதை உணர்ந்து அல்லிக்கொடி அப்படிச் செய்யமாட்டாளே என்று ஊகம் பண்ணினான்.

பிறகு இது ஏதோ காரணத்திற்குத்தான் எனப்புரிந்து,

அவனே பின்தங்கியும் அதே நேரத்தில் பின் தொடர்பை விடாமலும் இருந்தான்.

அவன் மெதுவாக ஆக, பலசாலிகளும் தயக்கங் காட்டி அவன் தொடர்கிறானா என்பதைக் கவனித்துக் கொண்டே சென்றார்கள்.

சில சமயம் அவர்கள் சற்று நேரமாகக் கூட நிற்க வேண்டி வந்தது.

அதிவீரன் மனதில் ஏதோ யுக்தி தோன்ற, ஒரு தெருவின் ஓரம் சென்றவன் அங்கேயே படி ஏறி நின்று விட்டான்.

அப்புறம் நடந்ததெல்லாம் வேடிக்கையாக இருந்தது.

பலசாலிகள் அவன் எங்கே போனான் என்பதைத் தேடி தெரு முனை வரை வந்து அவன் பதுங்கியிருப்பதைக் கவனியாமல் இன்னும் பின்னால் சென்றார்கள்.

ஆ! இது சரியான தருணமாயிற்றே! அல்லிக் கொடி இப்போது தப்பியிருக்கலாமே என்று நினைத்தான்.

பின்னர் அந்த பலசாலிகள் திரும்பவும் அவனைக் கடந்து வந்த திசை போனார்கள்.

அந்த வீட்டுப் பருமனான தூண் அவனைக் காப்பாற்றிற்று என்று அதிவீரன் நினைத்தான்.

எனினும் அங்கே இன்னும் காத்திருக்க நினைத்தான்.

ஏதாவது தவறு செய்ய விரும்பவில்லை.

அரை நாழிகை ஓடிற்று.

"சுவாமி.... சுவாமி" என்று மெல்லிய குரல் கேட்டது.

பழகிய குரல் போல இருந்தது.

எங்கோ உயிரைத் தொடுவது போல இருந்தது.

சட்டென்று திண்ணையிலிருந்து கீழே குதித்தான்.

தெளிவாக இப்போது கேட்டது குரல்.

ஆ--இது--

முன் நடையில் நின்று எட்டிப் பார்த்தான்.

அவன் அங்கே தன்னைக் காட்டிக் கொள்வதற்கும், அந்தப் பெண் அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது.



சட்டென்று அவரை நோக்கி "சுவாமி!" என்றாள்.

"அல்லி!" என்றான் அவன்.

அடுத்த கணம் ஒரு சூறாவளி அவளது உடலில் புகுந்திருக்க வேண்டும்.

பளீர் என்று தாவி அவன் முன்னால் நின்றாள்.

அவன்தானா என்று நிச்சயம் செய்து, சட்டென்று அவனை இறுகக் கட்டினாள்.

அவனுக்கு உணர்வுகள் வானளாவின.

இரு கைகளையும் முறுக்குக் கயிறுகள் போலாக்கி இறுக்கித் தழுவினான்.

இருவரையும் அந்நேரத்தில் பார்த்தால் பொச்சக் கயிற்றில் கட்டப்பட்ட பொதி போல இருந்தார்கள்.

வெகு நேரம் கழித்துத்தான் அவள் தனது பிணைப்பைத் தளர்த்தினாள்.

"சுவாமி! சுவாமி! நல்ல வேளையாகத் தப்பித்தேன்! சதிகாரர்கள் அவர்கள்! உடனே இந்த இடத்தைவிட்டு அகல வேண்டும்" என்றாள்.

அவளுக்கு அழுத்தமாக ஒருமுறை முத்தம் நல்கிய அதிவீரன்.

அடுத்து அவளுடன் புறப்பட்டு வெளியே வந்து இரு திசையும் பார்த்தான்.

யாரும் தென்படவில்லை.

எச்சரிக்கை எடுத்து ஒவ்வொரு இடமாகத் தங்கி மாளிகையை அடைந்தார்கள்.

உடனே அவளை மேன்மாடத்திற்கு அழைத்துப் போனான் அதிவீரன்.

அங்கே அவனது மதன சொரூபம் உண்டாகிய பெரிய 'தீ' யாகப் பரவிவிட,

அப்படியே அல்லிக்கொடியைத் தூக்கி மஞ்சத்தின் மீது பூப் போன்று படுக்க வைத்தான்.

பிறகு மென்மையான அவள் நெஞ்சங்கள் மீது விரல்களைப் பரவவிட்டு, சிருங்காரத் தடவல்களில் ஈடு பட்டு அவள் உடலுக்கு ஊக்கம் கொடுக்க ஆரம்பித்தான்.

ஆனால், "சுவாமி! சுவாமி!" என்று அவள் இடைமறித்துக் கொண்டிருந்தாள்.

அதிவீரன் விடவில்லை.

அல்லிக்கொடியை அனுபவித்து எத்தனை நாள் ஆகிவிட்டது.

இப்போது பார்த்தால் இளமை திரும்பி கன்னிப் பெண் முதல் பருவம் அடைந்தது போல இருந்தாள்.

காலம் கடந்துவிட்டதால் புதுப் பெண்ணைத் தொடுவது போல் இருந்தது.

இந்த மார்பகங்களா? இவைகளை முன்பு தொட்டது போல் நினைவு இல்லையே!

அத்தனை புதுசாக இருக்கிறதே!

இவை என்ன?

இலந்தைப் பழம் போன்ற மேல் உச்சங்கள் இருக்கின்றனவே!

விரிந்த குடைக்கு மேலே உள்ள பூண் போல மெருகு கொடுக்கிறதே, கைக்கு!

"சுவாமி! சுவாமி! பொறுங்கள்! நான் சொல்வதைக் கேளுங்கள்!" என்றாள் அவள்.

"இல்லை! எனது பிரதம தாசியை இன்று ருசிக்காது விடுவேனா! நிச்சயம் மாட்டேன்!" என்றான் அவன்.



அவன் விடவில்லை! மென்மையான அந்தக் குலைகளை இதமாக துவைத்துவிட்டான்.

பிறகு அவசர அவசரத்தில் அவளது இலை போன்ற இடுப்பைக் கைகளால் பூசி,

அவளது நாபியையும் மெல்லச் சுற்றிப் பரிமாறி,

பிறகு இடைக்குக் கீழே சல்லி வேர் போன்ற வளர்ச்சி எழுந்த படுகையில் விரல்களை விரவிக் கொண்டு போனான்.

இந்த முறை அவள், "சுவாமி!" என்று சொல்லி சடக்கென்று தரையில் குதித்துவிட்டாள்.

"என்ன என்ன?" என்று பதறிக்கொண்டு அதிவீரன் கேட்க,

"சுவாமி! பொறுங்கள்! நான் சபதம் எடுத்திருக் கிறேன்" என்றாள்.

"சபதமா!"

"ஆமாம்."

"யாரிடம்? எதற்கு?"

"என்னைச் சிறை வைத்திருந்தவர் யார் தெரியுமா சுவாமி?"

"தெரியாது!"

"கருமாணிக்கபுரத்தைச் சேர்ந்த வீரபாளையக்காரர்!"

"தெரியும் அல்லி!"

"என்னை அவர் கேட்காத கேள்வி எல்லாம் கேட்டார்."

"என்ன கேட்டார்?"

உங்கள் மன்னன் ஸ்திரி லோலனா? எந்தப் பெண் கிடைத்தால் அவர் போரைக் கூடப் புறக்கணிப்பார்! அவருக்குப் படை பலம் என்ன? யார் யார் உங்கள் மன்னருக்கு சிநேகிதர்கள் இப்படி எல்லாம் கேட்டார்."

"என்ன சொன்னாய்?"

"நான் எதற்குமே மறுமொழி சொல்லவில்லை!"

"அப்புறம்?"

"அவன் என்னை மானபங்கப்படுத்தப் பார்த்தான்!"

"அவ்வளவு துணிச்சலா அவனுக்கு?"

அதிவீரனுக்குக் கோபம் வந்திருந்திருந்தது.

"தங்களை அவமானப் படுத்த வேண்டும் என்று நினைக்கிறான், என்னை மானபங்கம் செய்வது மூலம்!"

"நீ என்ன செய்தாய்?"

"என் அருகில் வந்தால் மண்டையை மோதி உயிர் துறப்பேன் என்று சொன்னேன். அதற்குப் பிறகுதான் அவன் சும்மா இருந்தான்."

"சபதம் ஏன் எடுத்தாய்?"

"இரண்டாம் முறையும் மானபங்கப்படுத்த வந்தான். அப்போதுதான் சபதம் எடுத்தேன்! "இந்தா! என் அருகில் வந்தால் தரையில் தலையை மோதி இறப்பேன். நெருங்காதே என்னை! என் உறவு உனக்குக் கிடைக்காது! உனக்கு மட்டும் அல்ல! எங்கள் அரசர் உன்னை வாகை சூடி முடித்த பிறகுதான் நான் இனி போகத்திற்கே உடன்படுவேன். இது எங்கள் விசுவநாதர் சத்தியம்! என்று சொல்லிவிட்டேன்."

அதிவீரனுக்கு உடலில் பதட்டம் ஏற்பட்டது.

"நன்று சொன்னாய், அல்லி!" என்று வெறித்துப் பார்த்தான்.



கண்களுக்குள் ஒரு தீ எழுவது தெரிந்தது.

அது சிவு சிவு என்று வளர்ந்து சிவப்புக் கனறி ஆகிக் கொண்டிருந்தது.

அவள் கைகளைப் பற்றினான்.

இந்தா! அல்லி! நான் சபதம் எடுத்தால் என்ன? என் பிரஜையான நீ சபதம் எடுத்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான்! இனி உன்னை மோகத்துடன் தொட மாட்டேன். உன் சபதத்தை நிறைவேற்றி விட்டுதான் உன்னைத் தொடுவேன்!" என்றான் அதிவீரன்.

நீண்ட பெருமூச்சுகள் இழைத்துக் கொண்டு அவன் அந்தக் கணமே கட்டிலைவிட்டுக் கீழே இறங்கி, அப்பால் போய் மாடத்தில் உட்கார்ந்தான்.

அல்லி அவனைப் பின்பற்றினாள்.

"சுவாமி! நான் செய்தது சரிதானே! அடியாள் மீது கோபம் இல்லையே?" என்று கேட்டாள் அல்லி.

"நிச்சயம் இல்லை! நீ சரியாகத்தான் சபதம் செய்தாய்! இப்போது அதை நிறைவேற்றி வைப்பது என் பொறுப்பு" என்றான் அதிவீரன்.

மேலே வானம் நட்சத்திரங்களாகப் பரந்திருக்க, அவனது கட்டில் ஓரத்தில் அவள் அமர்ந்தாள்.

"சுவாமி! தங்களைக் கொன்று தங்களது ராஜ்ஜியத்தை அபகரிக்க பலத்த சதி நடக்கிறது."

"யார் யார் இருக்கிறார்கள் இதில்?"

"தஞ்சாவூர் மன்னர்தான் இதற்குத் தலைமையானவர்!"

"தெரியும்! மற்றவர்கள் யார்?"

"கொல்லம் ராஜா"

"பிறகு..."

"ஆறு பாளையக்காரர்கள்!"

"அவர்களுக்குத் தலைமையானவர் யார்?"

"ஏன்? இந்த வீர பாளையத்தார்தான்!"

அதிவீரன் யோசித்து மவுனமானான்.

"எல்லோரும் சமயம் பார்த்து தென்காசி மீது படையெடுத்து உங்களை முடிப்பதாக இருக்கிறார்கள்."

"ஓ!"

"நீங்கள் வெளியில் தலை காட்டுவதே ஆபத்து. நீங்கள் இங்கே வந்திருப்பது அவர்களுக்குத் தெரிந்தாகிவிட்டது. உங்களை வேட்டையாடித் திரிகிறார்கள்."

"ஓ"

சடக்கென்று வாசலில் ஏதோ கசமுசா சத்தம் ஏற்பட, "பிரபு!" என்று ஒரு குரல் எழுந்தது.

அதிவீரன் திடுக்கிட்டு எழுந்தான்.

## 33

அதிவீர பாண்டியன் சபதம் செய்ய, இளநங்கை அல்லிக்கொடியின் முகத்தில் சூரியப் பிரகாசமாய் வெளிச்சம் பாய்ந்தது.

"சுவாமி! இப்போதுதான் என் மனம் திருப்தி அடைந்தது! நாட்டில் எவ்வளவு பேராபத்து சூழ்ந்திருக்கிறது தெரியுமா? எந்த நிமிடமும் யுத்தம் மூளப்போகிறது. இது துங்கபத்திரைப் போரைவிடக் கடுமையாக இருக்கும்!" என்று கூறினாள் அவள்.

துங்கபத்திரைப் போரில்தான் விஜயநகர ராஜ்ஜியம் தோற்கடிக்கப்பட்டது!



"ஆமாம்! சுவாமி! அந்தப் போராவது வடக்கே நடந்து விட்டது. இது தெற்கே நடந்து நம்மை எல்லோரையுமே பாதிக்கப் போகிறது!"

"அப்படியா சொல்கிறாய்?"

"ஆமாம்! பாளையக்காரர்கள் கூட இதில் பாகு பாடோடு கட்சி சேருகின்றனர். வீரபாளையக்காரர் தங்களுக்கு எதிராக மற்ற பாளையக்காரர்களைச் சேர்த்து வருகிறார். பலரும் சேர்ந்துவிட்டார்கள்."

"யார் அந்த பாளையாக்காரர்கள்?" என்று மிடுக்குடன் கேட்டான் அதிவீரன்.

"மண்டபப்பட்டு, மூலங்கரை, ஜெயங்குளம், நந்தி, வில்லியூர், கரிசல்பட்டி" என்று அடுக்கிக் கொண்டு போனாள் அல்லிக்கொடி.

"என்ன?" என்று வெப்ப பெருமூச்சு விடுத்தான் அதிவீரன். "நந்தி, வில்லியூர், கரிசல்பட்டியா?" என்றான்.

"ஆமாம்! அந்தப் பாளையக்காரர்கள்தான்!"

"நேற்று வரை சிநேகம் காட்டி என்னிடம் உதவியும் கடனும் வாங்கியவர்கள் இவர்கள்" என்று வார்த்தைகளைக் கடித்துக் கொண்டு கூறினான் அதிவீரன்!"

எல்லோரும் நயவஞ்சகர்கள்!"

"மீதியிருப்பவர்கள் எல்லாரும் எனது தாயாதி உறவினர்கள்" என்றான் நெருப்பாக!

தொடர்ந்து, "ஏன் அல்லி! உனக்கு இது நிச்சயமாகத் தெரியுமா?" என்றான், கண்கள் மினுக்க.

"தெரியும் சுவாமி! அவர்கள் அத்தனை பேரையும் நேரில் பார்த்தேன்!" என்றாள் அல்லி!

26645
A2A1889

''எங்கே?''

''வீரபாளை[illegible]ருக்கு அடுத்த மாளிகையில்!''

''ஒகோ! இங்கே வந்திருக்கிறார்களா!''

''ஆமாம். இங்கே ரகசியமாய் இருந்து வருகிறார்கள்!''

''இங்கேயா? ஏன்?''

''போர் ஆரம்பிக்கும் போது மதுரை அரசர் வீரப்ப நாயக்கரை ரகசியமாகக் கொல்லப் போகிறார்கள்!''

திடுக்கிட்டுத் திரும்பினான் அதிவீரன்!

''அப்படியா! அல்லி! இது அநியாயத் துரோகம் ஆயிற்றே! அவர்கள் குலம் வாழுமா?''

சிரித்தாள் அல்லி!

''சுவாமி! இந்த நாட்களில் அந்தப் பழையக் கொள்கை களை யார் நம்பப் போகிறார்கள்?''

அதிவீரன் எழுந்தான்.

அவன் மனம் கொந்தளிப்பது தெரிந்தது.

யோசனையில் ஆழ்ந்து அங்கும் இங்கும் உலாவ ஆரம்பித்தான்.

ஒரு இரவை சொர்க்கம் ஆக்க வேண்டும் என்று நினைக்கப் போய், இப்படி நரகமாகிவிட்டதே!

அல்லி மேலும் தொடர்ந்தாள்.

''சுவாமி! இவர்கள் இதோடு நிற்கவில்லை! திருவடி ராஜ்ஜியத்தில் உள்ள ராஜாக்களையும் தங்களுக்குத் துணை சேர்த்திருக்கிறார்கள்!''

திருவடி ராஜ்ஜியம் என்று அவள் குறிப்பிடுவது மலையாள ராஜ்ஜியம்.

அந்த ராஜ்ஜியமும் இப்போது ஒரு குடைக்கீழ் இல்லாமல் பலர் அரசாண்டு வந்தார்கள்.



''கொல்லம் ராஜா இவர்களுடன் சேர்ந்திருக்கிறார். அவர்தான் தம் மகளை தஞ்சாவூர் நாயக்கருக்குத் திருமணம் செய்து வைக்க அனுப்பித்திருக்கிறார்!''

''யார்! திருமங்கைதானே அவள்?''

''ஆமாம்!''

''அவர் ஏன் கூட்டுச் சேருகிறார்!''

''அவருக்கும் ஆதாயம் வேண்டி இருக்கிறது! தமது ராஜ்ஜியத்தை தங்களது எல்லையில் விரிவுபடுத்த நினைக்கிறார்!''

''ஓ! அப்படியும் ஒரு நினைப்பு இருக்கிறதா?''

''ஆமாம்! அதன் மூலம் மதுரையின் ஆட்சியைக் குலைக்க விரும்புகிறார்!''

''இதில் அவர் அடையப் போகும் லாபம் என்ன?''

''தமக்கு உதவி செய்பவர்களை மதுரையில் வைத்து விட்டால், அவர்கள் உதவியால் திருவடி ராஜ்ஜியத்து இதர மன்னர்களை முறியடித்து தாமே ஏகச் சக்ரவர்த்தி ஆகத்தான்!''

''ஓ! அவ்வளவு பெரிய திட்டமா?''

''ஆமாம், சுவாமி!''

அதிவீரன் மீண்டும் பற்களை அரைத்துக் கொண்டான்.

''எல்லோரும் இப்போது ஆயுத்தமாகி விட்டார்கள், சுவாமி! ஒரே ஒரு விஷயத்திற்காகக் காத்திருக்கிறார்கள்!''

''என்ன அது?''

''கொல்லம் ராஜாவின் மகள் தஞ்சாவூரைப் போய்ச் சேரவேண்டும். அவளுக்கும் தஞ்சாவூர் அரசர் அச்சுத நாயக்கருக்கும் திருமணம் நடக்க வேண்டும். அவ்வளவுதான் போர் தொடங்கிவிடும்.''

ஒவ்வொரு செய்தியும் அதிவீரனின் மனஆழத்தில் விழுந்துகொண்டிருந்தது.

ஆபத்து அவன் அருகில் நிற்பது போல் உணர்ந்தான்.

அவனுக்கு உக்கிரம் ஏற ஏற உலாவுதல் அதிகமானது.

இடையில் திரும்பி, "இவ்வளவு விஷயமும் உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான், ஆச்சரியமுடன்.

"என்னைப் பிடிக்கப் போனது ஒரு விதத்துக்கு சவுகரியமாகப் போய்விட்டது சுவாமி! அவர்களோடு இருந்ததால் பல விஷயங்களில் கிரகித்துக் கொண்டேன்!"

"சரி! உன்னைப் பிடித்துக்கொண்டு போனது அந்த நீலத்தலைப்பாகைக்காரர்கள் தானே?"

"நானும் அப்படித்தான் நம்பினேன். சுவாமி! ஆனால், அவர்கள் அல்ல! அவர்களைப் போல வேடம் தரித்த வீரபாளையத்தாரின் ஆட்கள்!"

"சரி! உன்னை ஏன் பிடித்துச் சென்றார்கள்?"

"இரண்டு விஷயம், சுவாமி!"

"சொல்லு!"

"ஒன்று தங்கள் ராஜ்ஜியம் சீரழிந்துவிட்டது என்று மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்! இரண்டாவது மதுரை மாமன்னரிடம் போய், தங்களைப் பற்றி அவதூறுகளை என்னை வைத்து சொல்லவைக்க வேண்டும்!"

"அப்படியானால் மதுரை மன்னரைச் சந்தித்தாயா?"

"இல்லை! நான் அதற்குச் சம்மதிக்கவில்லை!"

"அப்படியா! உன்னைச் சும்மாவிட்டார்களா?"

"என்னை பயமுறுத்தினார்கள்! பட்டினி போட்டும் பார்த்தார்கள். பலவித வித்தை எல்லாம் செய்து பார்த்தார்கள். முடியவில்லை!"

"ஆ! நீதான் கெட்டிக்காரி!" என்று அவள் தோள் மீது வந்து தட்டினான், அதிவீரன்.

"இப்போது இந்த ஆறு பாளையத்தாரும் எங்கே இருக்கிறார்கள்?"

"பாளையத்தார் வீட்டுக்கு அருகில் ரகசிய நிலவறை வீடு ஒன்று இருக்கிறது."

"நான் சிறைப்பட்டிருந்த இடமா?" என்று சொல்லி, அதைப்பற்றி விவரித்தான் அதிவீரன்!

"அது கிடங்கு சுவாமி! இது அதுவல்ல! இதற்கு வழி வேண்டுமென்றே பின்தெருவில் வைத்திருக்கிறார்கள்!"

"உனக்குத் தெரியுமா?"

"தெரியும்! ஆனால் பிரயாசை எடுத்துத்தான் கண்டு பிடிக்கவேண்டும்!"

"சரி! இப்போது போகலாமா!"

"இப்போதா! ஒரே களைப்பு சுவாமி! தவிர ஒரே களேபரமாக இருக்குமோ! என்னைத் தேடிக் கொண்டிருப்பார்களே!"

"இல்லை, அல்லி! ஒரு நாழிகை நீ ஓய்வு எடு! பிறகு கிளம்புகிறோம்! விஷயம் ரொம்ப அவசரம். இனி சும்மா இருக்க வழியில்லை" என்றான், அதிவீரன்.

ஒரு இரவு தாண்டிய பிறகுதான் அவர்கள் புறப்பட்டார்கள்.

வழி கண்டுபிடிப்பது சிரமமாக இருந்தது. அதிவீரன் மதுரைக்குப் பலமுறை வந்திருப்பவன்! அவனுக்கும் தடுமாறிற்று! இரவில் விசாரிக்க ஆட்களும் இல்லை.

அரை நாழிகை சுற்றி விட்டு கடைசியில் தெருவைக் கண்டுபிடித்தார்கள்.

தோட்டங்கள் சூழ்ந்த வீடுகள் அங்கே நிறைய இருந்தன.

எனவே பார்ப்பதற்கு ஒரு சோலை போலத் தெரிந்தது. தவிர, தெரு போல இல்லை.

"சுவாமி! இதன் பின்புறத் தெருவுக்குப் போக வேண்டும்!" என்றாள்.

அந்தத் தெருவில் நுழைந்து, பாதிதூரம் போன பிறகு,

"இதுதான்" என்றாள்.

அங்கே வைக்கோல் படப்புகள் இருந்தன.

சுற்றிவர மண்சுவர் இருந்தது. சின்ன வழி ஒன்று, உள்ளே போக அனுமதித்தது.

அதன் தட்டியைத் திறந்து, உள்ளே போய், படப்புகளைத் தாண்டினார்கள்.

செடிகளும், தழைகளும் இருந்தன. பூவரசுகள் நிறைய வளர்ந்திருந்தன.

உள்ளே போனபோது, எதிரே ஒரு சுவர் தென்பட்டது.

தூரத்தில் கதவு ஒன்று இருந்தது.

அது உள்ளே பூட்டப்பட்டிருந்தது.

அதிவீரன் சுவர்மேல் ஏறி உள்ளே பார்க்க விரும்பினான்.

அல்லியைக் கீழே பதுங்கி இருக்கச் சொல்லிவிட்டு, சுவர் மீது கைவைத்து ஏறினான்.

அல்லி ஆவலோடு அவனைப் பார்த்தாள்.



கீழே குனிந்து இருக்கும்படியே கையைக் காட்டினான், அதிவீரன்.

உட்புறமாக அவன் பார்க்க அவன் கண்கள் விரிய.

அதேநேரம் அல்லிக்குப் படபடப்பு ஏற்பட்டது.

காரணம் தெருவில் வாகனம் வரும் சத்தம் கேட்டது!

அது அவர்கள் இருந்த கொல்லைப்புறமே வந்து நின்றது.

அடுத்த கணத்தில் காலடி ஓசைகள் கேட்க, அல்லி பதறினாள்,

"சுவாமி! சுவாமி!" என்று அழைக்க விரும்பினாள்.

குரல் வெளி வரவில்லை.

## 34

கல் சுவர் மீது ஏறி நின்ற அதிவீரன் மறுபக்கத்தில் மரங்களின் கீழே பத்து பன்னிரண்டு பேர் அடங்கிய கூட்டம் வாதம் பண்ணிக்கொண்டிருப்பது தெரிந்தது.

சட்டி விளக்கு ஒன்று பெரிதாக எரிந்து கொண்டு இருந்தது.

கும்பலில் முகங்கள் அதன் வெளிச்சத்தில் பொன் மஞ்சளாகத் தெரிந்தன.

வீரபாளையக்காரரை இனம் கண்டுகொண்டான் அதிவீரன்.

சுற்றிவர அந்தப் பாளையக்காரர்கள் தெரிந்தார்கள்.

அதிவீரனுக்குக் கோபம் பொங்கியது!

அவன் நினைத்தால் இவர்களை ஒரு நிமிடத்தில் ஒடுக்கி இவர்களின் பாளையங்களை பறித்து விடுவான்.

அது நீதி ஆகாது என்பதால்தான் செய்யவில்லை!

இவர்கள் எல்லோருமே மதுரை நாயக்கருக்கு கப்பம் கட்டுபவர்கள்.

அதிவீரனும் கூட நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்டவன் தான்!

இப்போதைய சூழ்நிலையில் பெரிய பெரிய ராஜ்ஜியங்கள்தான் வடக்கு ராஜ்ஜியங்களின் கொட்டங்களை அடக்க முடியும் என்ற நிலை.

தனியாக இருக்க முடியாது.

இருந்தால், எங்கிருந்தாவது ஆபத்து வந்து சேரும்.

பாளையாக்காரர் ஒருத்தர் சுத்திப் பேசுவது தெரிந்தது.

"தஞ்சாவூர் அச்சுதப்ப நாயக்கர்தான் தமது தோழர், சிநேகிதர், எல்லாம்! அவரைத்தான் நாம் நம்ப வேண்டும். நமக்கு ஏற்கனவே அவர் உறுதிமொழி கொடுத்துவிட்டார்! மதுரையை மட்டும் அவர் கைப்பற்றிவிட்டால், நாம் அனைவரும் கப்பம் கட்டும் சிற்றரசர்களாக இருக்க வேண்டியது இல்லை! தோழர்கள் போல சுதந்திரமாக வாழலாம்! எனவே, அவரைத்தான் நாம் இதில் உறுதியாக நம்புகிறோம்" என்று கூறினார்.

குட்டிப் பாளையக்காரர் ஒருவர் இடையே புகுந்தார். 'கொல்லம் ராஜா என்ன சொல்கிறார்?"

"அவரும் நமது கூட்டோடு கலந்து கொள்கிறார்" என்றார் முன்னவர்.

"இதனால் அவர் அடையப் போகும் இலாபம் என்ன?"



"இலாபமா! திருவிதாங்கூர் ராஜ்ஜியமும் நம்மைப் போல பின்னங்களாகப் பிளந்து தனித்தனி ராஜ்ஜியமாக இருக்கிறது. கொல்லம் ராஜா அனைத்தையும் சேர்த்து ஒரு ராஜ்ஜியமாக்க விரும்புகிறார்! அதற்குத்தான் கூட்டுத் துணையை நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார்."

"சரி! அவர் இப்போது நமக்காக என்ன உதவி செய்கிறார்?" என்றார் ஒரு இளையவர்.

"ஏன், தம் பெண்ணையே அச்சுதப்பனுக்கு கொடுக்கப் போகிறாரே!"

"ஓகோ? சம்பந்தமே வைத்துக் கொள்கிறாரா!

"ஆமாம்! அந்தத் திருமணம் முடிய வேண்டியதுதான். போருக்கு எழுந்துவிடுவார்."

"யார் மீது?"

"மதுரை மீதுதான்!"

"அப்போது நாம் என்ன செய்ய வேண்டும்?"

"நாம் இப்போது மதுரை நாயக்கருக்கு உதவுவது போல பாவனை செய்வோம்! ஆனால், சமயம் நேரும் போது நாமே மதுரை மன்னருக்கு எதிராகக் கிளர்ந்து, அவரை முடித்துவிடுவோம்! நமது அச்சுதப்பர்தான் இனி மதுரை சிம்மாசனத்தில் ஏறி ஆள வேண்டியது."

எல்லோரும் மெய்மறந்து கைதட்டினார்கள்.

அப்போது வீர பாளையக்காரர் எழுந்தார்.

"இதோ பாருங்கள்! உற்சாகத்தை மட்டும் காட்டி சும்மா இருந்துவிடப் போகிறீர்கள்? அவரவர் படையை மூச்சுப் பேச்சுக் காட்டாமல் மதுரைக்கு வெளிப்புறத்தே உடனே கொண்டு வரவேண்டியது!"

"செய்வோம்! செய்வோம்!" என்று குரல்.

''சரி! இனி இங்கே ஒரு நிமிடம் இருந்தாலும் ஆபத்து! எல்லோரும் கிளம்புங்கள்!''

கும்பல் எழுந்து பிரிந்து போக ஆரம்பித்தது.

அதிவீரன் பின்புறம் குதித்தான். அவனுக்காக அல்லியும் புதர் அடியில் காத்திருந்தாள்.

அவன் வந்ததும், ''பிரபு'' என்று அவள் அருகில் வந்தாள்.

''பிரமாதம்! அல்லி, உன் யூகம்தான் நமக்குப் பல விதத்தில் உதவி இருக்கிறது. உன்னை மறக்க முடியாது. அல்லி! வா, போகலாம். இங்கே இருந்தால் ஆபத்து!'' என்றான்.

இருவரும் நிழல்கள் ஊடே மெதுவாக நடந்து வெளிப்புரத்தை நோக்கிப் போனார்கள்.

மறுநாள் அதிவீரன் அதிகாலையில் எழுந்து விட்டான்.

நாட்டின் நடப்புகள் எவ்வளவு நெருக்கடியான நிலையில் கொண்டு வந்துவிட்டிருக்கின்றன!

நல்லவேளை! தென்காசியில் அமர்ந்து ஏடுகளில் திளைத்திருக்காமல் இப்படி அல்லியைத் தேடியாவது மதுரை வந்தோமே!

இல்லாவிட்டால் இவ்வளவு விஷயமும் கிடைத்திருக்குமா?

''தர்மசேனா!'' என்று அவனை அழைத்தான்.

இரு சேனர்களும் வந்தார்கள்.

''யுத்தம் வரும் போல இருக்கிறது'' என்று ஆரம்பித்து அவன் அறிந்த விவரங்கள் எல்லாவற்றையுமே கூறினான்.

இருவரும் சற்று நேரம் சமைந்து இருந்தார்கள்.



சீக்கிரத்தில் யுத்தம் முளைத்துவிடும் என்று இருவரும் நம்பினார்கள்.

''அதனால்தான் தர்மசேனா! நீ உடனே தென் காசிக்குப் போக வேண்டும்!'' என்றான் அதிவீரன்.

''உத்தரவு சுவாமி!''

''நமது பாதுகாப்பை நமது சேனாதிபதியைக் கவனிக்கச் சொல்லிவிட்டு, ஒரு பகுதிப் படையை அவரிடம் வைத்துக் கொள்ளச் சொல்! மீதிப் பகுதிப் படையோடு இங்கே சீக்கிரம் வந்து சேர வேண்டும்!'' என்றான் அதிவீரன்.

''சரி சுவாமி''

''என்ன! நான் சொன்னதெல்லாம் சரிதானே?'' என்று வீரசேனனிடம் கேட்டான் அதிவீரன்.

''சரிதான் சுவாமி! இதில் நமக்கு இன்னொரு விஷயம் தெரிந்தால் நல்லது!'' என்றான் அவன்.

''என்னது?''

''அந்த நீலத் தலைப்பாகையார் யார்? அவர்கள் தலைவர் யார்? அவர்கள் நோக்கம் என்ன? அதையும் கண்டுபிடித்து விட வேண்டும்!''

''ஓ! அது ஒரு விஷயம் மீதி இருக்கிறது. எனக்கு அது ஒரு அரிப்பாகவே இருந்திருக்கிறது. நிச்சயம் அதையும் கண்டுபிடித்தாக வேண்டும்! வீரசேனா! இப்போது எல்லாவற்றுக்குமே அவசரம் வந்துவிட்டது! நான் உடனே தளவாய் அரியநாதரைச் சந்திக்க வேண்டும். தாமதிக்கக் கூடாது!'' என்றான்.

''அப்படியே செய்யுங்கள்! ஆனால், தயவு செய்து வெளியில் தாங்கள் யார் என்று யாரும் புரிந்துகொள்ளாது பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்றான் வீரசேனன்.

அதிவீரன் அன்று பகல் பலமுறை தளவாயைப் பார்க்கச் சென்றான்.

ஒவ்வொரு முறையும் அவர் 'இல்லை' என்றுதான் மறுமொழியாக வந்தது.

அதிவீரன் துடித்துவிட்டான்.

சீக்கிரம் அவரைப் பார்த்து மதுரைக்கு வரக்கூடிய ஆபத்தைக் கூற நினைத்திருந்தான்.

இருட்டின பிறகுதான் அதிவீரனுக்கு அந்த யோசனை தோன்றியது. மன்னர் வீரப்ப நாயக்கரையே பார்த்துவிட்டால் என்ன?

இந்த வேளையிலா என்று ஒரு சங்கடம் எழுந்தது.

''அவசர காரியம் ஆயிற்றே! எந்த வேளையானால் என்ன?'' என்று சமாதானம் சொல்லிக் கொண்டான்.

இரவு இரண்டாவது நாழிகையில் அவன் அரண்மனை வாயிலில் நின்றான்.

இந்த முறை அங்கிருந்த மெய்க்காவலரிடம் தனது அடையாளத்தைக் கூற, அவன் பறந்து கொண்டு உள்ளே போனான்.

அடுத்து, அரண்மனை அதிகாரிகள் அவசர அவசரமாக வெளியே வந்தார்கள்.

அவனை உபசாரமாக அழைத்து உள்ளே சென்றார்கள்.

''முன்கூட்டியே தூதுவரை அனுப்பியிருக்கக் கூடாதோ? மேளதாளத்துடன் அழைத்துச் செல்வோமே!'' என்றார்கள்.

அதிவீரனை சபா மண்டபம் எல்லாம் தாண்டி அரச வாசல் பகுதிக்கு அழைத்துச் சென்றார்கள்.

அரசர் தமது அந்தரங்க அறையில் காத்திருந்தார்.

அதிவீரனைக் கண்டதும் அவர் அளவில்லாத ஆனந்தம் அடைந்தவர் போல எழுந்து வந்து தழுவிக் கொண்டார்.



இருவரும் சிறிது நேரம் ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்துக் கொண்டார்கள்.

பிறகு அதிகாரிகளை நோக்கி வீரப்ப நாயக்கர், ''நீங்கள் போகலாம்'' என்று கூற, அவர்கள் போய் விட்டார்கள்.

''வாருங்கள்'' என்று அதிவீரனை அழைத்து மேலே போனார்கள்.

நாயக்கர் உடம்பு தளதள என்று பொன் போல மினுத்தது.

உடம்பில் பல வடம் தங்க மாலைகள் தரித்திருந்தார். மீசை கட்டாக வளர்ந்து வழிந்திருந்தது.

கருகரு என்று தலைமுடிகள் அடர்த்தியாக வளர்ந்து பின் புறம் வியாபித்திருந்தது.

மேலே மேடைகளில் அமர்ந்து பேச ஆரம்பித்தார்கள்.

முன்பே பலமுறை இருவரும் சந்தித்து இருக்கிறார்கள்! எனவே,

அதிவீரனது கவிதைகளைப் பற்றி வீரப்ப நாயக்கர் முதலில் விசாரணைகள் செய்தார்.

ரதி லீலையைப் போல தமிழில் செய்ய முற்பட்டு இருக்கிறேன் என்று தெரிவித்ததும் வீரப்பர் பிரமாதமாகச் சிரித்து அவன் தோளில் தட்டி உற்சாகப்படுத்தினார்.

பிறகு அதிவீரன் மதுரைக்கு வேடம் தரித்து வந்த காரணத்தைக் கூறி அவனுக்குக் கிடைத்த விவரங்கள் யாவற்றையும் கூறினான்.

வீரப்பர் முகம் இறுகிக்கொண்டே வந்தது.

''கொல்லத்து இளவரசி திருமங்கை எந்த வழியாகத் தஞ்சாவூருக்குப் போனாள்?'' என்று பரபரப்புடன் கேட்டார் வீரப்பன்.

எதிரே இருந்த மேடை மீது மதுரையின் வரை படம் ஒன்றைப் பரப்பி வைத்தார்.

இரவு வெகு நேரம் ஆனபடியால் தாதி ஒருத்தி மது வகைகளுடன் அருகே வந்து நின்றாள்.

வரை படத்தை அதிவீரன் உற்று நோக்கினான்.

''இதோ இந்த இடம்!'' என்று காட்டினான் அவன்.

## 35

மதுரை மன்னர் வீரப்பநாயக்கர் அடிக்கடி பெருமூச்சு விட்டார்.

அதிவீரராமன் அவருக்கு நாட்டு நடப்புகளைப் பற்றி பல புதுச் செய்திகள் வழங்கிக் கொண்டிருந்தார்.

திருமங்கை பற்றி கேள்விப்பட்டதும் வீரப்பருக்கு ஆச்சரியமாக இருந்தது! என்ன கேவலம்! தமது சொந்த உளவுப் படை இந்த விஷயங்களை அவருக்குத் தெரியப் படுத்தவில்லையே!

''இப்படி ஒரு சதி நடந்திருக்கிறதா? கொல்லம் ராஜா நமக்கு சிநேகம் ஆனவர் அல்ல என்று தெரியும். ஆனால் அச்சுதப்பருக்கு அவர் பெண் கொடுக்கத் துணிந்தாரா?'' என்றார்.

திருமங்கையை மீட்க அதிவீரனின் ஆட்கள் போனதையும், இப்போது திரும்பி வந்ததையும் அதிவீரன் விவரித்தான்.

இருவரும் மதுக்கோப்பைகளைச் சூப்பினார்கள்.

வீரப்பருக்கு யோசனைகள் கனத்து வந்தன.

''இதற்குள் அவர்கள் தஞ்சை போயிருப்பார்கள்?''

''அவர்கள் பயந்து பயந்து போகிறார்கள்! மறைந்து போவதால் தஞ்சாவூர் போயிருக்கமாடார்கள்!''



''அப்படியானால் அதிவீரரே உடனே படை ஏதாவது அனுப்பி, அந்தப் பெண்ணைத் தடுத்து நிறுத்துவோமா?'' என்றார் அவர்.

''ஆ!'' என்று சொன்னான் அதிவீரன். ''அது நல்லதுதான்! ஆனால் மதுரைக்கு அபகீர்த்தி வரும்!''

''ஏன்?''

''ஒரு பெண்ணுக்காகப் படை அனுப்புவதா? அதுவும் யாரோ, யாரையோ மணக்கப் போவதை மதுரைப் படை தடைசெய்வதா? அது கேவலமில்லையா?'' என்றான் அதிவீரன்.

''இல்லையே! இப்போது அந்தப் பெண்ணுக்கு விருப்பமில்லை என்று கூறுகிறீர்களே?'' என்றார் வீரப்பர்.

''அது எனக்குத் தெரியும், கூறினேன்! ஊருக்குத் தெரியாதே! அவர்கள் ஏசுவார்கள்!''

''அப்போ, என்ன செய்யச் சொல்கிறீர்?''

''நீலத் தலைப்பாகைக்காரர்கள் போல நாமும் செய்ய வேண்டியதுதான்?''

சட்டென்று திரும்பினார்.

''நீலத் தலைப்பாகைக்காரர்கள்! அவர்கள் யார்? கேள்விப் பட்டிருக்கேன். பார்த்ததில்லையே!'' என்றார் நாயக்கர்.

''திடீரென்று தாக்கித் திடீரென்று மறைவார்கள்! இந்த வித்தையை அவர்கள் வடக்கே ஏதோ ஒரு இனத்தாரிட மிருந்து கற்றிருக்கிறார்கள்!''

''அவர்கள் என்ன கொள்ளைக் கூட்டத்தார்களா?''

''எதுவும் புரியவில்லை! என்னென்னவோ செய் கிறார்கள்!''

"சரி! அதை கவனிப்போம்! இந்த விஷயத்தில் நல்ல வலிமையான ஆட்களை அழைத்துப்போய் திருமங்கையை காப்பாற்றிவிட முடியுமா?"

சற்று யோசித்தான் அதிவீரன்!

பிறகு, "மன்னவா! நான் என் படை எதுவும் அழைத்து வரவில்லையே!"

"நம் படை ஆட்களை எடுத்துக்கொள்ளுங்கள்."

"அதிலும் ஒரு சிக்கல் உண்டு! தங்கள் ஆட்கள் தோற்றத்தைப் பார்த்தாலே இவர்கள் நாயக்கர் ஆட்கள் என்று சொல்லி விடுவார்கள்."

அக மகிழ்ந்து புன்னகை பூத்தார் மதுரை நாயக்கர்!

"நல்லது! அப்படியாயின் இன்னொரு வழி இருக்கிறது! நமது நண்பர் வாணாதிராயன் கோட்டைக்கு வெளியே தண்டு இறங்கி இருக்கிறார். அவரைச் சந்தித்து ஆட்கள் வாங்கிக் கொள்கிறீர்களா?"

'சரி' என்று தலை ஆட்டிய நாயக்கர் சிறிது யோசித்து,

"சீக்கிரம் காரியத்தை முடித்துவிட்டு வாருங்கள்! பாளையக்காரர்கள் பற்றி தாங்கள் தரும் செய்தி எனக்குக் கவலை கொடுக்கிறது. இதற்கு ஏதாவது செய்யவேண்டும்! உங்களிடம் அதுபற்றிப் பேசவேண்டும்" என்றார்,

அதிவீரனை அவர் வாயில் வரை கொண்டுவிட்டார்.

**அ**ன்று இரவே அதிவீரனுக்காக கோட்டை திறந்துவிடப்பட்டது.

அதிவீரன் தன்னுடன் தர்மசேனன், அல்லி முதலானவர்களை அழைத்துக்கொண்டு சோழவந்தான் பாதையாகப் பிரயாணமானான்.

அத்தனை குதிரைகளும் இரவு நிசப்தத்தைக் கிளறி எரிந்தன.



மதுரை மன்னனின் முத்திரை மோதிரம் பெற்று வந்திருந்தான் அதிவீரன்.

வாணாதிராயனின் தண்டுக்குள் புகுவது கடினமாக இல்லை.

சிற்றாற்று ஓரமாக நின்றிருந்த பல கல்மண்டபங்களை வளைத்து தண்டாக மாற்றி இருந்தார்கள்.

அங்காங்கே வீரர்கள் கொத்து கொத்தாக உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு புலம்பலான பாட்டு எங்கிருந்தோ கேட்டுக் கொண்டிருந்தது.

கிட்டதட்ட உச்சி இரவைக் கடந்த சமயம் அது!

வானத்தில் அத்தனை நட்சத்திரங்களும் தொங்கும் சுடர்களாக மின்னின.

காற்றுகூட ஸ்தம்பித்து நின்றது.

இயற்கை எல்லாம் உறங்கிக் கொண்டிருக்க,

பூமி இடிந்தது போல் காட்சி கொடுத்தது.

கல்மண்டபம் ஒட்டி ஒரு கூடாரம்.

அதன் வெளியே தீவர்த்திகள் எரிந்தன.

அடையாள மோதிரம் அதிவீரனுக்கு அதிவேக அனுமதியைக் கொடுத்தது.

திரைகளை விலக்கி உள்ளே நுழைய,

வெவ்வேறு புகைகளில் நறுமணம் முகத்தில் தவழ்ந்து வீசியது.

சற்று எட்டத்திலிருந்தே வானாதிராயனைப் பார்த்தான் அதிவீரன்.

அகல்விளக்கின் பொன் ஒளி வாணனின் முகத்தில் விழுந்திருந்தது.

நெற்றியில் ஞானம் வீசியது. கண்களில் கவிதை ஆடியது.

மூச்சில் தமிழ்ப் பற்று சீறியது.

அந்த அர்த்தராத்திரி வேளையில் ஒரு ஆரணங்கு அவர் அருகே நின்று ஓலைச் சுவடியிலிருந்து எதையோ படித்துக் காண்பித்துக் கொண்டிருந்தாள்.

அவள் குரல் கணீரென்று அதிமதுரமாக இருந்தது.

தமிழ் அவள் தொனியில் குழைந்து ஒரு தென்றல் இழை போல வீசியது.

அங்கே அந்தக் கூடாரத்தில் பரிமளமாக மணந்து கொண்டிருப்பது என்ன?

அகில் புகையா?

அல்லது—

அதிவீரன் ஸ்தம்பித்துப் போய்ச் செயலிழந்து நின்றான்.

அங்குக் காண்பது பூ உலகக் காட்சியாகத் தோன்ற வில்லை.

தெய்வ உலகத்துக் காட்சியாகவோ, பழம் தமிழ்ச் சங்கத்துக் காட்சியாகவோ தோன்றியது.

வியப்பில் அவன் சுவாசம் மெல்லியதாகியது.

கண்களில் நீர் அரும்புகள் முளைத்துக்கொண்டன.

தன்னையும் அந்த வாணாதிராயனையும் ஒப்பு நோக்கிக்கொண்டான்.

பகலில்தானே அவன் (அதிவீரன்) எப்போதும் கற்றது, கேட்டது, கவிதை எழுதியது எல்லாம்!

இரவுகளில் தமிழைப் பருகாது இதழ்களைப் பருகச் சென்றோமே!



கவிதையை எடுத்து நுகராது காரியரை எடுத்து நுகர்ந்தோமே!

இவன் அன்றோ தமிழ் அரசன்!

இவனிடம் அன்றோ தமிழ்க்கொடி வாழ்வாள்.

இவ்விதம் பலவிதங்களில் எண்ணி, கலக்கமிகு நெஞ்சோடு இருக்க,

சற்றே எதேச்சையாகத் திரும்பிய வாணன், அந்த அதிவீரனைக் கண்டு கொண்டான்.

"ஆ! யார் அங்கே?" என்று முகமலர்ந்து கூவிய வாணாதிராயன்.

சடக்கென எழுந்திருந்து,

உள்ளமும் உடலும் புளகாங்கிதம் அடைந்த பாங்கில்,

கைகள் இரண்டையும் அகலவிரித்து—

"என் வீரரே, என் ராமரே, என் அதிவீர ராமரே" என்று சிலிர்க்கும் குரலில் கூவிக்கொண்டு, அவனை நோக்கி வந்தான்.

அவ்வளவுதான்.

அதிவீரனின் கண்களில் இருந்து புஷ்ப மழை போல் கண்ணீர் ரத்தினங்கள் உதிர்ந்துகொண்டிருக்க,

அவனும் மற்ற யாவையும் மறந்து இரு கைகளை விரித்து, வாணனை எதிர் பார்ப்பது போல நின்றான்.

சுருக்கென வந்த வாணன், அதிவீரனைக் கட்டிக் கொள்ள,

பொதிகைத் தமிழும், காவிரித் தமிழும் ஒன்றை ஒன்று கட்டிக்கொள்வது போல் இருந்தது.

சிறிது நேரம் மெய்மறந்து, பொறிகலங்கி அதே ஆலிங்கனத்தில் இருந்த அவர்கள்—

பிறகு விடுபட்டு, "என்ன அதிவீரரே! அடியேனை இப்படி தேடி வரலாமோ? அழைத்தால் யானே வந்திருப்பேனே! தமிழ் உள்ள இடத்துக்கு நாங்கள் அல்லவோ தேடிப் போக வேண்டும்" என்று கூற,

"வாணாதிராயரே! என் தமிழ் தங்களிடம் அன்றோ ஒட்டி உறைந்து விட்டது. ரதிலீலையைப் பற்றி எழுதும் என்னிடம் தமிழ் அணங்கு இருப்பாளே!" என்று கூறினான்.

இந்த வகையிலேயே இருவரும் சிறிது நேரம்பேச,

"வாணாதிராயரே! இப்போது நான் வந்திருக்கும் காரியம் அவசரம்!" என்றான்.

"என்ன?" என்று கேட்டார் வாணாதிராயர்.

"எனக்குப் படை வேண்டும்" என்று சொல்லி, நிறுத்தினான் அதிவீரன்.

## 36

**வா**ணாதிராயனிடம் அதிவீரன் எல்லா விஷயங்களையும் கூறி, திறமை வாய்ந்த வீரர்களை துணைக்குக் கேட்டான்.

"எனது ஒரே குறிக்கோள், திருமங்கை தஞ்சாவூரை அடைந்துவிடக்கூடாது! அப்படி விட்டால் அந்தத் திருமணம் நடந்துவிடும். அது விருப்பமில்லாத திருமணம்!" என்றான் அதிவீரன்.

"விருப்பமில்லாத திருமணமா? எப்படிச் சொல்கிறீர்கள்? தாங்கள் இதுபற்றி திருமங்கையிடம் பேசினீர்களா!" என்றார் வாணாதிராயன்!

"அவள் எனக்கு ஓலையே எழுதி இருக்கிறாள்!" என்றான் அதிவீரன்.

"சரி, மதுரை நாயக்கர் என்ன சொல்கிறார்?"



"பெண்ணுக்காகச் சண்டையைக் கிளப்பினோம் என்று அவகீர்த்தி ஏற்படக்கூடாது! எனவே, அந்தப் பெண்ணை வேறு விதத்தில் அபகரித்து வந்துவிடுங்கள்" என்று சொன்னார்!

"நல்லது! அது சுலபமான வேலைதானே?"

"இல்லை! இதில் வீரபாளையக்காரரின் வீரர்கள் நிறைய இருக்கிறார்கள்."

வாணாதிராயன் பல்லை நறுநறுவென்று கடித்தார்.

"சொந்தத் தாய்க்குச் செய்யும் துரோகம் இது! இந்த நாயக்கர் இல்லாவிடில் தெற்கே இவர்கள் பாளையத்தில் டெல்லி துருக்கியர் புகுந்திருப்பார்களே! அதைப் புரிந்து கொண்டார்களா? பாதுகாப்பு கிடைத்தவுடன் தன்னைப் பாதுகாப்பவனையே பதம் பார்க்க நினைக்கிறார்களே, துரோகிகள்!" என்றார்.

"அவர்கள் நினைப்பு இந்த மதுரை ராஜ்ஜியம் அவர்கள் கையில் வரவேண்டும் என்பது!" என்றான் அதிவீரன்.

"முடியுமா ஸ்ரீ பாண்டியரே! நீங்களே சொல்லுங்கள்! ஒருகாலத்தில் இந்த வடக்கு அவ்வளவு தொந்திரவு கொடுக்காமல் இருந்தது. இப்போது சுல்தானிய ராஜ்ஜியங்கள் காத்திருக்கின்றன. இந்தத் தெற்கு முழுவதையும் எப்போது விழுங்கலாம் என்று! இந்த நிலையில் மதுரை நாயக்கர் தானே பலமாக நின்று யாரும் தெற்கே வரவிடா வண்ணம் காத்து நிற்கின்றார்கள். நாயக்கர்கள் மட்டும் இல்லாவிட்டால், இவர்கள் தனித்து நிற்பார்களா? எழுபத்திரண்டு பாளையம் என்றால் எழுநூற்றிரண்டு சண்டைகள்!" என்றார் வாணாதி.

"அதைத்தான் ஒரு குடைக்கீழ் கொண்டுவரப் பார்க்கிறார்கள்!"

"சரி! அப்படியாயினும் பழைய பாண்டிய வம்சத்தினர் தாங்கள்தானே! தங்களை அல்லவா அரசராகக் கருத

வேண்டும். இதைவிட்டு நேற்று வந்த இந்தப் பாளையக்காரர்களா ஒரு குடைக்கீழ் ஆளப்போகிறார்கள்! வீண் பேச்சு!'' என்றார் வாணாதி.

''எனக்கும், என் அண்ணனான வரதுங்கராமருக்கும் எவ்வளவோ தூது விட்டுப் பார்த்தார்கள். ஆனால், இதில் சேர மறுத்துவிட்டோம்!'' என்றார்.

''நீங்கள்தான் புத்திசாலிகள்!''

''எங்கள் பழம்பெருமைக்கு வேண்டி, மீண்டும் மதுரை கிடைத்தால் மகிழ்ச்சி அடைவோம்! ஆனால், எங்கள் பழைய மாண்பை நினைத்து மக்களைக் கைவிட நினைக்கவில்லை. மக்களை சந்தோசமாக வைத்திருப்பதுதான் நமது நோக்கம்! காலம் மாறிவிட்டது. நாலு திசைகளிலும் அபாயம் வந்து விட்டது!''

''ஆமாம், பாண்டியரே கடல்வழியாக நமக்கு எப்போதுமே ஆபத்து வந்ததில்லை. இப்போது வந்துவிட்டது.''

''ஆமாம்! கடல்வழியே பரங்கியர் வர ஆரம்பித்து விட்டனர். இவர்கள் வடக்கே கடலோரத்தைப் பிடித்து கோட்டை கட்டி விட்டார்களாமே!''

''நானும் கேள்விப்பட்டேன்! இப்படி நமக்கு நாலா விதத்திலும் ஆபத்து வந்து நிற்க, எல்லோரும் சேர்ந்து ஒரு குடைக் கீழ் இருப்பதை விட்டு சின்னா பின்னமாகச் சிதையப் பார்க்கலாகுமா?''

''உண்மை, நண்பரே! முன்பு சிறு சிறு ராஜ்ஜியங்களில் சின்ன ஆட்சி அமைத்து சவுகரியமாக இருந்தோம்! இப்போது அப்படி முடியாது! பெரிய ராஜ்ஜியம் அமைக்க முடியாவிட்டாலும் நாலு பேர் ஒன்றுகூடி பெரிய ராஜ்ஜியம் போல காட்டினால்தான் எதிரி பயப்படுவான்!'' என்றான் அதிவீரன்.

இருவரும் பிறகு அந்த திருமங்கையை எப்படி மீட்பது என்று ஆலோசனை செய்து, இரவிலே ஒரு முடிவுக்கு வந்தார்கள்.



அதிகாலையில், தங்களில் திறமை மிக்கவர் நூறு பேரை மட்டும் சேர்த்துக் கொண்டு வடக்கு நோக்கி புறப்பட்டார்கள்.

இதில் வாணாதி ராயனும் சேர்ந்துகொண்டார்.

அல்லியை அதிவீரன் சேர்த்துக்கொள்ள, வாணாதி தமது தாசி பொன்னம்மாவையும் அழைத்துக் கொண்டார்.

யாவரும் குதிரைகளில் ஆரோகணித்து சற்று வேகமாகச் சென்றார்கள்.

எங்கேயும் தங்கவே இல்லை. குதிரைகளுக்காக வேண்டி ஆங்காங்கே சிறிது ஓய்வு எடுத்தார்கள்.

மணப்பாறை அருகில் திருமங்கை கூட்டத்தார் போயிருப்பது தெரிந்தது.

அவர்கள் கூடியமட்டிலும் பிரதான பாதைகளை விடுத்து சில மறைவு வழிகளில் சென்றார்கள்.

அதிவீரன் ஆங்காங்கே புத்தி கூர்மையுடன் வினவி, அவர்கள் போன திசைகளைப் புரிந்து கொண்டான்.

மணப்பாறையை அடுத்த காட்டு மார்க்கத்தில் அவர்கள் போயிருப்பதாக அறிந்து, அதைப் பின்பற்றினார்கள்.

ஒரு நாழிகை தூரத்தில் சிறு சிறு குன்றுகளாக இருந்த பகுதியில் அவர்கள் அன்று இரவுக்காக இறங்கி இருப்பது தெரிந்தது.

அவர்கள் அந்தக் குன்றுகளுக்குப் பின்புறத்தில் போய், குதிரைகளை மறைவாகக் கட்டினார்கள்.

தாகம் தணிந்து, சிறிது நேரம் மாலைக் காற்றில் சுவாசித்துவிட்டு, ஒரு தாழ்வான குன்றின்மேல் ஏற ஆரம்பித்தார்கள்.

பாறைகள் நிறைந்த குன்று அது.

அதன் மீது வாணாதி, அதிவீரன், அல்லி மூவரும், ஏறலாம் என்பதுபோல் இருந்தது.

கைகளில் நிறைய சிராய்த்துக் கொண்டு உடையெல்லாம் பொத்தல் போட,

அந்த உச்சிப்பாறை மீது ஏறி அமர்ந்தார்கள்.

மறுபுறம் பார்த்த அதிவீரன், "எல்லோரும் குனியுங்கள்! படுத்துக்கொள்ளுங்கள்!" என்றான்.

எல்லோரும் அப்படியே செய்தார்கள்.

பிறகு பாறையில் சிறிது சிறிதாக கையால் நகர்ந்து,

முன்னால் சென்று தலையை மட்டும் தூக்கிப் பார்க்க—

திருமங்கை குழுவினர் அங்கே இருந்தார்கள்.

சாதாரண மனிதர்கள் போல வீரர்ஆள் நின்றார்கள்.

திருமங்கையின் கூடாரம் பிரத்தியேகமாகத் தெரிந்தது.

"பூசல் இல்லாது திருமங்கையை அபகரிக்க வேண்டும்! சரி! ஆனால் நடைமுறையில் அது முடியாது போலிருக்கிறதே!" என்றார் வாணாதிராயன்.

அதிவீரன் பேசவில்லை.

பிறகு, "ஏன்?" என்றான்.

"அவளைக் கடத்தினால் அவர்கள் எப்படியும் கண்டு பிடித்து விடுவார்கள்! பூசல் வரும்!"

"நாம் ஜெயிப்போம்" என்றான் அதிவீரன்.

"அது பெரிதல்ல! ஆனால் மதுரை நாயக்கரின் வாக்கைக் காப்பாற்றுவதுதான் பெரிது."

"வேறு என்ன செய்யலாம்?"

"ஓலையைக் கட்டி அம்பு எய்து பார்க்கலாம்!"

"ஓ! அது நல்ல வழி! ஆனால் இலக்குப் பார்த்து விட வேண்டும். மற்றவர்கள் அறியக்கூடாது."



"நான் விட்டுப் பார்க்கிறேன்!" என்றான் அதிவீரன்.

"இப்போது வேண்டாம்! இருட்டட்டும்" என்றார் வாணாதிராயன்.

காத்திருந்தார்கள். இருட்டியது.

ஒரு ஓலை நறுக்கில் செய்தி எழுதி, அதை அம்பில் கட்டினார்கள்.

அதிவீரன் இழுத்துவிட்டான்.

பிறகு எல்லோரும் ஆவலோடு பார்க்க, சிறிது தூரம் வரைதான் அம்பு கண்ணில் பட்டது.

அதற்குமேல் படவே இல்லை.

ஏதாவது நடவடிக்கை தெரிகிறதா என்று காத்திருந்து பார்த்தார்கள்.

எதுவும் தெரியவில்லை.

அம்புகள் பல விட்டும் அவை எங்கே போய் விழுகின்றன என்று தெரியவில்லை.

இந்த நிலையில் அல்லி கூறினாள், "ஏன் சுவாமி! இருட்டான இந்த நேரத்தில் திருமங்கை கூடாரத்துக்கு நான் போக முடியும்!" என்றாள்.

இருவரும் திரும்பி அவளைப் பார்த்தார்கள்.

"ஆமாம்! கீழே இறங்கி இந்தப் பின்புற வழியாக நான் பெண்கள் கூடாரத்துக்குப் போகமுடியும்! யாராவது என்னைப் பார்த்தால் கூட நான் ஒரு தோழி என்று சொல்லிக் கொள்வேன்! எப்படியும் என்னால் உள்ளே நுழைய முடியும்!" என்றாள்.

அது நல்ல யோசனை என்று இருவரும் ஆமோதித்தார்கள்.

பிறகு எல்லோரும் கீழே இறங்கினார்கள். குன்றுகளின் இடைவழியே சற்று நடந்து அந்தக் கூடாரங்கள் இருக்கும் இடத்தைப் பார்த்துக் கொண்டார்கள்.

அல்லியிடம் என்ன செய்யவேண்டும், என்று விவரமாகக் கூறி,

அவளைச் சாதாரணமாக சேடி போல் வேடம் தரிக்க வைத்து, இருட்டில் அனுப்பி வைத்தார்கள்.

பிறகு அவளுக்காக அந்த இருட்டில் காத்துக் கொண்டே இருந்தார்கள்.

நாழிகை ஏறிக்கொண்டிருந்தது.

நடு இரவையும் தாண்டிவிட்டது.

போனவள் என்ன ஆனாள் ஏது ஆனாள் என்பது பற்றி, எதுவுமே தெரியவில்லை.

## 37

கீழே குன்றின் பாரிசத்தில் கூடாரங்கள் திளைத்திருந்தன.

பட்டுப்போன்ற இருட்டு எங்கும் பரவி இருந்தது!

அதை ஆங்காங்கே கிழித்துவிடுவது போல் தீவர்த்திகள் எரிந்து கொண்டிருந்தன.

அல்லிக்கொடி அந்த இடத்தை அணுகிய போது, குறிப்பிட்ட இடங்களில் காவலர்கள் இருந்தார்கள்.

ஆனால், அவர்கள் அதிக எச்சரிக்கையில் இருக்கவில்லை.

எனவே இருட்டில் பதுங்கி, சில இடங்களில் தரையோடு தவழ்ந்து, பெண்கள் கூடாரத்தை அணுகினாள்.

அங்கே சற்று பெரிதாக இருந்த திருமங்கையின் இருக்கையை அடையாளம் காண முடிந்தது.



ஆனால், வாயிலில் பாதுகாப்பு ஆசாமி நிடமாக நின்று கொண்டிருந்தான்.

அவனைக் கடந்து செல்வது கடினம். அவனுக்கும் கூடார வாயிலுக்கும் நடுவே தீவர்த்தி ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

யோசித்தாள். கீழே தரையோடு தரையாகத் தவழ்ந்து கூடாரத் துணியை விலக்கி உள்ளே போகத் தீர்மானித்தாள்.

அதில் நிறைய பயம் இருந்தது. ஆனால் தவழ்ந்து போகும்போது காவலன் அவளைக் கவனியாதது ஆச்சரியமாக இருந்தது.

உள்ளே ஒரு ஜந்து போல நுழைந்தாள் அவள்!

அங்கே திருமங்கை சற்று சிவந்த முகத்துடன் எதையோ யோசித்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று அவள் பார்வை அல்லியிடம் செல்ல, ஆச்சரியத்தில் கண் விரிந்தது.

"இளவரசி! நான் தங்கள் சிநேகிதி! என்னை அதிவீரராமன் அனுப்பியிருக்கிறார் பயப்படாதீர்கள்?" என்று கூறி, எழுந்தாள் அல்லி.

இருவரும் உடனே பேச ஆரம்பித்தார்கள்.

அல்லி எப்படியாவது திருமங்கையை சந்தித்து அவளை அழைத்து வருவாள். அல்லது, அவளைக் காப்பாற்றிவிட திட்டமாவது யோசித்து வருவாள் என்று நினைத்தார்கள், அதிவீரனும் வாணாதிராயனும்.

அல்லி திரும்பி வரவில்லை.

இளம் காலையில் அவர்கள் இருவரும் இன்னும் விழிக்கக்கூட இல்லை.

அதற்குள் ஏதோ பூசல் சத்தம் கேட்டு விழித்துப் பார்க்க,

நூறுபேர் கொண்ட ஒரு கும்பல் ஒன்று வாணாதிராயனின் ஆட்களைச் சின்னாபின்னமாக்கிக் கொண்டிருந்தது.

எல்லோரையும் தூக்க நிலையில் சந்தித்து அந்தத் தாக்குதல் நடந்துகொண்டிருந்தது.

யாரும் இவ்வளவு இளம் காலையில் எதிரிகள் தாக்கு வார்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

வாணாதியின் படைகள் 30 பேர் மடிய எஞ்சியவர்கள் ஆயுதம் ஏதும் கையில் இல்லாமல் மறைவிடங்கள் தேடி ஓட ஆரம்பித்தார்கள்.

''மோசம் போனோம்!'' என்றார் வாணாதி. ''பாளையக்கார ஆட்கள் நம் படை ஆட்களை முறியடித்து விட்டார்கள்!'' என்றார்.

குன்றின் மேடு ஒன்றில் இருந்த அவர்கள் இருவரும் திடுக்கிட்டு செயல் இழந்து நின்றார்கள்.

''இது எப்படி நேர்ந்தது?'' என்றான் அதிவீரன்.

''நண்பரே! அவர்கள் அல்லியைப் பிடித்திருப்பார்கள். அவளை மிரட்டி நம்மைப் பற்றிய செய்திகளை அறிந்திருப் பார்கள்!'' என்றார் வாணாதி.

''இப்போது புரிகிறது'' என்றான் அதிவீரன்.

''நம்மை எப்படியும் தேடிவருவார்கள். நாம் என்ன செய்வது?'' என்றார் வாணாதி.

அதிவீரன் யோசித்தான். ''அப்படியானால் இங்கிருந்து நாம் போய்விடுவது நல்லது.''

''மறைந்துகொண்டு போவதா?''

''ஆமாம்!''

''இழுக்கு அல்லவோ?''

''நமது ஆட்கள் சிதறிவிட்டபோது தனிமையாக நாம் சண்டையிடுவது சரியல்ல! அவர்கள் நிறையபேர்! இதனால் மறைந்து போய்விடுவது நல்லது! இது அவமானம் அல்ல! தந்திரம்!'' என்றார்.



வாணாதி சற்று தயங்கினார்.

''இல்லை வாணாதி! நாம் இங்கே நின்று சண்டை யிடலாம்! இருவரும் அனாவசியமாய் இறந்து விட்டால்...''

''அது வீரமரணம் இல்லையா?''

சிரித்தான் அதிவீரன்.

''வீரமரணம் எல்லாம் தர்மயுத்தம் நடந்த நாளில்தான் பேசமுடியும்! இப்போது நாட்கள் மாறிவிட்டன. சண்டை செய்யும் முறையும் மாறிவிட்டது! எனவே நாமும் நமது பாணியை மாற்றிக்கொள்ள வேண்டும்'' என்றான் அதிவீரன்.

''அப்போது என்ன செய்யச் சொல்கிறீர்கள்?'' என்றார் அவர்.

''அவர்கள் இளம் காலையில் நம்மைச் சொல்லாமல் புரியாமல் தாக்கினார்கள். இதுவே தர்மம் இல்லை! எனவே நாம் மறைந்துவிடுவது இழுக்கல்ல! நல்லது! பிறகு படை திரட்டி வருவோம்! அவர்களை முறியடிப்போம்! அதுதான் சரியானது! பொருத்தமானதும் கூட!'' என்றான் அதிவீரன்.

வாணாதி கடைசியில் அவர் சொல்வதற்குத் தலையை சாய்த்தார்.

இருவரும் உடனே குன்றின் வேறு பாரிசத்தில் இறங்கினார்கள்!

பாறைப்பாங்கான பிரதேசம் வழியே, மறைந்து சென்று தப்பித்துவிட்டார்கள்.

அடுத்து இருவரும் சோழவந்தான் வந்தார்கள். மதுரை நாயக்கருக்கு விவரமாகச் செய்தி சொல்லி அனுப்பினார்கள்.

''எப்படியும் திருமங்கையை மீட்கப்போகிறோம்! உத்தரவு கொடுங்கள்!'' என்றார்கள்.

மதுரை நாயக்கர் இரவுக்கிரவே வியாபாரி போல் வேடம் தாங்கி வந்து அவர்கள் இருவரையும் சந்தித்தார்.

"படை எடுத்துப் போகவேண்டாம்! இன்னும் பொறுத்திருந்து பார்ப்போம் என்ன நடக்கிறது என்று! அதுவரை காத்திருங்கள்!" என்று கூறினார்.

ஆனால் வாணாதியும் அதிவீரனும் இந்தச் சமயத்தில் மட்டும் பிடிவாதமாக இருந்தார்கள்.

நாயக்கர் அவர்களைப் பாராட்டிவிட்டு, "அப்ப" என்றார் வாணாதி.

"சரி! இதை நான் விதித்த விதி என்று நினைத்துக் கொள்கிறேன். அச்சுதப்பன் நம்மிடம் வெளிப்படையாக யுத்தப் பிரகடனம் செய்யவில்லை! எனவே நாங்களும் வெளிப்படையாக உங்களுடன் கலந்து கொள்ளாமல் மறைமுகமாகப் படை அனுப்பி கலந்து கொள்கிறோம்."

"ஆ!" என்று மற்ற இருவர்களும் கைகொட்டி வீரப்பநாயக்கரின் அந்த யோசனையை ஒப்புக் கொண்டார்கள்.

உடனே அதிவீரன், "சுவாமி! ஒரே ஒரு வேண்டுகோள்!" என்றான்.

"கேளுங்கள்!"

"உங்கள் படைகளை அழைத்துப் போகிறோம். ஆனால் அவை சண்டையிடாமல் எமக்குப் பின்னணியாக ஒரு காத தூரத்தில் இருக்கட்டும். எங்கள் படையால் முடியவில்லை என்றால் தங்கள் படையின் உதவியையும் பெற்றுக் கொள்கிறோம், சம்மதமா?" என்றான் அதிவீரன்.

"ஆமாம், சுவாமி!" என்று வாணாதி குறுக்கிட்டார். "இந்த யுத்தத்தின் பொறுப்பை எங்களிடமே விட்டுவிடுங்கள்! தங்களுக்காகத் தங்கள் சிநேகிதச் சிற்றரசர்கள் இதைச் செய்தோம் என்ற பெயர் எங்களுக்கு நிலைக்கட்டும்!" என்றார்.

"அப்படியே ஆகட்டும்!" என்று சொல்லி நாயக்கர் விடைபெற்றார்.

நல்ல முகூர்த்தவேளை பார்த்து படை புறப்பட்டது.



படைகள் புறப்பட்டு இரவு வேளைகளில் மட்டும் பிரயாணம் செய்தது.

படை ஒன்று வருவதை எதிரிகள் சீக்கிரம் அறிந்து விடக் கூடாது என்பதற்காக இந்த முறை கையாளப்பட்டது.

தினம் தினம் இரு அரசர்களும், வேவுகாரர்களிடமிருந்து செய்திகள் வரும் என்று காத்திருந்தார்கள்.

இரண்டாம் நாள் இரவில்தான் செய்தி வந்தது.

"பிரபுக்களே! திருமங்கை கோஷ்டியார் திடீரென்று காணாமல் போய்விட்டார்கள்!" என்று கூறினார் வேவுகாரர்.

"என்ன?" என்று இருவரும் திடுக்கிட்டு கேட்டார்கள்.

"ஆமாம் சுவாமி!"

"திருச்சிராப்பள்ளிக்குச் சென்றார்களா, இல்லையா?"

"அங்கே போனார்கள் என்பது தெரியும். அதன் பிறகு அவர்கள் திருவரங்கத்தை நோக்கிப் போனார்கள் என்று கேள்விப்பட்டோம்!"

"அங்கே எதற்கு?"

"திருவரங்கப் பெருமாளைத் தரிசிப்பது தனது விரதம் என்று கூறினாளாம்!"

"சரி! திருவரங்கம் சென்றார்களா?"

"புறப்பட்டுப் போனது வரை பார்த்த ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் திருவரங்கத்தை அடைந்தார்களா என்று தெரியவில்லை."

"அங்கே விசாரித்தீர்களா?"

"செய்தோம்! திருவரங்கத்துக்கு வந்ததாகவோ, அதை விட்டுப் போனதாகவோ எந்தச் செய்தியும் வரவில்லை!"

"இதென்ன விசித்திரமாக இருக்கிறது!" என்றார் வாணாதி.

"ஒருவேளை இனி எல்லாம் ரகசியமாக நடக்க வேண்டும் என்று பாளையக்காரர் தீர்மானித்திருப்பாரோ?"

"இருக்கலாம்! ஏற்கனவே மணப்பாறையில் நடந்த சம்பவம் அவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கலாம்?"

"சரி! இப்போது வேறு என்ன செய்திருக்கிறார்கள் நமது வேவுகாரர்கள்?"

"திருவரங்கத்திலிருந்து தஞ்சாவூர் போகும் வரை உள்ள பாதைகளில் திவீரமாக விசாரித்து வருகிறார்கள்! அதன் சுற்றுப் பாதைகளிலும் வேவு பார்த்து வருகிறார்கள்!"

"நல்ல யுக்தி" என்றார் வாணாதி.

"ஒரு வேளை அவர்கள் தஞ்சாவூர் போய்விட்டாலும் அதையும் கவனிக்க சிலர் மாறுவேடம் பூண்டு தஞ்சாவூருக்குள்ளும் போயிருக்கிறார்கள்!" என்றார் வேவுக்காரர்.

"ஆகா பிரமாத வேளை ஆயிற்றே! சரி, நாங்கள் இதே வழியில் தஞ்சாவூர் போவது சரிதானே!"

"தாங்கள் இரவுப் பிரயாணத்தை மேற்கொண்டது மிக்க சரி! தாங்கள் செய்யும் பாட்டைகளை முன்கூட்டியே கவனிக்கவும், ஒற்றர் தலைவர் ஏற்பாடு செய்திருக்கிறார்!" என்றார் வேவுகாரர்.

அந்த வேவுகாரர் இந்தச் செய்திகளைக் கூறி, இரண்டு நாழிகை இராது.

இன்னொரு வேவுகாரர் அவசர அவசரமாக வந்து இறங்கினார்.

அரசர்களிடம் அடிபணிந்து ஓலை ஒன்றைக் கொடுத்தார்.

அதை இருவரும் படித்ததும் திடுக்கிட்டு ஒருவரை ஒருவர் பார்த்தார்கள்.

## 38

திருச்சி அருகில் வல்லத்தில் திருமங்கை கோஷ்டியாரின் கடைசித்தண்டு.

இனி அவர்கள் தஞ்சாவூருக்குப் போகவேண்டியது தான்!



அதற்கான சகுனத்தையும் முகூர்த்தத்தையும் பார்த்திருந்தார்கள்.

அவர்கள் வந்திருக்கும் செய்தி தஞ்சை மன்னர் அச்சுதப்ப நாயக்கருக்குப் போய்விட்டது.

தஞ்சையை விழாக்கோலத்தால் அலங்கரிக்கச் சொல்லி விட்டு, மணமகனை எதிர்கொண்டு அழைப்பதற்கு அவனும் நல்ல நேரம் பார்த்திருந்தான்.

வல்லத்திலிருந்தே, மேளதாளத்துடன் மணமகள் வர வேண்டும் என்று ஏற்பாடு!

குறிப்பிட்ட வியாழக்கிழமை மதியம் இந்த அழைப்பு நடப்பதாகக் குறிக்கப்பட்டது.

இந்த ஏற்பாட்டுச் செய்தி ஒற்றர்கள் மூலம் அதிவீரனுக்கும் வாணாதிராயருக்கும் போய்ச் சேர்ந்தது.

ஏற்கனவே பெரிய படை ஒன்று அவன் தலைமையில் கூடிவிட்டது.

வாணாதிராயன் ஏற்கனவே தஞ்சைக்குப் பெரிய விரோதி.

அவர் ஆத்திரத்தில் துடியாகத் துடித்துக் கொண்டிருந்தார்.

வல்லத்துக்குப் போகும் காதவழியைக் கணக்குப் பார்த்தார்கள்.

மணமகளாக திருமங்கை அங்கிருந்து புறப்படும் அந்த வியாழக்கிழமை மதியத்திற்குள்,

அவர்கள் (அதிவீரன், வாணாதி, வரதுங்கராமன்) படைகள் அங்கே போய்ச் சேர்ந்துவிட முடியாது.

எனவே அவர்கள் அவசரமாக ஆலோசித்தார்கள்.

ஒரு சிறு படையுடன் வாணாதி வாயுவேகமாக போய் திருமங்கை கோஷ்டியைத் தடுத்து நிறுத்துவதாக வாக்களித்தார்.

அதிவீரனுக்குத் தானும் அவருடன் செல்ல வேண்டும் என்று தோன்றியது.

அதை அவரது அண்ணன் வரதுங்கராம பாண்டியன் தான் நிறுத்தி வைத்தார்.

அதிவீரன் உணர்ச்சிவசப் படக்கூடியவன்.

அவன் மனதைப் பறித்துக் கொண்ட இரண்டு பெண்கள் இதில் சிக்கி இருப்பதால் அதிவீரன் உணர்ச்சி வசப்பட்டு ஏடாகூடமாக ஏதாவது செய்துவிடுவான் என்று நினைத்த வரதுங்கராமர் அவனைப் போகவேண்டாம் என்று தடுத்தார்.

எனவே வாணாதிராயன் மட்டும் அனுப்பப்பட்டார்.

வாணாதி அதிபராக்கிரமசாலி! குதிரை இயக்குவதில் வல்லவன்! அவன் தனது படையினரில் கை தேர்ந்த முப்பது பேரை தேர்ந்தெடுத்து தன்னுடன் வரச்சொன்னான்.

எல்லோரும் மாற்றுக் குதிரைகளுடன் புறப்பட்டார்கள்.

வியாழன் விடியுமுன் கடைசி யாமத்தில் அவர்கள் வல்லம் போய்ச் சேர்ந்தார்கள்.

சற்றே ஓய்வு எடுத்துக் கொண்டு தங்கள் வேவுகாரர் இருவரை அனுப்பி விஷயத்தை அறிந்து வர வீரபாளையத் தாரின் தண்டுக்கு அனுப்பிவைத்தார்கள்.

வேவுகாரர்கள் திரும்பி வர, இரண்டு முகூர்த்தம் ஆகியது.

கொண்டுவந்த செய்தி சாதகமானது அல்ல!

வீரபாளையக்காரரின் ஆலோசனைக்கு இணங்க, திருமங்கையை வல்லத்திலிருந்து அழைத்துப் போக, தஞ்சை அச்சுதப்பன் பெரிய படையொன்றையே அனுப்பி இருந்தான்.



வெறும் முப்பது பேரை வைத்துக்கொண்டு அந்தப் படையை வெல்ல முடியாது! என்ன செய்வது?

வாணாதிக்கு ஆத்திரம் பீறிட்டது! என்ன செய்வது என்று துடியாய்த் துடித்தான்.

இந்த சமயத்தில் அவனது படைத் தளபதி அவனுக்கு ஆலோசனை கூறினான்.

ஒரு காரியம் மட்டும் செய்துவிட முடியும்!

தந்திரத்தால் ஏதாவது செய்து திருமங்கையை அபகரித்து வந்துவிட வேண்டும்.

முடியுமா அது?

ஊரில் சென்று கோவில் தாசிகள் சிலரை அழைத்து வந்தார்கள்.

வல்லம் கோவில் பெருமாள் பெயரைச் சொல்லி, அவரிடமிருந்து பரிசில் வந்திருப்பதாக பாளையக்காரரின் தண்டுக்குள் நுழையத் திட்டம் போட்டார்கள்.

தேவதாசிகள் இது செய்வதற்குப் பிரதி உபகாரமாக ஏராளமான பொன் நகைகள் கொடுப்பதாகவும், இந்தக் காரியம் முடிந்த பின்னர் மதுரைக்கு அவர்களை அழைத்துப் போய் அங்கே குடியிருக்க இடமும் நில மான்யமும் கொடுப்பதாக உறுதி கூறினார்கள்.

பாளையக்காரர் தண்டுக்கு முன்னமே செய்தி அனுப்பிவிட்டு, விடிந்து சில நாழிகைகளில் மேளதாள வாத்தியங்களுடன் பல்லக்கில் புறப்பட்டார்கள்.

தாசிகள் அனைவரும் நல்ல தந்திரசாலிகளாக இருந்தார்கள்.

பாளையக்காரரின் பாசறையில் அவர்களுக்குப் பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

உள்ளே போனவர்கள் இளவரசி திருமங்கையின் தண்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அங்குப் போனபிறகு, திருமங்கையை சந்தித்து ரகசிய மாக அவளிடம் தாங்கள் யார், எதற்கு வந்திருக்கிறோம் என்ப தெல்லாம் தெரிவிக்க,

திருமங்கை முகத்தில் அதுவரை இருந்த துக்கக் குறிகள் மறைந்தன.

ஆனாலும் திருட்டுத்தனமாக அந்தக் கூடாரத்தை விட்டு எப்படி வெளியேறுவது?

திருமங்கையை தாசி வேடம் பூணச் சொல்லி, அவளை வெளிக்கொண்டு போய்விடலாம்.

ஆனால், அவளுக்குப் பிரதியாக அங்கே ஒரு பெண்ணை விட்டுப் போகவேண்டும்.

யாரை விடுவது.

"சகோதரிகளே! நான் இளவரசியை மீட்பதற்காக வந்தேன். ஆனால் என் ரகசியம் வெளிப்பட்டுவிட்டது. இளவரசியிடம் இப்போது தாதி போல இருக்கிறேன். என்னைத் தாதிப் பெண் என்றே சொல்லிவிட்டார்கள் இளவரசியார்.

இன்னும் சிறிது நேரத்தில் இளவரசியைக் குளிப் பாட்டி அலங்காரம் செய்யப் போகிறார்கள்.

ஒரு யோசனை! இளவரசியின் ஸ்தானத்தை என்னால் எடுத்துக்கொள்ள முடியும்?

அவளைப் போலவே என்னால் பேசமுடியும். நடிக்க முடியும். இத்தனை நாள் பழக்கத்தில் வந்த திறமை அது.

இளவரசியை நீங்கள் தாசி வேடத்தில் அழைத்துப் போங்கள்.

குளிக்கிற நேரத்தில்தான் இந்த மாறட்டம் நடக்க வேண்டும்.



ஏனெனில் இளவரசியை அலங்கரிக்க தஞ்சை அரண்மனையிலிருந்து விசேஷத் தாதிகள் வந்திருக்கிறார்கள்! குளித்தபின் என்னைத்தான் (அல்லி) அவர்கள் இளவரசியாக நினைக்கவேண்டும்.

இது சம்மதமா?

சீக்கிரம் ஆலோசியுங்கள்?" என்று அல்லி கூறினாள்.

எல்லோரும் ஆலோசித்ததில் அது ஒன்றுதான் சிறந்த வழி என்று ஒத்துக்கொண்டார்கள்.

குளிக்கும் நேரம் வந்தது. அல்லியை இளவரசியாக மாற்றினார்கள்.

தஞ்சைத் தாதிகள் அல்லியை அலங்கரிக்க ஆரம்பித் தார்கள்.

அடுத்த முகூர்த்தத்தில் கோவில் தாசிகளின் கும்பல் வல்லத்திலிருந்து புறப்பட்டது.

அதில் திருமங்கை இருந்தாள்.

பணிப்பெண் போல வேடம் தரித்திருந்தாள்.

வாணாதிராயன் கும்பலை அடையும் வரை அவளுக்கும் ஏனைய கோஷ்டியினருக்கும் மனம் ஒரு நிலையில் இல்லை!

போய்ச் சேர்ந்ததும், வாணாதி அவளைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துப்போய் விட்டான்.

வல்லத்திலிருந்து அல்லி தஞ்சை அழைத்துப் போகப்பட்டாள்.

மறுநாள் காலையில் அச்சுதப்பன் அவளைத் திருமணம் செய்து கொண்டான்.

திருமணம் நடந்து கொண்டிருக்கும் வேளையில் அதிவீரன் படைகள் வல்லம் வந்து சேர்ந்தன.

அன்று மாலையில்தான் அச்சுதப்பனுக்குத் தான் திருமணம் செய்தது அல்லி என்ற தாசிப்பெண் என்று தெரிந்தது.

தப்பித்துப்போன திருமங்கையைப் பிடிக்க ஒரு படையை அனுப்பினான்.

வல்லத்துக்கு வந்த படைகளை அதிவீரன் படைகள் தடுத்து நிறுத்த யுத்தம் ஒன்று ஆரம்பித்தது.

யுத்தம் மூன்று நாட்கள் நடந்தன.

அதிவீரன், வரதுங்கன், வாணாதிராயன் மூவரும் எதிரியைக் கடுந்தாக்குத் தாக்கினார்கள்.

வல்லம் போர் தமிழ்ச் சரித்திரத்தில் பெயர் பெற்றது.

அந்த ஆத்திரமயமான சண்டையில் அச்சுதப்பன் படைகள் முறியடிக்கப்பட்டன.

புறமுதுகுகாட்டி அவை தஞ்சைக் கோட்டைக்குள் ஓடி ஒளிந்தது.

கைப்பற்றப்பட்ட ஏராளமான பொருட்களுடன் மூன்று மன்னர்களும் மதுரை திரும்பப் புறப்பட்டார்கள்.

ஒரு நாழிகை வழிபோன பிறகு, மறைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து திருமங்கை அவர்களோடு வந்து கலந்து கொண்டாள்.

அதிவீரனது கூடாரத்துக்குள் அவள் நுழைய, அவன் அவளை ஆலிங்கனத்துடன் ஏற்றுக்கொண்டான்.

''வீரனே!'' என்று தளும்பும் மகிழ்ச்சியுடன் திருமங்கை அவனைத் தழுவிக்கொண்டாள்.

அதிவீரராமனுக்குக் கண்கள் கனத்தன. ஆனந்த மயமாக அவனுக்கு அந்தக் கணம் தோன்றினாலும்,

மனதில் சின்னக் குறை புகுந்துவிட்டது.



அன்று பகல் நேரத்தில் தஞ்சையிலிருந்து அவனுக்கு ஏற்கனவே ஏற்றுச் செய்தி வந்துவிட்டது.

தான் ஒரு தாசியைத்தான் மணம் செய்து கொண்டோம் என்று அறிந்தவுடன் அல்லியை சிறைச்சேதம் செய்ய உத்தரவு வழங்கினான்.

அல்லி அன்று மாலைக்குள் தலை துண்டிக்கப்பட்டாள்

மகிழ்ச்சியும் சோகமும் பொங்க அதிவீரன் மதுரையை அடைந்தான்.

வீரப்பநாயக்கர் அவனுக்கும் மற்ற இருவர்க்கும் மான்யங்கள் கொடுத்து மதுரையில் தங்கி இருக்கச் சொல்லி பிறகு விமரிசையாக வழி அனுப்பினார்.

அல்லியைப் பிடித்து வரப்போன அதிவீரன் அல்லி இல்லாமல் ஊர் திரும்பினான்.

அல்லிக்குப் பதிலாக திருமங்கை அவனது பத்தினியாக தென்காசி திரும்பினாள்.

நீலத் தலைப்பாகைக்காரர்கள் எல்லாம் மதுரை நாயக்கரின் உளவுக்காரர்களே என்பது அதிவீரனுக்குத் தெரியவந்தது.

'அல்லி! அல்லி!' என்று அதிவீரனின் மனம் வெகு நாள் புலம்பியது.

அல்லி கொடுத்த இன்ப உடல் உறவுகளை எல்லாம் நினைத்து 'ரதி லீலை' நூலை எழுதினான்.

'ரதி லீலை' என்ற வட மொழி நூலின் ஆசிரியர் பெயர் கொக்கோகர்!

கொக்கோகரின் திறமையை எண்ணி வியந்து அவர் பெயரையே தனது நூலுக்குச் சூட்டினான். அதிவீரராமன் என்கிற மன்மதப் பாண்டியன்!

நூலை எழுதிய அவன் அரங்கேற்றி புகழ் அடைந்தாலும் அல்லியின் தியாகம்தான் அவன் கண் முன்னால் நின்றது.

அவளை நினைக்கும் போதெல்லாம் அவன் கண்கள் ஒரு சொட்டுக் கண்ணீரை உதிர்த்தன.

அப்போதெல்லாம் அவன் அருகில் ஆறுதல் சொல்வதற்கு திருமங்கை இருந்து வந்தாள்.

ஆனால் அவளை மீறியும் துக்கம் வரும்போது இருவரும் சேர்ந்து கண்ணீர் உகுத்தார்கள்.

ஆயுள்வரை அவர்கள் அல்லியை மறக்கவே இல்லை.

(முடிந்தது)

சென்னை மாவட்ட கிளை நூலகம்
26645
A8A1889
கொளத்தூர், சென்னை-99.